# கிட்கிந்தா காண்டத் திறனாய்வு

முனைவர் சுந்தர சண்முகனார்



வானதி பதிப்பகம்

# கிட்கிந்தா காண்டத் திறனாய்வு

சுந்தர சண்முகனார்

வானதி பதிப்பகம்

# கிட்கிந்தா காண்டத் திறனாய்வு

ஆசிரியர்:

ஆராய்ச்சி அறிஞர்

**முனைவர் சுந்தர சண்முகனார்**

தமிழ்ப் பேரவைச் செம்மல் (மதுரைப் பல்கலைக்கழகம்)

புதுச்சேரி - 11

வானதி பதிப்பகம்

13.தீனதயாளு தெரு

தி.நகர், சென்னை-17.

முதல் பதிப்பு: மே 1992

1992ஆம் ஆண்டு புதுவைக் கம்பன் கழக விழாவில் வெளியிடப் பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 35-00

அச்சகம்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்
73-A, கீழரத வீதி
சிதம்பரம் – 608 001

# பதிப்புரை

அழியா வரம் பெற்ற அருமைத் தமிழ் மொழிக்குக் கம்பர் பெருமான் வழங்கிய ஒப்பற்ற காவிய அணி கம்பராமாயணம். இராம காதையாகிய வடமொழிக் காவியத்தை வால்மீகி முனிவர் படைத்தார். அதை அடிப்படையாகக் கொண்டு கம்பர்தமது இராம காதையைப் படைத்திருப்பினும், மூலத்திலிருந்து கம்பர் பெருமான் பல இடங்களில் மாற்றங்களைச் செய்துள்ளார்.

ஆறு காண்டங்களுக்குள் தமது காவியத்தைச் சிறப்புற அமைத்துள்ள கம்பர் பெருமானின் மொழிப் புலமை, கற்பனைத் திறன், சொல்லாட்சி, வடிவமைப்பு, புராண அறிவு, பொது நோக்கு, கதை சொல்லும் திறன் போன்றவைகளை உணராத தமிழர் இருக்கமாட்டார்.

ஆறு காண்டங்களில் ஒன்றான கிட்கிந்தா காண்டம் என்னும் பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்களின் மூலம், ஏனைய தமிழ் இலக்கிய நூல்களின் செய்யுட்களையும் ஒப்புமைப்படுத்தி, முனைவர் திரு. சுந்தர சண்முகனார் கிட்கிந்தா காண்டத் திறனாய்வு என்னும் இந்நூலைப் படைத்துள்ளார்; கம்பரது கவித்திறமையை உரைத்துப் பார்த்து, உண்மையை உணர வைத்து உச்சி முகர்ந்து பாராட்ட வைக்கிறார். நமது குழந்தையின் அருமை பெருமையை நம்மிடமே எடுத்துச் சொல்லி நம்மையே வியப்புக்குள்ளாக்குகிற உத்தி இதில் பாராட்டு முகமாய்க் கையாளப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய புதுவைக் கம்பன் கழகத்தாருக்கும், அதன் செயலாளரான கம்பவாணர் திரு. அ. அருணகிரி அவர்கட்கும், நூலாசிரியர் அவர்கட்கும், அழகுற அச்சிட்டுத் தந்த சபாநாயகம் அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றி.

அன்புடன்

**வானதி ஏ. திருநாவுக்கரசு**

# பொருளடக்கம்


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| | ஆசிரியர் கருத்துரை | | |
| 1. | பம்பைப் படலம் | — | 9 |
| 2. | அனுமப் படலம் | — | 30 |
| 3. | நட்புக்கோள் படலம் | — | 38 |
| 4. | மராமரப் படலம் | — | 52 |
| 5. | துந்துபிப் படலம் | — | 60 |
| 6. | கலன் காண் படலம் | — | 63 |
| 7. | வாலிவதைப் படலம் | — | 77 |
| 8. | அரசியல் படலம் | — | 159 |
| 9. | கார்காலப் படலம் | — | 172 |
| 10. | கிட்கிந்தைப் படலம் | — | 202 |
| 11. | தானைகாண் படலம் | — | 227 |
| 12. | நாடவிட்ட படலம் | — | 234 |
| 13. | பிலம் புக்கு நீங்கு படலம் | — | 254 |
| 14. | ஆறு செல் படலம் | — | 267 |
| 15. | சம்பாதிப் படலம் | — | 280 |
| 16. | மயேந்திரப் படலம் | — | 297 |
| | கருத்து வழங்கிய கருவூலங்கள் | — | 309 |

# ஆசிரியர் கருத்துரை

பால காண்டம், அயோத்தியா காண்டம், சுந்தர காண்டம் என்னும் மூன்று காண்டங்கட்கும் இதற்குமுன் திறனாய்வு எழுதியுள்ளேன் — அவற்றை வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

**ஊக்குவிப்பு**

மூன்று நூல்கட்கும் நேரிலும் மடல் வாயிலாகவும் பெரிய பாராட்டு கிடைத்தது. கம்ப ராமாயணத்தின் மற்ற காண்டங்கட்கும் திறனாய்வு எழுதுமாறு அன்பர்கள் பணித்தார்கள். எனவே, இப்போது இந்தக் 'கிட்கிந்தா காண்டத் திறனாய்வு' என்னும் நூலை எழுதியுள்ளேன். திறனாய்வு இப்படித்தான் இருக்கவேண்டும் என எவரும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. தமிழ் எம்.ஏ. தேர்வுக்கு யான் படித்தபோது, விருப்பப் பாடமாக 'இலக்கியத் திறனாய்வு' என்னும் பாடத்தைத்தான் எடுத்துக் கொண்டேன். திறனாய்வு பற்றிய சில நூல்களை யான் படித்துள்ளேன். இங்கே என்னால் இயன்றதைச் செய் துள்ளேன்.

**கம்ப ராமாயணப் பதிப்புகள்**

கம்ப ராமாயண ஓலைச் சுவடிகள் இருநூற்றுக்கும் மேல் உள்ளன. இந்நூலைப் பலர் பதிப்பித்துள்ளனர். பதிப்புக்குப் பதிப்பு வேறுபாடுகள் உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில், முதலில் சொற்களைப் பிரிக்காத பாடல் வடிவமும் அதையடுத்துச் சொற்களைப் பிரித்த பாடல் வடிவமும் தரப்பட்டுப் பின்பு உரை வரையப் பட்டுள்ளது. இந்தப் பதிப்பையே யான் பின்பற்றியுள்ளேன்.

மலரை இதழ் இதழாகப் பிய்த்தும் கசக்கியும் நுகர்வது பொருந்தாது என்பது அடியேனும் அறிந்த செய்தியே. இருப்பினும், எளிய நடையில் புதுக்கவிதைகள் புறப்பட்டு விட்டதாலும், பிரித்து அமைக்காத மரபுப் பாடல்கள் பலருக்கு மயக்கம் தருவதாலும், யான் சில இடங்களில் பிரிக்காமலும், கடினமான இடங்களில் பிரித்தும் பாடல் களை அமைத்துள்ளேன். இந்த வகையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்புக்கு யான் நன்றிக்கடன் உடையேன்.

## இலக்கணக் குறிப்புகள்

இடையிடையே இலக்கணக் குறிப்புகள் தந்தால் பாடலின் சுவை குறைந்து விடும் என்பது ஒரு கருத்து. பாடலைப் புரிந்து கொண்டால் தானே சுவைக்க முடியும். எனவே, பாடலைப் புரிந்து கொள்ளவும் சுவைக்கவும் செய்ய உதவும் ஒரு சில இலக்கணக் குறிப்புகளையே அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தந்துள்ளேன்.

## காண்டங்கள்

கம்ப ராமாயணத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு பிரிவுகள் உள்ளன. இந்த ஆறனுள் இங்கே எடுத்துக்கொண்டிருப்பது கிட்கிந்தா காண்டம் ஆகும்.

பாலகாண்டம் பருவத்தால் பெற்ற பெயர். அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம் ஆகிய மூன்றும் செயல் நிகழ்ந்த இடத்தால் பெற்ற பெயர்களாகும். சுந்தர காண்டம் செயல் நிகழ்த்தியவரின் பெயரால் பெற்ற பெயராகும். யுத்த காண்டம் செயலால் பெற்ற பெயராகும். இந்தப் பெயர்கள் வால்மீகியால் தரப்பட்டவையே. வால்மீகி தம் காண்டங்களின் உட்பிரிவுகட்குச் சருக்கம் என்னும்

பெயர் தந்துள்ளார். கம்பர் காண்டங்களின் உட்பிரிவு களுக்குப் படலம் என்னும் பெயர் தந்துள்ளார். அண்ணா மலைப் பல்கலைக் கழகப் பதிப்பின்படி, இந்தக் கிட்கிந்தா காண்டத்தில் பதினாறு படலங்கள் உள்ளன.

**கம்பரும் வால்மீகியும்**

வால்மீகி ராமாயணத்தின் வழிநூலே கம்ப ராமாயணம்; எனினும், கம்பர் வால்மீகியினும் சிற்சில வேறுபாடுகள் கொண்டுள்ளார். அடிப்படையான பெரிய வேறுபாடாவது: வால்மீகி இராமனையும் சீதையையும் மக்கள்போல் கொண்டு அதற்கேற்பக் கதையை அமைத்துச் சென்றுள்ளார். கம்பரோ இருவரையும் திருமால் — திருமகள் ஆகியோரின் தெய்வப் பிறவிகளாகக் கொண்டு அதற்கேற்பக் கதையை அமைத்துச் சென்றுள்ளார்.

கதையின் இடையிடையே இருவர்க்கும் சிறுசிறு மாறு பாடுகள் பற்பல உண்டு. வால்மீகி சொன்னதைக் கம்பர் விட்டிருப்பார் — வால்மீகி சொல்லாததைக் கம்பர் சொல்லி யிருப்பார். புனைவுகளில் இருவர்க்கும் இடையே ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். ஒரு செய்தியையே வால்மீகி ஒருவித மாகவும் கம்பர் வேறுவிதமாகவும் சில இடங்களில் கூறி யுள்ளனர். கிட்கிந்தா காண்டத்தில் இருவரும் மாறுபடும் இடங்களைக் குறிப்பிடலாம் என முதலில் எண்ணினேன். ஆனால், இதனால் கம்பர் பாடல்களில் உள்ள தெய்வத் தன்மையோடு கூடிய நயமும் சுவையும் கெட்டுவிடும் என்று பின்னர் எண்ணி வேறுபாடுகளைக் குறிப்பிடாமல் விட்டு விட்டேன். ஒரு வரலாற்றையன்று — ஒரு கதை வடிவில் வரலாற்றைப் பலர் எழுதும்போது, இவ்வாறு சில அல்லது பல வேறுபாடுகள் இடம்பெறுவது இயற்கை.

**கம்பரின் காலம்**

கம்பர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினர் எனச் சிலரும் பன்னிரண்டாம் நூற்றாண்டினர் எனச் சிலரும் கூறுகின்றனர். எனது கொள்கை இரண்டாவதேயாகும். (இது குறித்து, எனது 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்னும் காப்பிய நூலின் முன்னுரையில் விரிவாக எழுதியுள்ளேன்).

எனது 'கிட்கிந்தா காண்டத் திறனாய்வு' என்னும் இந்த நூலுக்கும் அன்பர்களின் ஆதரவையும் வாழ்த்தினையும் வணங்கி வேண்டுகிறேன்.

இந்த நூலை நன்முறையில் வெளியிட்ட புத்தக வித்தகர் உயர்திரு வானதி ஏ. திருநாவுக்கரசு அவர்கட்கு மிக்க நன்றி செலுத்துகிறேன். மற்றும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரியது.

எல்லாவற்றிற்கும் அப்பால், யான் கம்பராமாயண விளக்கம் எழுதத் தூண்டிய புதுவைப் புலவர் உயர்திரு அ. அருணகிரி அவர்கட்கும் மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

**சுந்தர சண்முகன்**

# கிட்கிந்தா காண்டம்

## கடவுள் வாழ்த்து

நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து கூறி யிருப்பினும், ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் கடவுள் வாழ்த்து கூறப்பட்டுள்ளது.

நான்முகன், திருமால், சிவன் என்னும் மூன்று தெய்வ நிலைக்கு ஏற்பப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மும்மைத் தொழிற் பண்புடைய முதற்பொருளாகிய இறைவன், தன்னிடமிருந்து தோன்றும் எல்லாத் தத்துவப் பொருள்களும் — தன் முதன்மையைச் சொல்லிப் போற்றுதற்கு ஏற்ற எல்லா உலகங்களும் — தனக்கும் உலகங்கட்கும் இடைநின்ற எல்லா உயிர்களும் — அமைந் துள்ள உயிர்களின் உணர்வுகட்கு உணர்வும்—ஆக உள்ளான். இக்கருத்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் வருமாறு:

**''மூன்றுரு எனக்குணம் மும்மையாம் முதல்**
**தோன்றுரு எவையும் அம்முதலைச் சொல்லுதற்கு**
**ஏன்றுரு அமைந்தவும் இடையில் நின்றவும்**
**ஊன்றுரு உணர்வினுக்கு உணர்வும் ஆயினான்''**

என்பது கடவுள் வாழ்த்துப் பாடல். இது மிகவும் கடினமான தத்துவப் பாடல். இதற்குப் பலர் பலவாறு உரை கண்டுள்ளனர். யான் பல உரைகளைப் படித்து நெடுநேரம் எண்ணிப் பார்த்து, எனக்குத் தோன்றிய அளவில் ஒருவாறு இந்த உரையை எழுதியுள்ளேன்.

மூன்று உரு = நான்முகன், திருமால், சிவன். மும்மைக் குணம் = படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில் பண்பு. முதல் = முதல் பொருளாகிய இறைவன். இடையில் நின்ற(ன) = கடவுள் உயிர் உலகம் என்பனவே உள்ள பொருள்கள்; இம்மூன்றனுள், கடவுளுக்கும் உலகப் பற்றுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் உயிர்கள்— என்றெல்லாம் பொருள் கொள்ளல் வேண்டும்.

# 1. பம்பைப் படலம்

இராமனும் இலக்குவனும் காட்டில் சென்றுகொண் டிருந்தபோது சுக்கிரீவன் வாழும் இரலை என்னும் மலையை நோக்கி நடந்தனர்; அம்மலையடிவாரத்தில் உள்ள பம்பை என்னும் பொய்கைக் கரையை அடைந்தனர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, கம்பர் பம்பையைப் புனையத் (வருணிக்கத்) தொடங்கி விட்டார். நீர்நிலை களையும் சோலைகளையும் புனைவது புலவர்கட்குச் சுவை பயப்பதன்றோ?

## மரபுநிலையும் சூழ்நிலையும்

மாந்தர்க்குக் குடும்ப மரபுவழி வந்த பண்புநிலை 'மரபுநிலை' (Heredity) என்றும், வெளியில் - சுற்றுப்புறத்தில் பழகுவதால் ஏற்படும் பண்புநிலை 'சூழ்நிலை' (Environment) எனவும் உளவியலில் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இரு நிலைகளும் உயிரற்ற அஃறிணைப் பொருளுக்கும் அமைந்திருக்கும் போலும் என எண்ணத் தோன்றுகிறது. இது, கம்பரின் பொய்கைப் புனைவுப் பாடல் ஒன்றால் அறியக் கிடக்கின்றது. அது :

பொய்கையில் இயற்கையாகத் தெளிந்துள்ள (தெளிவான) நீர், ஒன்பான் மணிகள் பதித்த கரைகளில் அவ்வம் மணிகட்கு எதிரே அவ்வம்மணியின் நிறத்தைக் காட்டு கிறதாம். 'அடுத்தது காட்டும் பளிங்கு' என்றார் வள்ளுவர். இங்கே பளிங்கு என்பது தெளிந்த நீர். அடுத்தது என்பது ஒன்பான் மணிகள். பளிங்கு போன்ற தெளிவான நீர்

ஆங்காங்கே ஒன்பான் மணிகளின் நிறங்களைக் காட்டு கின்றதாம். பாடல்:

**"ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த ஈர்ம்புனல்**
**பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகைச்**
**சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்**
**ஓர்ந்துணர் வில்லவர் உள்ளம் ஒப்பது"** (2)

தனக்கென ஒரு நிறம் இன்றி அந்த அந்த மணிகளின் நிறத்தைக் காண்பிப்பதால், தமக்கென ஒரு கொள்கையும் இன்றித் தாம் சார்ந்துள்ளவர்கட்கு ஏற்ப மாறிக்கொண் டிருக்கும் கீழ்மக்களைப் போன்று நீர் உள்ளதாம். இந்தப் பாடலில் முதல் அடியில் குறிப்பிடப்படும் தெளிந்த புனல் என்பது மரபுநிலை. அந்த நீர் மணிகளின் நிறங்கட்கு ஏற்ப மாறுவது சூழ்நிலை. இஃது ஓர் அழகிய புனைவாகும்.

**நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்**......(452)

என்னும் குறள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

**கவிஞர் சொல் பொருள்**

ஆழமான கிணற்று நீர் தெளிந்திருக்கும் வேளையில், கிணற்றில் அடியில் விழுந்துகிடக்கும் குவளை, குடம் முதலிய பொருள்கள் தெளிவாகத் தெரிவதை நாம் வீட்டுக் கிணறு களில் காணலாம். இங்கே, பம்பைப் பொய்கை பாதாளம் வரையும் ஆழ்ந்து கிடப்பினும் அதன் ஆழத்தின் உள்ள அடிப்பகுதி, கற்பகம் போன்ற கவிஞர்களின் ஆழ்ந்த கருத்துடைய பாடல்கள் தம்மில் தாமே தெளிவாகப் பொருளை அறிவிப்பது போன்று தெளிவாகத் தென் பட்டதாம். பாடல்;

**"எற்பொரு நாகர்தம் இருக்கை ஈதெனக்**
**கிற்பதோர் காட்சிய தெனினும் கீழுறக்**
**கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய**
**சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது"** (5)

கற்பகம் எப்பொருளையும் தருவதுபோல், கவிஞர்கள் எப்பொருளைப் பற்றியும் இனிமையாகவும் சிறப்பாகவும் பாடவல்லவர் என்பதைக் ‘கற்பகம் அனைய அக்கவிஞர்’ என்னும் தொடர் அறிவிக்கிறது. மற்றும், கற்பகத்தால் பெறும் சுவையையும் இன்பத்தையும் உயர்ந்த புலவர்களின் பாடல்களால் பெறமுடியும் என்பதும் இதனால் போதரும். மேலும், கற்பகம் போல் உயரிய பயனை அளிக்கும் பாடல் களைப் பாடுபவரே உயர்ந்த கவிஞராவார் எனக் கவிஞர்க்கு இலக்கணம் கூறும் தொடராகவும் இது தோன்றுகிறது.

“கருத்து தெளிவாக இருப்பின் உரைநடையாக எழுதுவேன்; கருத்து குழப்பமா யிருப்பின் பாடலாக எழுதுவேன்” – என இரஷ்சிய நாட்டு அறிஞர் ஒருவர் நகைச்சுவையாகக் கூறியதாக ஒரு கருத்து சொல்லப்படுவ துண்டு. எனவே, பாடலின் பொருள் தெளிவின்றிப் புரியாமல் குழப்பம் தருவதாய் இருத்தலாகாது; பாடல்களில் உள்ள சொற்களின் – சொற்றொடர்களின் பொருள் தெளிவாய்ப் புரியவேண்டும்; உயர்ந்த கவிஞர்களின் பாடல்கள் அவ்வாறு தெளிவாய்ப் புரியும். அதே நேரத்தில் ஆழ்ந்த கருத்து உடையனவாகவும் இருக்கும். இவ்வாறு பம்பைப் பொய்கை ஆழமும் தெளிவும் ஒருசேர உடைய தெனக் கம்பர் கற்பனைநயம் துளிக்கச் செய்துள்ளார். பிறர், பொருளை விளக்க வேண்டியதில்லாமல் எளிதில் பொருள் புரியும் வாக்கியத்தைத் “தன்பொருளைத் தானே விளக்கும் வாக்கியம்” என்று ‘கற்பிக்கும்’ முறை (போதனா முறை) வல்லுநர் கூறுவர்.

> **“சவிஉறத்தெளிந்து தண்ணென் ஒழுக்கமும்**
> **தழுவிச் சான்றோர்**
> **கவிஎனக் கிடந்த கோதாவரி”** (3-5-1)

என்னும் கம்பராமாயணப் பகுதி ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

**இடை மயக்கல்**

*நல்லுணர்வுடைய மெய்யறிவாளர்களை உலகக் கட்டுகள் மயக்குதல்போல், பொய்கை நீர் தெளிவா யிருப்பினும், அதிலுள்ள இலைகள் நீரை மறைக்கின் றனவாம். பாடல்-*

**''காசடை விளக்கிய காட்சித் தாயினும்**
**மாசடை பேதைமை இடை மயக்கலால்**
**ஆசடை நல்லுணர் வனைய தாமெனப்**
**பாசடை வயின்தொறும் பரந்த பண்பது''** (8)

*அடியில் போட்ட காசு தெரியும் அளவுக்குப் பொய்கை நீர் தெளிந்திருந்ததாம். ஊருக்கு 'உபதேசம்' செய்த பலர் பிறகு தாங்கள் உலகப் பற்றால் நிலைதடுமாறவில்லையா? அதுபோல, நீரின் தெளிவு இலைகளால் மறைக்கப்பட்டதாம்.*

**கயல்களின் மறைவு**

*கயல் மீன்கள், இராமன் தங்களைக் காணின் சீதையின் கண்கள் நினைவுவர வருந்துவான் என்றெண்ணி நீருக்குள் மறைந்தனவாம்.*

**''களிப்படா மனத்தவன் காணின் கற்பெனும்**
**கிளிப்படா மொழியவள் விழியின் கேள்எனத்**
**துளிப்படா நயனங்கள் துளிப்பச் சோரும்என்று**
**ஒளிப்படா தாயிடை ஒளிக்கும் மீனது''** (9)

*களிப்படா மனத்தவன் = களிப்பு (மகிழ்ச்சி) இல்லாத இராமன். கிளிப்படா மொழியவள் = கிளியால் பேச முடியாத இனிமையுடைய மொழி பேசும் சீதை. விழியின் கேள் = கண்கட்கு ஒப்பானவை. இராமன் கண்ணீர் துளித்து வருந்துவான் என்று மீன்கள் மறைந்ததாகப் புலவர் இயற்கையாக நடந்ததைத் தற்குறிப்பாகக் கூறி யிருத்தல் தற்குறிப்பேற்ற அணியாகும். தெய்வப் பிறவி*

யாகிய இராமனாலும், மனைவியைப் பிரிந்த காம வேதனையை விடமுடியவில்லை போலும்.

**வருந்தும் மெய்யது**

கம்பர் காமக் களியாட்டம் ஒன்றை மிகுதிப் படுத்திக் கூறியுள்ளார். யானைகள் பொய்கையில் சில வேளைகளில் மூழ்கித் திளைத்தனவாம். 'வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல' என்பர். பொய்கையில் புகுந்தால் மட்டும் என்ன! பொய்கை நீர், நிலை கலங்கிய தோற்றத்துடன் காணப்பட்டதாம். இதற்குக் கடுமையான ஒப்புமை ஒன்றைக் கம்பர் கற்பவர் களிக்கக் கூறியுள்ளார். அதாவது: இரவிலே படுக்கையில் ஆடவர் வந்து தம் விருப்பம் போல் உடல் உறுப்புகளை வலிந்து பற்றி இன்பம் நுகர்வதால் உறுப்புகள் நொந்து போன விலை மகளிரின் வடிவத் தோற்றத்தை ஒத்திருந்ததாம் பொய்கை நீர். பாடல்:

**"பொங்குவெங் கடகரி பொதுவின் ஆடலின்**
**கங்குலின் எதிர்பொரு கலவிப் பூசலில்**
**அங்கம் நொந்து அலசிய விலையின் ஆய்வளை**
**மங்கையர் வடிவுஎன வருந்தும் மெய்யது"** (11)

வந்தவர் விலை மகளிடம் ஆடும் ஆட்ட அளவிற்குத் தம் மனைவியிடம் ஆட முடியாததலால், பொருளை வாரி இறைத்து விலை மகளைப் படாத பாடு படுத்துவார் போலும். அதற்கு விலை மகளும் ஈடு கொடுக்க வேண்டும். அதனால்தான், இந்த முயக்கத்தை, 'எதிர்பொரு கலவிப் பூசல்' அதாவது எதிருக்கு எதிர் நடத்தும் புணர்ச்சிப் போர் என்றார் கம்பர்.

சில ஆண்டுகட்கு முன் செய்தித் தாளில் படித்த செய்தி ஒன்று நினைவிற்கு வருகிறது. ஓரிடத்தில், செல்வர் ஒருவர் கலவி இன்பம் நுகர அழகிய பெண் ஒருத்தி ஏற்பாடு

செய்யப்பட்டாளாம். ஏற்பாடு செய்தவரை நோக்கித் தமக்கு இரண்டு 'பிராந்தி பாட்டில்கள்' வாங்கி வரச் சொன்னாராம் அச்செல்வர். அந்தப் பெண்ணோ தனக்கு இரண்டு 'பாட்டில்கள் பீர்' வாங்கி வரச் சொன்னாளாம். செல்வர் செய்யும் திருவிளையாடல்களை (சேஷ்டைகளை) யெல்லாம் சமாளிக்க அவளுக்குப் 'பீர்' தேவைப்பட்டது போலும். நான் இதை எழுதியது கொச்சைத்தனம் எனலாம் சிலர். ஆனால் கம்பர் எழுதியுள்ளாரே - அதன் விளக்கமே இது.

**இதழ்நீர் பருகல்**

மலைத் தேனும், யானையின் மணம் மிக்க மத நீரும் கலந்த பொய்கை நீரைப் பருகிச் சுவையை நுகர்ந்தவர்க்கு அந்த நீர், பெண்டிரின் 'அதர பானம்' எனப்படும் இதழ் நீரினும் இனித்ததாம். பாடல்:

**''விண் தொடர் நெடுவரைத் தேனும் வேழத்தின்**
**வண்டுளர் நறுமத மழையும் மண்டலால்**
**உண்டவர் பெருங் களி உறலின், ஒதியர்**
**தொண்டயங் கனிஇதழ்த் துப்பின் சான்றது,''** (12)

துப்பு = நுகர்ச்சி. சான்றது = மிக்கது. யானையின் மதம் சுவையாயிருக்கும் போலும். ஒதியர் = பெண்கள். பெண்களின் இதழுக்குத் தொண்டைக் கனியை ஒப்பிடுவது இலக்கிய மரபு. இறைவனது வாயைக் 'கொவ்வைச் செவ்வாய்', என்றார் அப்பர். கனிக்கும் உதட்டுக்கும் உள்ள பொதுத் தன்மை செந்நிறம், இனிப்புச் சுவை ஆகிய இரண்டு மாம். காம வெறியின்போது மகளிரின்இதழ் நீர் சுவையாகத் தெரியும் போலும். எல்லாருமா மகளிரின் இதழ் நீரைப் பருகியுள்ளனர்? இல்லையே! இதழ் நீர்ச் சுவை எப்படி யிருக்கும் என்பதை அறியாதவர்களும் அறியும்படி ஓர் ஒப்புமையின் வாயிலாகத் தஞ்சை வாணன் கோவை

என்னும் நூலில் பொய்யா மொழிப் புலவர் அறிமுகம் செய்துள்ளார்:-

காதலியின் கனிவாய்ச் சுவையை உண்டு களித்த காதலன் கூறுகிறான்; ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் இனிமை பயக்கும் தமிழ் போன்று, இவள் செங்கனிவாயை நுகருந்தோறும் நுகருந்தோறும் இனிதாகி அமிழ்தச் சுவை பயக்கிறது என்கிறான்.

**"தேருந்தொறும் இனிதாந் தமிழ்போன்று**
**இவள் செங்கனிவாய்**
**ஆருந்தொறும் இனிதாய் அமிழ்தாம்**
**எனது ஆருயிர்க்கே"** (59)

என்பது பாடல் மிகுதி.

பொய்யா மொழிப் புலவரின் பாடலில், மகளிரின் இதழ் நீருக்குத் தமிழ் உவமையாக்கப்பட்டது. ஆனால், மகளிரின் இதழ் நீரைக் காட்டிலும் பொய்கை நீர் மிக்க இனிமை உடையது எனக் கம்பர் பாடல் கூறுகிறது.

### வடக்கு வேடன்தாங்கல்

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள வேடன்தாங்கல் என்னும் ஊரில் உள்ள ஏரியின் நடுவில் கடப்ப மரங்கள் பல உள்ளன. இரழ்சியா உட்பட்ட உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பறவைகள் வேடன்தாங்கலுக்கு வந்து தங்கி முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதுண்டு என்பதை நாம் அறிவோம். பறவைகள் ஒரே இனத்தின அல்ல. பறவைகட்கும் மொழி உண்டு என்பதைக் கழறிற்று அறிவார் நாயனார் வரலாற்றால் அறியலாம். அவ்வளவு ஏன்? நாம் வளர்க்கும் நம் வீட்டுக் கிளி, நம்மைப் போலவே மொழி பேசுவதை நாம் அறிவோம். பூவை என்னும் நாகணவாய்ப் புள்ளும் அன்னதே. ஒரே இனப் பறவைகள் தமக்குள் எழுப்புகின்ற

ஒலியின் பொருளைப் புரிந்து கொள்ள இயலும். பல இனப் பறவைகள் ஒரே நேரத்தில் ஒலி எழுப்புவதை எந்த இனமும் புரிந்து கொள்ள முடியாமல் குழப்பம் நிலவும்.

பம்பைப் பொய்கையிலும் பல இனப் பறவைகள், ஒன்றோடு ஒன்று ஒத்து இல்லாத புரிந்து கொள்ள முடியாத பலதரப்பட்ட ஒலிகளை ஒரே நேரத்தில் எழுப்பு கின்றனவாம். இதற்குக் கம்பர் கூறியுள்ள உவமை: ஆரியம் முதலிய பதினெண் நாட்டு மொழிகளையும் நன்கு புரிந்து கொள்ள முடியாத நிலையில் ஒவ்வொருவரும் தத்தம் மொழிகளில் ஒரே நேரத்தில் பேசினால் ஏற்படும் குழப்ப நிலைமை உவமையாக்கப்பட்டுள்ளது. பாடல்:

**"ஆரியம் முதலிய பதினெண் பாடையில்**
**பூரியர் ஒருவழிப் புகுந்த தாமென**
**ஓர்வில கிளவிகள் ஒன்றொ டொப்பில**
**சோர்வில விளம்புபுள் துவன்று கின்றது."** (13)

பூரியர் = அறியாதார். ஓர்வு இல = புரிந்து கொள்ள முடியாதவை. புள் = பறவை. துவன்றுகின்றது = (பல இனப் பறவைகள்) நிறைந்தது. கம்பர் இந்தப் பாடலில் மானிட இயலிலிருந்து பறவை யியலுக்குத் தாவியுள்ளார்; மொழியியலும் பேசியுள்ளார். பாடை = பாஷை = மொழி. கம்பர் தமது நூலில் வடவெழுத்துக் கலவாமல் பாடியிருக்கிற நுட்பமான மொழிப் பற்று இங்கே அறியத் தக்கது. அவர் தம் காலத்தில் அறியப்பட்ட பதினெட்டு மொழிகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை; அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் ஆகியவை.

## இறப்பொடு பிறப்பு

நீர்க் காக்கைகள் பொய்கையில் முழுகி மீன்களைக் கவ்விக்கொண்டு மேல் எழுவதும் மீண்டும் முழுகுவதுமா யிருந்தன. இக்காட்சியைக் கம்பரது உள்ளம் இறப்பும் பிறப்புமாக எண்ணியது. மீன்கள் முழுகுவது இறப்பு. மீண்டும் எழுவது பிறப்பு. பெரிய செய்தியைச் சிறிய செய்தியின் வாயிலாகக் கம்பர் நினைவு கூர்ந்துள்ளார்.

**"எவ்வம் ஓங்கிய இறப்பொடு பிறப்பிவை என்னக்**
**கவ்வு மீனொடு முழுகின எழுவன கரண்டம்"** (16)

என்பது பாடல் பகுதி. கரண்டம் = நீர்க் காக்கை. 'கவ்வும் மீனொடு எழுவன முழுகின' என்றிருப்பின் பொருத்தமா யிருக்கும். ஆனால், முழுகுவது இறப்பு - எழுவது பிறப்பு ஆதலின், முழுகுவதை முதலில் கூறிவிட்டார் கம்பர்.

## ஆவது செய்தும்

பெண்டிரின் நடைக்கு அன்னத்தையும், கண்ணுக்குக் குவளையையும், இதழுக்குக் (உதட்டுக்குக்) குமுத மலரையும் உவமையாகக் கூறுவது இலக்கிய மரபு. இந்த உவமையை ஒரு கற்பனைக்குப் பயன்படுத்திக் கொண்டார் கம்பர். சீதையைக் காணாது வருந்துகிற இராமனுக்கு நம்மால் ஆவது செய்தும் (இயன்றது செய்வோம்) என அன்னம் தன் நடையின் வாயிலாகச் சீதையின் நடையையும், குவளை தன் தோற்றத்தின் வாயிலாகச் சீதையின் கண்களையும், குமுதம் தன் அமைப்பின் வாயிலாகச் சீதையின் இதழையும் இராமனுக்குக் காட்டினவாம். பாடல்:

**"கவள யானை யன்னாற்கு அந்தக் கடிநறுங் கமலத்**
**தவளை ஈகிலம் ஆவது செய்தும்என் றருளித்**
**திவள அன்னங்கள் திருநடை காட்டுவ, செங்கண்**
**குவளை காட்டுவ, துவர் இதழ் காட்டுவ குமுதம்"** (17)

*யானை அன்னான் = இராமன். கமலத்தவள் = திருமகளின் தெய்வப் பிறவி (அவதாரம்) ஆகிய சீதை. பிரிந்து போனவரை நேரில் பார்க்க இயலாவிடினும் அவரது நிழல் படத்தையாவது (Photo) பார்த்து ஆறுதல் கொள்வதுண்டு. அத்தகைய உதவியையே அன்னம் முதலியன ஓரளவு செய்துள்ளனவாம். இவை இயற்கையாக இருப்பதை, இராமனுக்குக் காட்டுவதாகக் கம்பர் தன் குறிப்பை ஏற்றிக் கூறியிருப்பதால், இது தற்குறிப்பேற்ற அணியாகும். இராமன் இவற்றைக் காணுங்கால் சீதையின் நினைவு வந்தது என்பது குறிப்பு.*

*பெரிய உதவி செய்ய முடியாவிடினும், தம்மால் இயன்ற உதவியாவது பிறர்க்குச் செய்ய வேண்டும் என்பதை இப் பாடல் குறிப்பாய் அறிவிக்கிறது.*

**''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வா யெல்லாம் செயல்''** (33)

*என்னும் குறளில் உள்ள 'ஒல்லும் வகை', 'செல்லும்வாய்' என்னும் தொடர்கள் ஈண்டு எண்ணத்தக்கன.*

**நிழல் கொக்குகள்**

*கம்பர் ஓர் அழகிய சுவையான கற்பனை செய்துள்ளார். அது: பொய்கைக் கரையில் உள்ள வஞ்சி மரத்தில் கொக்குகள் அமர்ந்து தம் சிறகுகளை உலர்த்திக் கொண்டிருந்தன. அவற்றின் நிழல் உருவம் படிகம்போல் தெளிந்த பொய்கை நீரில் தெரிந்தனவாம். அந்நிழல் உருவத்தைக் கண்ட மீன்கள், கொக்குகள் நீருள் புக்குத் தம்மைக் கவ்வ வந்திருப்பதாக எண்ணி அஞ்சினவாம்.*

**''ஏலும் நீர்நிழல் இடையிடை எறித்தலின், படிகம்**
**போலும் வார்புனல் புகுந்துளவாம் எனப் பொங்கி**
**ஆலும் மீன்கணம் அஞ்சின அலமர, வஞ்சிக்**
**கூலமா மரத்து இருஞ்சிறை புலர்த்துவ குரண்டம்''** (19)

குரண்டம் = கொக்கு. ஒற்றைக்காலில் நின்று ஏமாற்றும் கொக்குகளின் வஞ்சகம் மீன்கட்குத் தெரியும். தம் வருகைக்காகக் கொக்குகள் வாடியிருக்கும் வஞ்சகமும் மீன்கட்குத் தெரியும். வஞ்சிக்கும் கொக்குகள் வஞ்சி மரத்தில் அமர்ந்திருந்தும், "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டன வெல்லாம் பேய்" என்றாற்போல் மீன்கள் அஞ்சின. 'அலமர' என்பதற்குப் பதில் 'அலம்வர' என்ற பாடமும் உண்டு; இது பதிப்பு வேறுபாடு. கூலம் = கரை.

### சக்கர வாளங்கள்

பொய்கையின் ஒரு பக்கம் நீலமணியின் ஒளி படர்ந்திருப்பதால் அப்பகுதி இரவு போலவும், மற்றொரு பக்கம் பதுமராகம் என்னும் செம்மணி படர்ந்திருப்பதால் அப்பகுதி செஞ்ஞாயிறு விளங்கும் பகல் போலவும் காட்சியளித்தன. அப்பொய்கைக் கரையில் ஆண் - பெண் சக்கர வாளப் பறவைகள் தங்கியிருந்தன. பாடல்:

**"அங்கோர் பாகத்தில் அஞ்சன மணிநிழல் அடையப்**
**பங்கு பெற்றதில் பதும ராகத்து ஒளி பாயக்**
**கங்குலும் பகலுமெனப் பொலிவு எய்து கரைய**
**மங்கைமார் தடமுலை எனப் பொலிவன வாளம்"** (20)

அஞ்சன மணி = நீலமணி. வாளம் = சக்கர வாளப் பறவை. பெண்களின் முலைக்குச் சக்கர வாளத்தை ஒப்புமையாகக் கூறுவதுண்டு. இங்கே கம்பர், சக்கரவாளப் பறவைக்கு முலையை உவமையாகக் கூறி ஒரு புதுமை படைத்துள்ளார். சக்கரவாளப் பறவைகள் பகலில் புணர்ந்து இரவில் இரைதேடும். இங்கே பொய்கையின் ஒரு பகுதி இரவாயிருப்பதால் புணரத் தயங்குகின்றன. மற்றொரு பக்கம் பகலாயிருப்பதால் இரைதேடப் புறப் படுவதற்குத் தயங்குகின்றன. இப்பறவைகவின் இயல்புக்கு ஏற்பப் பகல் இரவுத் தோற்றம் அமைத்துப் பாடியுள்ள

கம்பர் உண்மையிலேயே கவிப்பேரரசரே யாவார். புணருங்காலும் பொலிவு இராது; இரைதேடுங்காலும் பொலிவு இராது; அலுப்பான தோற்றமே காணப்படும். புணராமலும் இரைதேடாமலும் வாளா அமர்ந்திருக்கும் போதே பொலிவான தோற்றம் காணப்படுமாதலின், 'பொலிவன வாளம்' என்றார் ஆசிரியர்.

**கழைக் கூத்தாட்டு**

கம்பர் பொய்கையில் ஒரு கழைக் கூத்தாட்டம் நிகழ்வதாகக் கற்பனை செய்துள்ளார். கழைக் கூத்தி கையால் வாளை வீசிக்கொண்டு கயிற்றின்மேல் நடந்து நடனம் ஆடுகின்றாள். பார்வையாளர்கள் நன்றாயுள்ளது என்று கைதட்டி ஆரவாரம் செய்கின்றார்கள். இதை அப்படியே பொய்கையில் பொருத்திப் பார்க்கலாம். நீரில் அசைந்து காணப்படும் அலைதான் கயிறு. நீர் நாய்தான் கூத்தி. ஆரவாரம் தேரைகள் கத்துவது. பாடல்:

**"வலி நடத்திய வாளென வாளைகள் பாய**
**ஒலி நடத்திய திரைதொறும் உகள்வன நீர்நாய்**
**கலிநடக் கழைக் கண்ணுள ரெனநடம் கவினப்**
**பொலிவுடைத் தெனத் தேரைகள் புகழ்வன போலும்"** (21)

உகளுதல் = அங்குமிங்கும் அசைந்தாடுதல், கலி = ஆரவாரம். கழைக் கண்ணுளர் = கழைக் கூத்தாளர். பொய்கையில் வாளைகள் பாய்கின்றன; நீர் நாய்கள் அலைகின்றன; தேரைகள் கத்துகின்றன. இந்த நிலைமை கழைக் கூத்தாட்டாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. கம்பர் உள்ளிட்ட புலவர்கள் பலர் மயில் ஆடும் நடனக் காட்சியைக் கற்பனை செய்து காட்டியுள்ளனர். அது வேத்தியல். இங்கே கம்பர் கழைக் கூத்தாட்டைக் கற்பனை செய்துள்ளார். இது பொதுவியல் போன்றது போலும்!

வாளை மீனின் பளிச்சென்ற பாய்ச்சலுக்கு வாளின் பளிச்சென்ற வீச்சை உவமையாகக் கூறுதல் மரபு. இதனை "வாளை வாளின் பிறழ" (390) என்னும் நற்றிணைப் பகுதியாலும், "வாளென வாளை பாய்வன" (1180), "வாளென வாளை பாய" (2583) என்னும் சீவக சிந்தா மணிப் பகுதிகளாலும் இன்ன பிறவற்றாலும் அறியலாம்.

23-ஆம் பாடல் கருத்து: இராமன் இணைந்திருக்கும் சக்கரவாளப் பறவைகளையும் இணைந்திருக்கும் அன்னங் களையும் நோக்கிப் புலம்புகின்றான். இணைந்திருந்த பறவைகளையும் விலங்குகளையும் கண்டபோது அப்பர் அடிகட்கு இறைவன் - இறைவியின் நினைவு வந்ததாம். (திருவையாற்றுத் தேவாரப் பதிகம்).

**சிந்தினவோ**

மேலும் இராமன் பொய்கையை நோக்கிப் புலம்பு கிறான். ஓ, பொய்கையே! குவளை போன்ற சீதையின் கண்களையும், ஆம்பல் போன்ற அவளது வாயையும், தாமரை போன்ற அவள் முகத்தையும், கொடி போன்ற அவள் இடையையும், வள்ளை போன்ற அவள் காது களையும், அலை போன்ற அவள் வயிற்று மடிப்பையும், வரால் மீன் போன்ற அவள் கணைக்கால்களையும், ஆமை போன்ற அவள் புற அடிகளையும் நின்னிடத்தே காண் கின்றேன். இவை உன்னிடம் எவ்வாறு வந்தனவோ? ஒருவேளை, இராவணன் அவளைக் கடித்து உண்ணத் தொடங்கியிருக்கலாமோ — அப்போது இவ்வுறுப்புகள் மேலே யிருந்து உன்னிடம் சிந்தி வீழ்ந்திருக்கலாமோ? என்று புலம்பு கிறான் பாடல்:

**"விரிந்தகுவளை சேதாம்பல் விரைமென்**
**கமலம் கொடிவள்ளை**
**தரங்கம் கெண்டை வரால் ஆமையென்றித்**
**தகைய தமைநோக்கி**

**மருந்தின் அனையாள் அவயவங்கள்**
**அவை நிற்கண்டேன் வல்லரக்கன்**
**அருந்தி அகல்வான் சிந்தினவோ**
**வாவி உரைத்தி யாமன்றே''** (25)

*மருந்தின் அனையாள் = அமிழ்தம் ஒத்த சீதை. நிற்கண்டேன் = நின்னிடத்தில் பார்த்தேன். வல்லரக்கன் = இராவணன். சீதையின் உடல் உறுப்புகட்கு ஒப்புமையாகக் கூறப்படும் பொருள்களை யெல்லாம் சீதையின் உறுப்பு களாகவே கொண்டு இவை உன்னிடம் எவ்வாறு வந்தன என்று இராமன் பொய்கையை வினவியதாகக் கூறிக் கம்பர் கற்பனையில் (எவரெஸ்ட்) உச்சிக்குச் சென்று விட்டார்.*

**''பார்த்த இடத்தில் எல்லாம் உன்னைப்போலவே**
**பாவை தெரியுதடி''**

*என்பது பாரதியார் பாடல்.*

**''தேடப்போம் பொருளில் எல்லாம் அவளே''**

*என்பது பாரதிதாசன் பாடல்.*

**ஆயிரம் கண்:**

*அடுத்து இராமன் மயிலைப் பார்த்துக் கேட்கிறான்: மயிலே! சீதையின் சாயலுக்குத் தோற்றுப் பகைவர்போல் திரிந்தாய். இப்போது அவள் இல்லாமையால் உடல் குளிர்ந்து விட்டாயோ? உள்ளம் உவந்து ஆடுகின்றாயோ? நான் தேடுகின்ற என் உயிரான சீதையை நீ கண்டிருப்பாய், அவள் எப்படிப் போனாள்; எங்கே போனாள் என்பதை நீ சொல்ல மாட்டாயா? எனக்குத் தெரியாது என்று நீ மறைப்பாயாயின் நான் நம்ப மாட்டேன். ஆயிரம் கண்கள் உடையவர்க்குத் தெரியாத துண்டோ? ஒரு கண் பார்க்கா விடினும் மற்றொரு கண் பார்த்து விடுமே — ஒளிக்க முடியாதே-என்கிறான். பாடல்:*

"ஓடாநின்ற களிமயிலே சாயற்கு
ஒதுங்கி உள்ளழிந்து
கூடாதாரின் நிற்கின்ற நீயும்
ஆகம் குளிர்ந்தாயோ
தேடாநின்ற என்உயிரைத் தெரியக்
கண்டாய் சிந்தை உவந்து
ஆடாநின்றாய் ஆயிரங்கண் உடையார்க்கு
ஒளிக்குமாறு உண்டோ?" (26)

*மயிலின் தோகையில் பல கண்கள் இருப்பதால் ஆயிரம் கண் என மிகைப்படுத்திக் கூறினார். இருபொருள் அமைந்த 'ஆயிரம் கண்' என்ற தொடரைக் கொண்டு இப்பாடலில் கம்பர் விளையாடியிருக்கிறார். முதலில் நிகழ்ச்சியைக் கூறிவிட்டு இறுதியில் ஆயிரம்கண் உடையவர் அறியாததில்லை என்ற வேறொரு பொருள் பெறச் செய்திருக்கும் இந்த அமைப்பு 'வேற்றுப் பொருள் வைப்பு அணி' எனப்படும்.*

**தமிழ்ப் பாட்டு**

*தாமரை மலரை நோக்கி வருந்தும் இராமன் அதனைப் பின்வருமாறு விளிக்கிறான்; அதாவது: வண்டு தாமரை மலரில் சென்று தாதுவைத் தன்பால் பூசிக்கொண்டு தமிழ்ப் பாட்டு இசைக்கின்றதாம். அத்தகைய தாமரையே என விளிக்கிறான்.*

"பொன்பால் பொருவும்விரை அல்லி
புல்லிப் பொலிந்த பொலந்தாது
தன்பால் தழுவும் குழல் வண்டு
தமிழ்ப் பாட்டு இசைக்கும் தாமரையே" (28)

*என்பது பாடல் பகுதி. புலவர்கள் பொழிலில் ஒரு நடன அரங்கம் நடப்பதாக இலக்கியங்களில் புனைந்துரைக்கும் மரபு உண்டு. வண்டு குழல் இசைப்பதாகவோ அல்லது*

யாழ் இசைப்பதாகவோ கூறுவர். இந்தப் பாடலில் 'குழல் வண்டு' எனப்பட்டுள்ளது. நாயனம், புல்லாங்குழல், யாழ், வீணை, வயலின் முதலிய இசை இயங்களை இசைப்பவர்கள், தியாகராயர் கீர்த்தனையையோ, தீட்சதர் பாடலையோ பாபநாசம் சிவன் பாடலையோ இசை இயங்களில் இசைப்பர். அதுபோல், வண்டு தமிழ்ப் பாட்டைக் குழலில் இசைக்கிறதாம். வண்டே தமிழ்ப் பாட்டை இசைக்கும்போது, இசைவாணர்கள் கட்டாயம் தமிழ்ப் பாட்டு இசைக்கவேண்டும் என்னும் கருத்தைக் கம்பர் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

இங்கே தமிழ்ப் பாட்டு என்பது இனிய இசையைக் குறிக்கும். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை-நயம் என்னும் பொருள் உண்மையைத் 'தமிழ் தழீஇய சாயலார்' முதலிய இலக்கியப் பாடல் பகுதிகளைக் கொண்டு அறியலாம். தமிழ்நாட்டுக்கு வடக்கே உள்ள பம்பைப் பொய்கையில் வண்டு தமிழ்ப் பாட்டு இசைப்பதாகக் கூறியுள்ள கம்பர், 'தான் ஆடாவிடினும் தன் தசைஆடும்' என்னும் முது மொழிக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறார்.

வண்டு மகரந்தத் தாதுவைப் பூசிக்கொண்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இது ஆண்-பெண் மலர்களின் கருப் பாகங்களை இணைப்பதற்கு உதவும். இராமனும் சீதையோடு இணைக்கப்பட வேண்டும் என்னும் குறிப்பும் இதில் இலை மறை காயாய் உள்ளது.

**கண் போலும் குவளை:**

தன் உள்ளமாகிய தாமரையில் இருப்பவளும் முகில் அனைய கரிய கூந்தலை உடையவளும் ஆகிய சீதையின் கண்மணி போன்ற குவளையே! நீயும் என்னை நலிவடையச் செய்வாயோ! என இராமன் குவளையை நோக்கிப் புலம்புகிறான்.

**"நெஞ்சுபூத்த தாமரையின் நிலையம்**
**உவந்தாள் நிறம்பூத்த**
**மஞ்சுபூத்த மழைஅனைய குழலாள்**
**கண்போல் மணிக் குவளாய்!**
**நஞ்சுபூத்ததாம் அன்ன நகையால்**
**என்னை நலிவாயோ!** (31)

நெஞ்சு பூத்த தாமரை = உள்ளத் தாமரை. மஞ்சு பூத்த மழை = முகில். குழலாள் = சீதை. குவளை இராமனைப் பார்த்துச் சிரித்துத் துன்புறுத்துகிறதாம். சிரிப்புக்கு வெண்ணிறப் பகுதி வேண்டுமே — குவளை கருநிறம் உடையதாயிற்றே. நஞ்சு = கருநிறம் உடையது. 'நீல கண்டன்' என்பதில் கழுத்தில் உள்ள நஞ்சு நீலநிறம் உடையதென்பதை அறிவிக்கும் அல்லவா? நஞ்சு போன்ற கருஞ் சிரிப்பால் குவளை வருத்துகிறதாம். உள்ளத்தைத் தாமரையாக உருவகிப்பது ஒருவகை இலக்கிய மரபு, குமரகுருபர அடிகளார் சகல கலா வல்லி மாலை என்னும் நூலில்,

**"வெண்தாமரைக் கன்றி நின்பதம் தாங்கஎன்**
**வெள்ளை உள்ளத்**
**தண் தாமரைக்குத் தகாது கொல்லோ"** (1)

என உள்ளத்தைத் தாமரையாக உருவகித்திருப்பது காண்க.

திருக்குறளிலுள்ள 'மலர் மிசை ஏகினான்' என்னும் பகுதியில் உள்ள 'மலர்' என்பதற்கு 'உள்ளக்கமலம்' எனப் பரிமேலழகர் விளக்கம் தந்துள்ளார். 'இதய பதுமம்' — சிவஞான சித்தியார் — உரை. (9-9)

திருமகள் தாமரையில் இருப்பவள். எனவே, சீதையாக வந்திருக்கும் திருமகள், திருமாலின் தெய்வப் பிறவியாகிய இராமனது உள்ளமாகிய தாமரையில் இருப்பதாகக் கூறியுள்ள ஒரு குறிப்பு இதில் மறைந்திருப்பது காண்க.

**களிற்றின் கனிவு**

ஆண்யானை தழை உண்ட தன் பிடியின் வாயில் நீர் கொண்டு வந்து ஊற்றும் காட்சியைக் கண்ட இராமன் சீதையை இவ்வாறு ஓம்ப முடியாமல் போயிற்றே என்று இரங்கிச் செய்வதறியாது நிற்கிறான்.

> **"வாரளித் தழை மாப்பிடி வாயிடைக்**
> **காரளிக் கலுழிக் கருங் கைம்மலை**
> **நீ ரளிப்பது நோக்கினன் நின்றனன்**
> **பேரளிக்குப் பிறந்த இல்லாயினான்"** (33)

வார் அளி = நீண்ட குளிர்ந்த. கார் அளி = கரிய வண்டுகள். கலுழி = மதப்பெருக்கு. கைம்மலை = யானை. இராமன் பேரருளுக்குப் பிறப்பிடமாயுள்ளவனாம். இவ்வாறு களிறு பிடிக்கு உதவுவது பல நூல்களில் கூறப்பட்டுள்ளது. மதுரை நோக்கிச்செல்லும் காட்டு வழியில், ஒரு பொய்கையில் கோவலன் நீர் அருந்திவிட்டு, ஒரு தாமரை இலையைக் குவளைபோல் சுருட்டி அதில் நீர் கொண்டுபோய்க் கண்ணகிக்குக் கொடுத்ததாகக் கூறும் சிலப்பதிகாரப் பகுதி ஈண்டு எண்ணத்தக்கது. பாடல்:

> **"தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்கு**
> **அயர்வுறு மடந்தை அருந்துயர் தீர்த்து"** (11:201,202)

இந்தப் பகுதியில், கம்பர், இராமனை மக்கள் பிறவியாகவே அடையாளம் காட்டியுள்ளார். மனைவியைப் பிரிந்த மக்கட் கணவனது புலம்பலாகவே இராமனது புலப்பலைப் படைத்துள்ளார்.

ஒரு காப்பியம் என்றால் ஒன்பான் சுவைகளும் இருக்க வேண்டுமன்றோ? பம்பைப் படலத்தின் தொடக்கத்தில் காமச் சுவையை மிகுதியாகக் கூறிய கம்பர் இங்கே இராமன் வாயிலாக அழுகைச் (அவலச்) சுவைக்கு இடம் கொடுத்துள்ளார்.

**"இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே"**
(மெய்ப்பாட்டியல்-5)

என்னும் தொல்காப்பிய நூற்பா, இழவு — அதாவது இன்றியமையாத எதையாவது இழத்தல் காரணமாக அழுகை வரும் என்று கூறுகிறது. சீதையைப் பிரிந்த இராமனுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது இயற்கைதானே!

## இரும்பைத் தோய்த்த தண்புனல்

சீதையை எண்ணி வருந்திய இராமன், இலக்குவனால் திசை திருப்பப் பெற்று மாலைக்கடன் இறுக்கப் பொய்கையில் நீராடினான். காம வேதனையால் சூடுண்ட அவனது உடம்பு மூழ்கியதும் பொய்கை நீர்,கம்மியன் சூடுபண்ணிய இரும்பைத் தோய்த்ததும் வெப்பமான நீர்போல் கொதித்தது. பாடல்:

**"நீத்த நீரில் நெடியவன் மூழ்கலும்**
**தீத்த காமத் தெறுகதிர்த் தீயினால்**
**காய்த்து இரும்பைக் கருமகக் கம்மியன்**
**தோய்த்த தண்புனல் ஒத்தது அத்தோயமே"** (36)

பிரிந்தால் சுடுவதும் சேர்ந்தால் குளிரச் செய்வதுமாகிய நெருப்பை இவள் எங்கே பெற்றாள் என்னும் கருத்துடைய,

**"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்"** (1104)

என்னும் குறள் எண்ணத்தக்கது. சீதையைப் பிரிந்ததால் இராமனது உடல் கொதித்தது என்பதற்கு இந்தக் குறட்பா சான்று பகரும். நீத்த நீர் = நீந்த வேண்டிய அளவுக்கு ஆழமான வெள்ளநீர். கருமகக் கம்மியன் = கம்மாளருள் இரும்பு வேலை செய்யும் கருமான். தோயம் = நீர்.

### திங்களின் தோற்றம்

*முனிவர் வாழும் ஒரு பகுதியில் இராம இலக்குமணர் சென்று தங்கினர். அப்போது மாலை வந்து போகத் திங்கள் எழுந்தது. சீதை இல்லாமையால், சுடுகின்ற ஞாயிற்றைப் போலவே, குளிரச் செய்யும் தண்ணிய திங்களும் இராமனுக்கு வெப்ப மீந்து தோன்றியது. இந்து = நிலா.*

**"அந்தியாள் வந்துதான் அணுக அங்கு அணுகுறாச்**
**சந்தமார் கொங்கையாள் தனிமைதான் நாயகன்**
**சிந்தியா நொந்துதேய் பொழுது தெறுசீதநீர்**
**இந்துவான் உந்துவான் எரிகதிரி னானென"** (38)

*என்பது பாடல். "என்றன் பெண்மை கண்டும் காயலாமோ வெண்ணிலாவே" என்பது குற்றாலக் குறவஞ்சி. "தாய்வா யடைந்து மிகுந்தலையை மோதி மோதிச் சலித்தலறக் காய்வாய் நிலவே" என்பது பிரபுலிங்கலீலை.*

### கண் துயின்றில

*இரவு நேரத்தில் எல்லாம் துயின்றனவாம்; அதாவது; மண், மலை. பண், பணி (பாம்பு), விண், பேய் ஆகிய எல்லாம் துயின்றனவாம். ஆனால் இராமனின் கண்கள் மட்டும் துயில வில்லையாம்.*

**"மண்துயின்றன நிலையமலை துயின்றன மறுஇல்**
**பண்துயின்றன விரவு பணி துயின்றன பகரும்**
**விண்துயின்றன கழுதும்விழி துயின்றன பழுதுஇல்**
**கண்துயின்றில கடல் துயின்றன களிறு"** (40)

*என்பது பா. மண்ணிலும் மலையிலும் வாழ்வன எல்லாம் துயின்றன. பண்துயின்றன என்றால் = இரவுப் பாடல்கள் அடங்கிவிட்டன என்பதாகும். இரவில் இரைதேடும் பாம்புகளும் புற்றில் அடங்கிவிட்டனவாம். விண்துயிலுதல் என்பது, விண்ணில் இடிமின்னல் ஒன்றுமில்லை என்பதைக்*

குறிக்கும். கழுது = பேய்; பேய் இரவில் நடமாடும் என்பர் — அப்பேயும் துயின்று விட்டதாம் 'கடல் துயின்றன களிறு' என்பது இராமனைக் குறிக்கும். பால் கடலில் பள்ளி கொள்ளும் திருமாலின் பிறவியாகிய களிறு போன்ற இராமன் என்பது கருத்து. இராமனின் கண்கள் மட்டும் துயிலவில்லையாம்.

தாயுமானவரின் "பைங்கிளிக் கண்ணி" என்னும் பகுதியில் இவ்வாறு ஒரு பாடல் உள்ளது. சீதையைப் பிரிந்த இராமன் தூங்கவில்லை. அதுபோல், காதலரைப் பிரிந்த காதலி தூக்கம் வரவில்லை எனப் பைங்கிளியைப் பார்த்துக் கூறுகின்றாளாம்,

**"மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மற்றுள எலாம் உறங்கும்**
**கண்ணுறங்கேன் எம்இறைவர்காதலால் பைங்கிளியே"** (44)

என்பது பாடல். இந்தப் பாடலோடு கம்பர் பாடல் ஒப்புநோக்கத்தக்கது.

**ஞாயிறின் தோற்றம்**

முதிர்ந்த மெய்யறிவு தோன்றியதும் அறியாமையும் தீவினையும் அகலுமாறு போல, ஞாயிறு தோன்ற இருண்ட இரவு நீங்கியது; பொழுது புலரத் தாமரை மலரலாயிற்று.

**"பொங்கி முற்றிய உணர்வு புணர்தலும் பகையினொடு**
**பங்கமுற் றளவில் வினை பரிவுறும்படி முடிவில்**
**கங்குல் இற்றது கமலம் முகமெடுத்தன கடலில்**
**வெங்கதிர்க் கடவுள் எழ விமலன் வெந்துயரின் எழ"** (41)

கங்குல் = இரவு. முகத்திற்குத் தாமரை ஒப்பாதலால் தாமரை மலர்ந்ததைக் 'கமலம் முகம் எடுத்தன' எனக் குறிப்பிட்டார். விமலன் = இராமன். இவன் துயர்க் கடலிலிருந்து எழும்படி ஞாயிறு கீழ்க் கடலிலிருந்து எழுந்தது.

பின்னர் இராமனும் இலக்குமணனும் சீதையைத் தேடி மேற்செல்வாராயினர்.

# 2. அனுமப் படலம்

*அனுமன் இராம—இலக்குமணரைக் கண்டு செயல் ஆற்றியதைப் பற்றிக் கூறுதலின் இது அனுமப்படலம் எனப் பட்டது. இப்பெயருக்குப் பதிலாக, அனுமன் வந்தனைப் படலம், மராமரப் படலம் என்னும் பெயர்களும் சில ஓலைச் சுவடிகளில் காணக் கிடக்கின்றன.*

*இராமனும் இலக்குவனும் சவரி அறிவித்த வழியே ஏகி உருசிய முகம் என்னும் மலையை நெருங்கி அதன்மேல் ஏறினர். இவர்களைக் கண்ட அம்மலைவாழ் சுக்கிரீவன், இவர்கள் வாலியால் ஏவப்பட்டவர்களா யிருப்பார்களோ என அஞ்சி ஒரு குகைக்குள் போய் ஒளிந்துகொண்டான். அவனைச் சேர்ந்த மற்றவர்களும், அனுமனைப் போய் வேவு பார்க்கச் சொல்லிவிட்டுத் தாமும் மறைந்து கொண்டனர்.*

**தாழ்சடைக் கடவுள்**

*கடலில் எழுந்த நஞ்சு துரத்தியபோது தேவரும் அசுரரும் காக்குமாறு வேண்ட, அஞ்சாதீர் என்று அவர்கட்கு ஆறுதல் கூறிய தாழ்ந்து தொங்கும் சடையை உடைய கடவுளாகிய சிவனைப் போல, அனுமன் மற்றவர்களை நோக்கி அஞ்சாதிருங்கள் என ஆறுதல் செய்து இராம இலக்குமணரை ஆராயப் புறப்பட்டான்.*

**''அவ்விடத் தவர்மறுகி அஞ்சி நெஞ்சழி யமைதி
வெவ்விடத்தினை மறுகு தேவர்தானவர் வெருவல்
தவ்விடத் தனியருளு தாழ்சடைக் கடவுளென
இவ்விடத்தினிது இருமின் அஞ்சலென்று இடையுதவி''***(3)*

இப்பாடலில் கம்பர் சிவனது தலைமையைப் பற்றிக் கூறியிருப்பதால், சைவ—வைணவ வேற்றுமை இல்லாதவர் என்பது நன்கு புலப்படும்.

**மாணவப் படிவம்**

அனுமன் மாணவ வடிவம் கொண்டு இராமனை நோக்கி மறைவாக நெருங்கினான்; இவர்கள் கோலத்தால் தவம் புரிவோராகவும், கைவில்லால் போர் புரிபவராகவும் காணப்படுகின்றனரே! என்ன எதிர்மாறான வியப்பு எனத் தன் கற்பனைத் திறன் கொண்டு பல எண்ணுகிறான்:

**"அஞ்சனைக்கு ஒரு சிறுவன் அஞ்சனக் கிரிஅனைய**
**மஞ்சனைக் குறுகி ஒரு மாணவப் படிவம் கொண்டு**
**வெஞ்சமத் தொழிலர் தவமெய்யர் கைச்சிலையர் என**
**நெஞ்சு அயிர்த்து மறையநின்று கற்பினின் நினையும்"**(4)

சிறுவன் = அனுமன்; மஞ்சன் = மைந்தன்; வலிமை உடைய இராமன். அஞ்சனையின் மகனான அனுமனை அஞ்சனைக்கு ஒரு சிறுவன் என்றார். தென்னார்க்காடு மாவட்டப் பகுதியில், யான் இன்னாருடைய 'மகன்' என்பர். தஞ்சாவூரில், ஓரளவு வயது முதிர்ந்தவரும் தம்மை இன்னாருடைய 'பையன்' என்று சொல்வதைக் கேட்கலாம். அந்த முறையில், தஞ்சை மாவட்டத்தாராகிய கம்பர், அஞ்சனைக்கு ஒரு 'சிறுவன்' என்றார் போலும்! முறைப் பெயருக்கு நான்காம் வேற்றுமை 'கு' உருபு போட வேண்டும் என்பதை மறவாமல் 'அஞ்சனைக்குச் சிறுவன்' என்றுள்ளார் கம்பர்.

அனுமன் பிரமசாரி வடிவம்கொண்டு சென்றான் என்பர் பலர். பிரமசாரி என்னும் வட சொல்லுக்கு ஈடாகக் கம்பர் 'மாணவப் படிவம்' என்னும் பெயரை நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளமை ஓர் ஆக்கக் (இலாபக்) கணக்கு.

**அனுமன் கண்ட தோற்றம்**

இராம இலக்குவரின் தோற்றம் கண்ட அனுமன், இவர்கள் பெருந்தன்மை உடையவர்களாய்க் காணப் படுவதோடு. இந்திரனும் அஞ்சும் பெருமித வாழ்வினராயும், தருமதேவனும் அஞ்சும் நல்லொழுக்கத்தினராயும், மன்மதனும் அஞ்சும் அழகர்களாயும் எமனும் அஞ்சும் வலிமை உடையவராயும் தோற்றம் அளிக்கின்றனர் என எண்ணி வியக்கிறான்:

**"சதமன் அஞ்சுறும் நிலையர், தருமன் அஞ்சுறு சரிதர்,**
**மதனன் அஞ்சுறு வடிவர், மறலி அஞ்சுறு விறலர்"** (8)

சதமன் = இந்திரன்; மதனன் = மன்மதன்; மறலி = எமன்; செல்வம், ஒழுக்கம், அழகு, மறம் (வீரம்) என்னும் நான்கும் உடையவர் என்பது இப்பகுதியால் விளங்கும்.

**சொல்லின் செல்வன்**

அனுமன் துணிந்து இராம இலக்குமணரை அடைந்து உங்கள் வரவு நல்வரவாகுக என வரவேற்றான். உடனே இராமன், நீ எங்கிருந்து வருகிறாய் - நீ யார்? என வினவினான். அதற்கு அனுமன், நான் காற்றுத் தேவனுக்கு அஞ்சனை என்பவள் வயிற்றில் பிறந்தவன்; என் பெயர் அனுமன்; இம்மலையில் வாழும் ஞாயிற்றின் மகனாகிய சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன்; உங்களைப் பற்றி அறிந்து வரும்படி அவன் அனுப்பியதால் இங்கு வந்தேன் — என்று விடையிறுத்தான்.

**"கஞ்சம்ஒத்து அலர்ந்த செய்ய**
**கண்ண யான் காற்றின் வேந்தற்கு**
**அஞ்சனை வயிற்றில் வந்தேன்**
**நாமமும் அனுமன் என்பேன்"** (15)

"இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன் தேவநும் வரவு நோக்கி
விம்மலுற்று அனையன் ஏவ வினவிய வந்தேன் என்றான்
எம்மலைக் குலமும் தாழஇசைசுமந்து எழுந்த தோளான்"
(16)

நீ யார்? உன் பெயர் என்ன? உன் தாய் தந்தையர் யார்? நீ இப்போது எங்கிருக்கிறாய்? யாரிடம் வேலை செய்கிறாய்? இங்கே எங்களிடம் என்ன வேலையாய் வந்தாய்? - என்னும் கேள்விகட்குச் சொல்லவேண்டிய பதில்களை, நீ யார்? - எங்கிருந்து வந்தாய்? என்ற கேள்வி கட்கு உரிய பதிலாய்ச் சுருக்கித் தன் வரலாற்றையே கூறி விட்டான் அனுமன்.

கேட்ட இராமன், இலக்குமணனை நோக்கி, தம்பி, இவனது திறமையை நோக்கின் இவன் கல்லாத கலையே— மறையே உலகில் இல்லை போலும்! இவன் சொல்லாலேயே எல்லாம் தெரிகின்றன. இந்தச் 'சொல்லின் செல்வன்' யாரோ? நான்முகனா யிருப்பானோ? அல்லது சிவனா யிருப்பானோ? என்று கூறி வியக்கிறான்:

"இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன்
இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே
என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொல் இச்சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளைய வீர!
விரிஞ்சனோ விடைவல்லானோ? (18)

என்பது பாடல். இளைய வீரன் இலக்குமணன். விரிஞ்சன் = நான்முகன். விடைவல்லான் = விடையூர்தியுடைய சிவன். இராமன் திருமாலின் தெய்வப் பிறவியாதலின், இவன்

திருமாலா என்று வினவவில்லை. அனுமனைச் 'சொல்லின் செல்வன்' என்னும் சிறப்புப் பெயரால் குறித்தமையைக் காப்பியம் கற்போர் பலரும் சுவைத்து மகிழ்கின்றனர்.

அனுமன் சொல் வன்மையால் சிறப்புற்றான். திருவள்ளுவர் இதற்குச் 'சொல்வன்மை' என்னும் தலைப்பில் பத்துக் குறள்பாக்கள் பாடியுள்ளார். முதல் பாடலை மட்டும் நோக்குவோம். சொல் பேசும் நாக்குநயம் என்கிற நன்மை ஒருவகை உடைமையாகும்; அந்த நாக்கு நலம், மற்ற நலங்களுள் ஒன்றாய் அடங்காமல், யாவற்றினும் சிறந்ததா யுள்ளதாகும் என்பது கருத்து:

**"நாநலம் என்னும் நலன் உடைமை, அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று"** (641)

என்பது குறள்.

**"சொல் பிறரைக் காக்கும் கருவி"** (320)

என்பது நாலடியார்ப் பாடல் பகுதி.

**அனுமனின் திறமை**

சுக்கிரீவன் எங்குள்ளான் - அவனைக் காட்டுக என்று கேட்ட இராமனிடம் அனுமன் பின்வருமாறு கூறுகிறான்: மலைபோன்ற தோள்களை உடைய உங்களை ஒத்த மேன்மையர் யாருமிலர். ஆதரவுடன் அவனைக் காண விரும்பினீர் என்றால், அவனுக்குத் தீமை விலகித் தவச் செல்வம் வருகிறது என்பது பொருள். பாடல்:

**"மாதிரப் பொருப்போ டோங்கு**
**வரம்பிலா உலகில் மற்றுப்**
**பூதரப் புயத்துவீரர் நும்மொக்கும்**
**புனிதர் யாரே**

**ஆதரித்து அவனைக் காண்டற்கு**
**அணுகினிர் என்னின் அன்னான்**
**தீதவித்து அரிதின் செய்த**
**செய்தவச் செல்வம் நன்றே'' (21)**

*ஒருவரிடம் உதவி வேண்டுவோர் முதலில் அவரைப் புகழ்தல் உலக நடைமுறை. அனுமனிடம் அந்தத் திறமை இருப்பதை இப்பாடல் அறிவிக்கிறது.*

**சுக்கிரீவன் வரலாறு**

*ஞாயிற்றின் மகனாகிய சுக்கிரீவன் இளையவன். இந்திரன் மகனாகிய வாலி மூத்தவன்; சுக்கிரீவனின் தமையன். அண்ணனாகிய வாலி தம்பியாகிய சுக்கிரீவனின் பங்கு உடைமைகளையெல்லாம் பறித்துக் கொண்டு விரட்டி விட்டான். அதனால் சுக்கிரீவன் என்னோடு இம்மலையில் தங்கியுள்ளான். அவனுக்கு மீண்டும் செல்வம் கிடைக்கப் போவதின் அறிகுறியாக நீங்கள் வந்துள்ளீர்கள் என மேலும் அனுமன் கூறினான். பாடல்:*

**''இரவிதன் புதல்வன் தன்னை**
**இந்திரன் புதல்வன் என்னும்**
**பரிவிலன் சீறப்போந்து பருவரற்கு**
**ஒருவ னாகி**
**அருவியங் குன்றில் என்னோடு**
**இருந்தனன் அவன்பால் செல்வம்**
**வருவதோர் அமைவின் வந்தீர்**
**வரையினும் வளர்ந்த தோளீர்'' (22)**

*இரவி புதல்வன் சுக்கிரீவன். இந்திரன் புதல்வன் வாலி. பருவரல் = துன்பம். இவ்விருவரின் தாய் ஒருத்தி யாதலால் தமையன் - தம்பிமுறையின ராயினர். குந்தி என்னும் ஒரு தாயினிடத்தில் ஞாயிற்றால் கர்ணனும், எமதருமனால் தருமனும், காற்றரசனால் (வாயு பகவானால்)*

பீமனும், இந்திரனால் அர்ச்சுனனும் தோன்றியதுபோல் இதையும் கொள்ளவேண்டும். (என்ன நாகரிகமோ இது. அவர்களின் நாகரிகம் இது.)

இராமன் ஞாயிறு குலத்தவ னாதலின், சுக்கிரீவன் ஞாயிறின் மகன் என்று அறிவிப்பின், இராமன் சுக்கிரீவன் பால் இரக்கம் காட்டுவான் என்றெண்ணி அனுமன் கூறியதான ஒரு குறிப்பும் இதில் உள்ளது.

என் (சு. ச.) நண்பர் ஒருவர் ஒருநாள் என்னிடம், 'நான் தனித்து விட்டேன்' என்றார். நிரம்பப் பிள்ளைகளும் கடலனைய சுற்றமும் உடைய அவர் தம் மனைவி இறந்து விட்டதால் - வாழ்க்கைத் துணை என வள்ளுவர் கூறியுள்ள படித் துணையை இழந்துவிட்டதால் அவ்வாறு கூறினார். இங்கேயும், சுக்கிரீவன் 'ஒருவனாகி இருந்தனன்' என அனுமன் கூறியிருப்பது, அவன் மனைவியை இழந்து தனித்துள்ளான் என்றதைக் குறிக்கும். சுக்கிரீவன்மனைவி யாகிய உருமை என்பவளை வாலி கைப்பற்றிக் கொண்டான். ஆதலால் அவன் தனித்தவன் ஆனான். மேலும் அனுமன் சுக்கிரீவனது நிலைமையை விளக்கி அவனுக்கு அடைக்கலம் அளிக்கவேண்டும் என்கிறான்:

> **"நடுங்கினர்க்கு அபயம் நல்கும்**
> **அதனினும் நல்லதுண்டோ"** (23)

என்பது பாடல் பகுதி. மேலும் கூறுகிறான்:

தேவர், இயங்குவன, இயங்காதன ஆகிய எல்லாம் உள்ளிட்ட மூவேழ் உலகங்களையும் காக்கவல்ல நீங்கள் எங்களைக் காத்தல் என்பது எளிய செயல். முருகனைப் போன்ற சிறப்புமிக்க உங்களிடம் அடைக்கலம் புகுந்த எமக்கு இதனினும் வேறு நன்மை இல்லை என்றான்:

**"எம்மையே காத்திர் என்றல் எளிதரோ இமைப் பிலாதோர்**
**தம்மையே முதலிட்டு ஆன்ற சராசரம் சமைத்த ஆற்றல்**
**மும்கை ஏழுலகும் காக்கும் முதல்வர்நீர் முருகற் செவ்வி**
**உம்மையே புகல் புக்கேமுக்கு இதின் வரும் உறுதி**
**உண்டோ?"** (24)

என்பது பாடல். இமைப்பிலாதோர் = தேவர். சராசரம் = சர அசரம். இயங்குவன - இயங்காதன. இதின் = இதைக் காட்டிலும். இராம இலக்குமணர்க்கு முருகனை உவமையாக அனுமன் கூறியதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். இதில் உள்ள பொருத்தம் யாது?

**முருகன்**

முருகு என்னும் சொல்லுக்கு இளமை, அழகு, தெய்வத் தன்மை என்னும் பொருள் உண்டு. முருகன் என்றால் இம்மூன்றும் உடையவன் என்பது பொருளாம். இதனால் தான் அருணகிரிநாதர் கந்தர் அலங்காரம் என்னும் நூலில்,

**"மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்"** (70)

என்று குறிப்பிட்டுள்ளார். 'முருகா' என ஒருமையில் தொடங்கி 'நாமங்கள்' எனப் பன்மையில் முடித்துள்ளார். 'முருகா' என்பதில் இளைஞன், அழகன், தெய்வமணம் கமழ்பவன் என்னும் மூன்று பெயர்கள் அடங்கியுள்ளன. அதனால்தான் "முருகா எனும் நாமங்கள்" என்றார். இராம இலக்குமணரும் இளைஞராயும் அழகராயும் தெய்வப்பிறவித் தொடர்புடையவராயும் இருத்தலின், அவர்கட்கு முருகன் ஒப்புமையாக்கப் பட்டுள்ளான். மற்றும், இதனால், கம்பர் சமய வேறுபாடு உடையவர் அல்லர் என்பதும் பெறப்படும்.

அனுமன் தங்கள் வரலாறு கூறியபின், இலக்குவன் தங்கள் வரலாற்றை - அயோத்தியிலிருந்து - சீதையை இராவணன் எடுத்துச் சென்றது வரை - விடாமல் கூறினான். பின் அனுமன், இராமனின் ஏவல்படிச் சுக்கிரீவனை அழைத்துவரச் சென்றான்.

# 3. நட்புக்கோள் படலம்

*இராமனும் சுக்கிரீவனும் நட்பு கொண்டதை விளக்கும் படலம் இது. இந்தத் தலைப்பு, நட்புப் படலம், சுக்கிரீவன் நட்புப் படலம். சுக்கிரீவன் நட்புப்புரி படலம் என்றெல்லாம் சில சுவடிகளில் வேறுபட்டுள்ளது.*

**அருநடம் புரிதல்**

*இராமனிடம் சுக்கிரீவனை அழைத்துவரச் சென்ற அனுமன், சுக்கிரீவனை நோக்கி, வலிய வாலியைக் கொல்லும் எமன் வந்து விட்டான்; நாம் துன்பக் கடலைக் கடந்து விட்டோம் என்று கூறி, ஆலம் உண்ட சிவனைப் போல அருநடனம் புரியலானான்:-*

**''மேலவன் திருமகற்கு உரைசெய்தான் விரைசெய்தார்**
**வாலியென் றளவிலா வலியினான் உயிர்தெறக்**
**காலன் வந்தனன் இடர்க்கடல் கடந்தனம் எனா**
**ஆலமுண் டவனின் நின்று அருநடம் புரிகுவான்''** (2)

*மேலவன் = ஞாயிறு, திருமகன் = சுக்கிரீவன். ஆலம் உண்டவன் சிவன். இன்னும் துன்பக் கடலைக் கடக்க வில்லை. இருப்பினும், உறுதி பற்றிக் 'கடந்தனம்' என இறந்த காலத்தால் கூறியுள்ளான். இவ்வாறு சில காரணங் களால் காலமாறுபாடு ஏற்படுவதுண்டு என இலக்கணநூல் கூறுகிறது.*

**''விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்**
**பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி''**

*என்பது நன்னூல் (பொதுவியல்–33) நூற்பா. இங்கே தெளிவு என்பது உறுதியைக் குறிக்கிறது.*

தேவரையும் அசுரரையும் துரத்தி வந்த ஆலத்தைச் (விஷத்தைச்) சிவன் உண்டபின் நடனம் ஆடினானாம். அவனைப்போல் மகிழ்ச்சி மிகுதியால் இப்போது அனுமன் நடனம் ஆடினான். மகிழ்ச்சியின்போது சிறார்களும் குதிப்பது இயல்பன்றோ! நடனக் கலையின் அடித்தளமே மகிழ்ச்சி மேலீடுதான். மற்றும், சிவன் இயற்கையிலேயே நடனம் ஆடும் நடராசத் தெய்வ மாயிற்றே. எனவே, அனுமன் நடனம் ஆடியதற்குச் சிவனது ஆடலை ஒப்புமை காட்டியது சாலப் பொருத்தமாம்.

**போதியா உணர்வு**

இராம இலக்குமணர் யாரும் கற்பிக்காமலேயே - இயற்கையாகவே அளவில்லாத மெய்யுணர்வு உடையவர் என்கிறான் அனுமன் "போதியாது அளவிலா உணர்வினார்" என்பது (5) பாடல் பகுதி. "மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு" என்னும் சிறு பஞ்ச மூலப்பாடல் (22) பகுதி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. கல்லாது கற்ற அருளாளர்கள் பலரின் வரலாறுகள் நாம் அறிந்தனவே. மேலும் கூறுவான் அனுமான்.

பேரரசனாம் தந்தை உதவியும், சிற்றன்னையின் ஒரு சொல்லால் உலகப் பெருஞ் செல்வமாகிய அரசைத் துறந்து தம்பிக்குக் தந்தவன் வந்திருக்கும் இராமன். பாடல்:

> **"உளைவயப் புரவியான் உதவ உற்று, ஒரு சொலால்**
> **அளவில் கற்புடைய சிற்றவை பணித்து அருளலால்**
> **வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திரு எலாம்**
> **இளையவற்கு உதவி இத்தலை எழுந்தருளினான்"** (8)

புரவியான் = தயரதன், சிற்றவை = கைகேயி. மகிதலம் = உலகம். அனுமன் வாயிலாகக் கம்பர், இராமனது குலப்பெருமையை - குடும்பச் சிறப்பை விட்டுக் கொடுக்

காமல் பதமாக - பக்குவமாக உயர்த்திக் கூறியுள்ளார். அப்படியென்றால்தான் சுக்கிரீவனுக்கு நன்னம்பிக்கை தோன்றும். பலரும் வெறுத்த கைகேயியை 'அளவில் கற்புடைய சிற்றவை' என்கிறார். சிற்றவை பணித்தாள் என்றால், கட்டளையிட்டாள் என்பதுதான் பொருள். ஆனால் அதை அருளுடைய செயலாகப் (அருளலால்) பூசி மெழுகி மெருகேற்றி யுள்ளார். இதனால் இராமனுக்கு நன்மை செய்தவள் போல் ஆகிறாள். "நீ போய் தாங்கரும் தவம் மேற்கொண்டு - புண்ணியத் துறைகள் ஆடி...வா" என்றாளே—அது இராமனுக்கு நன்மை செய்ததுபோல் தோன்றவில்லையா?

இங்கே கம்பர் 'ஒரு சொலால்' என்னும் தொடரைப் பயன்படுத்தித் தம் நுட்பமான புலமைத் தலைமையை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது:- நீ காடு செல் என்றால் சிலர் உடனே செல்ல மாட்டார்கள்; சில்லாண்டுகளாயினும் யான் அரசாள இடம் கொடுங்கள் என்றோ? நான் காட்டில் எவ்வாறு வாழ முடியும்? என்றோ - மூத்தவனாகிய எனக்கே அரசு உரிமையானது என்றோ வாதிடுவார்கள். அதற்குக் கைகேயி பல முறை பதில் தந்து வற்புறுத்தி - கட்டாயப்படுத்தி அனுப்ப வேண்டியிருக்கும். ஆனால் கைகேயி ஒருமுறை சொன்னதுமே, "இப்பணி தலைமேற் கொண்டேன் - இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்" என்று கூறிப் புறப்பட்டுவிட்ட இராமனது உயர்வு 'ஒரு சொலால்' என்பதால் புலனாகும், 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு – நல்லவனுக்கு ஒரு சொல்' என்பது உலகியல் வழக்காறாகும்.

மற்றும், தனது உரிமையைத் தம்பிக்குத் தந்தவன், வாலியைக் கொன்றதும் நமது அரசை அவன் தட்டிப் பறித்துக் கொள்வான் என்ற அச்சமும் வேண்டியதில்லை என்று குறிப்பாயுணர்த்தியதாகவும் கொள்ளக் கிடக்கிறது.

மேலும், தமையனாகிய இராமன் தம்பிக்கு அரசு தந்திருப்ப தால், சுக்கிரீவனது தமையனாகிய வாலியிடமிருந்து தம்பிக்கு உரிய பங்கைப் பெற்றுத் தருவான் என்ற குறிப்பும் இதில் பொதிந்து கிடக்கிறது.

**சிவனது தலைமை**

மேலும் அனுமன் கூறுகிறான்: இராமன் பகைவரைக் கொன்று நல்லவர்க்கு அருள் செய்யக் கூடியவன். மேலான சிவன் முதலாய தலைமைத் தெய்வங்களும் வியப்படையும் படியான வலிமை உடையவன்.

> **"பரமுகப் பகைதுமித்து அருளுவான் பரமராம்**
> **அரன்முதல் தலைவருக்கு அதிசயத் திறலினான்"** (10)

என்பது பாடல் பகுதி. 'துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்' என்று வடமொழியில் சொல்கிறார்களே - அதுதான், 'பகை துமித்து அருளுவான்' என்னும் கம்பரின் தொடரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே, சிவனுக்கு முதன்மை கொடுத்திருக்கும் கம்பரின் சமயப் பொதுவுடைமை புலனா கிறது. அனுமன் இவ்வாறு இராமனது வலிமையை விதந்து கூறினமை, சுக்கிரீவனுக்கு இராமனிடம் நம்பிக்கை உண்டாக வழி செய்கிறது.

**அரசியல் நூல்**

அரசியல் சூழ்வு நூல் கற்றவனாகிய அனுமன் இவ்வா றெல்லாம் கூறி, இராமனிடம் போவாயாக என்று சுக்கிரீவ னுக்குக் கூறினான்.

> **"புந்தியின் பெருமையாய் போதருஎன்று உரைசெய்தான்**
> **மந்திரம் கெழுமுநூல் மரபுணர்ந்து உதவுவான்"** (15)

புந்தியின் பெருமையாய் = அறிவில் சிறந்த சுக்கிரீவனே. போதரு = போவாயாக அதாவது இராமனிடம் வருவாயாக.

இராமனின் பெருமைகளையெல்லாம், கூறியபின், நீ அறிவில் சிறந்தவனாதலின் இவற்றையெல்லாம் ஆய்ந்து பார்க்கின், இராமனிடம் போவதே நல்லது என்பதை ஒத்துக்கொள்வாய் என்னும் கருத்தமையப் 'புந்தியின் பெருமையாய்' என்று அனுமன் தூக்கி விளித்தான். அனுமன் அரசியல் சூழ்வு நூல் (இராச தந்திர நூல்) கற்றவன் என்பதால், அக்காலத்திலேயே இத்தகைய நூல் இருந்துள்ளது என்பது போதரும். திருக்குறளில் உள்ள 'பொருள்பால்' இந்த நூலின் தகுதி உடையது என்பது தமிழுக்குப் பெருமை தரும். இதைக் கொண்டு, தமிழில் அரசியல் சூழ்வு நூல்கள் பல இருந்திருக்க வேண்டும் என உய்த்துணரலாம்.

**புதுக் கண்டுபிடிப்பு**

அனுமன் கூறிய சூழ்வுரைகளைத் தன் அறிவுக் கூர்மையால் ஆய்ந்தறிந்த சுக்கிரீவன், அனுமனை நோக்கி, பொன்னைப் போன்றவனே! உன்னையே உடைமையாகப் பெற்ற எனக்கு இயலாதது ஒன்றுமில்லை; இராமனிடம் போவோம் வருக என்று கூறிச் சென்று தனக்குத் தானே ஒத்தவனாகிய இராமனின் தாள் சேர்ந்தான்.

**"அன்னவாம் உரையெலாம் அறிவினால் உணர்குவான்**
**உன்னையே உடைய எற்கு அரியது எப்பொருளரோ**
**பொன்னையே பொருவுவாய் போதெனப் போதுவான்**
**தன்னையே அனையவன் சரணம்வந் தணுகினான்"** (16)

'உன்னையே உடைய' என்பது பொருள் பொதிந்த தொடர். நீயே என் முழு உடைமைப் பொருள் எனவும், என் உடைமைப் பொருள்களுள் நீயே சிறந்த உடைமை எனவும், மிகவும் சிறந்தவனாகிய உன்னையே யான் உடைமையாக உடையேன் எனவும் இந்தத் தொடருக்குப் பொருள் கூறலாம். இங்கே புதிய இலக்கணக் குறிப்பு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளேன். அதாவது:

'ஏ' என்ற இடைச் சொல்லுக்குத் தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என ஐந்து பொருள்கள் உண்டெனவும், 'உம்' என்னும் இடைச்சொல்லுக்கு எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்கள் உண்டெனவும் தொல்காப்பியர் இடையியலில் கூறியுள்ளார்.

**"தேற்றம் வினாவே, பிரிநிலை, எண்ணே,**
**ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே"** (9)

**"எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை**
**முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று**
**அப்பா லெட்டே உம்மைச் சொல்லே"** (7)

என்பன நூற்பாக்கள்.

'ஏ' இடைச் சொல்லுக்குத் தொல்காப்பியர் கூறியுள்ள வற்றோடு 'இசை நிறை' என்ற ஒன்று கூட்டி 'ஏ' ஆறு பொருளில் வரும் என்று நன்னூலார் இடையியலில் கூறியுள்ளார்:

**"பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம்**
**இசைநிறை என ஆறு ஏகாரம்மே"** (3)

என்பது நூற்பா. 'உம்' (உம்மை) என்னும் இடைச் சொல்லுக்கு நன்னூலாரும் எட்டுப் பொருள்கள் கூறியுள்ளார்:

**"எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை**
**தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே"** (6)

என்பது நூற்பா.

தொல்காப்பியரும் நன்னூலாரும் 'உம்' என்னும் இடைச் சொல்லுக்கே 'சிறப்பு' என்னும் பொருள் உண்டு என்றுள்ளனர்; 'ஏ' என்னும் இடைச் சொல்லுக்குச் 'சிறப்பு' என்னும் பொருள் உண்டென அவர்கள் கூறிற்றிலர். 'ஏ'

என்னும் இடைச் சொல்லும் 'சிறப்பு' என்னும் பொருள் தரும் என அடியேன் (சு.ச.) கூறுகிறேன். இதை விளக்க மீண்டும் 'உன்னையே உடைய' என்னும் தொடருக்கு வருவோம். இதற்கு, 'நீயே என் முழு உடைமைப் பொருள்' எனப் பொருள் கூறின் 'ஏ' தேற்ற மாகும். 'என் உடைமைப் பொருள்களுள் நீயே சிறந்த உடைமை' எனப் பொருள் கூறின் 'ஏ' பிரிநிலையாகும். 'மிகவும் சிறந்தவனாகிய உன்னையே யான் உடைமையாக உடையேன்' எனப் பொருள் கூறின் 'ஏ' சிறப்பு ஆகும். தொல்காப்பியரும் நன்னூல் இயற்றிய பவணந்தியாரும் கூறாத சிறப்புப் பொருள் 'ஏ' என்னும் இடைச் சொல்லுக்கும் உண்டு என்பதுதான் அடியேனது புதுக் கண்டுபிடிப்பாகும்.

பொன் = இந்திரனுக்குக் குருவும் அமைச்சருமா யிருக்கும் வியாழன். இந்திரனுக்கு வியாழன்போல, சுக்கிரீ வனுக்கு அனுமன் அமைச்சனாய் உள்ளானாம். தன்னையே அனையவன் = தனக்கு வேறு உவமையில்லாத இராமன். அவனுடைய தாள் சேர்ந்த சுக்கிரீவனுக்கு இனிக் கவலை யில்லை. இங்கே,

> **''தனக்கு உவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
> **மனக்கவலை மாற்றல் அரிது''** (7)

என்னும் குறள் ஒப்பு நோக்கத் தக்கது,

**கேள்வியும் கல்வியாகும்**

தன்னைக் கண்டு வணங்கிய சுக்கிரீவனை இராமன் வரவேற்றுத் தன் பக்கலில் அமரச் செய்தான். இருவரும் ஒருங்கு அமர்ந்திருப்பது, ஒரு செயல் (காரியம்) கைகூடு வதற்கு, முன் பிறவியில் செய்த தவமும் இப்பிறப்பில் செய்யும் முயற்சியும் சேர்ந்து கொண்ட நிலைமைபோல் இருந்ததாம்; மற்றும், இயற்கையாக உள்ள அறிவும்

கேட்டுத் தெரிந்து கொண்ட கல்வியும் சேர்ந்துள்ள நிலைமை போன்றும் இருந்ததாம்:

**"கூட்டமுற் றிருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்**
**ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்தது ஒத்தார்**
**வீட்டுவாள் அரக்கர் என்னும் தீவினை வேரின் வாங்கக்**
**கேட்டுணர் கல்வியோடு ஞானமும் கிடைத்தது ஒத்தார்"**
(22)

கூட்டமுற் றிருந்த வீரர் = கூடி அமர்ந்துள்ள இராமனும் சுக்ரீவனுமாகிய வீரர்கள். இப்பாடலில், இருவரின் கூட்டத்திற்கு இரண்டு வகை உவமைகள் கூறப்பட்டுள்ளன. முதல் உவமை, முந்திய தவமும் இப்போது செய்யும் முயற்சியும் சேர்ந்தமை. இந்த உவமையால் அறியப்படுவ தாவது: முன் பிறவியில் நாம் நல்லது செய்த நல்லூழ் இருந்தால் காரியம் தானேகைகூடும் என்று இருந்தால் போதாது; இப்போதும் முயற்சி செய்ய வேண்டும் என்பது. முயற்சி திருவினையாக்கும். ஈண்டு,

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்"** (620)

என்னும் குறள் எண்ணத்தக்கது.

மற்றோர் உவமையாவது; கேள்விக் கல்வியும் இயற்கை யான மெய்யறிவும் சேர்ந்து கொண்டது. இங்கே உள்ள 'கேட்டுணர் கல்வி' என்பது ஆய்வுக்கு உரியது. உலகில் எந்த மொழியிலும் சரி - எழுத்து கண்டு பிடித்து எழுதிக் கற்பதற்கு முன், ஒருவர் வாயால் சொல்ல மற்றவர் காதால் கேட்டறிந்து கற்றதே கல்வி எனப்பட்டது. வட மொழி வேதம் அவ்வாறே பயிற்றப்பட்டது-பயிலப்பட்டது. இதனால் வேதம் 'எழுதாக் கிளவி' எனப்பட்டது. இப்போதும் ஆப்பிரிக்கக் காட்டு வாசிகள் சிலர், வாய் வழி-செவி வழியாகவே கல்வி பெறுவதாகச் சொல்லப்படுகிறது.

நாகரிகம் பெற்ற – எழுதிப் படிக்கின்ற நம் நாட்டிலும் - இப்போதும் பலர் சொற்பொழிவு வாயிலாகவும், கதை கேட்டல் (கதாகாலட்சேபம்) வாயிலாகவும் பல கருத்து களைக் கேட்டுக் கல்வியறிவு பெறுவதைக் காணலாம். படித்துப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவருங்கூட, தாம் படித்த துறையல்லாத வேறு துறைகளைப் பற்றி அத்துறை வல்லுநர்கள் பல நூல்களைப் படித்து ஆற்றும் சொற் பொழிவைக் கேட்பதால் எளிய முறையில் - குறுகிய காலத்தில் பல செய்திகளைக் கற்றுக்கொள்ளலாம். எனவே தான்.

**''கேள்வியும் கல்வி யாகும்''**

எனத் திவாகரரும்,

**'கற்றிலனாயினும் கேட்க'**

எனத் திருவள்ளுவரும்

**'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்'**

என ஞானசம்பந்தரும் கூறியுள்ளனர். வள்ளுவர் கேள்விக்கு என்றே ஒரு தலைப்புத் தந்து பத்துக் குறள்கள் எழுதி உள்ளார். பிறநூல்களிலும் கேள்வி பற்றிக் காணலாம்.

இத்தகைய கேள்வி - கல்விமட்டும் இருந்தால் ஒளி பெற இயலாது. இயற்கையான மெய்யறிவும் இருக்க வேண்டும் என்பது கம்பரால் அறிவிக்கப்பட்டுள்ளது. படித்தவர்கட்குள்ளேயே எல்லாரும் ஒளி பெறுவது (பிரகாசிப்பது) இல்லை. உண்மையான இயற்கை அறிவும் - சொந்தத்திறமையும் (Originality) இருந்தாலேயே ஒளி பெற முடியும். இங்கே,

**''மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாவுள முன்னிற் பவை''** (635)

என்னும் குறள் எண்ணத்தக்கது. மதி நுட்பம் என்பதைத் தான் 'ஞானம்' என்று கம்பர் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

இந்த 'ஞானம்' என்பதற்குப் 'பரஞானம்' எனப் பொருள் கூறி மேலே அழைத்துச் செல்பவர்களும் உண்டு.

**ஆகாதது என்?**

சுக்கிரீவன் இராமனை நோக்கி, உலகுக்கெல்லாம் தலைவனாகிய நின்னை அடையப் பெற்றது எனது நற்பேறு; ஊழ்வினை துணை செய்யுமாயின் அடைய முடியாதது ஒன்று மில்லை — என்றான்.

> **"நாயகன் உலகுக் கெல்லாம்**
> **என்னலாம் நலமிக் கோயை**
> **மேயினென் விதியே நல்கின்**
> **மேவலாகாது என் என்றான்"** (23)

என்பது பாடல் பகுதி. 'விதியே நல்கின் மேவலாகாது என்' என்பது வேற்றுப் பொருள் வைப்பணி.

**பயிலாத கல்வியார்**

இராம இலக்குமணர் சுக்கிரீவன் முதலானோருடன் ஒரு சோலையில் தங்கினர். அச்சோலையில் ஆங்காங்கு மிக்க ஒளியுடைய மணிகள் (இரத்தினங்கள்) பதிக்கப்பட்டுள்ளன. அம்மணிகள் வீசும் ஒளிமுன், ஞாயிற்றின் வெயில் ஒளியும் திங்களின் நிலவு ஒளியும் எடுபடவில்லை. கல்வி கேள்வி வல்ல அறிஞர்முன் கல்வி பயிலாதவரின் செயல் செல்லாதது போல் காணப்பட்டது இந்தக் காட்சி. பாடல்:

> **"அயர்வில் கேள்விசால் அறிஞர் வேலைமுன்**
> **பயில்வுஇல் கல்வியார் பொலிவு இல் பான்மைபோல்**
> **குயிலு மாமணிக் குழுவு சோதியால்**
> **வெயிலும் வெள்ளி வெண் மதியும் மேம்படா"** (32)

இங்கேயும் கம்பர் கேள்விச் செல்வத்தையே பெரிதாகக் குறிப்பிட்டுள்ளார். பயில்வு இல் கல்வியார் என்பதைக் கல்வி பயில்விலார் என மாற்றிப் பொருள் பண்ணல்

வேண்டும். இது, திருமுருகாற்றுப் படையில் உள்ள 'கழிந்த உண்டியர்' என்பதற்கு 'உண்டி கழிந்த துறவியர்' எனப் பொருள் கொள்ளல் போலவும், அகநானூற்றில் உள்ள 'சென்று சேக்கல்லாப்புள்ள' என்னும் பகுதிக்கு, 'பறவைகள் சென்று சேராத குளம்' எனப் பொருள்செய்தல் போலவும், பிரபுலிங்க லீலையில் 'நீங்கிய உடையாள்' என்பதற்கு உடை நீங்கியவள் எனப் பொருள் செய்தல் போலவும் பொருள் கொள்ளவேண்டிய பகுதியாகும். இப்பாடலோடு,

**"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்"** (404)
**"கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்"** (403)

என்னும் குறள்களும், நாலடியாரில் உள்ள,

**"கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து**
**நல்லறி வாளர் இடைப்புக்கு-மெல்ல**
**இருப்பினும் நாயிருந் தற்றே; இராஅது**
**உரைப்பினும் நாய்குரைத் தற்று"** (254)

என்னும் பாடலும் ஒப்பு நோக்கத்தக்கன. சோலையைப் பற்றிக் கூறும்போது, சிறந்த கருத்துகளை இடையிலே புகுத்தும் வாய்ப்பைக் கம்பர் நழுவவிடாதது பாராட்டத் தக்கது.

### துணையில்லா விருந்து

சுக்கிரீவன் அளித்த காய், கனி, கிழங்கு முதலியவற்றை உண்ட இராமன் எண்ணிப் பார்க்கலானான். விருந்து பரிமாறச் சுக்கிரீவனது மனைவியைக் காணவில்லையே! கணவனும் மனைவியும் சேர்ந்து விருந்து பேணுதலே சிறப்புடைத்தாகும். இங்கே பெண் இல்லையே என்றெண்ணிச் சுக்கிரீவனை நோக்கி, தம்பியே! நீயும்

என்னைப் போல் மனைவியைப் பிரிந்திருக்கிறாயோ என வினவினான்: பாடல்

**"விருந்தும் ஆகி அம் மெய்ம்மை அன்பினோடு**
**இருந்து நோக்கி நொந்து இறைவன் சிந்தியா**
**பொருந்தும் நன் மனைக்கு உரிய பூவையைப்**
**பிரிந்துளாய் கொலோ நீயும்? பின்! என்றான்"** (35)

பூவை = பூவை போன்ற பெண் — அதாவது சுக்கிரீவன் மனைவி. இது உவமையாகுபெயர். அவரவர்க்கு அவரவர் நிலைமையே முனைப்பாயிருக்கும். சீதையைப் பிரிந்த இராமன் சுக்கிரீவனின் மனைவி இல்லாததை எளிதில் கண்டுபிடித்துவிட்டான். கணவனும் மனைவியும் சேர்ந்து படைத்தலே சிறப்பு என்பதற்கு, இலங்கையில் இருந்தபோது சீதை இராமனை நினைந்து

**"விருந்து கண்டபோது என்னுறுமோ என விம்மும்"**

என எண்ணியதும், மதுரையில் கோவலன் கண்ணகியிடம் தன் குறைகளைச் சுட்டிக் கூறி வருந்தியபோது அவள்,

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை..."**

எனக் குறிப்பிட்டுக் கூறியதும் போதிய சான்றாகும். இந்தப் பாடலில், இராமன் சுக்கிரீவனைப் 'பின்' என அண்மை விளியாக விளித்ததாகக் கம்பர் கூறியுள்ளார். 'முன்' என்பதற்கு அண்ணன் என்ற பொருளும் 'பின்' என்பதற்குத் தம்பி என்ற பொருளும் உண்டு. இங்கே தம்பியே என விளித்திருப்பதைக் கொண்டு, இராமன் முதலிய நால்வருடன் குகன் ஐந்தாவதாகவும் சுக்கிரீவன் ஆறாவதாகவும் ஆன உடன்பிறப்பினர் (சகோதரர்) என்பது பெறப்படும். பின்னாலே யுத்த காண்டம் - வீடணன் அடைக்கலப் படலத்தில்

**"குகனொடும் ஐவரானோம்முன்பு, பின் குன்றுசூழ்வான்**
**மகனொடும் அறுவ ரானோம்..."** (146)

என்று கூறப்பட்டிருப்பதை ஈண்டு இணைத்து நோக்க வேண்டும். (குன்று சூழ்வான் = ஞாயிறு. அவன் மகன் சுக்கிரீவன்).

'பிரிந்துளாய் கொலோ நீயும்' என்பதில் உள்ள 'நீயும்' என்பது, 'நான் பிரிந்திருப்ப தல்லாமல்' என்ற இறந்த (நடந்துவிட்ட) செய்தியைத் தழுவுவதால், 'இறந்தது தழுவிய எச்ச உம்மை எனப்படும். தன்னைப் போலவே சுக்கிரீவனும் மனைவியை வாலியால் இழந்தவன் என்பதனால்தான் இராமனுக்குச் சுக்கிரீவன்பால் மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று எனலாம்.

**நால்பூத ஆற்றல்**

அனுமன் இராமனிடம் வாலியின் வலிமை பற்றி மிகவும் விரிவாக விளக்கினான். அவற்றுள் ஒன்று: நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் அழியாத நான்கு பூதங்களின் வலிமை முழுவதையும் ஒருங்கே பெற்றவன் வாலி – என்று கூறினான்.

**"நிலனும் நீரும் மாய்நெருப்பும் காற்றும் என்று**
**உலைவில் பூதம் நான்குடைய ஆற்றலான்"** (39)

என்பது பாடல் பகுதி. விண் என்ற பூதத்திற்கு எந்த ஆற்றலும் இல்லாமையால் இங்கே அதைக் குறிப்பிட வில்லை. உலோகாயத வாதிகள் விண் என்ற பூதத்தை ஏற்றுக் கொள்ளாமல் பூதங்கள் நான்கே என்று கூறுதல் இதனால்தான் போலும்!

நிலம் அசைதலோ — பிளப்பதோ செய்யின் அந்நில நடுக்கத்தைத் தடுப்பவர் யாரும் இல்லை. பூகம்பமே இவ்வாறு குறிக்கப்படுகிறது. கடல்நீர் பெருக்கெடுத்துப்

பெருவெள்ளமாய் வரின் தடுப்பார் இல்லை. நெருப்பு எரிமலையாய்க் கொதித்தெழுந்து தீயைக் கக்கினால் அதை அடக்குவாரில்லை. காற்று சூறாவளியாய்ச் சுழன்று முறுக்கி அடித்தால் அதை அடக்குவார் இலர். இதைப் புறநானூற்றில் உள்ள

> **"நீர்மிகின் சிறையும் இல்லை; தீமிகின்**
> **மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை;**
> **வளிமிகின் வலியும் இல்லை"** (51)

என்னும் பாடல் பகுதி தெளிவாக அறிவிக்கின்றது. இந்த நான்கு பூதங்களின் ஆற்றல் உடையவன் வெகுண்டால் அவனை யாராலும் வெல்ல முடியாது என்று அனுமன் கூறினான்.

இவ்வாறெல்லாம் கூறி, வாலியை வெல்ல இராமனின் துணையை வேண்டினர். இராமனும் சீதையைத் தேட வானரரின் துணை தேவைப்பட்டான். முடிவாகச் சுக்கிரீவனும் இராமனும் ஒத்த நட்பு உடையராயினர்.

# 4. மரா மரப் படலம்

*ஏழு மரா மரங்களை இராமன் ஓரம்பால் துளைத்த வலிமை பற்றிக் கூறுதலின் இப்படலம் இப்பெயர்த் தாயிற்று.*

**சுக்கிரீவனது வேண்டுகோள்**

*வாலி சிவனிடம் மிக்க வரம் பெற்றுள்ளான் ஆதலாலும் இராவணனைப் படாதபாடு படுத்தியவன் ஆதலாலும், பகைவரின் பாதி வலிமை போரின்போது வாலிக்கு வந்து விடும் ஆதலாலும் வாலியை இராமனால் வெல்ல முடியுமா என ஐயுற்ற சுக்கிரீவன், ஏழு மரா மரங்களுள் ஒன்றை அம்பெய்தித் துளைக்குமாறு வேண்டினான்.*

**"ஏகவேண்டும் இங்நெறியென இனிது கொண்டேகி**
**மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள்**
**ஆக ஐந்தினோடு இரண்டின்ஒன்று உருவ நின்அம்பு**
**போகவே என்றன் மனத்திடர் போமெனப்**
**புகன்றான்"** (1)

*மாகம் = விண். ஐந்தினோடு இரண்டு = ஏழு. இவ் வழியாகப் போகவேண்டும் என இராமனுக்கு இனிதே வழி காட்டிச் சுக்கிரீவன் அழைத்துக் கொண்டு சென்று, விண்ணளாவ உயர்ந்துள்ள இந்த மராமரங்களுள் ஒன்றைத் துளைத்து உருவி நின் அம்பு போனால் எனது துயரும் போகும் என்றான். உனது வலிமையைக் கண்டறிய இதைச் செய்து காட்ட வேண்டுமென வெளிப்படையாகச் சுக்கிரீவன் இராமனிடம் அறிவிக்கவில்லை. நயமாகக் - குறிப்பாகத் தெரிவித்தான். இராமனால் வாலியைக்*

கொல்ல முடியுமா என்பதைக் கண்டறிய மட்டும் இதைச் செய்யச் சொன்னதாகக் கொள்ளாமல், வாலி இராமனைக் கொன்று விடுவானோ என்ற அச்சத்தாலும் இவ்வாறு செய்யச் சொன்னதாகக் கொள்ளலா மல்லவா?

**முறுவல் செய்தல்**

சுக்கிரீவனது வேண்டுகோளைக் கேட்ட இராமன் புன் முறுவல் பூத்தான்; சுக்கிரீவனது கருத்தை உய்த்துணர்ந்து கொண்டான்; தன் வில்லில் நாணேற்றி மிகப் பெரிய மராமரத்தை அணுகினான்:

**"மறுவிலான் அது கூறலும் வானவர்க்கு இறைவன்**
**முறுவல் செய்து அவன் முன்னிய முயற்சியை உன்னி**
**எறுழ்வலித் தடந் தோள்களால் சிலையை நாணேற்றி**
**அறிவினால் அளப்பரியவற் றருகு சென்று அணைந்தான்"**

(2)

மறுவிலான் = சுக்கிரீவன். வானவர்க்கு இறைவன் = திருமாலின் தெய்வப் பிறவியாகிய இராமன். எறுழ் = வலிமை. அறிவினால் அளப்பரியவை = மராமரங்கள்.

இந்த மராமரத்தை அம்பெய்து துளை பார்க்கலாம் என்றால், சிலருக்குச் சினம் வரக்கூடும். என்னால் முடியாது என்றெண்ணி என்னைச் சோதிக்கிறீர்களா? அங்ஙன மெனில், நான் ஒன்றும் அம்பெய்ய மாட்டேன் - என்று மறுத்து விடக்கூடும். போதிய வலிமையும் அரசியல் அறிவும் இல்லாதவர்களே இவ்வாறு சினத்தல் கூடும். ஆனால், எல்லாத் திறனும் உடைய இராமன் நிலைமையைப் புரிந்து கொண்டு, இது எனக்குக் கடினமான செயலன்று – மிகவும் எளிய செயல் என்னும் பொருளில் புன்முறுவல் பூத்தான். எள்ளல், இளமை பேதைமை, மடன் என்பன பற்றி நகை (சிரிப்பு) தோன்றும் எனத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார்.

**"எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**
**உள்ளப் பட்ட நகை நான்கு என்ப"** (4)

என்பது நூற்பா. இராமனுக்கு ஏற்பட்ட முறுவல், மிகவும் எளியது என்னும் எள்ளல் காரணமாக ஏற்பட்டதாகும். புன்முறுவல் எவ்வளவோ கொடுமைகளைத் தீர்த்து வைக்கும் அரிய பெரிய மருந்தாகும். அதுவும், விலையில்லாத மருந்தாகும். அதை இராமன் பயன்படுத்தி நிலைமையை ஒழுங்கு செய்தான்.

**தரு நிழல் சீதம்**

ஏழு மராமரங்களின் சிறப்பைப் பல பாடல்களால் கம்பர் புனைந்துரைத்துள்ளார். அவற்றுள் ஒன்று, அவை தரும் குளிர்ச்சியைப் பற்றியது. அதாவது:

ஒரு குதிரை வண்டியில் தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரம் பயணம் செய்யின், குதிரை ஒரே மாதிரியான விரைவுடன் நாள் முழுதும் தொடர்ந்து செல்லமுடியாது. இடையிடையே களைப்பு ஏற்படுங்கால், சில இடங்களில் மெதுவாகவும் செல்லக்கூடும். வண்டி ஓட்டுபவரும் அதன் களைப்பை அறிந்து இடையிலே ஓய்வு கொடுப்பார். ஆனால் ஞாயிறின் தேரை இழுத்துச்செல்லும் ஏழு குதிரைகளும் நாள் முழுதும் களைப்பின்றி ஒரே மாதிரியான விரைவுடன் செல்கின்றன. அதற்கு ஒரே ஒரு காரணந்தான் சொல்ல முடியும். அதாவது, இந்த மராமரச் சோலைகள் தரும் குளிர்ச்சியால் வெப்பம் தணிந்து களைப்படையாமல் இருப்பது தான் அது.

**"ஒக்க நாளெலாம் உழல்வன உலைவு இலவாக**
**மிக்கதோர் பொருள் உளதென வேறுகண் டிலமால்**
**திக்கும் வானமும் செறிந்த அத்தருநிழல் சீதம்**
**புக்கு நீங்கலின் தளர்வில இரவி தேர்ப் புரவி"** (5)

உலைவு = தளர்ச்சி. தரு = மரம். சீதம் = குளிர்ச்சி. இரவி = ஞாயிறு. புரவி = குதிரை. ஞாயிற்றின் தேர்க் குதிரைகள் இந்த மராமரச் சோலை வழியாகச் செல்கின்றனவாம்.

நெடுந்தொலைவு நடந்து செல்லும் மக்கள் வெயில் நேரத்தில் ஓரிடத்தில் தங்கி இளைப்பாறிவிட்டுப் பின்னர்ச் செல்வது வழக்கம். வெப்பம் தாக்காமல் இருப்பதற்காகவே வழியின் இருமருங்கும் பெரிய மரங்களை உண்டாக்கி வைத்தனர். மற்றும், ஒவ்வோர் ஊரின் புறத்தும் பெரிய மரங்களும் குளமும் மண்டபமும் கட்டி வைத்தனர். இஃதும், வெப்ப நேரத்தில் தங்கிக் களைப் பாறிச் செல்வதற்கேயாம். வெயிலின் வெப்ப நேரத்தில் வேலை ஓடாதாதலின் 'குளிர் பதனம்' (Air Condition) செய்யப்பட்ட அறைகளில் அலுவலர்கள் (ஆபீசர்கள்) தங்கி வேலை செய்வதும் ஈண்டு எண்ணத் தக்கது. 'சர் வால்டர் ஸ்காட்' (Sir Waltor Scott) என்னும் ஆங்கிலப் பெரும் புலவர் கோடைக் காலத்தில் எழுத்துப் பணி செய்வது கடினமானது என்பதால், குளிர் காலத்திலேயே நிறைய எழுதித் தள்ளி விடுவார் என்பதாக அவர் வரலாறு கூறுகிறது. நீதி மன்றங்கட்கும் கல்விக் கூடங்கட்கும் கோடைக் காலத்தில் நீண்ட விடுமுறை விடுவதும் இது பற்றியே. புகாரிலிருந்து மதுரை நோக்கிச் சென்ற வழியில், கவுந்தி, கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் வெயிலுக்கு அஞ்சிச் சில நாள் இரவில் பயணம் செய்ததாகச் சிலப்பதி காரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையுடன் நோக்குங்கால், வெப்பம் மிக்க ஞாயிற்றின் குதிரைகள் வெப்பத்தால் களைப்படையாமல் நாள் முழுவதும் ஒரே மாதிரியாகச் செல்வதற்கு மராமரச் சோலை தரும் குளிர்தான் காரணம் எனக் கற்பனை செய்திருப்பது பொருத்தமே. நடவாத கற்பனையாயிருப்

பினும் அதற்கும் ஒரு பொருத்தம் வேண்டுமே! இங்கே, கற்பனைக் களஞ்சியம் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற சிவப்பிரகாச அடிகளார் தமது 'பிரபு லிங்க லீலை' என்னும் நூலில் - வசவண்ணர் கதியில் ஒரு மொழியின் குளிர்ச்சி மிகுதியைக் கற்பனை செய்திருப்பதை இலக்கிய ஒப்புமை காண்டல் என்னும் முறையில் காணலாம்:

கலியாணபுரம் என்னும் ஊரிலுள்ள ஒரு பொழில், ஞாயிற்றின் வெயிலை வெறுத்துத் தன்னிடம் வந்து தங்கியவர்களை மீண்டும் ஞாயிற்றின் வெயிலை விரும்பச் செய்யுமாம். அதாவது, வெயிலுக்கு அஞ்சி அப்பொழிலில் புகுந்தால் அதன் குளிர்ச்சியைத் தாங்க முடியாமல் உடல் நடுங்க, மீண்டும் வெயிலை நாட வேண்டியதாயிருக்குமாம். அப்பொழில் வண்டுக் கூட்டங்கள் விருந்துண்ணும் மலர்களை உடையதாம். தேவரும் விரும்பும் தன்மையுடையதாம். பாடல்:

**"தனைவிரும்பி வந்தடைந்தவர் தம்மை முன்வெறுத்த**
**தினகரன்கதிர் விரும்புறச் செய்து அளித்திரள்கள்**
**நனி விருந்துணும் கடிமலர்சுமந்து பொன்னகரார்**
**கனிவிரும்பு தண்பொழில் நிகழ்வதை எதிர்காணாய்** (11)

என்பது பாடல். தினகரன் கதிர் = ஞாயிற்றின் வெயில். பொன் நகரார் = தேவர்கள். ஒரு பொழிலின் குளிர்ச்சி மிகுதியைப் புனைந்துரைப்பதில், கம்பரும் சிவப்பிரகாசரும் ஒருவர்க்கொருவர் இளைத்தவராகத் தெரிய வில்லையன்றோ!

**நாண் ஒலி**

இராமன் நாண் ஒலி எழுப்பியதும், அவ்வொலியைக் கேட்டுத் தேவரும் நடுங்கினராம். இராமனின் தம்பியாகிய இலக்குமணன் மட்டும் நடுங்காமல் பக்கத்தில் நின்றிருந்

தான். சுக்கிரீவன், அனுமன் முதலியோரும் நடுங்கினர் என்று வெளிப்படையாகச் சொல்லின் அவர்களைக் குறைவு படுத்துவதாகும் என்று குறிப்பாகக் கூறியுள்ளார் கம்பர்.

**"அரிந்த மன்சிலை நாண்நெடிது ஆர்த்தலும் அமரர்**
**இரிந்து நீங்கினர் கற்பத்தின் இறுதியென்று அயிர்த்தார்**
**பரிந்த தம்பியே பாங்குநின்றான் மற்றைப் பல்லோர்**
**புரிந்த தன்மையை உனரசெயின் பழிஅவர்ப் புணரும்"** (14)

அனுமன் முதலிய வானரரும் அஞ்சினர் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல், அவ்வாறு சொன்னால் அவர்கட்குக் குறைவு ஏற்படும் என்று அவர்களின் அச்சத்தைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர். உலக வழக்கில் கூட, 'நான் சொல்லப் போனால் அவர்கட்கு வருத்தமாயிருக்கும்' எனப் பிறரின் குற்றத்தைக் குறிப்பாய் ஒருவர் குறிப்பிடுவதுபோல் இருக்கிறது இது. கம்பரின் கருத்து வெளிப்பாட்டில் இது ஒரு புதுமையாகும்.

**ஏழோ ஏழு**

இராமன் அம்பு எய்ததும், அந்த அம்பு, ஏழு மராமரங் களையும் துளைத்துக் கொண்டு கீழ் உலகம் ஏழிலும் புகுந்து உருவி, மீண்டும் ஏழாக உள்ள பொருள்கள் தென்படாமை யால் இராமனிடம் வந்து சேர்ந்ததாம். இன்னும் ஏழாம் பொருள்கள் எவையேனும் இருப்பின் வாளா விடாது அந்த அம்பு!

**"ஏழுமாமரம் உருவிக் கீழுலகம் என்றிசைக்கும்**
**ஏழுமூடுபுக்கு உருவிப்பின் உடன்அடுத் தியன்ற**
**ஏழிலாமையால் மீண்டதுஅவ் விராகவன் பகழி**
**ஏழுகண்டபின் உருவுமால் ஒழிவதன்று இன்னும்"** (16)

மா மரம் என்பது மாங்காய் மரம் அன்று; பெரிய மரம் என்பது அதன் பொருள். ஒரு வகை ஆச்சாமரம் இது எனப்படுகின்றது. இஃதும் கருத்து வெளியீட்டில் ஒரு புதுமையாகும். விட்ட படைக்கலன் வெளியிலேயே தங்கி

விடின் அதற்கு 'அத்திரம்' (அஸ்திரம்) என்று பெயராம். விட்டவரிடம் மீண்டும் வந்து சேர்ந்துவிடும் படைக்கலத் திற்கு 'சத்திரம்' (சஸ்திரம்) என்று பெயராம். முருகனது வேல்படையும் மீண்டும் முருகனிடம் வந்து தங்கும் சத்திர மாகும். இவை வடமொழிப் பெயர்களாகும்.

**'ஏழு'களின் அச்சம்**

இராமனது அம்பு ஏழாயுள்ள மராமரங்களையும் கீழ் ஏழ் உலகங்களையும் துருவியதால், ஏழாக உள்ள மற்றவையும் அஞ்சத் தொடங்கினவாம். அதாவது:- கடல்கள் ஏழும், மேலுலகம் ஏழும், மலைகள் ஏழும், முனிவர்கள் எழுவரும், ஞாயிற்றின் குதிரைகள் ஏழும், கன்னியர் எழுவரும், இராமனது அம்புக்கு ஏழு என்பது குறியாக இருப்பதால் தம்மையும் வந்து தாக்கக்கூடுமோ என அஞ்சி நடுங்கியதாகக் கம்பர் கற்பனை செய்துள்ளார்.

**"ஏழு வேலையும் உலகமே லுயர்ந்தன ஏழும்**
**ஏழு குன்றமும் இருடிகள் எழுவரும் புரவி**
**ஏழும் மங்கையர் எழுவரும் நடுங்கினர் என்ப**
**ஏழு பெற்றதோ இக்கணைக்கு இலக்கம் என்றெண்ணி"**
(17)

என்பது பாடல். இஃதும் கருத்து வெளியீட்டில் ஒரு புதுமையாகும். 'ரிஷிகள்' எனக் கிரந்த எழுத்தைக் கலக்காமல் 'இருடிகள்' எனத் தமிழ் எழுத்தைக் கொண்டே சரி செய்யும் கம்பரின் மொழிக்கொள்கை பாராட்டிற் குரியது.

**எல்லாம் நீ**

மகிழ்ச்சி மேலீட்டால் சுக்கிரீவன் பின்வருமாறு இராமனைப் புகழ்கிறான். நிலமும் நீ. வானமும். நீ. மற்ற காற்று, நெருப்பு, நீர் என்னும் பூதங்களும் நீ. நான் முகனும் திருமாலும் சிவனும் நீயே. தீய வினைகளைப்

போக்கும் தெய்வமும் நீயே. உலகமெல்லாம் முன்னர் உண்டாக்கினவனும் நீயே. இப்போது நாயேனாகிய அடியேன் உய்யும்படி வந்து அருள் புரிந்தாய் — என்று போற்றினான்:

**"வையம்நீ வானும்நீ மற்றுநீ மலரின்மேல்**
**ஐயன்நீ ஆழிமேல் ஆழிமா மாலும்நீ**
**செய்யன்நீ வினைதெறும் தேவும்நீ நாயினேன்**
**உய்யவந்து உதவினாய் உலகம்முந்து உதவினாய்"** (19)

மலரின் மேல் ஐயன் = பிரமன். ஆழிமேல் = கடலின் மேல் அறிதுயில் கொள்ளும், ஆழி = சக்கரப் படையுடைய, மா மால் = சிறந்த திருமால். செய்யன் = சிவன். திருமால் கரியன்; அதனால் சிவனைச் செய்யன் என விதந்து கூற இடம் உண்டாயிற்று, 'சிவனென்னும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்' என்னும் தொடர் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது, 'பவளம்போல் மேனி' என நாவுக்கரசரும், 'பொன்னார் மேனியனே' எனச் சுந்தரரும், இன்ன பிறரும் சிவனைச் செந் நிறத்தனாகக் கூறியுள்ளமை ஈண்டு எண்ணத்தக்கது. நான்முகன், திருமால், சிவன் என்று கூறியுள்ள வரிசை முறையும் எண்ணத்தக்கது.

**அடியருக்கு அடியன்:**

மேலும் சுக்கிரீவன், தாய் போன்ற நின் அடியார்கட்கெல்லாம் அடியவன் யான் என இராமனைப் புகழ்கிறான்:

**"அன்னை ஒப்புடைய உன்**
**அடியவருக்கு அடியவன் யான்"** (20)

என்பது பாடல் பகுதி. சுந்தரர், திருத்தொண்டைத் தொகைப் பதிகத்தில் 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கி, பல இடங்களிலும் 'அடியார்க்கு அடியேன்' என்று கூறிச் சென்றுள்ள முறை இங்கே நினைவிற்கு வருகிறது.

# 5. துந்துபிப் படலம்

துந்துபி என்பவன் மயன் மகனான ஓர் அசுரன்; எருமை வடிவு உடையவன். இவன் துந்துபிபோல் ஒலி எழுப்புவதால் துந்துபி எனப்பட்டான். நீண்டு பருத்த மலை போன்ற உருவமுடைய இவன், பலரைப் போருக்கு அழைத்து, இறுதியாக வாலியிடம் வந்தான். வாலியும் இவனும் ஓராண்டு காலம் போர் புரிந்தனர்.

இறுதியில் வாலி துந்துபியைக் கொன்று அவனது மலையனைய உடலைக் கையால் உயரே தூக்கித் தொலைவில் செல்லுமாறு எறிந்தான். அது, மதங்க முனிவரின் இருப்பிடமாகிய உருசியமூக மலையில் போய் விழுந்தது. அதனால் அந்த இடம் தூய்மையிழந்ததால், முனிவர் சினந்து, இந்த உடலை இங்கே எறிந்த வாலி இங்கு வருவானாயின் இறப்பானாக என்றும், அவனைச் சேர்ந்தோர் வரின் கல்லாக மாறுக என்றும் வைவு (சாபம்) இட்டார். அதனால், வாலி வரமாட்டான் என நம்பிச் சுக்கிரீவன் முதலியோர் அம்மலைப் பகுதியில் மறைந்து வாழ்ந்து வருகின்றனர்.

தசை வற்றிக் காய்ந்து போய்க் கிடந்த மலையனைய அவ்வுடலை அப்புறப்படுத்துபவர் பெரிய வல்லமை யுடையவர் என்பதையறிய, இராமனிடம் அதை அப்புறப் படுத்தும்படிச் சுக்கிரீவன் கூறினான். இராமன் இலக்குமண னிடம் கூறினான். இலக்குமணன் தன் கால் விரலால் எற்றி வெகுதொலைவில் போய் விழுமாறு செய்தான். இதைப் பற்றியதுதான் துந்துபிப் படலம்.

**கையும் காலும்**

இறந்து கிடக்கும் துந்துபியின் உடலைத் தூக்கி எறியும்படி இராமன் இலக்குவனுக்குக் கட்டளையிட்டான். வாலி கையால் எறிந்ததை இலக்குமணன் கால் விரலினால் எற்றி எறிந்தான்.

**"கேட்டனன் அமலனும் கிளந்தவாறு எலாம்**
**வாள்தொழில் இளவலை, இதனை மைந்த நீ**
**ஓட்டுஎன அவன் கழல் விரலின் உந்தினான்**
**மீட்டு அது விரிஞ்சன் நாடுஉற்று மீண்டதே"** (15)

என்பது பாடல். அமலன் = இராமன். இளவல் = தம்பி (இலக்குவன்). மைந்தன் = வலிமை உடையவன். மைந்து = வலிமை. கழல் = வீரக்கழல் என்னும் காலணி. இது ஆகுபெயராய்க் காலை உணர்த்திற்று. தானமாகிய காலில் உள்ள தானியாகிய கழல் தானத்திற்கு ஆகியதால் இதைத் தானியாகு பெயர் என்பர். இடத்தில் உள்ள பொருள் அதாவது இடப்பொருள் இடத்திற்கு ஆகியதால், தமிழில் இதனை 'இடப்பொருள் ஆகுபெயர்' எனலாம். இலக்குவன் எறிந்ததும் அவ்வுடல் நான்முகன் உலகம் வரையும் சென்று மீண்டுவந்து கீழே விழுந்ததாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதிலுள்ள சிறப்பாவது: இராமனது வலிமையை அறிய இராமனிடம் இந்த வேலையைச் சுக்கிரீவன் விட்டான். 'தம்பியுளான் படைக்கு அஞ்சான்' என்றபடி இதை இராமன் தம்பியிடம் விட்டான். தம்பியோ, வாலி கையால் எறிந்ததைத் தன் கால் விரலாலேயே எறிந்து தன் வலிமையை வெளிப்படுத்தினான். இதனால், இராம இலக்குமணரின் வலிமையை வானரர்கள் அறிந்து இவர்கள் வாலியைக் கொன்று வெல்வது உறுதி என நம்பி மகிழ்ந்தனர்.

இப்படி ஒரு படலம் கதைக்குத் தேவையில்லைதான். வால்மீகி கூறியிருப்பதால் கம்பரும் எழுதிவிட்டார். ஆனால் இருவரின் கதைப் போக்குக்கிடையே வேறுபாடு உள்ளது. மராமரத்தைத் துளைத்ததே போதும் - மேற் கொண்டும் இராமன் வலிமையை அறிவிக்கும் முகத்தான் இப்படலம் இடம் பெற்றுள்ளது.

# 6. கலன்காண் படலம்

இராவணன் வான் வழியே சீதையை எடுத்துச் சென்ற போது, சீதை தன் அணிகலன்களையெல்லாம் கழற்றித் துணியின் ஒரு பகுதியைக் கிழித்து அதில் வைத்துக் கட்டிக் கீழே எறிந்தாள். அந்த முடிச்சு வானரர்கள் இருக்கும் மலைப் பகுதியில் விழுந்தது; அவர்கள் எடுத்து வைத் திருந்தனர்.

இப்போது எல்லா வரலாறும் தெரிந்து கொண்ட சுக்கிரீவன் அவை சீதையின் அணிகலன்கள் என உய்த் துணர்ந்து, நகை முடிச்சை இராமன்பால் தந்தான். இராமன் அந்த அணிகலன்களைக் கலக்கத்துடன் கண்டு கண்ணீரால் கழுவினான். அவ்வாறு இராமன் அணிகலன் கண்ட செய்தியைக் கூறும் பகுதியாதலின், இது 'கலன் காண் படலம்' என்னும் பெயர்த்தாயிற்று. இந்த நிகழ்ச்சி, சோழன் இளஞ்சேட்சென்னியை ஊன் பொதி பசுங் கொடையார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் மிகவும் அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலவரின் சுற்றத்தினர்க்குச் சோழன் மிகுந்த அணி கலன்களைத் தந்தானாம். அவை பிறருக்குத் தருவதற்காக எளிமையாய்ச் செய்யப்பட்டன அல்லவாம். மிகவும் உயர்ந்தனவாம். அத்தகைய அணிகலன்களை முன்பு அறியாத சுற்றத்தார், கைவிரலில் அணிய வேண்டியதைக் காதிலும், காதில் அணிய வேண்டியதை விரலிலும், அரை யில் அணிய வேண்டியதைக் கழுத்திலும், கழுத்தில் அணிய வேண்டியதை அரையிலுமாக மாற்றி மாற்றி அணிந்து

கொண்டனராம். இதற்குக் காட்டப்பட்டுள்ள உவமை, இராவணன் சீதையை எடுத்துச் சென்ற போது அவள் கீழே எறிந்த அணிகலன்களைக் குரங்குகள் எடுத்து உரிய உறுப்புகளில் அணியாமல் உறுப்பு மாற்றி வேறு உறுப்பில் அணிந்து கொண்டமையாகும். பாடல் பகுதி:-

**"எமக்கென வகுத்த அல்ல மிகப்பல**
**மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை**
**தாங்காது பொழிதந் தோனே அதுகண்டு**
**இலம்பா டுழந்தஎன் இரும்பேர் ஒக்கல்**
**விறல்செறி மரபின செவி தொடுக் குநரும்**
**செவித்தொடர் மரபின விறல்செறிக் குநரும்**
**அரைக்கு அமை மரபின மிடற்றியாக் குநரும்**
**மிடற்று அமை மரபின அரைக்கு யாக்குநரும்,**
**கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை**
**வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை**
**நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்**
**செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந் தாஅங்கு**
**அறாஅ வருகை இனிது பெற் றிகுமே"** (178: 10-22)

இப் புறநானூற்றுப் பாடல் காலத்திலேயே இராமாயணக் கதை தமிழ்நாட்டில் நடமாடியுள்ளமை இதனால் புலனாகிறது.

### சுக்கிரீவன் அறிவிப்பு

இப்பக்கத்தில் உள்ளவர்கள் பணியாளர்போல் எடுத்துக் காத்து வைத்திருந்து நம் கணவரிடம் தரலாம் என்று எண்ணியோ அல்லது வேறு கருதியோ, அந்த அம்மையார் கண்ணீர் வெள்ளத்தோடு இந்த நகைப் பொதியையும் கீழே எறிந்தார்; அதை நாங்கள் எடுத்து வைத்திருந்தோம்; நீங்கள் இங்கு வந்ததும் நீங்கள் அறியும்படி தந்தோம் —

என்று தேனோடு பால் கலந்தாற் போன்ற அன்புடைய சுக்கிரீவன் அறிவித்து நகைப் பொதியை இராமனிடம் தந்தான். பாடல்கள்:

**"உழையரின் உணர்த்துவது உளதென்று உன்னியோ**
**குழைபொரு கண்ணினாள் குறித்தது ஓர்ந்திலம்**
**மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்**
**இழைபொதிந் திட்டனள் யாங்கள் ஏற்றனம்"** (3)

**"வைத்தனம் இவ்வழி வள்ளல் நின்வயின்**
**உய்த்தனம் தந்தபோது உணர்தியால் எனாக்**
**கைத்தலத்து அன்னவை கொணர்ந்து காட்டினான்**
**நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயத்தான்"** (4)

உழையர் = பக்கத்துள்ளோர்; பணியாளர். குழைபொரு கண்ணினாள் = குழையணிந்த காதை மோதும் கண்ணை உடைய சீதை. பெண்டிரின் கண்கள் காதுவரையும் நீண்டிருப்பதாகக் கூறுவது இலக்கிய மரபு. விசாலாட்சி என்னும் பெயரின் பொருள் இதுவே. விசாலமான அட்சம் (கண்) உடையவள் என்பது பொருள். பரந்த கண்ணோட்டம் — அருள்பார்வை உடையவள் தேவி என்னும் பொருளில் விசாலாட்சி என்னும் பெயர் அமைந்துள்ளது. வாய்தான் காதுவரையும் நீளக் கூடாது — நீண்டால் வாயாடி என்பர். கண் நீளலாம் போலும். இங்கே, குழை என்பது ஆகுபெயராய் அணிபூண்ட காதைக் குறிக்கிறது. வாரி = வெள்ளம். இழை = அணிகலங்கள். வள்ளல் = இராமன்.

நெய் என்பதற்குத் தேன் என்னும் பொருள் உண்மையை "வரைமிசை மேல்தொடுத்த நெய்க்கண் இறாஅல்" (42:22) என்னும் கலித்தொகைப் பாடல் பகுதியால் அறியலாம். இறால் = தேன்கூடு. தேனுக்கும் இறாலுக்கும் உள்ள தொடர்பை அதே கலித்தொகையில் உள்ள "வரைத்

தேனின் இறாலென" (39) என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம். இதனால், நெய் என்பதற்குத் தேன் என்னும் பொருள் உள்ளமை தெளிவு. மற்றும், "நெய்ம்முதிர் தொடையல்" (1198) (தேன் உள்ள மலர்மாலை) என்னும் சீவக சிந்தாமணிப் பாடல் பகுதியும் தக்க சான்றாகும்.

"நெய்த்தலைப் பால் கலந்தனைய நேயத்தான்" என்னும் பகுதி குறிப்பிடத்தக்கது. நெய் = தேன். தலை என்பது ஏழாம் வேற்றுமை உருபு. எனவே, நெய்த்தலை என்பதற்கு 'நெய்யில்' எனப் பொருள் கொள்ளல் வேண்டும். தேனில் பால் கலந்தாற் போன்ற அன்புடையவனாம் சுக்கிரீவன். சுக்கிரீவனும் இராமனும் தேனும் பாலும் போன்றவர்களாம். அதாவது, இவர்களின் நட்பு இனியது — நயமானது என்பது கருத்து.

> **"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
> **பண்புடை யாளர் தொடர்பு"** (783)

என்பதனாலும் நல்ல நட்பு நயமானது என்பது பெறப்படும். பாலும் தேனும் கலப்பது இலக்கியங்களில் மிகவும் பெரிது படுத்திப் பேசப்பட்டுள்ளது. சில காண்பாம்:

> **"பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி**
> **வாலெயிறு ஊறிய நீர்"** (1121)

இது திருக்குறள். ஞானசம்பந்தர் தேவாரத்தில்,

> **"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்**
> **முறையாலே உணத் தருவன்"** (திருத்தோணிபுரம்-10)

என்றுள்ளது. சீவக சிந்தாமணியில் "தேனில் பாலென" (1761), "பால் நிலத்துறையும் தீந்தேன் அனைய" (1915), "தேம்பெய் மாரி பாற்கடல் பெய்தது" (2077) எனவும், சூளாமணியில்' 'நெய்த்தலைப் பால் உக்காங்கு" (சுயம்வரம் -275) எனவும், பெருங்கதையில்

**"ஆன்பாற் றெண்கடல் அமுதுற வளைஇய**
**தேன்பெய் மாரியின்"** (1:34:101-2)

**"ஆன்முலைப் பிறந்த வால்நிற அமுதம்**
**மலைப்பெய் நெய்யொடு தலைப்பெய் தாங்கு"**
(2:8:11-12)

எனவும், ஔவையாரின் நல்வழியில்

**"பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன்"** (காப்பு)

எனவும், இராமலிங்கரின் அருட்பாவில்

**"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால்... தேன்கலந்து பால்கலந்து"**

எனவும் வந்துள்ள ஆட்சிகளைக் காணலாம். இதிலிருந்து அறியக்கூடிய கருத்து ஒன்று உண்டு. இப்போது நாம் பாலில் சர்க்கரையும் அல்லது கற்கண்டும் சேர்த்துப் பருகுவது போல், பாலில் தேன் கலந்து பருகுவது உண்டு என்பது அது. சர்க்கரை கண்டுபிடிக்கப்படாத ஒரு காலத்தில் பாலில் தேன் கலந்து பருகியிருக்கலாம். இப்போதும், பாலில் தேன் கலந்து பருகின், இரண்டும் கலந்த ஒரு புதுச் சுவையை நுகரும் இன்பத்தோடு உடலும் வலுப்பெறும்.

இராமனும் சுக்கிரீவனும் பாலும் தேனும் கலந்தாற் போன்ற நெருங்கிய-நயமான நட்புக் கொண்டனர் எனில், பால் யார்? தேன் யார்? பால் தரையில் கிடைப்பது. தேன் மலையில் கிடைப்பது, தேன் கீழே கிடைப்பினும் மலைத் தேனுக்கே மதிப்பு மிகுதி, இங்கே, "மலைப் பெய் நெய்யொடு" என்னும் பெருங்கதைப் பகுதி நினைவு கூரத்தக்கது. நாட்டில்-தரைப்பகுதியில் பிறந்து வளர்ந்து வந்தவன் இராமன். கிட்கிந்தை என்னும் மலைப்பகுதியில் பிறந்து வளர்ந்து வந்தவன் சுக்கிரீவன், எனவே, இராமனைப் பாலாகவும் சுக்கிரீவனைத் தேனாகவும் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

1941-திசம்பர்-29, 30, 31 ஆம் நாள்களில், சீர்காழியில், மகாமகோபாத்தியாய — பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் தலைமையில் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் மாநாடு நடைபெற்றது. அதில் அடியேன் ‘தமிழ்ச் சொல் மலர்’ என்னும் தலைப்பில் சொற்பொழி வாற்றினேன். பண்டிதமணியின் செய்தி ஒன்று நினைவுக்கு வருகிறது. அவர், திருவள்ளுவரின் ‘பாலொடு தேன் கலந்தற்று’ என்ற முறைவைப்புக்கும், ஞானசம்பந்தரின் தேனொடு பால் முறையாலே தருவன்’ என்ற முறை வைப்புக்கும் ஏதோ வேறுபாட்டு விளக்கம் கூறினார். அந்த விளக்கம் இப்போது நினைவில்லை. ஆனால் இங்கே உள்ள கம்பரின் ‘நெய்த்தலைப் பால் கலந்தனைய’ என்ற முறை வைப்புக்கு விளக்கம் கூறமுடியும். நெய் சுக்கிரீவன்-பால் இராமன் என முன்னமேயே சொல்லப்பட்டது. நெய் இருந்த இடத்தில்தான் பால் வந்து கலந்தது. சுக்கிரீவன் இருந்த மலைப்பகுதிக்கு இராமர்தான் வந்தார். எனவே, இங்கே, நெய்யை (தேனை) முன்னரும் பாலைப் பின்னருமாகக் கம்பர் அமைத்துள்ள முறைவைப்பு மிகவும் பொருத்தமானதே.

**படிவம் ஆன**

சீதையின் அணிகலன்களை இராமன் கண்டதும், ஒவ்வோர் அணியும் அது அணியப்பட்டிருந்த படிவத்தைக் (உருவத்தைக்) காட்டினவாம்.

> **“நல்குவது என்னினி நங்கை கொங்கையைப்**
> **புல்கிய பூணுமக் கொங்கை போன்றன**
> **அல்குலின் அணிகளும் அல்கு லாயின**
> **பல்கலன் பிறவும் அப்படிவம் ஆனவே”** (6)

நங்கை = சீதை. கொங்கை = முலை. அல்குல் = இடுப்பு. படிவம் = வடிவம். இப்பாடலில் உள்ள நயமாவது: அணிகள்

அவை அணியப்பட்ட உறுப்புகளை நினைவுபடுத்தியதோடு நின்று விடவில்லை — அந்த அந்த உறுப்புகளாகவே மாறினவாம். 'அப்படிவம் ஆன' என்பதன் உட்கிடை இதுதான்.

உலகியலில், இறந்து போனவர் அல்லது பிரிந்து போனவர் கையாண்ட பொருள்களையெல்லாம் காணும் போது, அவர்களின் நினைவு ஏன் அவர்களின் தோற்றம் காண்பவரின் உளக் கண்கட்குத் தெரிவது இயல்பு. சிலர் அப்பொருள்களை வைத்துக்கொண்டு பிரிந்தவராகவே எண்ணிப் புலம்புவது கண்கூடு. இராமனும் இதற்கு விதி விலக்கு இல்லை.

**உயிர் வாங்கல்**

இராமன் சீதையை நினைந்து புலம்பி மயங்கிய நிலையில், சுக்கிரீவன் சொல்கிறான்: இராமனே! இந்த அணிகலன்களை நினக்குக் காட்டியதால், நினது உயிரை வாங்கும் தீய வினை செய்தவனானேன் என்கிறான். இது உள்ளத்தைத் தொடும் கருத்தாகும்.

> **"வீங்கிய தோளினாய் வினையினேன் உயிர்**
> **வாங்கினென் இவ்வணி வருவித்தே எனா"** (11)

என்பது பாடல் பகுதி. வீங்கிய தோளினன் இராமன். வினையினேன் என்பது, நான் தீவினையாளன் எனச் சுக்கிரீவன் தன்னைக் குறித்துக் கொள்வது. இந்தக் கருத்து வெளிப்பாடும் சுவையானது. உலகியலிலும் இவ்வாறு கூறி வருந்தும் சூழ்நிலை ஏற்படுவதுண்டு.

**மூவருமான ஒருவர்**

சுக்கிரீவன் பல கூறி இராமனைத் தேற்றுகிறான். ஐயனே! தாமரையில் இருக்கும் நான்முகன், முருகனைப் பெற்ற உமையை இடப்பாகத்தில் உடைய சிவன், கையில்

ஆழி (சக்கரம்) ஏந்திய திருமால் ஆகிய மூவரும், தனித் தனியாக நோக்கின் உனக்கு ஒப்பாகார்; அம்மூவரும் சேர்ந்த அமைப்பே உனக்கு ஒப்பாகும். அங்ஙனமிருக்க நீ வருந்துவதேன் என்றான்.

**"முளரிமேல் வைகுவான் முருகன் தந்தவத்**
**தளரியல் பாகத்தான் தடக்கை ஆழியான்**
**அளவி ஒன்றாவரே யன்றி ஐயமில்**
**கிளவியாய் தனித்தனிக் கிடைப்பரோ துணை"** (13)

முளரி = தாமரை. தளிர்இயல் = தளிர் போன்ற மென்மைத் தன்மை உடைய உமாதேவி. இது இலக்கணத்தில், உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும். அளவி = கலந்து, சேர்ந்து. ஐயம்இல் கிளவியான் = இராமன். இந்தக் கருத்து வெளிப்பாடும் கம்பரின் கவி வன்மைக்குத் தக்க சான்றாகும்.

### சிறு குறையும் பெரிய குறையும்

ஓர் உயரிய பண்பினைச் சுக்கிரீவன் வாயிலாகக் கம்பர் உலகுக்கு அறிவுறுத்தியுள்ளார். பிறரைப் பற்றிக் கவலைப் படாமல், முதலில் தம் வேலைகளை முடித்துக் கொள்பவர் களே உலகில் மிகுதியாயுள்ளனர். முதலில் தாம் உணவுண்டு படுத்துத் தூங்க வேண்டும் என்பவர் பலராயிருக்க, எல்லாரை யும் உண்ணச் செய்து முடித்தபின் இறுதியில் மீந்திருப்பதைத் தாம் உண்ணுபவர் சிலரா யுள்ளனர். ஒருவர்பின் ஒருவர் (கியூ) வரிசையில் முறையாக நிற்காமல், வரிசையில் நிற்பவரை இடித்துத் தள்ளி முந்திக் கொண்டு சென்று தம் வேலையை முதலில் முடித்துக் கொள்ளும் திருமேனிகளும் உண்டு.

உலக நிலைமை இப்படியிருக்க, இராமனது பெருந் துயரத்தைக் கண்ணுற்ற சுக்கிரீவன் உயரிய பண்பு

உடையானாய்க் காணப்பட்டான். அவன் இராமனது துணையை நாடியது தன் மனைவியையும் தன் உரிமைகளையும் மீட்பதற்காகத்தான். ஆனால், சீதையைப் பிரிந்த இராமனது துயரைப் பொறுக்க முடியாதவனாய், ஐயனே, எனது சிறு குறையை முடிப்பது அப்புறம் ஆகுக - முதலில் சீதையைத் தேடிக் கண்டு மீட்டுவரும் செயலைக் கவனிக்க வேண்டும் - என்று சுக்கிரீவன் கூறினான்.

**"என்னுடைச் சிறுகுறை முடித்தல் ஈண்டு ஒரீஇப்**
**பின்னுடைத் தாயினும் ஆக பேதுறு**
**மின்னிடைச் சனகியை மீட்டு மீள்துமால்**
**பொன்னுடைச் சிலையினாய் விரைந்துபோய் என்றான்"**
(18)

என்பது பாடல். அவரவர்க்கு அவரவர் தேவை பெரிதாய்த் தோன்றலாம். ஆனால், சுக்கிரீவன், இராமனது குறையை நோக்கத் தனது குறையைச் சிறுகுறை என்று பெருந்தன்மையுடன் குறிப்பிட்டுள்ளான். ஈண்டு ஒரீஇ = இப்போது எனது குறையைக் கிடப்பில் போட்டு அதாவது கைவிட்டு. ஒரீஇ = சொல்லிசை அளபெடை. முதலில் இராமனது குறையை விரைந்துபோய் முடிக்க வேண்டும் என்கிறான். 'விரைந்துபோய்' என்பது மிகவும் பொருள் பொதிந்தது. பொன்னுடைச் சிலையினான் = இராமன். இத்தகைய உயரிய பண்பை அனைவரும் பின்பற்றும் நாள் எந்நாளோ?

### தெரிவையர் யார்?

சுக்கிரீவன் சொல்லியதைக் கேட்ட இராமன் அவனிடம் கூறுகிறான்: சுக்கிரீவ! தீவினையேனாகிய யான் வில் ஏந்திய கையுடன் இருக்கும்போதே சீதை அணிகலன்களைத் துறந்து விட்டாள். அணிகலன்கள் பூண்ட கற்புடைய பெண்டிருள் இங்ஙனம் செய்தவர் யார்? என்றான்.

**"விலங்கெழில் தோளினாய் வினையினேனும் இவ்**
**இலங்குவில் கரத்தினில் இருக்கவே அவள்**
**கலன் கழித்தனள் இது கற்பு மேவிய**
**பொலன்குழைத் தெரிவையர் புரிந்துளோர்கள் யார்? (20)**

*விலங்கு எழில் தோளினான் = சுக்கிரீவன் வினையினேன் = இராமனாகிய நான். அவள் = சீதை. தெரிவையர் = மகளிர். கற்புடைய மங்கையர் கணவன் இருக்கும்போது அணிகலன்கள் அணிந்திருப்பர். கணவன் இறந்தால் அணிகலன்களை ஆடம்பரமாய் அணிந்திருக்க மாட்டார்கள். சீதையோ யான் இருக்கும்போதே, ஆடம்பரமான அணிகலன்கள் வேண்டா எனத் துறந்துவிட்டாள். இவ்வாறு செய்யக் கூடியவர் யார் இருக்க முடியும்? யான் கையில் வில் ஏந்தியிருப்பதால் யாது பயன் - என்றான் இராமன். 'பேடிகை வாளாண்மை' (614), "வாளொடு என் வன்கண்ணர் அல்லார்க்கு" (726), "பகையகத்துப் பேடி கை ஒள்வாள்" (727) என்னும் குறள் பகுதிகளோடு இப்பாடல் ஆய்வு செய்யத் தக்கது.*

*இராமாயண காலத்து இராமன் இவ்வாறு கூறியதாகக் கம்பர் எழுதியுள்ளார். இராமாயண காலத்துக்குப் பிற்பட்டது சிலப்பதிகாரக் காலம். கண்ணகி அணிகலன்களைத் துறந்திருந்ததாகச் சிலம்பில் இளங்கோ பாடியுள்ளார். இதனை, சிலப்பதிகாரம் - அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் காணலாம்:*

**"அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய**
**மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்**
**கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்**
**மங்கல அணியின் பிறிதணி மகிழாள்**
**கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்**
**திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்**
**செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்**

**பவள வாணுதல் திலகம் இழப்பத்**
**தவள வாள்நகை கோவலன் இழப்ப**
**மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்**
**கையறு நெஞ்சத்துக் கண்ணகி''** (47-57)

என்பது பாடல் பகுதி. கணவன் இருக்கும்போதே ஆடம்பர அணிகலன்களைத் துறந்த கற்புடைய மங்கையர் சீதையைத் தவிர வேறு யார் இருந்தனர்? - என்று இப்போது வினவின் 'கண்ணகி' என்று பதில் கூறமுடியும்.

சீதையும் கண்ணகியும் அணிகலன்கள் அணிந்திருந்த மேட்டுக் குடியினர். திருமணம் ஆனதிலிருந்து இறக்கும் வரையும் தாலியைத் தவிர வேறு அணிகலனை அறியாத ஏழைப் பெண்டிரின் நிலை என்ன? அப்பாவிப் பெண்டிர் சிலர், குடிகாரக் கணவனாலோ அல்லது கள்வனாலோ தாலியையும் இழந்துவிட்டிருக்கின்றனர். சீதையைத் தவிர கண்ணகியைத் தவிர வேறு யாருளர்? - என்று இன்று கேட்கின், அணிகலன் இல்லாத அப்பாவிப் பெண்கள் அளவின்றிக் கோடிக் கணக்கில் உள்ளனர்—இவர்களும் கணவருடன் வாழும் கற்புடைய மங்கையர்களே எனலாம்.

மேலும் இராமன் நொந்து கூறுகிறான்: யான் நாணம் இன்றி இந்த வில்லைச் சுமந்து கொண்டுள்ளேன். வழி நடப்பவர் சிலர், வழியில் ஒரு பெண்ணை ஒருவன் கெடுக்க முயன்றால், தம்மோடு தொடர்பில்லாத பெண்ணாயினும் அவளைக் காக்கத் தீயவனோடு போராடி உயிரையும் விடுவர். யான் உரிய மனைவியைப் பிரிந்தும் அவளை மீட்டுக் காக்க இயலாதவனா யுள்ளேன் (21, 22). மேலும் இராமன் கூறுகிறான்: என் முன்னோர், கடலைத் தோண்டினர், கங்கையைக் கீழே கொணர்ந்தனர், என் தந்தை இந்திரனைக் காத்தார் - இவர்கள் வழியில் வந்த யானோ மனைவியைக் காக்க முடியாதவனாகிவிட்டேன்.

வில்லைத் தாங்கிக் கொண்டிருப்பதுபோல் பழியையும் தாங்கிக் கொண்டுள்ளேன் – என்று புலம்பினான் (23, 24).

## குறை முடித்து மாய்வன்

வருந்திய இராமனைச் சுக்கிரீவன் தேற்றினான். பின்னர் இராமன் அவனை நோக்கிக் கூறுகிறான்: நீ ஆற்று வதால் ஆறுகிறேன். எனக்கு இப்போது சாவதனினும் வேறு சிறந்த செயல் ஒன்றும் இல்லை. எனது பழிதீரச் சாகவும் போகிறேன். ஆனால், சுக்கிரீவ! உனது குறையை முடித்தன்றிச் சாகமாட்டேன்:

**''ஐயநீ ஆற்றலின் ஆறினேன் அலது**
**உய்வெனே எனக்கு இதின் உறுதி வேறுண்டோ**
**வையகத்து இப்பழி தீர மாய்வது**
**செய்வென் நின்குறை முடித்தன்றிச் செய்கிலேன்''** (27)

எனது சிறு குறை கிடக்கட்டும்; முதலில் நின்குறையை முடிக்கவேண்டும் என்று உயரிய பண்புடன் கூறிய சுக்கிரீ வனிடம், நினது குறையை முடித்துவிட்டுத் தான் பிறகு நான் சாவேன் என்று இராமன் கூறுகிறான். நின்குறை முடித்தல் = சுக்கிரீவனின் மனைவியையும் உரிமையையும் வாலியிடமிருந்து மீட்டுத் தருதல். ஒருவர் குறையை மற்றவர் முதலில் முடித்துத் தருவதில் சுக்கிரீவனும் இராமனும் போட்டி போடுவது வரலாற்றில் மிகவும் சுவையான பகுதியாகும். இத்தகைய சுவைதரும் செயலை மக்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டுமே!

## அனுமனின் அரசியல் சூழ்வு

சுக்கிரீவனும் இராமனும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்தபோது அனுமன் இடையே குறுக்கிட்டு அரசியலுக்கு ஏற்ற ஒரு சூழ்வுரை தெரிவிக்கிறான்: சீதையை

அரக்கன் இப்பேருலகில் எங்கு வைத்துள்ளான் எனத் தேடிக் காணல் அரிது; அதற்குப் பெரும்படை வேண்டும்; சுக்கிரீவன்பால் உள்ளது சிறு படையே; எனவே, வாலியைக் கொன்று அரசு உரிமையைச் சுக்கிரீவனுக்குத் தந்தாலேயே, வாலியின் படைகளும் சேர, நமக்குப் பெரிய படை உருவாகும். அங்ஙனமானால்தான், நம்மால் சீதையைத் தேடிக் காணவும் இராவணனைக் கண்டுபிடித்துக் கொல்லவும் இயலும் என்றான்.

**''கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன்**
**கடுங்கதி ரோன்மக னாக்கிக் கைவளர்**
**நெடும்படை கூட்டினா லன்றி நேடரிது**
**அடும்படை அரக்கர்தம் இருக்கை ஆணையாய்''** (29)

கடுங் கதிரோன் மகன் = ஞாயிற்றின் மகனான சுக்கிரீவன். அவனைக் கோமகனாக - அரசனாக ஆக்க வேண்டும். நேடரிது = தேடல் இயலாதது. ஆணையான் = இராமன்.

இதனால், அனுமன் மிக்க அரசியல் சூழ்ச்சி (இராச தந்திரம்) உடையவன் என்பதை அறியலாம். மேலும் சொல்கிறான்: வாலியின் படையும் சேர்ந்தால் எழுபது வெள்ளம் படை திரளும்; திரளின், அப்பெரும்படை, கடல் முழுவதையும் குடிக்கச் சொன்னாலும், உலகத்தைப் பேர்த்து எடுக்கச் சொன்னாலும் எளிதின் செய்து முடிக்கும்:

**''ஏழுபத் தாகிய வெள்ளத்து எம்படை**
**ஊழியின் கடலென உலகம் போர்க்குமால்**
**ஆழியைக் குடிப்பினும் அயன்செய் அண்டத்தைக்**
**கீழ்மடுத்து எடுப்பினும் கிடைத்த செய்யுமால்''** (33)

எழுபது வெள்ளம் படை, ஊழிக் காலத்தில் கடல் பெருக்கெடுத்து உலகை மறைப்பதுபோல் - உலகைப் போர்ப்பதுபோல் உலக முழுவதும் பரவும். அங்ஙனம்,

பரவினால்தான், சீதை இருக்கும் இடத்தை எளிதிலும் விரைவிலும் காண இயலும். வெள்ளம் என்பது ஒரு பேர் எண்.

**''நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்**
**மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய**
**செய்குறி ஈட்டம் கழிப்பிய வன்முறை''** (2:13, 14, 15)

என்னும் பரிபாடல் நூல் பகுதியால் இதனை அறியலாம். இது பற்றித் தொல்காப்பியரும் கூறியுள்ளார்:

**''ஐ,அம்,பல் என வரூஉம் இறுதி**
**அல்பெயர் எண்ணும் ஆயியல் நிலையும்''** (394)

என்பது நூற்பா. தாமரை (ஐ), வெள்ளம் (அம்), ஆம்பல் (பல்) - (நெய்தல் - அல்) என்பன பேரெண் பெயர்கள் என்பதை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தத்தம் உரைகளில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

# 7. வாலி வதைப் படலம்

*வாலியை வதைத்தது பற்றிய தாதலின் இது இப்பெயர்த் தாயிற்று.*

**சுக்கிரீவனின் அறைகூவல்**

*இராம இலக்குவரும் சுக்கிரீவன், அனுமன் முதலிய வானரர்களும், வாலியைக் கொல்வதென்று முடிவெடுத்து வாலியிருந்த கிட்கிந்த மலையை அடைந்தனர். வாலியைப் போருக்கு அழைக்கும்படி இராமன் சுக்கிரீவனை ஏவினான். அதன்படி, சுக்கிரீவன், வாலியே போருக்கு வருவாயாக-உன்னைக் கொல்லுவேன் என்று கூறிக்கொண்டு, கால்களைத் தரையிலே உதைத்துக் கொண்டும் வாயை மடித்துக் கொண்டும் தோள்களைக் கைகளால் தட்டிக் கொண்டும் போர் முழக்கம் புரிந்தான். அப்போது வாலி உறங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய இடக்கண்ணும் இடத்தோளும் துடிக்கலாயின.*

**''இடித்து உரப்பி வந்துபோர்**
**எதிர்த்தியேல் அடர்ப்பன் என்று**
**அடித் தலங்கள் கொட்டி**
**வாய்மடித்து அலங்கு தோள்**
**புடைத்து நின்று உளைத்த**
**பூசல் புக்கதுஎன்ப மிக்குஇடம்**
**துடிப்ப அங்கு உறங்கு**
**வாலி திண் செவித் தொளைக்கணே''** (12)

*வாளா ஓரளவு ஒலியுடன் அழைத்தாலே காதில் கேட்கக்கூடும்; ஆனால் இவன் இடிபோல் இடித்து அதட்டிக்*

கூவியிருக்கிறான். நடுத்தரமான ஒலியே போதும் என்ற நிலையிருக்க, காதின் தொளைக்குள்ளே போய்ப் புகுந்தன என்று கூறும் அளவுக்கு நிலைமை போய்விட்டதென்றால் வாலி உறக்கத்தினின்றும் எழத்தானே செய்வான். 'தூங்கிய புலியை எழுப்பினாற் போல' என்பது இதுதான். ஆடவர்க்கு வலப்பக்கமும் மகளிர்க்கு இடப்பக்கமும் கண்ணும் தோளும் துடித்தால் நல்ல நிமித்தமாகும்; மாறான பக்கங்களில் துடித்தால் தீய நிமித்தமாகும். இதுபற்றி யான் (சு. ச.) சுந்தர காண்ட விளக்கத்திலும் சிலம்புத் திறனாய்வு நூலிலும் விரிவாக விளக்கியுள்ளேன். எனவே, இங்கேயும் விளக்கம் வேண்டா. சுக்கிரீவன் கூவியதே வாலியின் சாவுக்குத் தொடக்கப் புள்ளி யாகும். எனவே, வாலிக்கு இடப்பக்கம் கண்ணும் தோளும் துடிக்கலாயின.

களிற்றின் முழக்கத்தை அரியேறு (சிங்கம்) கேட்டாற் போல் சுக்கிரீவனது போர் முழக்க அறை கூவலை வாலி கேட்டான். (13)

தம்பி போருக்கு அழைத்ததை அறிந்த வாலி, அவனது அறியாமையையும் இயலாமையையும் எண்ணி அண்டங்களி லெல்லாம் கேட்கும்படிச் சிரித்தான். இது 'எள்ளல்' காரணமாக எழுந்த வெடிச் சிரிப்பாகும். (14)

**வாலியின் வெஞ்சினம்**

சுக்கிரீவனின் அறை கூவலைக் கேட்டு எழுந்த வாலியின் வெஞ்சினத்தைப் பல பாடல்களில் விளக்கியுள்ளார் கம்பர்.

வாலியின் மெய்யில் உள்ள மயிர்க்கால் துளைகளி லிருந்து வெய்ய தீப் பொறிகள் தோன்றிப் பரவினவாம். அவன் கண்கள் வடவைத் தீயும் காண்பதற்குக் கண் கூசும்படியாக நெருப்பைக் கக்கினவாம். அவனது மூக்கி

லிருந்து வரும் மூச்சுக்காற்று புகைபோல் மேலெழுந்து வானளாவியதாம்.

**"போய்ப் பொடித்தன மயிர்ப் புறத்த வெம்பொறி**
**காய்ப்பொடு உற்றெழு வட அனலும் கண்கெடத்**
**தீப் பொடித்தன விழி தேவர் நாட்டினும்**
**மீப் பொடித்தன புகை உயிர்ப்பு வீங்கவே''** (16)

*வட அனல் = உலகம் அழியும் காலத்தே கடலிலிருந்து எழுந்து உலகை அழிப்பதாகக் கூறப்படும் வடவாமுகாக்கினி வாலியின் உடல் முழுவதினின்றும் நெருப்பு எழுந்தது என்று சுருக்கமாகச் சொல்லாமல், கம்பர் மூன்று விதமாகப் பிரித்துக் கூறியுள்ளார். உடல் முழுவதிலும் உள்ள மயிர்க்கால் துளைகளிலிருந்து தீப் பொறிகள் தோன்றின - வடவைக்கனலும் கூசும்படிக் கண்கள் தீ கக்கின. மூச்சுக் காற்றிலும் வெப்பப் புகை எழுந்து வானளாவியது - என மூன்று நிலைகளாகக் கூறியுள்ளார். சினம் எழுந்தபோது உடலில் வெப்பம் தோன்றுதல் இயற்கையான தன்மை என்பது பற்றி இதனைத் 'தன்மை அணி' அமைந்தது என்று கூறலாமாயினும், பெரிய அளவில் மிகுதிப்படுத்திக் கூறியிருப்பதால் 'உயர்வு நவிற்சி அணி' எனலாம். தொல் காப்பியர் கூறியுள்ளபடி இதனை அலை - கொலை காரணமாக வந்த வெகுளி (சினம்) எனலாம். மெய்பாட்டியல்-10*

**இடியிடு தோற்றம்**

வாலி தன் மேல்வாய்ப் பற்களையும் கீழ்வாய்ப் பற்களையும் ஒன்றோடு ஒன்று மோதக் கடித்தானாம். அந்தப் கடிப்புப்பகுதியிலிருந்து நெருப்பு எழுந்து, முகில்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் போது எழும் இடி நெருப்பைப்போல் சிந்தினவாம். அவன் தோள்களைத்

தட்டியபோது அவற்றில் அணிந்திருந்த வாகுவலயங்களில் உள்ள மணிகள் மின்னலைப்போல் சிதறிச் சிந்தினவாம்.

**"கடித்தவாய் எயிறுகு கனல்கள் கார் விசும்பு**
**இடித்தவாய் உகும் உரும் இனத்தின் சிந்தின**
**தடித்து வீழ்வன எனத் தகர்ந்து சிந்தின**
**வடித்த தோள் வலயத்தின் வயங்கு காசரோ"** (20)

மின்னலும் இடியும் எவ்வாறு தோன்றுகின்றன என்பது பலருக்கு இந்தக் காலத்திலும் தெரியாதிருக்கலாம். ஆனால் அந்தக் காலத்திலேயே கம்பர் தெளிவாகத் தெரிவித்துப் போந்துள்ளார். முகில்கள் ஒன்றோடொன்று மோதும் போது நெருப்பு உண்டாகிறது – இது தான் மின்னல். அதே நேரத்தில் மோதும் ஒலியும் உருவாகிறது – இது தான் இடி. மின்னல் ஒலியை விட விரைவு உடைய தாகலின் முதலின் தெரிகிறது; அதன்பின் ஒலி கேட்கிறது. முதலில் மின்னல் கண்ணுக்கும், பின்பு ஒலி காதுக்கும் எட்டினாலும், இரண்டும் ஒரே நேரத்தில் நிகழ்வனவே. ஓர் ஆற்றின் ஒரு கரையில் நின்று கொண்டு, எதிர்க்கரையில் ஒருவர் துணி தோய்ப்பதைக் கவனிக்கும்போது, அவர் கல்லில் அடிப்பது முதலின் கண்ணுக்குத் தெரியும் – சிறிது நேரம் சென்ற பின்பே அடித்த ஒலி காதுக்குக் கேட்கும். இதே அடிப்படையில்தான் மின்னலும் இடியும் நமக்குத் தென்படுகின்றன.

இதைத்தான் கம்பர், 'கார் விசும்பு இடித்தவாய் உகும் உரும் இனம்' என்றார். கார் = மேகம், விசும்பு = விண்ணில். இடித்தவாய் = மோதிய பகுதியிலிருந்து. உகும் தோன்றுகிற, உரும் இனம் = இடியின் தொகுதி - எனப் பொருள் கொள்ளல் வேண்டும். பற்கள் ஒன்றோ டொன்று கடிபடும்போது நெருப்புத் தோன்றுவதாகக் கம்பர் கூறியிருப்பது, வாலியின் சினத்தின் மிகுதியையும், கடிப்பின் விரைவையும் அழுத்தத்தையும் அறிவிப்பதற்காம்.

'சக்கி முக்கிக்கல்' எனப்படும் ஒரு வகைக் கற்களை ஒன்றோடொன்று தேய்த்தாலும், ஒருவகை இரும்பை ஒரு வகைக் கல்லோடு தேய்த்தாலும் நெருப்பு தோன்றுவதை நாம் நேரில் காணலாம். இவ்வாறே, வாலி பற்களைக் கடித்தபோது நெருப்பு உண்டாயிற்றாம். இதற்குத் துணையாக, தோள் அணியிலுள்ள மணிகள் சிதறி விழுவது மின்னல் வீசுவது போல் தெரிவதாகக் கம்பர் இணைத்துக் கொண்டார். இக்காலத்திலும் பலர் அறியாத இடி மின்னல் தோற்றத்தை அக்காலத்திலேயே கம்பர் அறிந்து கூறியிருப்பது பாராட்டத்தக்கதாகும். இப்பாடலில் இரண்டு சுவையான உவமைகள் உள்ளன.

## தாரையின் தடுப்பு

வாலி போருக்கு ஆயத்தமாகி இவ்வாறு ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தபோது, அவன் மனைவி தாரை வந்து சுக்கிரீவனுக்குத் துணையாயுள்ள இராமன் மிகவும் வலியவன் என்கின்றனர் — நீ போருக்குப் போக வேண்டா எனத் தடுத்தனள்.

**"ஆயிடைத் தாரைஎன்று அமிழ்தின் தோன்றிய**
**வேயிடைத் தோளினாள் இடை விலக்கினாள்"** (22)

என்பது பாடல் பகுதி. அமிழ்தமே உருவ மானவளாம் — மூங்கில் போன்ற தோளினளாம் - தாரை.

கணவன் போருக்குப் புறப்பட்டபோது மனைவி தடுத்ததைத் தெருக்கூத்துக் காட்சிகளில் யான் கண்டுள்ளேன். முடிவு கணவன் இறப்பதாகவே இருக்கும். இங்கேயும் அதே நிலைதான். சேக்சுபியர் (Shakespeare) எழுதியுள்ள 'ஜூலியஸ் சீசர்' (Julius ceasar) என்னும் நாடகத்திலும் இத்தகைய நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்று உள்ளது. சீசரின் சூழ்நிலை நன்றாயில்லாததால், அவனுடைய மனைவி 'கால்பர்னியா' (Calpurinia) என்னும்

அரசி, மன்னன் அரண்மனையை விட்டு வெளியே போகக் கூடாது என மிகவும் கண்டிப்பாய் வற்புறுத்தி மண்டியிட்டு வேண்டிக் கொண்டாள். மன்னர்க்கு உடல் நலம் இன்மையால் அவர் பேரவைக்கு வர இயலவில்லை என்று அறிவிக்குமாறு ஆண்டனி (Antony) என்பவனிடமும் சொல்லி அனுப்பினாள். ஆயினும், மிகவும் துணிச்சலுடன் சீசர் பேரவைக்குச் சென்றான் - கொல்லவும் பட்டான். வாலியின் முடிவும் இன்னதே.

**தம்பியர் அன்பு**

சுக்கிரீவனுக்கு இராமன் துணையாய் வந்துள்ளான் என்று கூறிய தாரையை நோக்கி, இராமன் உயர்ந்த பண்பினன்; அவனைப் பழித்தல் தீவினையாகும்; அவன் என்னைக் கொல்ல மாட்டான்; இராமன் தனது அரசைத் தம்பிக்குத் தந்து விட்டான்; இதனால், அண்ணன் தம்பியர் ஒற்றுமையாயிருக்கவே இராமன் பாடுபடுவான்; தன் தம்பியரைத் தவிர வேறு யாரும் தனக்குத் துணைவரிலர் என்னும் நம்பிக்கை உடையவன் இராமன்; எனவே, யானும் என் தம்பியும் மோதும் முரணிடையே இராமன் தலையிட மாட்டான் - என்றியம்பினான்.

**''தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர்**
**இம்பரில் இலதென எண்ணி ஏய்ந்தவன்**
**எம்பியும் யானும்உற்று எதிர்ந்த போரினில்**
**அம்பிடைத் தொடுக்குமோ அருளின் ஆழியான்''** (35)

இராமன் தம்பியர் பற்று உடையவ னாதலின், யான் என் தம்பியோடு மேற்கொள்ளும் செயலில் குறுக்கிட்டு என் மேல் அம்பு போடமாட்டான்; ஏனெனில், அவன் அருள் கடலாய் (அருளின் ஆழியான்) உள்ளவன் - என ஆறுதல் கூறுவதான கருத்து வெளிப்பாடு, நயமும் திறமும் உடையதாய்க் காணப்படுகிறது. இவ்வாறாக வாலியால்,

மிகவும் நல்லவனென நம்பப்பட்ட இராமன், பின்பு வாலியைக் கொல்லப் போகிறான் - என்ற காப்பிய முன்னோட்டச் சுவையும் இதில் அமைந்துள்ளது.

**கம்பர் கோட்டை விட்டார்**

இரணியனைக் கொல்லத் தூணிலிருந்து தோன்றிய நரசிங்கத்தைப் போல, யாவரும் அஞ்சும்படி மலைவழியே வந்து மலையின் உச்சியிலே வாலி நின்றான். கண்டார் அஞ்சும் தோற்றத்தினால் வாலிக்கு நரசிங்கத்தை ஒப்பாகக் கூறினார் கம்பர். ஆனால் இந்த உவமையில் ஒரு குறைபாடு உள்ளது. இராமனும் நரசிங்கரும் திருமாலின் தெய்வப் பிறவிகள் பத்தில் அடங்குவர். அங்ஙனமிருக்க, இராமனால் கொல்லப்படப் போகும் வாலிக்கு நரசிங்கத்தை ஒப்புமையாகக் கூறலாமா? நரசிங்கம் இரணியனைக் கொன்றது போல் வாலி இராமனைக் கொல்லப் போகிறானா? — இல்லையே — சரி, பாடலைப் பார்ப்போம்:

**''நின்றான் எதிர் யாவரும் நெஞ்சு நடுங்கி அஞ்சத்**
**தன்தோள் வலியால் தனிமால் வரை சாலும் வாலி**
**குன்றூடு வந்து உற்றனன் கோள் அவுணன் குறித்த**
**வன் தூணிடைத் தோன்றிய மா நரசிங்கம் என்ன''** (38)

வெள்ளத்திடை அகப்பட்டவர்க்கு ஒரு துரும்பு கிடைத்தாற்போல, இங்கே நாம் கம்பரை வழுவினின்றும் காப்பாற்ற, 'குன்றூடு வந்து' என்னும் தொடர் உள்ளது. நரசிங்கம் தூணின் இடையிலிருந்து வந்தது போல், வாலி பல குன்றுகளினூடு புகுந்து வந்து மேலே நின்றான் — என அமைதி கூறலாம். இருப்பினும், கம்பர் கோட்டை விட்டவர் விட்டவரே!

**இலக்குவன் குழப்பம்**

வாலியும் சுக்கிரீவனும் போர்முனையில் இருக்கையில், இராமன் இலக்குவனிடம் வாலியின் வலிய தோற்றத்தைக்

காண்க என்றான். இலக்குவன் கூறுகிறான்: சுக்கிரீவன் தன் தமையனின் வாழ்நாளை முடிக்கும் எமனை அழைத்து வந்திருக்கிறான். இகழ்தற்கு உரிய குரங்குத்தனமான போர் இது என்பதை எண்ணுங்கால் என் உள்ளம் குழம்புகிறது என்றான்:

**"வள்ளற்கு இளையான் பகர்வான்இவன்**
**தம்முன் வாழ்நாள்**
**கொள்ளக் கொடுங் கூற்றுவனைக்**
**கொணர்ந்தான் குரங்கின்**
**எள்ளற்குறு போர்செய எண்ணினான்**
**என்னும் இன்னல்**
**உள்ளத்திடை ஊன்ற உணர்ந்திலென்**
**ஒன்றும் என்றான்"** (41)

வள்ளல் = இராமன். அவரவரும் அரசுப் பதவிக்கு அடித்துக் கொண்டு கிடக்கும் இவ்வுலகில், தனது அரசுரிமை யைத் தம்பி பரதனுக்கு அளித்தமையால் இராமன் வள்ளல் எனப்பட்டான். சுக்கிரீவனது செயலை இலக்குவன் உளமார ஒத்துக்கொண்டவனாகத் தெரியவில்லை. தான் தமைய னுக்குப் பணிந்தொழுகும் தூய பண்பினனாதலால், மற்றவரும் மூத்தவனாகிய தமையனுக்குப் பணிந்தொழுக வேண்டும் என எண்ணுகிறான். அங்ஙனம் இன்றிச் சுக்கிரீவன் தமையனைக் கொல்ல முயல்வதால், இதை நோக்கி ஒன்றும் சொல்ல இயலாமல் குழப்பம் அடைகிறான் இலக்குவன். இப்படி ஓர் உயர்ந்த கொள்கையைக் கம்பர் இலக்குவன் வாயிலாக உலக மக்கட்குப் பரிந்துரைத்திருப்பது பெருமைக்கு உரியது. (ஆனால், இங்கே சுக்கிரீவனின் சூழ்நிலை வேறுவிதமானது என்பதையும் நினைவில் கொள்ளல் வேண்டும்.)

## 'பே – பே' கதை

மேலும் இலக்குவன் கூறுகிறான்: அறமுறை தவறி ஒழுகுபவர்களை நம்புதல் எங்ஙனம்? தன் தமையனையே பகைவனாகக் கொண்டு கொல்லத் துணியும் இவன் அயலாராகிய நமக்குத் துணையாயிருப்பான் என்று நம்புதல் எவ்வாறு – என்று ஐயுற்றுக் கூறுகிறான்:

**''ஆற்றாது பின்னும் பகர்வான் அறத்தாறு அழுங்கத்**
**தேற்றாது செய்வார்களைத் தேற்றுதல் செவ்வி அன்றால்**
**மாற்றான் எனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான்**
**வேற்றார்கள் திறத்து இவன் தஞ்சம்என்? வீர என்றான்''**
(42)

தம் முன் = தம் அண்ணன். தாய், தந்தை, தமையன், ஆசான், அரசன் ஆகிய ஐவரையும் ஐம்பெருங் குரவர் எனல் மரபு. அவர்களுள் ஒருவனாகிய அண்ணனையே கொல்லத் துணிபவனை நம்ப முடியாது என இலக்குவன் ஐயுறுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஒருவன் மற்றொருவரிடம் பொருள் கடன் வாங்கினான். பின்னர், கடன் கொடுத்தவர் கடன் வாங்கியவனிடம் கடனைத் திருப்பித் தருமாறு கேட்டார். வாங்கியவன் தான் வாங்கவில்லை என்றான். இது நீதிமன்றத்துக்குப் போயிற்று. வாங்கியவனின் வழக்குரைஞர், நீதிமன்றத்தில் நீதிபதி எது கேட்டாலும் 'பே—பே' என்று சொல் – இவன் ஊமை – பைத்தியம் - வாங்கியிருக்க மாட்டான் என்று நீதிபதி வழக்கைத் தள்ளி விடுவார் என்று வாங்கியவனுக்குக் கற்றுக் கொடுத்தாராம். அதேபோல் அவன் 'பே - பே' சொல்லி வெற்றி பெற்றான். பின்னர் வழக்குரைஞர், வாங்கியவனைப் பார்த்து வெற்றி பெற்றுத் தந்ததற்கு உரிய கட்டணத்தை எனக்குக் கொடு என்று கேட்டாராம். அவன் வழக்குரைஞரிடம் 'பே - பே' என்றானாம். உடனே வழக்குரைஞர் எனக்குமா 'பே-பே' என்றாராம். அதற்கு அவன், உனக்கும்

'பே-பே', உன் அப்பனுக்கும் 'பே-பே', உன் பாட்டனுக்கும் 'பே-பே' என்றானாம். இந்த மாதிரியில், தனது வேலையை முடித்துக் கொண்ட பின்னர், சுக்கிரீவன் தங்கட்கு உதவி செய்வான் என்பது என்ன உறுதி என்று இலக்குவன் ஐயுற்றது ஒருவகையில் பொருத்தமே. அவ்வாறே அரசு கிடைத்ததும் சுக்கிரீவன் 'பே-பே' போட்டான். இது குறித்துப் பின்னர்ப் பார்க்கலாம்.

**இராமனின் அரிய உரை:**

சுக்கிரீவனை எவ்வாறு நம்புவது என்று ஐயுற்ற தம்பிக்கு இராமன் கூறுகிறான். உயர்ந்த தம்பியே! மனிதக் குரங்குகளாகிய இவர்களின் ஒழுகலாற்றைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கு இல்லை. மக்கள் பிறவி எடுத்தவர் களுக்குள்ளேயே - எந்தத் தாய் வயிற்றில் பிறந்தவரா யிருப்பினும், முன் பிறந்த தமையன் முறை உள்ளவர்க ளோடு, பின் பிறந்த தம்பி முறை உள்ளவர்கள் அனைவரும் ஒத்து அடங்கி ஒழுகுவாராயின் நம் பரதனுக்குப் புகழ் ஏது?

உலகில் உண்மை உடையவர்கள் சிலரே; உண்மை அற்றவர்களே பலர். ஏதோ நட்புக் கொண்டோம் என்ற அளவில் அவரால் பெறக்கூடிய அளவு ஏதேனும் நன்மை கிடைக்குமாயின் பெற்றுக் கொள்வதோடு அமையவேண்டும். எவ்வளவு தான் புடைத்துத் தேற்றினும், குற்றம் இல்லாத வர் என்று சொல்வதற்கு உரியவராக ஒருவரும் தேறார். எனவே, நீ ஐயுறற்க என்றான்.

> **"அத்தா இதுகேளென ஆரியன் கூறுவான்இப்**
> **பித்தாய விலங்கின் ஒழுங்கினைப் பேசலாமோ**
> **எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்கள் எல்லாம்**
> **ஒத்தால் பரதன்பெரிது உத்தமனாவது உண்டோ"** (43)

**"விற்றாங்கு வெற்பென்ன இலங்கு எழில்தோள மெய்ம்மை
உற்றார் சிலர் அல்லவரே பலர்என்பது உண்மை
பெற்றார் உழைப்பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
அற்றார் நவைஎன்றலுக்கு ஆகுநர் ஆர்கொல் என்றான்"**
(44)

இலக்குவன் உயர்வுபற்றி 'அத்தா' எனப்பட்டான். ஆரியன் = இராமன். உலகில் எல்லாத் தம்பியருமே நல்லவராக இருப்பின், பரதனுக்குத் தனிச் சிறப்பு ஏது? தமையனிடம் தகராறு கொள்ளும் தம்பியரே மிகுதியா யிருப்பதால்தான், தமையனாகிய எனக்குப் பணிந்தொழுகும் பரதன் தனிப்பெருஞ் சிறப்பு உடையவனாகப் போற்றப் படுகிறான் என்று இராமன் கூறியது மிகவும் உயர்ந்த கருத்து வெளிப்பாடாகும். இது போலவே, நம்மோடு தொடர்பு கொள்பவரிடத்தில், என்ன - எவ்வளவு எதிர் பார்க்கலாமோ அன்னதையே - அவ்வளவே ஏற்றுக் கொண்டு அமைதியுற வேண்டுமே தவிர, அவர்களைப் பற்றிப் பெரிய அளவில் ஆய்வு செய்வது தேவையற்றது என்று இராமன் கூறியதும் உயர்ந்த கருத்து வெளிப் பாடாகும். இராமன் இவ்வாறு கூறியதாகக் கம்பர் அறிவித்திருக்கும் மதி நுட்பமும் எழுத்தாற்றலும் பெரிதும் பாராட்டத்தக்கன.

வாலியும் சுக்கிரீவனும் மிகவும் கடுமையாகப் போர் புரிந்ததைப் பற்றிக் கம்பர் பல பாடல்களில் கற்பனை நயமுற விளக்கியுள்ளார். இறுதியில் வாலியின் தாக்குதலைத் தாங்க முடியாத சுக்கிரீவன் இராமன்பால் ஓடி வாலிமேல் அம்பு எய்யுமாறு வேண்டினான். அதற்கு இராமன், நீவிர் இருவரும் தோற்றத்தால் ஒத்திருத்தலின், வாலி யார் - சுக்கிரீவன் யார் - என என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆதலால் நீ தலையில் கொடிப்பூ சூடிக்கொண்டு செல்வாயாயின், நின்னினும் வாலியை வேறு

பிரித்துக் கண்டு அம்பு எய்வேன் எனக் கூறினான். அவ்வாறே சுக்கிரீவன் தலையில் கொடிப்பூ சூடிச் சென்று வாலியோடு பொருதான்.

மறுபடியும் தொடர்ந்த போரில் வாலியின் அடி உதையைப் பொறுக்க முடியாத சுக்கிரீவன் மிகவும் தளர்ந்து இராமன் இருக்கும் பக்கம் ஏக்கத்தோடு பார்த்தான். அந்தப் பார்வையின் பொருள், வாலியின்மேல் அம்பு எய்க என இராமனை வேண்டிக் கொள்வதாகும். அந்நேரத்தில் வாலி சுக்கிரீவனைத் தரையில் மோதி அடித்துக் கொல்வதற்காக அவனைத் தன் கைகளால் உயரே தூக்கினான். அந்த நேரம் பார்த்து இராமன் மறைந்து நின்று வாலியின் மேல் அம்பு எய்தான்.

**கவிச்சக்கரவர்த்தி**

கம்பர் இங்கே மிக உயர்ந்த - நெஞ்சை அள்ளக் கூடிய - கற்பனை நயஞ் செறிந்த உவமை ஒன்றினைப் படைத்துக் காட்டிப் படிப்பவர்க்கு மகிழ்ச்சி உண்டாக்கி உள்ளார். நீரும் நெருப்பும் காற்றும் நிலமும் மிக்க வலிமை உடையன- அவை சீறின் யாராலும் தடுக்க முடியாது என்பது முன்னரே ஒரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நான்கின் வன்மையையும் திண்மையையும் ஒரு சேரப் பெற்றுள்ளதாம் வாலியின் மார்பு. அவனது மார்பை யாரும் எதனாலும் துளைக்க முடியாது. அத்தகைய மார்பைக் கனிந்த வாழைப் பழத்தில் ஊசி நுழைந்தாற்போல் மிகவும் எளிதாக இராமன் அம்பு புகுந்து துளைத்ததாம்.

**''காருண் வார்சுவைக் காதலியின் கனியினைக் கழியச்**
**சேரும் ஊசியின் சென்றது நின்றது என்செப்ப**
**நீரும் நீர்தரும் நெருப்பும் வன்காற்றும் கீழ்நிவந்த**
**பாரும் சார்வலி படைத்தவன் உரத்தை அப்பகழி''** (66)

'வாழைப் பழத்தில் ஊசி நுழைந்தாற் போல' என்னும் பழைய பழமொழி ஒன்றுண்டு. இந்தக் காலத்தில் சில ஊசிகள் கனிந்த வாழைப் பழத்தில் புதுவதுகூடக் கடினமாயுள்ளன. இராமன் எய்த அம்பின் கூர்மையையும் விரைவையும் ஆற்றலையும் விளக்கிக் காட்டுவதற்காகக் கம்பர் வாலியின் மார்பின் திண்மையைக் கற்பனை செய்து காட்டியுள்ளார்.

**ஐம்பூதங்களின் தோற்றம்**

விண்ணிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் (மண்ணும்) தோன்றியதாக முறைவைப்பு செய்யப்படுவது ஒருமுறை. இங்கே நீரைத் தரும் நெருப்பு என்னும் பொருளில் நீர்தரும் நெருப்பு என்பது அமைந்துள்ளது. காற்றும் நெருப்பும் நீரும் திண்மை (கெட்டித் தன்மை) உடையன அல்ல வாயினும், யாராலும் வெல்ல முடியாத வன்மை (வலிமை) உடையன. பாரோ (நிலமோ) வன்மையுடன் திண்மையும் உடையது. இதனைத் திருவதிகை மனவாசகங் கடந்தார் இயற்றிய 'உண்மை விளக்கம்' என்னும் நூலில் உள்ள 'மண் கடினமாய்த் தரிக்கும்' (9) என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம்.

'கடினம்' என்பது செறிவு - இறுக்கம் (Density) என்னும் பொருளைக் குறிக்கும். காற்று, தீ, நீர் ஆகியவற்றை விட மண் இறுக்கம் உடையது என்று சொல்வது மட்டும் போதாது. மண்ணுலகம் எனப்படும் பூமி (Earth) ஞாயிற்றை விடவும் மற்ற கோள்களை விடவும் மிகவும் வலிய இறுக்கம் (Density) உடையது என்பது மிகவும் குறிப்பிடத் தக்கது.

பூமி ஒரு முழுப்பங்கு இறுக்கம் உடையதெனில், அதை நோக்க, ஞாயிறும் மற்ற கோள்களும் எவ்வளவு இறுக்கம் உடையன என்பதைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

| | |
|---|---|
| பூமி — 1 | வியாழன் — .24 |
| ஞாயிறு — .25 | சனி — .13 |
| புதன் — .85 | யுரேனஸ் — .22 |
| வெள்ளி — .89 | நெப்டியூன் — .20 |
| செவ்வாய் — .71 | திங்கள் — .61 |

மற்ற கோள்களினும் பூமி மிக்க இறுக்கம் உடையதாயிருப்பதனால்தான், மணிமேகலை நூலில் சாத்தனார் 'மண்திணி ஞாலம்' எனவும், மாணிக்கவாசகர் திருவாசகம்-திருவண்டப் பகுதியில் 'வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்' எனவும் கூறினர் போலும். இவ்வாறு இன்னும் பல சான்றுகள் உள்ளன.

இப்போது வாலியிடம் வருவோம்: வாலியின் மார்பு மண் போன்ற திண்மையும் மற்ற பூதங்களைப் போன்ற வன்மையும் உடையதெனக் கொள்ளல் தகும்.

**வாலியின் ஆற்றாமை**

மார்பில் பாய்ந்த இராமனது அம்பு மார்பைத் துளைத்துக்கொண்டு முதுகுப் பக்கம் வெளியாகாதபடி அதைக் கைகளாலும் கால்களாலும் வாலினாலும் இறுகப் பிடித்துக் கொண்டான். கீழே வீழ்ந்து கிடக்கும் நிலையிலும் அவனது மற உணர்வு குன்றவில்லை. இந்தப் படையை யார் தொடுத்திருக்கக் கூடும்? தேவரா? இல்லை. அவர்கள் யான் செய்துள்ள நன்றியை மறந்து இவ்வாறு செய்திருக்க மாட்டார்கள்; மற்றும் அவர்களால் இவ்வாறு என்மேல் எதையும் எய்யவும் இயலாது.

ஒருவேளை, இது திருமாலின் ஆழிப்படையாய் இருக்குமோ? அல்லது சிவனது சூலமோ? அல்லது குன்று துளைத்த முருகனது வேலோ? அல்லது இந்திரனின் வச்சிரப் படையோ? என்றெல்லாம் எண்ணினான்:

**"நேமிதான் கொலோ நீலகண்டன் நெடுஞ் சூலம்**
**ஆமிதாங் கொலோ அன்றெனில் குன்றுருவு அயிலும்**
**நாம இந்திரன் வச்சிரப்படையும் என் நடுவண்**
**போமெனும் துணை போதுமோ யாதெனப் புழுங்கும்"**
(73)

*நேமி = சக்கரம். குன்று = கிரவுஞ்சம் என்னும் மலை. அயில் = வேல். நடுவண் = மார்பின் நடுப்பகுதி. திருமாலும் சிவனும் முருகனும் இந்திரனும் பலமுறை போர் புரிந்துள்ளமையால் இங்கே இடம் பெற்றுள்ளனர். அவ்வளவாகப் போர் புரியாத நான்முகன் ஈண்டு இடம்பெறவில்லை. மேலும் வாலி எண்ணுகிறான்:*

*இந்தப் படையை வில்லினால் எய்ய முடியாதே - எப்படி வந்தது - என வியக்கிறான். அல்லது முனிவர் யாராயினும் தம் சொல்லின் ஆற்றலால் (மந்திர பலத்தால்) இவ்வாறு எய்யச் செய்திருப்பரோ என நினைத்துப் பார்க்கிறான்:*

**"வில்லினால் துரப்பரிது இவ் வெஞ்சரம் என வியக்கும்**
**சொல்லினால் நெடு முனிவரோ தூண்டினார் என்னும்"**
(74)

*ஈண்டு,*

**"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை"** (872)

*என்னும் குறள் நினைவுகூரத் தக்கது. பெரியோரின் - முனிவரின் - புலவரின் சொல்லுக்கு மிகுந்த ஆற்றல் உண்டு என்பது இதனால் பெறப்படும். பின்பு வாலி, தன் கைகளாலும் கால்களாலும் வாலினாலும் வன்மைகொண்டமட்டும் இழுத்துப் பார்த்து அது அம்பு என அறிந்தான். அம்பைப் பறித்த மார்புப் பகுதியிலிருந்து குருதி கடலெனப் பெருக்கெடுத்து ஓடிற்று.*

**சுக்கிரீவனின் மயக்கம்**

வாலியின் மலையாகிய மார்பிலிருந்து வரும் குருதி யாகிய அருவியைக் கண்ட சுக்கிரீவன், உடன் பிறப்பு என்னும் கயிற்றால் பிணிப்புண்டு, கண்ணீர் பெருக்கெடுக்க மயங்கித் தரையில் சாய்ந்து விட்டான்.

> **"வாசத் தாரவன் மார்பெனும் மலைவழங்கு அருவி**
> **ஓசைச் சோரியை நோக்கினன் உடன்பிறப்பு என்னும்**
> **பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும் பசுங்கண்**
> **நேசத் தாரைகள் சொரிதர நெடுநிலம் சேர்ந்தான்"** (78)

வாசத்தார் = மணம் மிக்க மாலை. வாலியின் மார்பு மணம் மிக்க மாலை சூடியிருந்ததாம். சோரி = குருதி. நேசம் = அன்பு. உடன்பிறப்பு ஆதலின் அன்புக் கண்ணீர் சொரிந்தான். ஈண்டு,

> **"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
> **புன்கணீர் பூசல் தரும்"** (71)

என்னும் குறள் நினைவு கூரத் தக்கது. மற்றும், 'தான் ஆடாவிடினும் தன் தசை ஆடும்" என்னும் பழமொழியும் எண்ணத் தக்கது. உணர்ச்சி வயப்பட்டபோது, நாம் அசைக்காவிடினும், தசை தானே அசைவதை-நடுங்குவதை-உதறுவதைக் காணலாம். இராவணன் இறந்தபோதும் வீடணன் அழுதமையும் இங்கே நினைக்கத் தக்கது.

குமணன் தொடர்பாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. குமண மன்னனை அவன் தம்பி இளங்குமணன் ஆட்சியைப் பறித்துக் கொண்டு நாடு கடத்தி விட்டான். குமணன் காட்டில் மறைந்திருத்தலை அறிந்து குமணன் தலையைக் கொண்டு வருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசு அளிக்கப்படும் என்று பறைசாற்றச் செய்தான். புலவர் ஒருவர் குமணன் தலைபோல் பொய்த் தலை ஒன்று செய்து கொண்டுபோய் இளங்குமணனிடம் காட்டினார். அதைக் கண்ட இளங்

குமணன் உடன் பிறப்புப் பிணிப்பால் கட்டுண்டு பதறி, என் அண்ணனை உயிருடன் கொண்டு வருபவர்க்குப் 'பதினாயிரம் பொன் பரிசு' அளிக்கப்படும் என்று பறை சாற்றினானாம். 'பதினாயிரம் பொன் பரிசு' என்னும் தலைப்பில் இப்படி ஒரு கதை யான் (சு.ச.) எழுதியுள்ளேன். சொத்து முழுவதையும் தாமே எடுத்துக்கொள்வதற்காக, உடன் பிறந்தவன் ஒழிந்துவிட்டால் நல்லது என்றெண்ணும் 'அருளாளர்கள்' இந்த வரலாறுகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பாராக.

**செம்மைசேர் நாமம்**

வாலி தன் மார்பில் எய்யப்பட்ட அம்பு யாருடையது என்பதை அறிவதற்காகத் தன் வலுகொண்ட மட்டும் பறித்து எடுத்துப் பார்த்தபோது, அதில் 'இராமன்' என்னும் பெயர் இருக்கக் கண்டான். அது, மூன்று உலகுக்கும் உரிய மூல மந்திரமாம்; தம் அடியார்க்குத் தம்மையே நல்கக் கூடியதாம்; ஏழு பிறப்பில் வரக்கூடிய துன்பங்கட்கெல்லாம் இப்பிறவியிலேயே மருந்தாக இருந்து இனி வராமல் தடுக்கக் கூடியதாம்; இராமன் என்னும் செம்மைசேர் நாமமாம். அப்பெயரைத் தன் கண்களால் வாலி தெளிவாகக் கண்டானாம்.

**''மும்மைசால் உலகுக் கெல்லாம்**
**மூல மந்திரத்தை முற்றும்**
**தம்மையே தமர்க்கு நல்கும்**
**தனிப்பெரும் பதத்தைத் தானே**
**இம்மையே எழுமை நோய்க்கும்**
**மருந்தினை இராமன் என்னும்**
**செம்மைசேர் நாமந் தன்னைக்**
**கண்களின் தெரியக் கண்டான்''** (80)

இராமன் என்னும் நாமம் இன்றும் நம் நாட்டில் பரவலாகப் போற்றப்படுகிறது. அண்ணல் காந்தியடிகள்

இராமன்பால் கொண்டிருந்த அன்பு ஒரு வரலாறாகும். மக்கள், இராமன், ஸ்ரீராம், இராசாராமன், கோதண்டராமன், சீதா ராமன், சானகி ராமன், கல்யாண ராமன், கோசல ராமன், தசரத ராமன், சிவராமன், பட்டாபிராமன், சுந்தர ராமன், அனந்தராமன், செயராமன், சேதுராமன், காசிராமன், வேங்கடராமன், அதிவீர ராமன், வரதுங்க ராமன், ரகுராமன் என்றெல்லாம் பெயர் வைத்துக் கொண்டிருப்பது, மக்களுக்கு இராமன்பால் உள்ள அன்பை வெளிப்படுத்துகின்றது.

பிணிகள் பிறகு வராமல் தடுப்பதற்காக முன்கூட்டியே பிணிதீர்க்கும் மருந்தை மக்கள் பயன்படுத்துவது போல, பின்பு ஏழு பிறவியில் துன்ப நோய் வராமல் தடுக்கும் முன் மருந்தாக இராமன் என்னும் நாமம் உள்ளதெனப் பொருள் கூறப்படுகிறது. இங்ஙனம் கூறாமல், ஏழு பிறப்பு என்னும் நோய் எதிர்காலத்தில் தொடர்ந்து வந்துகொண்டிராமல், இப்பிறவியிலேயே வீடுபேறு நல்கும் பிறவி மருந்தாக இராம நாமம் விளங்குகிறது என்றும் பொருள் கொள்ளலாமே!

சரிதான், 'ஸ்ரீராமஜெயம்' எனக் கணக்குச் சுவடியில் மேலே எழுதிவிட்டு, கீழே பொய்க் கணக்கு-கள்ளக் கணக்கு எழுதுவோர் நூறு பிறவி எடுப்பினும் அவர்களின் துன்பம் தொலையாது.

அம்பில் 'இராமன்' என்று எழுதப்பட்டிருப்பதைக் கொண்டு, படைக் கலத்தில் உரியவரின் பெயர் எழுதும் பழக்கம் அந்தக் காலத்திலேயே இருந்தது என அறியலாம். இந்தக் காலத்திலும் படைக்கலத்தில் அதற்கு உரிய நாட்டின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பது ஒப்பு நோக்கத் தக்கது.

இராமன் வடநாட்டான்; வாலி வடநாட்டின் தெற்கே உள்ளவன். இராமன் என்ற பெயர் எந்த மொழியில் எழுதப்

பட்டிருக்கக்கூடும். இருவரும் அறிந்த மொழி எதுவோ? இங்கே மிகுதியாக ஒன்றும் சொல்வதற்கு இல்லை. கம்பர் ஓரிடத்தில்

**"தென்சொல் கடந்தான் வடசொல்**
**கடற்கு எல்லை தேர்ந்தான்"**

என்று கூறியிருப்பது ஈண்டு இணைத்து ஆய்தற்கு உரியது.

**நகையும் நாணமும்**

அம்பு இராமனுடையது என்பதை அறிந்த வாலி, இல்லில் இருந்து வாழும் இல்லறத்தைத் துறந்த இராமன், காட்டிற்கு வந்து என் தம்பிக்கு உதவுவதற்காக வில் அறத்தையும் துறந்து மறைந்து நின்று அம்பு எய்தான். இவனால், இவன் பிறந்த ஞாயிறு மரபு நல்லறத்தைத் துறந்தது என்றெண்ணி, வெளியே இகழ்ச்சிச் சிரிப்பும் உள்ளே நாணமும் கொண்டான்.

**"இல்லறம் துறந்த நம்பி எம்மனோர்க் காகத் தங்கள்**
**வில்லறம் துறந்த வீரன் தோன்றலால் வேத நல்நூல்**
**சொல்லறம் துறந்திலாத சூரியன் மரபும் தொல்லை**
**நல்லறம் துறந்த தென்னா நகைவர நாண்உள்**
**கொண்டான்"** (81)

வில் அறம் துறத்தல் = நேருக்கு நேர் நின்று வில்போர் புரியாமல் மறைந்து நின்று அம்பு எய்தல். சூரியகுலம் இதுவரை மறைநூலில் சொல்லப்பட்டுள்ள அறத்தைத் துறந்ததில்லையாம்; இராமன் தோன்றி இந்த இழி செயலைச் செய்ததால், தொன்றுதொட்டுப் பின்பற்றிவந்த அறத்தினை அந்த மரபு இழந்து விட்டதாம். வாலி, இச்சே! என்ன இது! என்று ஏளனச்சிரிப்பு சிரித்தானாம். உள்ளுக்குள்ளே, இத்தகைய தரங்கெட்ட ஒருவனால் நாம் மடிய நேர்ந்ததே – தோற்று விட்டோமே என நாணமும் கொண்டானாம்.

நகைப்பும் நாணமும் இருவேறு துருவங்கள். நகைக்கும் இடத்தில் நாணத்திற்கும், நாணம் உள்ளபோது நகைப்பிற்கும் இடம் இல்லை. சிரிப்பதா - அழுவதா என்று தெரியவில்லை என்று சொல்கிறார்களே அதுதான் இது. இங்கே, "நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன் - அழுது கொண்டே சிரிக்கின்றேன்" என்னும் திரைப்படப் பாடலை ஒத்திட்டு நோக்கின் நாம் என்ன குறைந்தா போய் விடுவோம்? இங்கேயும் கம்பரின் திறமை பளிச்சிடுகின்றது.

**வாலியின் வருத்தம்**

வாலி இந்த நிலைமை நேர்ந்ததற்காக வெட்கப்படுகிறான்; தலையை அப்படியும் இப்படியும் சாய்க்கிறான்; மீண்டும் வெடி போன்ற ஏளனச் சிரிப்பு சிரிக்கிறான்; இதுவும் ஓர் அறம் போலும் என்று எதிர்மறையாய் எண்ணுகின்றான். உள்ளே அழுந்தும் குழியில், வலிமையும் மதமும் மிக்க யானை விலங்கோடு அகப்பட்டுக் கிடந்தாற் போல் துயருடன் கீழே கிடக்கின்றான்:

**"வெள்கிட மகுடம் சாய்க்கும்**
**வெடிபடச் சிரிக்கும் மீட்டும்**
**உள்கிடும் இதுவுந்தான் ஓர்**
**ஓங்கறமோ என்றுன்னும்**
**முள்கிடும் குழியில் புக்க**
**மூரி வெங்களிநல் யானை**
**தொள்கொடும் கிடந்த தென்னத் துயர்**
**உழந்து அழிந்து சோர்வான்"** (82)

முள்குதல் = உள்ளே அழுந்துதல். மூரி = வலிமை. தொள்கு = வலை அல்லது விலங்கு. யானை மிக்கவலிமை உடையதுதான்; ஆனால், அதைப் பிடிப்பதற்காக வெட்டப் பட்டுள்ள சேற்றுக் குழியில் அகப்பட்டுக் கொள்ளின் என்ன செய்ய இயலும்? அதேபோல, வலிமையனாகிய வாலி தன்னைக் கொல்லக் குறித்த சூழ்ச்சியில் அகப்பட்டுக்

கொண்டு, எழ முடியாமல், குருதிச் சேற்றில் கிடந்த வண்ணம் வருந்துகிறான். தக்க உவமை இது.

**பரதன் முன்**

பிரியா உயிருடன் வாலி வருந்திக் கொண்டிருந்தபோது, அவன் முன் இராமன் தோன்றினான். வாலி அவனை நோக்கி வையாது வைது புலம்புகின்றான்.

வாய்மையையும் குலமரபையும் காத்து உண்மைக்காக உயிர் துறந்த வள்ளலும் தூயவனுமாகிய தசரதனுக்குப் பிறந்தவனே! கிடைத்த அரசை ஏற்றுக்கொள்ளாத பண்பாளனாகிய பரதனுக்கு முன் பிறந்தவனே! இதுவரையும் தாய்மையும் நட்பும் அறமும் காத்து ஒழுகியவனே! பிறரைத் தீங்கு செய்யாதபடி நடத்தித் தான் மட்டும் தீங்கு செய்யலாமோ:

**''வாய்மையும் மரபும் காத்து**
**மன்னுயிர் துறந்த வள்ளல்**
**தூயவன் மைந்தனே நீ**
**பரதன் முன் தோன்றி னாயே**
**தீமைதான் பிறரைக் காத்துத்**
**தான் செய்தால் தீங்கன் றாமோ**
**தாய்மையும் அன்றி நட்பும்**
**தருமமும் தழுவி நின்றாய்''** (85)

கைகேயிக்குக் கொடுத்த வாக்கு தவறாமல் - வரம் தவறாமல் - வாய்மை தவறாமல் - தம் குலப்பெருமை தவறாமல் நடந்து கொண்ட தூய வள்ளல் தசரதனாவான். இங்கே உள்ள ''வாய்மை காத்த தூயவன்'' என்பது,

**''புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்''** (298)

என்னும் குறளை நினைவு செய்கிறது. வாய்மை காக்க உயிரையே துறந்ததால் தயரதன் 'வள்ளல்' எனப்

பாராட்டப் பெற்றான். அத்தகைய தூய வள்ளலுக்கு மகனாகத் தோன்றிய இராமனே! அத்தகைய உயரிய பண்பு உனக்கு எங்கே போயிற்று? என்கிறான் வாலி.

மேலும், தவறான முறையில் தாய் தனக்குக் கிடைக்கச் செய்த அரசைத் துச்சமென உதறித்தள்ளிய பரதனுக்கு முன்னே நீ ஏன் பிறந்தாய்? இந்த இழிசெயலைச் செய்யத்தான் பிறந்தாயா? - என்று கேட்காமல் கேட்கிறான் வாலி. குகன் பரதனைப் புகழ்ந்த -

**''ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா''**

என்னும் பகுதி ஈண்டு எண்ணத்தக்கது.

மற்றும், தாயன்பும் நட்பும் அறஉணர்வும் பிறரிடம் கொண்டிருந்த உனக்கு இப்போது அவை எங்கே போயின? யாரும் தீமை செய்யாவண்ணம் இதுவரையும் காத்து வந்தாய் — இப்போது நீ மட்டும் தீமை செய்யலாமோ? ஊருக்கு 'உபதேசம்' செய்தால் போதுமா? தானும் அவ்வாறு நடக்க வேண்டியதில்லையா? - என்னும் பொருள்பட வாலி இராமனை வையாமல் வைதான்.

மேலும் சொல் கணை தொடுக்கிறான் வாலி: உன் குலம் என்ன - கல்வி என்ன - கொற்றம் என்ன - நலம் என்ன - நாயகம் என்ன - வலம் என்ன - வண்மை என்ன - திண்மை என்ன - இவற்றால் எல்லாம் சிறந்தவனாகிய நீ, அறிந்தும் அறியாதார் போல் இக் கொடுஞ் செயலைப் புரியலாமா?

**''குலம்இது கல்வி ஈது**
**கொற்றம் ஈது உற்றுநின்ற**
**நலம்இது புவனம் மூன்றின்**
**நாயகம் உன்ன தன்றோ**

**வலம்இது இவ்வுலகம் தாங்கும்**
**வண்மை ஈது என்றால் திண்மை**
**அலமரச் செய்ய லாமோ**
**அறிந்திருந்து அயர்ந்து ளார்போல்''** (86)

எல்லாம் தெரிந்திருந்தும், இது தீமை என்று அறிந்திருந்தும் அறியாதவர் போல வேண்டுமென்றே இராமன் இப்பழிச் செயலைச் செய்ததாக வாலி குறிப்பிட்டுள்ளான். ஒன்றிலா? - இரண்டிலா? - பலவற்றிலும் தகுதியுடையவனாகிய இராமன் இவ்வாறு செய்யலாமா? - என்பது கருத்து.

**உண்மை வெளிப்பாடு**

மேலும் உரைக்கிறான்: ஓவியத்திலும் எழுதவியலாத அவ்வளவு மிக்க அழகுடையவனே! அரச அறநெறி உங்கள் குலத்தினர்க்கெல்லாம் உடைமை யல்லவா? அங்ஙனம் இருக்க, நீ மட்டும் அறநெறி பிறழலாமோ? உன் உயிர்க்கு உயிரானவளும் அன்னமும் அமிழ்தும் போன்றவளுமாகிய சானகியைப் பிரிந்தபின், நீ திகைத்து மயங்கிவிட்டாயோ?

**''கோவியல் தருமம் உங்கள்**
**குலத்து உதித்தோர்கட் கெல்லாம்**
**ஓவியத்து எழுத ஒண்ணா**
**உருவத்தாய் உடைமை யன்றோ**
**ஆவியைச் சனகன் பெற்ற**
**அன்னத்தை அமிழ்தின் வந்த**
**தேவியைப் பிரிந்த பின்னைத்**
**திகைத்தனை போலும் செய்கை''** (87)

ஓவியத்தில் எழுத முடியாத அழகன் என்றது, ஆள் அழகாயிருந்தால் போதுமா? - அறஉணர்வு வேண்டாவா? - என்று தாக்கியதாகப் பொருள்படும். அரசகுலத்தார்க்கு நாடு - நகரம் - கோட்டை கொத்தளம் - பொன் மணி முதலான செல்வப் பொருள்கள் முதலியன உண்மையான

உடைமைப் பொருள் ஆகா; அறமே உண்மையான உடைமை. அந்த அறத்தை நீ தவற விடலாமா என்று சாடியதான கருத்து இப்பாடலால் புலப்படுகிறது. மனைவியைப் பிரிந்த மயக்கத்தில் இவ்வாறு செய்து விட்டாய் - பெண்டாட்டி தாசன் போலும் நீ! மனைவியை இழப்பினும் அறநெறியை இழக்கலாமா என்று குத்திக் காட்டுவதான பொருளும் இதில் இருக்கிறது. மனைவியைப் பிரிந்ததனாலேயே இராமன் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டியதாயிற்று என்பதே உண்மை. அந்த உண்மை வெளிப்பாடே இந்தப் பாடலின் முடிந்த பொருளாகும்.

**யாருக்காக யார்?**

அரக்கர்கள் தேவர்கட்கும் முனிவர்கட்கும் தொல்லை தந்தனர். அவர்களை அடக்குவதற்காக வந்தவன் நீ. அந்த அரக்கரை அழிப்பதை விட்டு, குரங்கினத்தின் அரசனை அழிப்பதுதான் அறம் என உங்கள் மனுநீதி நெறி உரைக்கின்றதா? அவர்கள் செய்த தீமைக்கு நாங்கள் என்ன செய்வோம்? இரக்கமே உனக்கு இல்லையா? நான் உனக்குச் செய்த பிழையாக என்னிடம் நீ என்ன கண்டாய்? இகழுக்கு உரிய பெரும் பழியை நீயே செய்தால், பிறகு புகழுக்கு உரிய சிறந்த செயலைச் செய்பவர் யார்? - என்றும் வினவினான் வாலி:

**"அரக்கர் ஓர்அழிவு செய்து**
**கழிவரேல் அதற்கு வேறோர்**
**குரக்கினத்து அரசைக் கொல்ல**
**மனுநெறி கூறிற் றுண்டோ**
**இரக்கம்எங்கு உகுத்தாய் என்பால்**
**எப்பிழை கண்டாய் அப்பா!**
**பரக்கழி இதுநீ பூண்டால்**
**புகழையார் பரிக்கற் பாலார்?"** (88)

குரக்கு = குரங்கு. உகுத்தல் = கவிழ்த்துக் கொட்டுதல். இரக்கம் முழுவதும் இராமன் துறந்துவிட்டதாகக் கூறுகிறான். பரக்கழி = பழிச் செயல். பழியையே நீ இப்போது அணிகலனாகக் கொண்டிருக்கிறாய் என்னும் கருத்தில் 'பரக்கழி பூண்டாய்' எனப் 'பூண்' என்னும் வேர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேலியே பயிரை மேய்ந்தால் பயிரைக் காப்பவர் யார் – என்பதுபோல, நீயே பழிச்செயல் புரிந்தால் புகழ்ச்செயல் செய்பவர் வேறு யார்? பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம் என்பதுபோல, பழிக்கு உரியவராக அரக்கர் இருக்க, அவர்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத யாங்கள் பாவத்தின் பயனைத் துய்க்கவேண்டுமா? என்னும் கருத்துகள் உள்ளுறையாகத் தெரிகின்றன.

**''அகமுடையான் அடிக்க, கொழுந்தனைக் கடிந்தாளாம்''**
**''தென்னைமரத்தில் தேள்கொட்ட, பனைமரத்தில் நெறி கட்டினாற்போல்''**

என்னும் பழமொழிகள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. வாலி இராமனை 'அப்பா' என்று சுட்டியிருப்பது, குத்தலாய்ப் பேசுவதாகும்.

**கலி காலம்**

மேலும் வாலி பேசுகிறான்: உலகில் குரங்கினத்துக்கு மட்டும் இப்போதே கலிகாலம் வந்துவிட்டதோ? மெலியவர்களிடத்தில்தான் ஒழுக்கமும் மேன்மையும் இருக்க வேண்டும் போலும்! வலியவர் மெலியவரை வருத்தினால், அவ்வலியவர்க்கு வசை வராமல் புகழ் உண்டாகுமோ!

**''ஒலிகடல் உலகம் தன்னில் ஊர்தரு குரங்கின் மாடே**
**கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்!**
**மெலியவர் பாலதேயோ ஒழுக்கமும் விழுப்பம் தானும்?**
**வலியவர் மெலிவு செய்தால் புகழ்அன்றி வசை இன்றாமோ?''** (89)

ஊர்தரு குரங்கு = மலையிலும் மரத்திலும் தாவி ஊரும் குரங்கு, மாடு = ஏழாம் வேற்றுமை உருபு. கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என யுகங்கள் நான்கு என்பர். கிருத யுகத்தினும் திரேதா யுகத்திலும், திரேதா யுகத்தினும் துவாபர யுகத்திலும், துவாபர யுகத்தினும் கலியுகத்திலும் தீமைகள் பெருகுமாம். இராமாயண காலம் திரேதா யுகமாம். இப்போது இராமன் வாலியைக் கொன்றது மிகவும் முறையற்ற கொடுமை யாதலின், குரங்கினத்திற்காக இந்தத் திரேதா யுகத்திலேயே கலிகாலம் வந்துவிட்டதோ? என்று வினவுகிறான். நாம் இப்போது வாழ்கின்ற உலகில், கொடிய படைக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு உலகை அழிப்பதால் இது கலியுகம் எனல் சாலப் பொருந்தும்.

வாலி இராமனைக் 'கருணை வள்ளால்' என விளித் திருப்பது புகழ்வதுபோல் பழிக்கும் வஞ்சப் புகழ்ச்சியாகும். துன்பம் செய்தவனை நோக்கி 'அட புண்ணியவானே' என்று சாடுவது போன்றது இது. மற்றும், மெலியவர்களாகிய எங்களிடந்தான் ஒழுக்கமும் விழுப்பமும் இருக்கவேண்டும் போலும்! வலியவர்களாகிய உங்களிடம் அவை தேவை இல்லை போலும்! வலியவர்களாகிய நீங்கள் மெலியவர் களாகிய எங்களை வருத்துவதால் உங்கட்குப் பழி இல்லாமல் புகழே கிடைக்கும் போலும் என்றெல்லாம் குத்தலாகப் பேசு கின்றான். இது ஒருவகையான கிண்டல் பேச்சு.

**நாட்டிலும் காட்டிலும்**

கூட்டுப்படை தேவையின்றித் தனியாகவே பொருது வெல்லக் கூடியவனே! நீ நாட்டிலும் காட்டிலும் ஒத்த செயல் செய்துள்ளாய். அதாவது அண்ணனது ஆட்சியைத் தம்பிக்கு உரிமையாக்குவதுதான் அது. 'நாட்டிலே' தமையனாகிய நினது ஆட்சியை உன் தம்பி பரதனுக்குத் தந்தாய். காட்டிலே எனில், தமையனாகிய எனது அரசை என் தம்பி

சுக்கிரீவனுக்குக் கொடுத்துக்கொண் டிருக்கிறாய். ஆகா! இதற்குமேல் அரிய செயல் வேறு உண்டோ?

**"கூட்டு ஒருவரையும் வேண்டாக்**
**கொற்றவ பெற்ற தாதை**
**பூட்டிய செல்வம் ஆங்கே**
**தம்பிக்குக் கொடுத்துப் போந்து**
**நாட்டொரு கருமம் செய்தாய்**
**எம்பிக்கு இவ்வரசை நல்கிக்**
**காட்டொரு கருமம் செய்தாய்**
**கருமந்தான் இதன்மேல் உண்டோ?"** (90)

இது ஒரு சுவையான கருத்து வெளிப்பாடு. நாட்டை விட்டு வந்தாயே-வாளா இருந்தாயா என்ன? இங்கேயும் உன் வேலையைக் காட்டி விட்டாயே என்ற குறிப்பு இதில் உள்ளது. 'கருமந்தான் இதன்மேல் உண்டோ' என்பதும் ஒரு வஞ்சப் புகழ்ச்சியாகும்.

கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றம் என்பது புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள "துணை வேண்டாச் செருவென்றி" (16:10) என்பதே. 'இயங்கு படை அரவம்' எனத் தொடங்கும் தொல்காப்பியப் புறத்திணையியல் (8) நூற்பாவின் உரையில், நச்சினார்க்கினியர், "துணை வேண்டாச் செருவென்றி நாடக வழக்கு; துணை வேண்டுதல் உலகியல் வழக்கு" என்று குறிப்பிட்டுள்ளவை ஈண்டு ஆய்வுக்கு உரியது.

கம்பர் பாடலில் உள்ள 'கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றம்' என்பது நாடக வழக்கே. உலகியல் வழக்கு அன்று. ஏனெனில், இராமன் வானரப் படைகளைக் கூட்டாகக் கொண்டு சென்றே இராவணனை வென்றான். கம்பரின் நூல் ஒரு வகை நாடகக் காப்பியம் ஆதலின் இது ஒரு வகையில் பொருத்தமானதே. இராமன் அயோத்தியில் இருந்தால் கூட்டு வேண்டாமல் தம் படைகளைக் கொண்டே

போர் புரியவும் கூடும். ஆனால், வெளியூருக்கு வந்து விட்டதாலும், தனக்கு வேறு படையே இல்லை யாதலாலும் வானரப் படைகளின் கூட்டு தேவைப்பட்டது. அங்ஙனம் இருந்தும், 'கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ' என்று வாலி விளித்ததாகக் கம்பர் பாடியுள்ளதின் உட் பொருள், நீ கூட்டு வேண்டாத கொற்றவனாயிருந்தும், வானரப் படையின் கூட்டு வேண்டி, முறையற்ற வகையில் என்னை அழித்து விட்டாயே என்று வாலி கூறுவதாக இருக்கும். கூட்டு வேண்டாக் கொற்றவன் என்பதுதான் வடமொழியில் 'அசகாய சூரன்' எனப்படுகிறது. சூரன் = வீரன். சகாய சூரன் = உதவியோடு (சகாயத்தோடு) கூடிய வீரன். அசகாய சூரன் = உதவி வேண்டாத (சகாயம் வேண்டாத வீரன். 'துணை வேண்டாச் செரு வென்றியை' அசகாய சூரத்தனம் என்று முதுபெரும்புலவர் க. வெள்ளை வாரணனார் குறிப்பிட்டுள்ளார்.

**இராவணன் செய்தது சரியே**

தொன்மையான நல்ல நூல்களையெல்லாம் கற்றறிந் தவனே! வலிமையுடையவர்கள் தங்கள் திறமையால் பிறரை அழித்து வெற்றி பெறல் ஆண்மையுள்ள அரசியல் முறையே என்றால், நீ இப்போது செய்திருப்பதும் அதுதானோ? அங்ஙனமெனில், இராவணன் தனது வலிமை யால் சீதையை எடுத்துக் கொண்டு போனதும் பொருத்தம் தானே. அவன் முறையற்ற செயல் புரிந்தான் என அவன் மேல் சினம் கொள்ளலாமா? நீயோ, இயற்கையாகவே முனிவு கொள்ளாதவன்:

> **"அறைகழல் அலங்கல் வீர**
> **ராயவர் புரிவது ஆண்மைத்**
> **துறையெனல் ஆயிற் றன்றே**
> **தொன்மையின் நன்னூற் கெல்லாம்**

**இறைவன்நீ என்னைச் செய்த**
**தீதெனில் இலங்கை வேந்தன்**
**முறையல செய்தான் என்று**
**முனிதியோ முனிவிலா தாய்"** (91)

வாலி பெரிய வழக்குரைஞனாய் இருப்பான் போலும்! நன்றாக வாதம் புரிகிறான். அடாதன செய்து அகப் பட்டதைச் சுருட்டிக் கொள்வது அரசியல் முறைதான் என்ற முறையில் நீ என்னை அழித்தது தீ தில்லையெனில், இராவணன் சீதையைக் கொண்டு சென்றதும் தீயதில்லை- என்று வாதாடுகிறான் வாலி. இயற்கையாகவே முனிவு இல்லாதவன் நீ ஆதலால் கைகேயி போன்றோர் மீது முனிவு கொள்ளவில்லை. இப்போது இராவணன் மீதும் என் மீதும் முனிவு கொண்டு என்னை அழித்தது முறையா? தொன்று தொட்டு வந்த நல்ல நூல்களையெல்லாம் கற்றது இதற்குத்தானா? கற்கக் கூடியனவற்றைக் கசடறக் கற்றுப் பின் அதன்படி நின்றொழுக வேண்டும் அல்லவா? ஏட்டுச் சுரைக்காய் கல்வி எதற்கு?- என்பன போன்ற கருத்துகள் எல்லாம் இப்பாடலில் பொதிந்து கிடக்கின்றன.

**அப்பன் மகன்**

அப்பனைப் போல் நடந்து கொள்கின்ற மகனைக் குறித்து, 'அவனா-அவன் அப்பன் மகன் ஆயிற்றே அவன்' என்று கூறும் ஒரு வழக்காறு உலகியலில் உண்டு. இராமனும் தன் தந்தையைப் போல் ஒரு வகையில் நடந்து கொண்டானாம். தம் அகவை முதிர்ந்து கண்களையும் இழந்து விட்ட பெற்றோர்கட்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்ற சிறுவன் தடாகத்தில் நீள் மொள்ளும் ஒலியை, நன்றாக ஆராயாமல்-யானை நீர் அருந்துவதாகத் தவறாக மதிப்பிட்டு அச்சிறுவன் மேல் மறைவான நிலையில் இருந்து கொண்டு அம்பு எய்த உன் அப்பனைப் போலவே, நீயும் நன்கு ஆராயாமல் என்னைத் தவறாக மதிப்பிட்டு அழித்து

விட்டாய் என்று வாலி கூறியதாக ஒரு பாடல் உள்ளது. அது:

**''ஒன்றாக நின்னோடு உறும் செற்றம் இல்லை**
**உலகுக்கு நான்செய்த தோர்குற்றம் இல்லை**
**வென்றாள்வதே யென்னில் வேறொன்றும் இல்லை**
**வீணே பிடித்தென்றன் மேலம்பு விட்டாய்**
**தன்தாதை மாதாவுடன் கூடி உன்னைத்**
**தண்ணீர் சுமக்கும் தவத்தோனை எய்தான்**
**நின்தாதை என்றேயும் நீயும் பிடித்தாய்**
**நெறிபட்ட வாறின்று நேர்பட்ட தாமே''**

உன்னோடு எனக்குப் பகை இல்லை; நான் உலகிற்குச் செய்த தீமையும் இல்லை. உன் தந்தையைப் போல் நீயும் தவறு செய்து விட்டாயே என்று வாலி வைகிறான்.

இந்தப் பாடல் பல ஏட்டுச் சுவடிகளில் இல்லை. இது மிகைப் பாடலாகக் கருதப்படுகிறது. ஆனால் இதில் கூறப்பட்டுள்ள வாதம் நன்றாய்-சுவையாய் உள்ளது. கம்பன் பாடல்களில் எத்தனையோ அழிந்திருக்கலாம்; எத்தனையோ புதியனவாய்ப் புகுந்திருக்கலாம்.

## இருமையும் ஒருமையும்

இராமா! நீ ஆளப்போகும் இவ்வுலகில் நான் இருந்தால் என் உடல் ஒரு சுமையாகுமா? ''என்னுடல் பாரம் அன்று''. அறம் காக்கும் உயர்ந்தோர் என்பவர், ஒரு பக்கம் மட்டும் சாயாமல், இரண்டு பக்கங்களிலும் உள்ள நன்மை தீமை களை (நியாயம்-அநியாயங்களை) நடுவு நிலைமையுடன் ஆய்ந்து முடிவெடுப்பதே அறமாகும்.

**''இருமை நோக்கி நின்று யாவர்க்கும் ஒக்கின்ற**
**அருமை ஆற்ற லன்றோ அறம் காக்கின்ற**
**பெருமை என்பது இதுஎன்? பிழைபேணல் விட்டு**
**ஒருமை நோக்கி ஒருவற்கு உதவலோ''** (94)

ஒருமையை மட்டும் நோக்காமல் இருமையையும் நோக்கின், வாலி குற்றம் அற்றவன் என்ற தீர்ப்பும் கிடைக்கலாம்.

பகையை வெல்லத் துணையாகச் சிங்கத்தைப் பெறாமல் முயலைத் துணையாகக் கொண்டது என்ன முயற்சித் திறமையோ?

**"புயலைப் பற்றும்ஓர் பொங்கு அரிபோக்கி ஓர்**
**முயலைப் பற்றுவது என்ன முயற்சியோ"** (95)

முகில் மண்டலம் வரையும் தாவக் கூடிய சிங்கத்தை விட்டது என்பது, வாலியின் துணையை நாடாதது. முயலை நாடியது என்பது சுக்கிரீவனின் துணையைத் தேர்ந் தெடுத்தது.. இராவணனை வெல்லவேண்டுமெனில், அவனை என் வாலால் சுருட்டி இழுத்து வந்த என் துணையை நாடியிருந்தால் எளிதில் நின் நோக்கம் நிறைவேறியிருக்குமே- என்னும் பொருளில் இந்த நயமான உவமை அமைந்துள்ளது.

**ஞாயிறு களங்கம்**

திங்கள், ஞாயிறு என்னும் இரு சுடர்களுள் திங்களின் நடுவே களங்கம் உள்ளது – அதுபோல் ஞாயிற்றுக்கு இல்லையே என்று எண்ணி, ஞாயிறில் களங்கம் உண்டாக்க முடியாதெனினும் ஞாயிறு குலத்தினராகிய உங்கள் குலத்திற்காவது களங்கம் ஏற்படுத்தி ஈடு செய்ய எண்ணி இந்த இழி செயலைச் செய்தாய் போலும்! – என்றான் வாலி:

**"கார் இயன்ற நிறத்த களங்கம் ஒன்று**
**ஊரியன்ற மதிக்கு உளதாம் எனச்**
**சூரியன் மரபிற்குமோர் தொன்மறு**
**ஆரியன்பிறந் தாக்கினை யாமரோ"** (96)

கார் = கருமை. ஆரியன் = இராமன். திங்களின் நடுவில் உள்ள பள்ளம் படுகுழிகள் கருப்பாய்த் தெரிவதைக் களங்கம்

என்றனர் அக்காலத்தார். ஞாயிற்றின் நடுவிலும் கரும் புள்ளிகள் உண்டு. அவை நம் கண்ணுக்குத் தோற்றா.

**வாலியும் வேலியும்**

விறல் வீரனே! நூல்களில் கூறப்பட்டுள்ள அறநெறி களையும் உன் முன்னோர் கடைப்பிடித்து வந்த அரசியல் முறை நெறியையும் உயரிய ஒழுக்கத்தையும் போற்றாத நீ, வாலியைக் கொல்லவில்லை - நல்லறத்தின் வேலியையே கொன்றுவிட்டாய்:

**''நூல் இயற்கையும் நும்குலத்து உந்தையர்**
**போல் இயற்கையும் சீலமும் போற்றலை**
**வாலியைப் படுத்தா யல்லை மன்அற**
**வேலியைப் படுத்தாய் விறல் வீரனே''** (98)

சீலம் = நல்லொழுக்கம். மன்அறம் = அரச தருமம். விறல் = வெற்றி. வீரனுக்கு இது அழகா என இடித்துக் காட்டும் பொருளில் விறல் வீரனே என வாலி விளித்தான். 'வாலியைப் படுத்தாயல்லை-வேலியைப் படுத்தாய்' என்பது நயமான கருத்து வெளிப்பாடு. அறம் என்னும் பயிரைக் காக்கும் வேலி, நூல் இயற்கை, உந்தையர் இயற்கை, சீலம் என்பனவாம். வேலியே பயிரை மேய்ந்தாற் போல்கூட அன்று இது. வேலி இருந்தால்தான் அல்லவா பயிரைக் காக்கும்? வேலியையே அழித்துவிட்டதாகக் குற்றம் சாட்டு கிறான் வாலி.

**ஒருவன் இருக்க ஒருவன் மேல்**

உன் மனைவியைக் கவர்ந்த ஒருவன் உள்ளான்; அவன் மேல் அம்பு எய்தலே வீரம். அதைவிட்டு, கையிலே வில்லைச் சுமையாகத் தாங்கிக் கொண்டிருப்பது வில்லிற்கு இழிவாகும். இராவணனை விட்டுவிட்டு, கையில் படையில்லாமல் இருக்கும் என்மேல், நேருக்கு நேர் நில்லாமல் மறைந்து

நின்று அம்பு எய்வதற்குத்தானா நீ வில் பயிற்சியில் வல்லவனானது?

**"தாரம் மற்றொருவன் கொளத் தன்கையில்**
**பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே**
**நேரும் அன்று மறைந்து நிராயுதன்**
**மார்பின் எய்யவோ வில்இகல் வல்லதே"** (99)

தாரம் = மனைவி. பாரம் = சுமை. நிராயுதன் = படை வைத்திராதவன். மனைவியைக் கவர்ந்தவன் மேல் அம்பு எய்யாத வில், பழிப்புக்கு இடமான வெற்றுச் சுமையாம். உனக்கு வில் ஒரு கேடா? - என்று இழித்துரைப்பதுபோல் உள்ளது இது. "அறுக்கமாட்டாதவன் இடுப்பில் ஐம்பத்தெட்டு அரிவாளாம்" என்னும் பழமொழி ஈண்டு நினைவுகூரத் தக்கது. போராளி ஒருவன் தன் எதிரியின் படைத் தலைவனது காலை வெட்டிக் கொண்டு போய்த் தன் அரசன்முன் வைத்து, 'இதோ பாருங்கள் - எதிரி படைத் தலைவனது காலை வெட்டிக் கொண்டு வந்து விட்டேன்' என்றானாம். அதற்கு அரசன், எதிரியின் தலையை வெட்டிக்கொண்டு வருவதல்லவா வீரம்? என்றானாம். உடனே போராளி, 'நான் என்ன செய்வேன்- எனக்கு முன்னமேயே எவனோ தலையை வெட்டிக்கொண்டு போய்விட்டான்-அதனால் நான் காலை வெட்டிக்கொண்டு வந்தேன் என்றானாம். தலையில்லாத முண்டத்தின் காலை வெட்டியதுபோல், கையில் படைக்கலம் எதுவும் இல்லாதவன் மேல் அம்பு எய்யப்பட்டுள்ளது-அதுவும் மறைந்து நின்று எய்யப்பட்டது-என்று இழித்துரைக்கிறான் வாலி.

**இராமனின் மறு மொழி:**

தன்மேல் குற்றம் சாட்டிய வாலியிடம், முறையாக நடந்து கொண்ட சுக்கிரீவனுக்காக நான் உன்னைக்கொல்வது குற்றம் இல்லை என்பதை நிலைநாட்ட, இது நடந்துள்ள

வாலி-சுக்கிரீவன் வரலாற்றை நினைவுகூரும் வகையில் மறுமொழி கூறுகிறான். வரலாறாவது:

வாலியே! உன்னோடு போர் புரியவந்த மாயாவி என்னும் அசுரனை நீ விரட்டிக் கொண்டு சென்றாய். அவன் பாதாளத்தில் போய்ப் பதுங்கிக் கொண்டான். நீ சுக்கிரீவனைப் பாதாள நுழைவாயிலில் காவலுக்கு வைத்து விட்டுப் பாதாளத்தில் சென்று மாயாவியோடு போர் புரிந்தாய் போலும். பன்னெடுநாளாய் நீ திரும்பி வாராமையால் மாயாவியால் இறந்துவிட்டிருப்பாய் என உன் தம்பி எண்ணி, மாயாவி திரும்பி மேலே வரா திருப்பதற்காகப் பாதாளப் புகுவாயிலைக் கற்களால் அடைத்து விட்டான். இங்குள்ள பலர் சுக்கிரீவனை அரசை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டியும், அவன், அண்ணன் இருக்க நான் ஏற்கேன் எனக் கூறிவிட்டான். பின்னர் அவனைப் பலரும் வற்புறுத்தியதால் அவன் அரசேற்றான்.

நீ பல நாள் போர் புரிந்து மாயாவியைக் கொன்று அடைத்திருந்த கற்களைத் தகர்த்து இங்கு வந்தாய். உன் தம்பி முறைதவறி உன் அரசைப் பறித்துக் கொண்டதாக நீ தவறர்யெண்ணி அவனைக் கொல்ல முற்பட்டாய். அவன் பல இடங்களில் ஓடித்திரிந்தும் நீ அவனை விடாமல் கொல்வதற்காகப் பின் தொடர்ந்தாய். உருசிய முகமலைக்கு நீ வந்தால் இறந்து விடுவாய் என்னும் வைவு (சாபம்) உனக்கு இருப்பதால், நீ அங்கு வரமாட்டாய் என எண்ணிச் சுக்கிரீவன் அம்மலையில் தங்கலானான். நீ அவன் மனைவியையும் அவனுக்கு உரிய உடைமைகளையும் பற்றிக் கொண்டதால், அவன் என் துணையை வேண்டினான். வலியவரால் துன்புறும் மெலியவர்க்கு உதவுவதும் அறமாகும் என எண்ணி உன்னைக்கொன்று அவனுக்கு உதவும் முயற்சியை மேற்கொண்டேன். உன்னை ஒத்த வலிமை அவனுக்கும் இருப்பினும், எதிரியின்

வலிமையில் பாதி உனக்கு வந்து விடும்படியான வரம் நீ பெற்றிருப்பதால் அவன் உனக்குத் தோற்று என் உதவியை நாடினான். அந்த வரம் உண்மையாலேயே யானும் மறைந்திருந்து தாக்கினேன். நீ மாற்றான் மனைவியைக் கவர்ந்தது முறையற்றது. இந்த வகையில் நீயே பெரிய குற்றவாளி. சுக்கிரீவனும் யானும் குற்றவாளிகள் அல்லர்-என இராமன் மறுமொழி கூறினான்.

இங்கே நடுநிலைமையுடன் நாம் ஆராய்ந்து பார்ப்போம். பாதாள நுழைவாயிலை அடைத்திருந்ததால், வாலி வரக் கூடாது எனச் சுக்கிரீவன் எண்ணிச் செய்ததாக வாலி எண்ணக் கூடுமல்லவா? மேலே வாலி வந்து பார்த்ததும், சுக்கிரீவன் தற்காலிக ஆட்சி புரியாமல் பேரரசாக ஆண்டு கொண்டிருப்பது போன்ற அமைப்பு இருப்பதாக எண்ணினான். அதனால் பெருஞ்சினங் கொண்டு, சுக்கிரீவனின் மனைவி உட்பட்ட உரிமைப் பொருள்களை எல்லாம் தான் பற்றிக்கொண்டு சுக்கிரீவனைத் துரத்தினான்-என்பதாக வாலியின் செயலுக்கும் அறநெறி கற்பிக்கலாம் அல்லவா?

உலகியல் வரலாற்றில், அரசாண்டு கொண்டிருப்பவன் அயலிடம் சென்றிருக்கும்போது அடுத்தவன் வந்து ஆட்சியை எளிதில் பிடித்துக் கொள்ளும் நிகழ்ச்சி இல்லாததன்று, ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள கானா என்னும் நாட்டைத் தலைவராக ஆண்டுகொண்டிருந்த நக்ரூமா (என்க்ருமா) என்பவர் சீனா சென்றிருந்தபோது, கானாவில் மேல் மட்டத்தில் இருந்தவர்கள் அதிரடிப் புரட்சி செய்து ஆட்சியைப் பறித்துக் கொண்ட வரலாறு உலகம் அறிந்ததே.

இங்கே, சேக்சுபியரின் நூலிலுள்ள வரலாறு ஒன்று நினைவுக்கு வருகிறது. 'இரண்டாம் ரிச்சர்டு மன்னன்' (King Richard II) இங்கிலாந்தை ஆண்டு கொண்டிருந்தான்.

அவன் தன் பங்காளியும் பகையாளியுமாகிய 'பாலிங்புரோக்' என்பவனை நாடு கடத்தியிருந்தான். நிலைமை இவ்வாறிருக்க ரிச்சர்டு மன்னன் மேற்பார்வை யிடுவதற்காக ஒருமுறை ஸ்காட்லாந்துக்குச் சென்றிருந்தான். அப்போது நாடுகடத்தப் பட்டிருந்த பாலிங்புரோக் (Bolingbroke) இங்கிலாந்துக்குள் தன்னைச் சேர்ந்தோருடன் வந்து ஆட்சியைப் பிடித்துக் கொண்டான். இவன் ரிச்சர்டைச் சிறையில் அடைத்துப்பின் கொலையொறுப்பு (மரண தண்டனை) கொடுத்துக் கொன்றும் விட்டான். இவ்வாறு சுக்கிரீவன் நடந்து கொண்டிருக்கிறான் என்று வாலி ஐயுற் றிருக்கலாம் அல்லவா?

சுக்கிரீவன் குற்றம் அற்றவன் என்பதை உறுதி செய்ய இராமன் கூறிய மறுமொழியாகப் பதினொரு பாடல்களைக் கம்பர் செலவிட்டுள்ளார், அவற்றுள் இரண்டினைக் காண்போம்:-

வாலியே! உன் தம்பியை அரசாளும்படி முதியவர்கள் வற்புறுத்தியபோது, அவன் ஒத்துக்கொள்ளாமல், என் அண்ணன் இதுவரையும் திரும்பாததால் அவனை மாயாவி கொன்று விட்டிருக்க வேண்டும்; எனவே யான் சென்று மாயாவியை அவன் சுற்றத்துடன் கொன்று யானும் இறந்துபடுவேன் - இந்த அரசை ஆளமாட்டேன். நான் ஆளும்படித் தகாத அறிவுரை கூறினீர்கள் - இதை நான் ஏற்கேன் - என்று உன் தம்பி சுக்கிரீவன் கூறிவிட்டான். பாடல்:

> **"வானம் ஆளஎன் தம்முனை வைத்தவன்**
> **தானும் மாளக் கிளையின் இறத் தடிந்து**
> **யானும் மாள்வென் இருந்து அரசு ஆள்கிலேன்**
> **ஊன மான உரை பகர்ந்தீர் என"** (102)

தம் முன் = அண்ணன். தன்முனை வானம் ஆள வைத்தவன் = இங்கே இறந்து வானுலகம் சென்று அதை

ஆளும்படிச் செய்த மாயாவி. கிளையின் இறத்தடிந்து = சுற்றத்தோடு அழியும்படிக் கொன்று. ஊனம் ஆன உரை = தவறான அறிவுரை. இந்தப் பாடலால் சுக்கிரீவனது தூய்மை விளங்கும்.

மேலும் இராமன் சொன்னது: வாலியே நீ வந்ததும், சுக்கிரீவன் உன்னை வணங்கி மகிழ்ந்து என் தந்தை போன்றவரே! இங்குள்ள முதியவர்கள் தற்காலிகமாக ஆளும்படி எனக்கு இந்த அரசை ஏற்பாடு செய்தனர். இது உன்னுடைய அரசு. இனி இதை யான் தாங்க மாட்டேன் என்று முன் நடந்தனவெல்லாம் கூறினான். நீ அவன் சொல்லை நம்பாமல் அவன்மேல் பெருஞ்சினம் கொண்டாய் - என்பது இராமன் கூற்று;

**"வந்த உன்னை வணங்கி மகிழ்ந்தனன்**
**எந்தை என்கண் இனத்தவர் ஆற்றலால்**
**தந்தது உன்னரசு என்று தரிக்கலான்**
**முந்தை உற்றது சொல்ல, முனிந்துநீ"** (104)

'தரிக்கலான்' என்பது, சிறிது நேரங்கூட இனி இந்த அரசைத் தாங்கி ஆளான் - என்னும் பொருளது. சுக்கிரீவன் முறையாக நடந்து கொண்டான் என்பது இந்தப் பாடலாலும் பெறப்படும்.

**வாலியின் எதிர்மொழி**

வாலியின் குற்றச்சாட்டுக்கு இராமர் கூறிய மறு மொழிக்கு எதிர்மொழி கூறுகிறான் வாலி: ஐயனே! நீங்கள் சொல்லும் அறநெறி - அரச முறைநெறி எல்லாம் வானரங்களாகிய எங்களுக்கு இல்லை. அந்த முறையில் நான்முகன் எங்களைப் படைக்கவில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் - என்பதுபோல் எங்களுக்கு எது இன்பமாகத் தெரிகிறதோ அதைப் பெற்றுத் துய்ப்போம். கற்பைப் பற்றிய கவலை எங்கட்கு இல்லை. மணம், மறை,

குணம், குலம் முதலியன எங்கட்குத் தேவையில்லை. அவ்வப்போது தோன்றும் உணர்வுகட்கு ஏற்ப நடந்து கொண்டு அந்த உணர்வுகட்குச் சுவையூட்டுவோம். எனவே, யான் குற்றம் இல்லாதவன் என்றான் வாலி:

**"மணமும் இல்லை மறைநெறி வந்தன**
**குணமும் இல்லை குலமுதற்கு ஒத்தன**
**உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால்**
**நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய்"** (113)

நேமியான் = ஆழிப் படையுடைய திருமாலின் தெய்வப் பிறவியாகிய இராமன். இது வாலிக்குத் தெரியா விடினும் நூலாசிரியருக்குத் தெரியுமாதலின், கதை உறுப்பினர்கள் சொல்வதுபோல் சொல்லி விடுவது இலக்கிய மரபு. மக்கள் குலத்திலும் வரன்முறையின்றி உணர்வு சென்றவழிச் செல்லுபவனை நோக்கி அட மிருகமே! அட குரங்கே! என்று சொல்வதைக் காணலாம். ஆகவே, இவ்வாறெல்லாம் கூறி வாலி தன் தவறை மறைக்கிறான்.

## இராமனின் மறுஉரை

வாலியே! நீ விலங்கு என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. தெய்வத்தொடர்பு உனக்கு உண்டு. மக்களைப் போன்ற எல்லா நிலைகளும் அறிந்தவன் நீ. எனவே, நீ விலங்கு இல்லை. இவ்வாறு கூறுதல் தகாது,

**"நலம்கொள் தேவரின் தோன்றி நவைஅறக்**
**கலங்கலா அறநன்னெறி காண்டலின்**
**விலங்கலாமை விளங்கியது ஆதலால்**
**அலங்கலார்க்கு இதுஅடுப்பது அன்றாமரோ"** (116)

வாலி திங்களின் மகனாதலால் தெய்வத் தொடர்பு உடையவனாவான்.

**ஆதி மூலமே**

பொய்கையில் முதலை தன்னைப் பற்றி இழுத்திட்ட போது, திருமாலை எண்ணி 'ஆதிமூலமே' என்று அழைத்த தின் பயனாய் வீடு பெற்ற கசேந்திரன் என்னும் யானையும் விலங்குதானா? அதற்கு உணர்வு இல்லையா?

**"மாடு பற்றி இடங்கர் வலித்திடக்**
**கோடு பற்றிய கொற்றவன் கூயதோர்**
**பாடு பெற்ற உணர்வின் பயத்தினால்**
**வீடு பெற்ற விலங்கும் விலங்கதோ?"** (118)

மாடு = பக்கம், இடங்கர் = முதலை, வலித்தல் = இழுத்தல், கோடு = சங்கு, கோடு பற்றிய கொற்றவன் = சங்கு ஏந்திய திருமால், பயம் = பயன். இப்பாடலில் ஒரு புராணக்கதை ஒளிந்து கொண்டுள்ளது. இந்திரத்யும்நன் என்னும் மன்னன் மிகவும் ஆழ்ந்து திருமாலை வழிபட்டுக் கொண்டிருந்தபோது, அகத்தியர் அவனிடம் வர, அவன் எழுந்து அவரை வரவேற்காததால், திமிர் கொண்ட யானை போல் நீ நடந்து கொண்டதால் யானையாகப் போவாயாக என வைவு (சாபம்) இட்டார். அதனால் அவன் கசேந்திரன் என்னும் பெயருடைய யானையாகப் பிறந்து காட்டில் வசித்தான். பொய்கையில் இறங்கியபோது முதலைபற்றிய தால் 'ஆதிமூலமே' எனத் திருமாலை எண்ணிக் கூவியதும், திருமால் தோன்றி முதலையின் பிடியிலிருந்து விடுவித்துக் காத்தார். இதுவும் விலங்குதான். இதற்கு உயர்ந்த உணர்வு தோன்ற வில்லையா என்ன?

**எருவைக்கு அரசு**

நல்ல சிந்தை உடைய சடாயு, கவர்ந்து சென்ற இராவணனிடமிருந்து சீதையை மீட்பதற்காக அவனோடு போர் புரிந்து உயிரையும் கொடுத்தது தெரியாதா?

சடாயுவை நாங்கள் தந்தையாக எண்ணி வழிபடுகிறோம். சடாயு கழுகுகட்கு அரசு. இதையும் நீ எண்ணிப்பார்:

**''சிந்தை நல்லறத்தின் வழிச் சேர்தலால்**
**பைந்தொடித் திருவின் பரிவு ஆற்றுவான்**
**வெந்தொழில் துறை வீடுபெற்று எய்திய**
**எந்தையும் எருவைக்கு அரசு அல்லனோ?''** (119)

பைந்தொடித்திரு = சீதை, வெந்தொழில்துறை = போர்புரிதல், எருவை = கழுகு. சீதையை மீட்கக் கழுகு அரசனாகிய சடாயு இராவணனோடு போரிட்டுக் கீழே விழுந்து கிடந்தபோது, அவ்வழியாக வந்த இராம இலக்குமணர் முன்பு நடந்ததைச் சடாயுவால் அறிந்தனர். பின்னர்ச் சடாயு உயிர் நீத்ததும், தந்தைக்குப் பிள்ளை செய்யவேண்டிய இறுதிக் கடனைச் சடாயுவைத் தந்தை யாகக் கொண்டு இவர்கள் செய்தனர். அதனால்தான் எருவைக்கு அரசை எந்தை என்றான். மக்கள் பிறவி யல்லாத சடாயுவுக்கு உயர்ந்த உணர்வு இருக்க வில்லையா என இராமன் வாலிக்குக் கூறுகிறான்.

## மக்கள் விலங்கு

இன்னும் கேள் வாலி! தக்கவை இவை. - தகாதன இவை என உணர்ந்து அதற்கேற்பச் செயலாற்றாத மக்களும் விலங்கேயாவர். உயரிய எண்ணத்துடன் அற நெறி நின்றொழுகும் விலங்கும் தெய்வமாகும்.

**''தக்க இன்ன தகாதன இன்ன என்று**
**ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள**
**மக்களும் விலங்கே மனுவின் நெறி**
**புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே''** (121)

புத்தேளிர் = தேவர். மனு நெறி = உயரிய அறநெறி.

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்"** (410)

என்னும் குறள் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

**நாலின் ஆற்றல்**

வாலியே! நீ ஒன்றும் அறியாத விலங்கா? காலனைக் கடிந்த சிவனுக்கு வழிபாடு செய்து பெற்ற வரத்தால், திருமாலால் காக்கப்படும் நான்கு பூதங்களின் ஆற்றலையும் பெற்றிருக்கிறாயே. இதற்கு என்ன பொருள்? விலங்கா நீ?

**"காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்**
**பாலின் ஆற்றிய பத்தி பயத்தலான்**
**மாலினால் தரு வன்பெரும் பூதங்கள்**
**நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணினாய்"** (122)

காலன் = எமன். கணிச்சியான் = மழுப்படை உடைய சிவன். பூதங்கள் நான்கு = காற்று, தீ, நீர், மண் என்பன. திருமால் காத்தல் கடவுள் ஆதலின், 'மாலினால் தரு பூதங்கள்' எனப்பட்டன. தருதல் = காத்தல். சிவனை நோக்கித் தவம் இயற்றிப் பெரிய ஆற்றல் பெற்றுள்ள நீ விலங்கா? என்று வினவுகிறான் இராமன்.

ஞான சம்பந்தரின் திருக்குரங்காடு துறை என்னும் ஊர்த் தேவாரப் பதிகத்தில் உள்ள

**"கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டுபோற்றி**
**வாலியார் வழிபடப் பொருந்தினார்"** (7)

**"நீலமா மணிநிறத்து அரக்கனை இருபதுகரத்தொ டொல்க**
**வாலினால் கட்டியவாலியார் வழிபட மன்னும்கோயில்"** (8)

என்னும் பாடல் பகுதிகளாலும் வாலியின் சிவ வழிபாடு தெரியவரும்.

பிறந்த குடியினாலும் பிறவற்றாலும் தாழ்ந்த மரபுடையார் நடுவிலும் உயர்ந்தோர் உளர். உயர்ந்த

தவத்தோர் - தேவர் எனப்படுவோ ரிடத்தும் இழிதொழில் செய்வோர் உளர்.

**"மேவரும் தருமத் துறை மேவினார்**
**ஏவரும் பவத்தால் இழிந் தோர்களும்**
**தாவரும் தவரும் பலதன்மை சால்**
**தேவரும் உளர் தீமை திருத்தினார்"** (124)

பிறப்பால் தாழ்ந்த கழுகு மரபில் தோன்றிய சடாயு உயர்ந்த செயல் புரிந்தார். தபசிகளுள் பெரியவராகிய விசுவாமித்திரர் மேனகைபால் உள்ளத்தைப் பறி கொடுத்தார். தேவரின் தலைவனாகிய இந்திரனே அகலிகையைக் கெடுத்தான். எனவே, பிறப்பால் விலங்கு என்று சொல்லித் தப்பிக்க இயலாது–

என்றெல்லாம் இராமன் மிகவும் திறம்படக் கூறி வாலியை மடக்கி விட்டான். இராமன் கூறியதோ - அல்லது - இராமன் கூறியதாக ஆசிரியர் படைத்துக் கூறியதோ - யாதாயினும் ஆக - இது மிகவும் திறமுள்ள வாதமாகும்.

**மறைந்தது ஏன்**

இராமனின் வாதத்தைக் கேட்டு அயர்ந்து போன குரங்கரசனாகிய வாலி, நீங்கள் சொல்லியது சரி - ஆனால் போர்க்களத்தில் நேரில் வராமல், வேடன் மறைந்து நின்று பறவை - விலங்குகளை எய்தல் போல, மறைந்து நின்று என்மீது அம்பு எய்ததற்கு உரிய பொருத்தமான காரணம் யாது என வினவினான்.

**"அவ்வுரை அமையக் கேட்ட**
**அரிக்குலத்து அரசு மாண்ட**
**செவ்வியோய் அனையது ஆக!**
**செருக்களத்து எதிர்த்து எய்யாதே**

**வெவ்விய புளிஞர் என்ன**
**விலங்கியே மறைந்து வில்லால்**
**எவ்வியது என்னை என்றான்**
**இலக்குவன் இயம்ப லுற்றான்''** (125)

அரிக்குலம் = குரங்கு இனம். மாண்ட = மாட்சிமையுடைய. செவ்வியோன் = இராமன். புளிஞர் = வேடர். வேடர்களே மறைந்திருந்து அம்பெய்வார்கள். இது இழி செயல் இல்லையா என்கிறான்.

**''தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று''** (274)

என்னும் குறள் ஈண்டு நினைவு கூரற் பாலது. இராமன் செயலையும், தவம் மறைந்து அல்லவை செய்தல் போன்ற இழி செயலாகவே வாலி உறுதிபடக் கூறுகிறான்.

**இலக்குவனின் பதில் உரை**

நெடுநேரம் வாலியோடு வாதம் புரிந்து வந்தான் இராமன். மறைந்து நின்று அம்பு எய்ததன் காரணம் என்ன என்ற வினாவிற்கு இராமனை விடையிறுக்க விடாமல் இலக்குவன் விடையிறுக்க லானான். இலக்குவன் பதில் இறுப்பதற்கு உரிய காரணம் என்னவாய் இருக்கலாம்?

நாடக வழக்கில், தொடர்ந்து ஒருவரே பேசிக் கொண்டிருப்பதனினும் இடையே மற்றொருவரும் பேசுவது, அலுப்புத் தட்டாமல் சுவையா யிருக்கும். 'பக்கச் சொல் பதினாயிரம் பொன் பெறும்' என்பது ஒரு பழமொழி. இன்னொருவரும் உடன் பேசின், சொல்லும் கருத்து வலிவுடையதாகும். இந்த வினாவிற்கு உரிய பதில் சிக்கலானது - தரும சங்கடமானது. ஆதலின் இலக்குவன் பதில் உரைக்கலானான். இதற்குப் பதில்கூற இராமனது உள்ளம் போதிய அளவு ஒருப்படவில்லை யாதலினாலும்

இலக்குவன் சொல்லவேண்டிய தாயிற்று. அவன் விடுத்த விடையாவது:

வாலியே! உனக்கு முன்பே உன் தம்பி வந்து, மனைவியையும் மற்றவற்றையும் இழந்த இரங்கத் தக்க தன் நிலையைக் கூறித் தன்னைக் காக்குமாறு அடைக்கலம் வேண்டினான். அவ்வாறே, உன்னைக் கொன்று உன் தம்பியைக் காப்பதாக அடைக்கலம் ஈந்து விட்டார். இந்த நிலையில், உன் எதிரே இராமர் வரின், நீயும் இராமரிடத்தில் உன்னைக் காக்குமாறு அடைக்கலம் கேட்கின் முன்னதற்கு முரணாகும். அடைக்கலம் என்று கேட்டு விட்டால் இராமரால் தட்டமுடியாது. எனவேதான் அவர் உன் முன்னே வரவில்லை. என்று விடையிறுத்தான்.

**''முன்புநின் தம்பிவந்து சரண்புக முறையிலோயைத்**
**தென்புலத்து உய்ப்பன்என்று செப்பினன் செருவில்நீயும்**
**அன்பினை உயிருக்காகி அடைக்கலம் யானும் என்றி**
**என்பதுகருதி அண்ணன் மறைந்துநின்று எய்தது**
**என்றான்''** (126)

முறையிலோன் = முறையற்ற வாலி. தென்புலத்து உய்த்தல் = இறந்தவர்கள் இருக்கும் தென்புலத்திற்கு அனுப்புதல் - அதாவது கொல்லுதல். அன்பினை உயிருக்காகி என்றால், உயிரின்மேல் அன்பு வைத்து - என்பது பொருளாம். இலக்குவனும் விட்டுக் கொடுக்காமல் அடைத்துப் பேசிப் பொருத்தமாகப் பதில் இறுத்துள்ளான். வாலியும் ஒப்புக் கொண்டான்.

**வாலியின் பணிவு**

இலக்குவனின் மொழிகேட்ட வாலி தன் பிழை உணர்ந்து இராமனை நோக்கிப் பணிமொழி கூறுகிறான். எவ்வுயிர்க்கும் தாயான ஐயனே! நாய் போன்ற எனது இழி செயலைப் பொறுத்தருள வேண்டுகிறேன்:

**''தாயென உயிர்க்குநல்கித் தருமமும் தகவும் சார்பும்**
**நீயென நின்றநம்பி நெறியினின் நோக்கும் நேர்மை**
**நாயென நின்ற எம்பால் நவையற உணர லாமே**
**தீயன பொறுத்தி என்றான் சிறியனசிந்தி யாதான்''** (128)

*எல்லா நல்லனவாகவும் இராமன் விளங்குகின்றானாம். தன்னை நாய் எனவும் தன் நவைகளைப் (குற்றங்களைப்) பொறுத் தருளும்படியும் வேண்டித் தன்மேல் அம்பு எய்த இராமனிடம் நாய்போல் குழைகிறான் இங்கே,*

**''யானைஅறிந் தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்**
**மெய்யதா வால்குழைக்கும் நாய்''** (213)

*என்னும் நாலடியார்ப் பாடல் பகுதி ஒப்புநோக்கற் பாற்று. தன்மேல் வேல் எறிந்தாலும் தலைவனிடம் வாலைக் குழைத்துக்கொண்டு நிற்குமாம் நாய். அதுபோல், அம் பெய்த இராமனிடம் வாலி குழைகிறான்.*

**எல்லாம் அவன்**

*மேலும் கூறுவான் வாலி: நாயினேன்மேல் அம்பு எய்ய, உயிர்போகும் வேளையில் எனக்கு மெய்யறிவு தந்தாய். எல்லாமாக நீ இருக்கிறாய் என்று பாராட்டுக் கூறுகிறான்:*

**''ஏவு கூர் வாளியால் எய்து நாயடியனேன்**
**ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளினாய்**
**மூவர்நீ முதல்வன்நீ முற்றும்நீ மற்றும்நீ**
**பாவம்நீ தருமம்நீ பகையும்நீ உறவும்நீ''** (130)

*இப்பாடல் பெரிய மெய்யுணர்வுப் (தத்துவப்) பாடல் ஆகும். இராமன் திருமாலின் தெய்வப்பிறவி யாதலின், வாலி இங்ஙனம் கூறியதாகக் கம்பர் பாடியுள்ளார். கடவுளே எல்லாமா யுள்ளார் என்று கூறுபவரை நோக்கி, கடவுள் பாவியாகவும் தீமை செய்யும் பகைவனாகவும்*

இருப்பது ஏன் என வினவுபவர் உண்டு. தீயவரின் தீமைக்கு ஒறுப்பு (தண்டனை) கொடுக்கும்போது பாவியாகவும் பகைவனாகவும் கடவுள் செயல்படுகிறார் என்பதை இதற்கு விடையாகப் பகரலாம். இதற்குமேல் நாம் விளக்கம் கூறத் தொடங்குவோமாயின் அது எங்கெங்கோ போய்முடியும். 'அத்துவிதம்' என்னும் கொள்கையின் தலையிலே கைவைக்க வேண்டிவரும். இம்மட்டோடு அமையலாம்.

**அம்பே அறம்**

கம்பர் இங்கே சுவையான கருத்து வெளிப்பாடு ஒன்று செய்துள்ளார். வாலி கூறுகிறான்: முப்புரங்களை எரித்த சிவன் முதலானோர் எனக்கு அளித்த வரங்களை உருவியும், திண்மை சான்ற எனது மார்பை உருவியும், என் உயிரைச் சுவை பார்க்கின்ற நினது அம்பைத் தவிர வேறு அறம் இல்லை – என்கிறான்:

**''புரமெலாம் எரிசெய்தோன் முதலினோர் பொருவிலா**
**வரமெலாம் உருவிஎன் வசையிலா வலிமைசால்**
**உரமெலாம் உருவிஎன் உயிரெலாம் நுகரும்நின்**
**சரமலால் பிறிதுவேறு உளதரோ தருமமே''** (131)

இங்கே, குலசேகர ஆழ்வாரின் பெரிய திருமொழி என்னும் நூலிலுள்ள ஒரு பாடல் ஒப்புநோக்கத் தக்கது:

**''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்**
**மாளாத காதல் நோயாளன்போல், மாயத்தால்**
**மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மாநீ**
**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே''** (5:4)

என்பது பாடல். மருத்துவன் வாளால் அறுத்து மருத்துவம் செய்யினும் பிணியாளி வாள்மேலேயோ மருத்துவன் மேலேயோ வெறுப்பு காட்டுவதில்லை. மருத்துவனின் வாள் (கத்தி) செய்தது போன்ற வேலையை இராமனின் அம்பு செய்திருக்கிறது. அதனால் வாலி வருந்தவில்லை.

சிவன் முதலானோர் அருளிய வரங்கள் பலிக்கவில்லை என்று கூறுவதன் வாயிலாக இராமனது அம்பின் வலிமை உயர்த்தப்பட்டுள்ளது. இராமன் வாலியின்மேல் அம்பு போட்டு இறக்கச் செய்ததால், அவன், மேலும் எந்தத் தீமையும் செய்ய மாட்டான். ஆதலால், இராமனது அம்பு அவனுக்கு அறமாயிற்று. இதைக் கொண்டு, உலகியலில், ஒருவர் மற்றொருவர் தீமை செய்யாமல் இருப்பதற்காக அவரைக் கொன்றுவிட வேண்டும் எனத் தொடங்கிவிடக் கூடாது. இது தொடர்பாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. அதாவது:

சிலரைக் கொலை செய்த கொலையாளி ஒருவனுக்காக அவன் அமர்த்திய வழக்குரைஞர் நீதிபதியிடம் பின்வருமாறு வாதிட்டாராம்: அவனால் கொலை செய்யப்பட்டவர்கள் மேலும் இவ்வுலகில் இருந்து கொண்டு பாவம் செய்து நரகத்திற்குச் செல்லாமல் விரைவில் வீடுபேறு அடைவார்களாதலின் கொலையாளி நல்லதே செய்திருக்கிறான்-எனவே அவனை விடுதலை செய்துவிட வேண்டும் என்று கூறி, கீதையிலிருந்தெல்லாம் மேற்கோள் காட்டி வாதாடினாராம். நீதிபதியும் கீதை படித்தவர் போல் தெரிகிறது. அப்படியென்றால் கொலையாளிக்கு நாம் இறப்பு ஒறுப்பு (மரண தண்டனை) தந்து கொன்றுவிடின், அவன் மேலும் தீமை செய்து பெரிய நரகத்திற்குப் போகமாட்டானாதலின் அவனுக்கு இறப்பு ஒறுப்பு தருகிறேன் என்று நீதிபதி தீர்ப்பு கூறினாராம்.

இராமாயணக் கதையில், கொலை செய்யப்பட்ட வாலியே இவ்வாறு கூறியதால், இதனை மேற்கூறிய உலகியல் செய்தியோடு தொடர்பு படுத்தலாகாது. அவ்வாறு தொடர்புபடுத்தின், உலகில் எல்லாரும் கொல்லப்பட வேண்டியராவர். பிறகு உண்மையான மனிதனைத் தேவையின்றித் தேடவேண்டி வரும்.

**பொதுமையான்**

மேலும் வாலி கூறுவது! நீ எல்லா உயர்திணைப் பொருளாகியும் எல்லா அஃறிணைப் பொருளாகியும், எல்லாப் பருவங்களாகியும் எல்லாப் பயன்களாகியும், பூவையும் நறுமணத்தையும் பிரிக்க முடியாதது போல், மேற்சொன்ன இவற்றிலிருந்து பிரிக்கமுடியாத பொதுப் பொருளாய் உள்ளாய். எனவே, உன்னை அறிவினால் அறிந்து கொண்டேன். எனவே, எனக்கு வீடு பேறு கிடைப்பது அருமையாகாது.

**"யாவரும் எவையுமாய் இருதுவும் பயனுமாய்**
**பூவும் நல் வெறியும்ஒத்து ஒருவரும் பொதுமையாய்!**
**யாவன் நீ யாவதென்று அறிவினார் அருளினார்**
**தாவரும் பதம் எனக்கு அருமையோ தனிமையோய்!"**

(132)

இருது=பருவம். வெறி=மணம். ஒருவரும்=ஒருவ அரும்=பிரிக்க முடியாத. தாவரும்=தாவ அரும்=கெடுதல் இல்லாத. பதம்=வீடுபேறு. பொன்னே பல அணிகலன்களா யும், மண்ணே பல கலங்களாயும்(பாத்திரங்களாயும்),அரிசியே பல சிற்றுண்டிகளாயும் மாறுவதுபோல், கடவுளே பல பொருள்களாயும் இருக்கிறார் என இரண்டற்ற கொள்கை யினர் உரைப்பர். கடவுளே எல்லாமா யுள்ளார் எனில், அவர் எல்லாவற்றிற்கும் பொது ஆனதால் 'பொதுமையாய்' என வாலியின் வாயிலாகக் கம்பரின் எழுத்தாணி எழுதியுள்ளது. எல்லாப் பொருள்களிலிருந்தும் கடவுளைப் பிரிக்கமுடியாது என்பதற்கு, 'பூவும் வெறியும்' ஒப்புமை காட்டப்பட்டுள்ளன. பூவிலிருந்து இதழையோ-மகரந்தத் தையோ-சூலகத்தையோ பிரிக்கலாம்-ஆனால் பூவிலிருந்து அதன் மணத்தைத் தனியே பிரித்தெடுக்க இயலாதன்றோ? ஈண்டு,

''வண்ணப் பூவும் மணமும்போல......
கன்னல் தமிழும் நானும் அல்லனோ''
(இசையமுதம்)

என்னும் பாவேந்தரின் பாடல் பகுதி ஒப்புநோக்கத்தக்கது. இராமன் தனக்கு நிகர் தானே-அவனுக்கு இணையாக யாரையும் கூறமுடியாது-ஆதலால் 'தனிமையோய்' எனப் பட்டான்.

**வெற்றரசும் வீட்டரசும்**

ஐயனே! நீ எனக்கு ஈந்த தண்டனையே எனக்கு வீடு பேறு தருவதாகும். இதனினும் வேறு உதவி உண்டோ? என்னைக் கொல்வதற்காக நின்னை அழைத்து வந்த என் தம்பி சுக்கிரீவன் தான் வெற்று அரசை அடையலானான்; யானோ வீட்டு அரசை (வீடுபேற்றை) அடையச் செய்தான்:

**''தண்டமே அடியனேற்கு உறுபதம் தருவதே''** (133)

**''மற்றினி உதவி உண்டோ**
**வானினும் உயர்ந்த மானக்**
**கொற்றவ! நின்னை, என்னைக்**
**கொல்லிய கொணர்ந்து தொல்லைச்**
**சிற்றினக் குரங்கி னோடும்**
**தெரிவுறச் செய்த செய்கை**
**வெற்றரசு எய்தி எம்பி**
**வீட்டரசு எனக்கு விட்டான்''** (134)

கொற்றவன் = இராமன். தொல்லைச் சிற்றினக் குரங்கு = தொன்று தொட்டுச் சிற்றின விலங்குகளாய் இருக்கும் குரங்குகள். வாலி, சுக்கிரீவன், அனுமன், அங்கதன் முதலானோர் குரங்கினத்தில் உயர்ந்தவரா யிருக்கலாம். ஆனால், பொதுவாகக் குரங்கு இனம் என்று எடுத்துக் கொள்ளின், குரங்கினம் முதல் முதலாகத் தோன்றி உருவான காலத்தில் என்ன செய்ததோ அன்னதையே

இப்போதும் செய்கின்றது. ஆனால் மக்கள் ஆண்டுக்கு ஆண்டு - நாளுக்குநாள் - புதியன செய்கின்றனரன்றோ? குரங்குகள் இவ்வாறில்லாமையால் தான், 'தொல்லைச் சிற்றினக் குரங்கு' எனப்பட்டது. தொல்லை = பழமை. சிற்றினம் என்பது, உயர்திணை அல்லாத - அஃறிணை என்பதைக் குறிக்கிறது.

சுக்கிரீவன் பெற்ற நன்மையினும் வாலி பெற்ற நன்மையே பெரிதாம். இங்கே மாணிக்கவாசகரின் திருவாசகப் பகுதி ஒன்று நினைவுக்கு வருகிறது. அவர் இறைவனை நோக்கி, நீ என்னை ஏற்றுக்கொண்டு உன்னை எனக்குத் தந்துவிட்டாய். எனவே, சங்கரா! இழிந்த என்னை நீ பெற்றாய் - உயர்ந்த உன்னை நான் பெற்றேன். எனவே நம் இருவருள் யார் கெட்டிக்காரர் - யார் கொடுத்து வைத்தவர் என வினவுகிறார் கோயில் திருப்பதிகத்தில்:

**"தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்"?**
**அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்றதொன்று என்பால்"** (10)

என்பது பாடல் பகுதி. மணிவாசகர் சிவானந்தம் பெற்றாராம். சிவன் இவரிடத்திலிருந்து ஒன்றும் பெறவில்லையாம். எனவே, மணிவாசகரே சதுரராம். இலக்கிய ஒப்புமைகாண்டல் என்ற முறையில் இது இங்கே தரப் பெற்றது.

**வாலியின் உயரிய பண்பு**

வாலி இராமனிடம் ஓர் அருளிப் பாடு (வரம்) கேட்கிறான்; ஐயனே! என் தம்பி எப்போதாவது மது அருந்தி நிலைமாறி நினக்கு ஏதாவது தீங்கு செய்யின், என்மேல் ஏவிய அம்பாகிய எமனை அவன்மேல் ஏவாதே என வேண்டிக் கொண்டான்:

**''ஓவிய உருவ நாயேன் உளதொன்று பெறுவது, உன்பால்**
**பூவியல் நறவம் மாந்திப் புந்திவே றுற்றபோழ்தில்**
**தீவினை இயற்று மேனும் எம்பிமேல் சீறி, என்மேல்**
**ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்''** (135)

ஓவிய உருவன் = இராமன். நறவம் மாந்தல் = மது அருந்தல். பூவியல் நறவம் = பூக்களிலிருந்து எடுத்த தேனைக் கொண்டு செய்யும் ஒருவகை மது. நெல்லைக் கொண்டு உண்டாக்கும் 'தோப்பி' என்னும் மதுவைப் போல் இது பூவிலிருந்து எடுத்துச் செய்யப்பட்ட மது வகை யாகும். இந்தக் காலத்தில் உரோசா மலரைக் கொண்டு உண்டாக்கும் ஓர் உயரின மது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. 'தீவினை இயற்றுமேனும்' என்பதில் உள்ள 'உம்' என்பது இயற்ற மாட்டான் என்னும் எதிர்மறைப்பொருளில் உள்ளது. பெறுவது ஒன்று உளது என்பது, பல கேட்க வில்லை ஒன்று கேட்கிறேன் என, பெறுவதை அருமைப் படுத்தாமல் எளிமைப் படுத்தும் பொருளில் உள்ளது. பகழி கூற்றுவனாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

தன்னைக் கொல்லச் செய்த தம்பியை நீ கொல்லாதே என்று வேண்டுவது 'எவரெஸ்ட்' உயர்பண்பாகும். இங்கே

**''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்''** (314)

**''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு''** (987)

என்னும் குறள்களும், 'பகைவனுக்கு அருள்வாய்' என்னும் பாரதி பாடலும், தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களைப் பொறுத்தருளும்படிக் கடவுளை வேண்டிய ஏசு பெருமானின் பேரருளும், தன்னைக் கொன்ற முத்தநாதன் என்பவனுக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் காவலுடன் அனுப்பி வைக்க ஆணையிட்ட கோவலூர் அரசராகிய மெய்ப்பொருள்

நாயனாரின் வரலாறும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. குரங்கினத் தொடர்பினனாகிய வாலியே இவ்வாறு செய்தது மிகவும் பாராட்டற்பாலது.

**அனுமன் உரியன்**

ஐயனே! என்னிடம் சொல்லியிருந்தால், அந்த இராவணனை வாலினால் பிணித்து இழுத்து வந்திருப்பேனே. நடந்தது நடந்து விட்டது. இனி அதைப் பேசிப் பயனில்லை. நான் கிடக்கட்டும். எது செய்யவேண்டுமெனினும் அதைச் செய்வதற்கு உரிய தகுதி உடையவன் இந்த அனுமன்.

இந்த அனுமன் என்பவனை உன் கையில் உள்ள வில்லாக மதிக்கவேண்டும், வில் செய்யக்கூடிய பயனை அனுமன் செய்து முடிப்பான். என் தம்பியை நின் தம்பியாக எண்ணுக. இவ்விருவரைப் போன்ற துணைவர்கள் வேறு யாரும் இலர். இவர்களின் துணை கொண்டு நீ சீதையைத் தேடி அடையலாம்.

**"மற்றிலெ னெனினும் மாய**
**அரக்கனை வாலின் பற்றிக்**
**கொற்றவ நின்கண் தந்து**
**குரக்கியல் தொழிலும் காட்டப்**
**பெற்றிலென் கடந்த சொல்லின்**
**பயனிலைப் பிறிதொன் றேனும்**
**உற்றது செய்கென்றாலும் உரியன்**
**இவ் அனுமன் என்றான்"** (137)

**"அனுமன் என்பவனை, ஆழி ஐய,**
**நின் செய்ய செங்கைத்**
**தனுஎன நினைதி மற்றென்,**
**தம்பி நின் தம்பியாக**

**நினைதி ஓர் துணைவர் இன்னோர்**
**அனையவர் இலைநீ ஈண்டவ்**
**வனிதையை நாடிக் கோடி வானினும்**
**உயர்ந்த தோளாய்''** (138)

*தனு = வில். வனிதை = சீதை. இன்னோர் = அனுமனும் சுக்கீரீவனும் ஆவர். இவர்களைப் போன்றோர் ஒருவரும் கிடைக்க மாட்டார் என இவர்களின் பெருமையையும் ஆற்றலையும் அறிவித்துள்ளான் வாலி.*

**தம்பிக்கு அறிவுரை**

*வாலி இராமனைப் பலவாறு போற்றியபின், செயலற்று வருந்தி நிற்கும் தன் தம்பியை அழைத்து, இராமனோடு ஒன்றி யிருந்து பணி விடை செய்து உய்வாயாக என அறிவுரை கூறிப் பின் இராமனிடம் சுக்கிரீவனை அடைக்கலம் தந்தான்.*

*பின்னர் அங்கதனை அழைத்து வரும்படிச் சுக்கிரீவனை ஏவ, அவன் போய் அழைத்து வந்தான்.*

**''வைத்தபின் உரிமைத் தம்பி**
**மாமுகம் நோக்கி வல்லை**
**உய்த்தனை கொணர்தி உன்றன்**
**ஓங்கரு மகனை என்ன**
**அத்தலை அவனை ஏவி**
**அழைத்தலின் அணைந்தான் என்ப**
**கைத்தலத்து உவரி நீரைக்**
**கலக்கினான் பயந்த காளை''** (147)

*உரிமைத் தம்பி = சுக்கிரீவன். உவரி நீரைக் கலக்கினான் அமிழ்தம் எடுப்பதற்காகக் கடலைக் கடைந்த வாலி. பயந்த காளை = வாலி பெற்ற அங்கதன். இங்கே வாலி தன் மகனை அழைத்து வருமாறு சுக்கிரீவனிடம் சொல்லிய*

போது 'உன்றன் ஓங்கரு மகன்' என்றுள்ளான். அதாவது சுக்கிரீவனின் பிள்ளைபோல் உயர்ந்த ஒற்றுமை உணர்வினால் அவ்வாறு கூறினான். இது, கோசலையின் மகனான இராமனைக் கைகேயியின் மகன் எனவும், கைகேயியின் மகனான பரதனைக் கோசலையின் மகன் எனவும் கூறியது போன்ற அன்பான உறவுப் பிணிப்பாகும்.

**மலையும் கடலும்**

திங்கள் போல் ஒளி வீசுபவனும் துன்பம் என்பதையே அறியாதவனும் ஆகிய அங்கதன், தன் தந்தையை மலர்ப் படுக்கையுள்ள மலைமேல் இருக்கக் காணாது குருதிக் கடலில் கிடக்கும் நிலையில் கண்டான்.

**"சுடருடை மதிய மென்னத்**
**தோன்றிய தோன்றல் யாண்டும்**
**இடருடை உள்ளத் தோரை**
**எண்ணினும் உணர்ந்திலாதான்**
**மட்டுண்ட நறுமென் சேக்கை**
**மலையன்றி, உதிர வாரிக்**
**கடலிடைக் கிடந்த காதல்**
**தாதையைக் கண்ணில் கண்டான்"** (148)

தோன்றல் = அங்கதன். அவன் உலகில் துன்பம் உற்றவர் எவரையும் எண்ணிப் பார்த்ததுகூடக் கிடையாதாம் - அதாவது துன்பமே அறியாதவன் - செல்லமாக வளர்ந்தவன் என்பது கருத்து. இங்கே மலர்ப்படுக்கை மலையாகவும் குருதி வெள்ளம் கடலாகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ளன.

கண்ணில் கண்டான் = கண்களால் பார்த்தான். கண்களால் பார்க்காமல் வேறு எதனால் பார்ப்பது? கண்களால் பார்த்தான் என்று கூறுவானேன்? பார்த்தல் பல வகைப்படும். அவை: கண்ணால் பார்த்தல், காதால்

பார்த்தல், மூக்கால் பார்த்தல், வாயால் பார்த்தல், மெய்யால் பார்த்தல் என ஐவகையினவாம். பார்த்தல் என்பதற்கு அறிதல் என்பது பொருள். கண்ணால் நேரில் பார்த்து அறிந்து கொள்ளுதல், காதால் கேட்டுப் பார்த்தல், மூக்கால் மோந்து பார்த்தல், வாயால் (நாக்கால்) உண்டு சுவைத்துப் பார்த்தல், மெய்யால் தொட்டுப் பார்த்தல் (உடலோடு உரசிப் பார்த்தல்) எனப் பார்த்து அறிதல் ஐவகையின. இங்கே ஒருவர் சொல்ல அறிந்து கொள்ளாமல், தாமே ஐவகைத் துணைச் செயலால் அறிந்து கொள்ளுதல் என்பது நினைவு வரவேண்டும். தந்தை இறந்து கிடப்பதை ஒருவர் சொல்லக் காதால் கேட்டறியாமல், தன் கண்ணா லேயே நேரில் கண்டான் என்னும் பொருளில் 'கண்ணில் கண்டான்' எனப்பட்டது.

மலை உயர்வானது - கடல் தாழ்ந்து ஆழமாயிருப்பது - ஒன்றிற்கு ஒன்று எதிர் மாறாயிருப்பது. எனவே, உயர்ந்த மலையில் காண வேண்டியவனைத் தாழ்ந்த கடலில் கண்டான் என இரக்க உணர்வு தோன்றக் கூறப்பட்டுள்ளது. துன்பமே அறியாதவன், வேறு யாருக்கும் இல்லை - தன் தந்தைக்கே, அதுவும் எளிய துன்பம் அன்று-இறப்புத் துன்பம் ஏற்பட்டிருப்பதைக் கண்டால் எப்படி இருக்கும் அவனுக்கு.

### அங்கதனின் அழுகை

வீழ்ந்து கிடக்கும் தந்தையைக் கண்ட அங்கதனின் கண்கள், தந்தையைக் கொல்பவன் யார் என்ற சினத்தால் கனலையும், பிரிவால் நீரையும், கலக்கத்தால் குருதியையும் சொரிந்தன. வெண்ணிறமுடைய வாலி திங்கள் மண்டலமே கீழே விழுந்தாற்போல் கிடந்தான். அதன்மேல் விண்ணி லிருந்து ஒரு விண்மீன் விழுந்தாற் போன்று, வாலியின் மேல் அங்கதன் விழுந்து புலம்பினான்:

**"கண்டகண் கனலும்நீரும் குருதியும்கால மாலைக்**
**குண்டலம் அலம்புகின்ற குவவுத்தோள் குரிசில்திங்கள்**
**மண்டலம் உலகில்வந்து கிடந்ததுஅம் மதியின்மீதா**
**விண்டலம் அதனினின்றோர் மீன்விழுந்தென்ன**
**வீழ்ந்தான்"** (149)

குரிசில்=அங்கதன், திங்கள் மேல் விண்மீன் விழுந்தாற் போல்-என்னும் உவமை பொருத்தமானது. நாம் காணும் திங்களினும் உயரே சிறியதாய்த் தெரியும் விண்மீன் பெரியதாயிருக்கலாம். ஆனால், நம் கண்கட்குத் திங்கள் பெரியதாகவும் விண்மீன் சிறியதாகவும் தெரிவதைக் கொண்டு இவ்வுவமை பொருந்துவ தாயிற்று. மேலே விழுந்த அங்கதன் புலம்புகிறான்:-

தந்தையே-தந்தையே! நீ இவ்வுலகில் தீமைசெய்யாதது மட்டுமன்று-தீமை நினைத்ததும் இல்லை. அங்ஙனம் இருக்கவும் உனக்கு இந்த நிலை நேரிட்டதேன்? எமன் உன் எதிரேயே வந்தான் எனில், அந்த எமனை வெல்லக் கூடியவர் வேறு யார் உளர்?.

**"எந்தையே எந்தையே இவ்**
**எழுதிரை வளாகத்து யார்க்கும்**
**சிந்தையால் செய்கையால் ஓர்**
**தீவினை செய்திலாதாய்**
**நொந்தனை அதுதான் நிற்க,**
**நின்முகம் நோக்கிக் கூற்றும்**
**வந்ததே யன்றோ அஞ்சாது**
**ஆர்அதன் வலியைத் தீர்ப்பார்?"** (150)

எந்தையே-எந்தையே என இரு முறை விளிப்பது, அவனது துயர மிகுதியை அறிவிக்கிறது. யாருக்கும் தீமை செய்யாதது மட்டுமன்று - நினைத்ததும் இல்லை என்று சொல்லியதன் கருத்தாவது:-தீமையை எண்ணினாலேயே

செய்ததற்கு ஒப்பாகும் என்பதாகும். உன்பெயரைக் கேட்டாலேயே அஞ்சக்கூடியவன் எமன்-அத்தகையவன் உன் முகத்தெதிரே வந்த நெஞ்சுரம் என்னே! அவனை யாரால் வெல்ல முடியும்? என்று வருந்துகிறான். எதிரேவந்து நிற்பவன் இராமன் தான்-அவனை யாராலும் வெல்ல முடியாதுதான்.

**படக்-படக்**

எட்டுத்திக்குகளிலும் உள்ள யானைகளை வென்ற வனாகிய இராவணனை நீ உன் வாலால் கட்டி இழுத்துத் திரிந்தாய் அல்லவா? அந்த வாலை நினைத்தாலேயே இராவணனது நெஞ்சம் (இதயம்) 'படக்-படக்' என்று அடித்துக்கொள்ளும் அத்தகைய இராவணனுக்கு இனி அந்த அச்சம் இல்லை.

**"தறை அடித்ததுபோல் தீராத்**
**தகைய இத்திசைகள் தாங்கும்**
**கறையடிக்கு அழிவு செய்த**
**கண்டகன் நெஞ்சம் உன்தன்**
**நிறைஅடிக் கோல வாலின்**
**நிலைமையை நினையுந் தோறும்**
**பறை அடிக்கின்றது அந்தப்**
**பயம்அறப் பறந்தது அன்றே?"** 151)

தறை=ஆணி. தரையோடு ஆணி அடித்து நிலைக்கச் செய்தது போல் யானைகள் நிலையாகத்திக்குகளில் உள்ளனவாம். கறை=உரல். கறையடி = உரல்போன்ற அடிகளை உடைய யானை. கண்டகன்=கொடியவன்= இராவணன். வாலியின் வாலை எண்ணினாலே இராவணனின் இதயம் பறைமேளம் அடிப்பதுபோல் அடித்துக்கொள்ளுமாம். இப்போது உலகியலில், மனம் **'படக்-படக்' என்று அடித்துக்கொண்டது என்று சொல் கிறார்களே-அதுபோன்றதுதான் இது. இதை, 'அவரது**

கடிகாரம் அடிக்கத் தொடங்கிவிட்டது' என்று அச்சக் குறிப்பு மொழியாலும் குறிப்பிடுவது உண்டு. அது விரை வாய்ப் பறந்தே போயிற்றே என்று சொல்லும் உலகியல் வழக்கை ஒட்டி, 'பயன் அறப் பறந்தது' (அச்சம் முற்றிலும் பறந்து விட்டது) என்று கூறப்பட்டது. பறத்தல் வேறு பொருள்களின் தொழில். ஆனால், பயம் பறப்பதாகக் கூறப்பட்டுள்ளது. தண்டியலங்காரத்தில் உள்ள,

**"உரிய பொருளன்றி ஒப்புடைப் பொருள்மேல்**
**தரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்"** (25)

என்னும் நூற்பாவின்படி இந்த அமைப்பு 'சமாதி' அணி எனப்படும். இதனைத் தமிழில் ஒப்புவினை புணர்ப்பு அணி' எனலாம்.

மேலும் அங்கதன் புலம்புகிறான்: எண்திக்கு மலைகள்-சக்கரவாள மலை ஆகியவற்றின் உச்சி முடி நின் கால்களின் தழும்பு படுவன வாகும். இனி அவற்றின் முடியில் உன் காலடித் தழும்பு தோயா. மந்தரமலை - வாசுகிப்பாம்பு ஆகியன கொண்டு அமுதம் எடுக்கக் கடல் கடைந்தாயே-இனிக் கடல் கடைய வேண்டின் யார் உளர்?

சிவனைத்தவிர வேறுயாரையும் வணங்காத தந்தையே! கடலைக் கடைந்து நீ தந்த அமிழ்தத்தை உண்டு தேவர்கள் அழியாமல் உளர்; ஆனால் நீ அழிந்து படுகிறாயே! உன்னிலும் உயிர்காக்கும் வள்ளல் வேறு யார் உளர்?

**"குலவரை நேமிக் குன்றம் என்ற**
**வானுயர்ந்த கோட்டின்**
**தலைகளும் நின் பெற்றாளின்**
**தழும்புஇனித் தவிர்ந்த அன்றே!**
**மலைகொளும் அரவும் மற்றும்**
**மதியமும் பலவும் தாங்கி**
**அலைகடல் கடைய வேண்டின்**
**ஆரினிக் கடைவர் ஐயா"** (152)

**"பஞ்சின் மெல்லடியார் பங்கன்**
**பாதுகம் அலாது யாதும்**
**அஞ்சலித்து அறியாச் செய்கை**
**ஆணையாய் அமரர் யாரும்**
**எஞ்சலர் இருந்தார் உன்னால்,**
**இன்னமுது ஈந்த நீயோ**
**துஞ்சினை, வள்ளியோர்கள் நின்னின்**
**யார் சொல்லற் பாலார்"** (153)

குலவரை = எண் திக்கு மலைகள். நேமிக் குன்றம் = சக்கர வாளகிரி. கோட்டின் தலை = மலை உச்சி. மலை கொளும் அரவு = மத்தாக இருந்த மந்தர மலை முழுவதை யும் கயிறாகச் சுற்றிய வாசுகிப் பாம்பு.

பஞ்சின் மெல் அடியார் = பஞ்சு போன்ற மென்மை யான அடியுடைய உமாதேவி. பங்கன் = உமையை இடப் பங்கிலே உடைய சிவன். பாதுகம் = திருவடி.

இரண்டு பாடல்களிலும் வாலி கடல் கடைந்தமை கூறப் பட்டுள்ளது. மலையைப் பாம்பால் திரித்துக் கடைவதற்கு மிக்க வலிமை வேண்டும். அவ்வலிமை வாலியினிடத்திருந்தது.

வாலி சிவன் அன்பன். சிவனின் திருவடியைத் தவிர வேறு யாரையும் வணங்கி அறியாதவனாம் வாலி. இவன் உறைப்பான சிவப் பற்றாளன் என்பது வேறிடங்களிலும் கூறப்பட்டுள்ளது. இவனை ஒரு வீரசைவன் எனலாமோ? 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் உயரிய கோட்பாட்டை மற்றவர் பின்பற்றாவிடினும், வாலி பின்பற்றியதாகத் தெரிகிறது. தெய்வம் ஒன்றுதான். தெய்வங்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் அருளாளர்களே யாவர். மிக உயர்ந்த மக்கள் தெய்வங்களாக்கப்பட்டனர். இதனாலேயே, திருக்கோயில்களில் தெய்வங்களின் பட்டாளம்

நிரம்பக் காணப்படுகிறது. அருளாளர்களும் உயர்வு கருதி வணங்கப்பட வேண்டியவர்களே.

உயிரினங்களில் ஆண்-பெண் இருப்பது போல், தெய்வங் களிலும் ஆண்-பெண் கற்பித்தனர் மக்கள். அதன் பயனே உமைபங்கன் உருத்தோற்றம். பெண்கட்குச் சம உரிமை கொடுக்க வேண்டும் என்கிறார்களே - இதற்குப் பெயர் என்னவாம்? இதை அறிந்தாவது - இனியாவது, தாங்க ளாகவே சம உரிமை எடுத்துக்கொண்டுள்ள அல்லி அரசிகள் அல்லாத மற்ற மங்கையர்க்குச் சம உரிமை தரவேண்டும்.

'தனக்கு மிஞ்சியே தருமம்' என்னும் இழிந்த பழமொழி ஒன்றுண்டு. வாலியோ அமிழ்தத்தை மற்றவர்க்குத் தந்து சாகாநிலை உண்டாக்கித் தான் அமிழ்தம் அருந்தாது இறந்துபடுவதாக அவன் மகன் அங்கதன் கூறியிருப்பது நயமாய்ச் சுவை தருகிறது. புறநானூற்றில் கூறியுள்ளபடி, தனக்கென வாழா நோன்தாள் பிறர்க்கு என முயல்பவனாக வாலி திகழ்ந்திருக்கிறான். மற்றும், ஔவையார் அதியமான் அஞ்சிமேல் பாடிய

> **"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே**
> **பெரியகள் பெறினே**
> **யாம்பாடத் தான் மகிழ்ந்து**
> **உண்ணும் மன்னே"** (235: 1-3)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதி, 'தனக்கு மிஞ்சியே தருமம்' என்னும் தாழ்ந்த பழமொழியைத் தவிடுபொடி யாக்கிவிடும்.

## வாலி மகனைத் தேற்றுதல்

நெருப்பிடைப்பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகி வருந்தும் மகனை நோக்கி வாலி தேறுதல் கூறுகிறான். நான் இறப்பதற்காக நீ வருந்தற்க. பிறத்தலும் இறத்தலும்

மூவுலகத்து உயிர்கட்கும் பொதுவானவை. எனது நல்வினைப் பயனால் திருமாலின் தெய்வப் பிறவியாகிய இராமன்தானே என்னைத் தேடிவந்து வீடுபேறு உதவுகிறான்.

**"தோன்றலும் இறத்தல் தானும்**
**துகளறத் துணிந்து நோக்கின்**
**மூன்றுல கத்தினோர்க்கும்**
**மூலத்தே முடிந்த அன்றே**
**யான்தவம் உடைமையால்**
**இவ்விறுதிவந் திசைந்தது யார்க்கும்**
**சான்றென நின்ற வீரன்**
**தான்வந்து வீடு தந்தான்"** (155)

தோன்றிய பொருள்கள் இறந்தே - அழிந்தே தீரும். உயிர்கள் பிறந்ததிலிருந்தே இறக்கத் தொடங்கி விடுவன. சில உயிர்கள் இறப்பதற்குச் சிலமணி நேரம் - அல்லது சில நாள்கள் – அல்லது சில திங்கள்கள் – அல்லது சில ஆண்டு கள் செலவிடுகின்றன. சில உயிர்களோ எண்பது ஆண்டுகள்– நூறு ஆண்டுகள் என இறப்பதற்குப் பல ஆண்டுகள் செலவிடுகின்றன. இங்கே,

**"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்"** (334)

என்னும் குறளும், மாணிக்கவாசகரின் 'சாமாறே விரைகின்றேன்', 'வாழாது வாழ்கிறேன்' என்னும் மணி மொழிகளும் எண்ணத் தக்கன. எனவே, தான் இறப்பதற்காக வருந்தாதே என வாலி தன் மகனுக்கு ஆறுதல் கூறுகிறான். 'சாதலும் புதுவது அன்று' என்பது புறநானூறு. நமக்கு மட்டுமே சாவு என்றால் வருந்த வேண்டியதுதான். மூவுலக உயிர்கட்கும் சாவு பொது ஆதலின் வருந்துதற்கு இடமே இல்லை.

மைந்தா! இராமன் என்பவன் திருமாலே; எனது தவப் பயனால் திருமாலே என்னிடம் வந்துள்ளார் என்பதில் நல்ல கருத்து உண்டு. தாய்க் குரங்கு தன் குட்டியைத் தான் பற்றாது; குட்டிதான் தாய்க் குரங்கின் அடிவயிற்றுப் பகுதியைப் பற்றிக்கொள்ள வேண்டும். அடியார்கள் தாங்களாக இறைவனைத் தேடிக்கொண்டு போவது இது போன்றதாகும். இது 'குரங்கு நெறி' எனப்படும். இதை வடமொழியில் 'மர்க்கட நியாயம்' என்பர். குரங்குக்கு எதிர்மாறானது பூனை. பூனை தன் குட்டியைத் தானே கவ்விப்பற்றி எடுத்துக்கொண்டு செல்லும். கடவுளே அன்பர் களைத் தேடிச் சென்று வீடுபேறு அளிப்பது பூனையின் செயல் போன்றதாகும். இது 'பூனை நெறி' எனப்படும். வடமொழியில் 'மார்ச்சால நியாயம்' என்பர். (மர்க்கடம் = குரங்கு. மார்ச்சாலம் = பூனை).

இந்த அடிப்படையுடன் வாலியிடம் வருவோம்.

**"சான்றென நின்ற வீரன் தான்வந்து வீடு தந்தான்"**

என்பதில் உள்ள 'தான் வந்து' பூனை நெறியைக் குறிக் கின்றது. குரங்கு நெறியினும் பூனை நெறி சிறந்தது அல்லவா?

எனவே, நீ பாலமை (சிறுபிள்ளைத்தனம்) நீக்கி, இவன் திருமாலே என நம்பிப் பிறவி நோய்க்கு மருந்தாகிய இவனை வணங்குவாயாக இன்னும் ஒன்று சொல்கிறேன் கேள்! இவன் நம் தந்தையைக் கொன்றவனாயிற்றே எனப் பகையுணர்வு கொள்ளற்க. நின் உயிர்க்கு இவன் வாயிலாக உறுதி தேடிக்கொள்க. இராமனை எதிர்த்து யாரேனும் போர் புரியின், நீ இராமன் பக்கம் நின்று பொருது அவனுக்காக நின் உயிரையும் கொடுப்பாயாக - என்று வாலி மகனுக்கு அறிவுரை கூறினான்:

**"என்னுயிர்க்கு இறுதி செய்தான்**
**என்பதை இறையும் எண்ணாது**
**உன்னுயிர்க்கு உறுதி செய்தி**
**இவற்கு அமர் உற்றதுண்டேல்**
**பொன்னுயிர்த்து ஒளிரும் பூணாய்**
**பொன்றுதி தருமம் போற்றி**
**மன்னுயிர்க்கு உறுதி செய்வான்**
**மலரடி சுமந்து வாழ்தி"** (157)

*இறையும் = சிறிதும், பொன்றுதி = இறப்பாயாக. புராணக் கதைகளிலும் இப்போது திரையிடப்படும் நாடகங்களிலும், தன் தந்தையைக் கொன்றவனைப் பழிக்குப் பழி வாங்கத் துடிக்கும் மைந்தரைக் காணலாம். அவ்வாறு அங்கதன் முயலக்கூடாது என வாலி அறிவுறுத்தியுள்ளான். என்னைக் கொன்றான் என இறையும் சிறிதும் எண்ணாதே என்கிறான். இராமனது மலரடியைத் தாங்கி உன் உயிர்க்கு நல்லது தேடு என்கிறான். இது பிள்ளைப் பற்றினால் சொல்வது மட்டுமன்று - கடைப்பிடிக்கப்பட வேண்டிய நன்னெறியுமாகும். எல்லாவற்றினும் உயர்ந்ததாக ஒன்று கூறுகிறான்; அதாவது: இராமனோடு எவரேனும் போர் புரியின், நீ இராமனுக்கு உதவியாய்ப் பொருது உயிரையும் கொடு என்கிறான். இது வாலியின் மலையத்தனை உயர் பண்பிற்கு உரைகல்லாகும். இங்கே,*

**"வேல்கை கொடுத்து வெளிது விரித்துடீஇப்**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"** (279:8-11)

*என்னும் புறநானூற்றுப் பாடல் ஒத்து நோக்கற்பாற்று.*

**மகனைத் தழுவுதல்**

*இவ்வாறு உய்யும் வழி மகனுக்குப் பல கூறிய பின்னர், மலையினும் உயர்ந்த திண்ணிய தோள்களையுடைய*

வானரத் தலைவனாகிய வாலி தன் இரு கைகளாலும் மகனைத் தழுவிக் கொண்டான். பின்பு இராமனை நோக்கிக் கூறுவானானான்:

**"என்றனன் இனைய வாய**
**உறுதிகள் யாவும் சொல்லித்**
**தன்துணைத் தடக்கை யாரத்**
**தனயனைத் தழுவிச் சாலக்**
**குன்றினும் உயர்ந்த திண்தோள்**
**குரக்கினத்து அரசன் கொற்றப்**
**பொன்திணி வயிரப் பைம்பூண்**
**புரவலன் தன்னை நோக்கி"** (158)

தனயன் = மகன் அங்கதன். குரக்கு இனத்தரசன் = வாலி. துணை = இரண்டு. புரவலன் = இராமன். மரவுரி தரித்துக் காட்டிற்கு வந்துள்ள இராமனை, 'பொன்திணி வயிரப் பைம்பூண் புரவலன்' என உயர்வகை அணிகலன்கள் அணிந்திருப்பதாகக் கூறலாமா? - என ஒருவர் என்னைக் (சு. ச. வைக்) கேட்டார். திருவிளையாடல் புராணம் - மாமனாக வந்து வழக்குரைத்த படலத்தில், கைம்பெண்ணான ஒருத்தியைத் 'தாது உலராத கோதை' எனப் பரஞ்சோதி முனிவர் குறிப்பிட்டுள்ளார். தாது உலராத பூச்சூடிய பெண் என்பது அதன் பொருள். பெண் என்றதும் இவ்வாறு கூறிவிடுவது புலவர்கட்கு ஒரு மரபாக இருந்து விடுகின்றது. இங்கே இராமனை இவ்வாறு கம்பர் கூறியிருப்பதும் அது போன்றதே.

**"நூல் உரை போதக ஆசிரியர் மூவரும்**
**முக்குண வசத்தால் முறை மயங்குவரே"**

என்பது இதுதான். நிற்க - இறக்கும்போது தந்தை தம் பிள்ளைகட்கு எதிர்கால நடைமுறை பற்றிக் கூறுவதும், உள்ளம் நெகிழ்ந்து தழுவிக் கொள்வதும், பிள்ளையின்

கைகளைக் கண்ணில் ஒற்றிக் கொள்வதும் கைக்கு முத்தம் கொடுப்பதும் உலகியல். என் (சு. ச.) தந்தை இறக்கும் போது இவ்வாறு செய்தார்–அழவும் செய்தார்.

**''கடந்தமா முனிவரும் கடப்பரோ மக்கள்மேல் காதல்''**

என்பது நைடதம். முனிவரே அங்ஙனம் எனில், வாலி மகனைத் தழுவிக் கொள்வதில் வியப்பென்ன?

**அங்கதன் அடைக்கலம்**

பின் அங்கதனை இராமனிடம் அடைக்கலப் பொருளாக ஒப்படைக்கிறான் வாலி:

பொய்யர்க்குப் புலப்படாத ஐயனே! அங்கதன் அரக்கர் என்னும் பஞ்சுக்கு நெருப்புப் போன்ற வலிமை உடையவன்; தூய்மையான செயலன். இவனை உன்னிடம் கையடைப் பொருளாக அளிக்கிறேன் - என்றான்.

**''நெய்யடை நெடுவேல் தானை நீல்நிற நிருதர் என்னும்**
**துய்யடை கனலி அன்ன தோளினன் தொழிலும் தூயன்**
**பொய்யடை உள்ளத் தார்க்குப் புலப்படாப் புலவ மற்றுன்**
**கையடை யாகும் என்றவ் விராமற்குக்**
**காட்டுங் காலை''** (159)

நிருதர் = அரக்கர். துய் = பஞ்சு. கையடை = அடைக்கலம். பொய்யடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவன் = இராமன். கடவுள் மெய்யர்க்கு மெய்யராகவும் பொய்யர்க்குப் பொய்யராகவும் இருப்பவராம். ''நம்பினோர்க்கு நடராசா - நம்பாதவர்க்கு எமராசா'' என்பது ஒரு முதுமொழி. கடவுள் உள்ளார் என்பவர்க்கு உள்ளவராகவும், கடவுள் இல்லை என்பார்க்குப் புலப்படாதவராகவும் - அதாவது பொய்யராகவும் இருக்கிறாராம். கம்பர் இந்தக் கருத்தை முன்னோர் மொழிகளிலிருந்து இரவல் வாங்கி யிருக்கலாம். இந்தக் கருத்து, தொண்டரடிப் பொடி ஆழ்வாரின் திருமாலை என்னும் நூலில் உள்ள -

''மெய்யர்க்கே மெய்ய னாகும்
விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்ய னாகும்
புட்கொடி யுடைய கோமான்
உய்யப்போம் உணர்வி னார்கட்கு
ஒருவனென் றுணர்ந்த பின்னை
ஐயப்பா டறுத்துத் தோன்றும்
அழகனூர் அரங்க மன்றே'' (15)

என்னும் பாடலிலும், மாணிக்கவாசகரின் திருவாசகம் - திருப்பொற் சுண்ணம் என்னும் பகுதியில் உள்ள -

''மையமர் கண்டனை வானநாடர் மருந்தினை
மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை அகப்படுத்து
ஆட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே'' (12)

என்னும் பாடலிலும் பொருந்தியிருப்பதைக் காணலாம். கம்பரின் பரந்த நூல் புலமையை இதனால் உணரலாம்.

**வாள் அளித்தல்**

வாலியின் வேண்டுகோளின்படி இராமன் அங்கதனை அடைக்கலப் பொருளாக ஏற்றுக்கொண்டு தன் உடைவாளை உருவி அங்கதனிடம் கொடுத்தான். இராமனது செயலை உலகமெல்லாம் பாராட்டின. இந்நிலையில் வாலி உயிர் நீங்கி வீடுபேறு எய்தினான்:

''தன்னடி தாழ்தலோடும் தாமரைத் தடங்கணானும்
பொன்னுடை வாளைநீட்டி நீயிது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின; இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத்து
உலகனானான்'' (160)

தாமரைத் தடங்கணான் = இராமன். பொறுத்தி = ஏற்றுள் கொள்க. அங்கதனை அடைக்கலமாக ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக இராமன் தன் உடை வாளைக் கொடுத்தான். இது ஒரு மரபுபோலும். இராமன் இறுதியில் பட்டம் சூடிக் கொண்டபோது, அங்கதன் உடைவாள் ஏந்தியதாகக் கம்பர் பாடியுள்ளார். அந்த வாள் இந்த வாள் தானோ! வீட்டு (மோட்ச) உலகம், மேலே தெரியும் வானுலகத்திற்கு அப்பால் இன்னும் மேலே வேறிடத்தில் உள்ளது போலும்! அதனால்தான், 'வானின் அப்புறத்து உலகம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வெந் அடைந்தது**

மார்பில் தைத்த அம்பின் பிடியை வாலி கைவிட்டதும், அந்த அம்பு அவன் மார்பைத் துளைத்து மேலெழுந்து தூய்மையான கடலில் முழுகித் தன்னைத் தூய்மைசெய்து கொண்டு, தேவர்கள் மலர் தூவ, இராமனது முதுகைவிட்டுப் பிரியா திருக்கின்ற அம்பறாத் தூணிக்குள் வந்து புகுந்ததாம்:

**"கையவன் ஞெகிழ்த லோடும்**
**கடுங்கணை கால வாலி**
**வெய்ய மார்பகத்துள் தங்காது**
**உருவி மேக்கு உயர மீப்போய்**
**துய்யநீர்க் கடலுள் தோய்ந்து**
**தூய்மலர் அமரர் சூட்ட**
**ஐயன்வெந் விடாத கொற்றத்து**
**ஆவம்வந்து அடைந்த தன்றே"** (161)

கால வாலி = பகைவர்க்கு எமன் போன்ற வாலி. துய்ய நீர்க்கடல் = உலகைச் சக்கரவாளம் என்னும் மலை சுற்றியுள்ளதாம்; அதனைச் சுத்தோதக சமுத்திரம் என்னும் பெருங்கடல் சுற்றியுள்ளதாம்; அதுதான் தூய்மையான கடலாம். உதகம் = நீர்; சுத்த உதகம் = சுத்தமான நீர்க்கடல். ஆவம் = அம்பறாத்தூணி, வெந் = முதுகு.

**வெந்-சொல்லாய்வு**

இங்கே மாற்றுச் சுவைக்காக, 'வெந்' என்பது தொடர்பான ஒரு சொல் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். தமிழில் வெந் - வென் என்பவற்றிற்கு முதுகு என்பது பொருள். வென்னிடுதல் என்றால் முதுகு காட்டி ஓடுதலாகும். தமிழில் உள்ள 'வென்' என்பதோடு ஒலித் தொடர்புடைய வென்-வெனு-வென்னு என்பன தெலுங்கிலும், 'பென்னு' என்பது கன்னடத்திலும் முதுகைக் குறிக்கும். தெலுங்கில் உகரச் சாரியை மிகவும் பெறப்படும். வெனு-வென்னு என்பன சாரியை பெற்ற உருவம். தமிழ் வகரம் கன்னடத்தில் பகரமாக ஒலிப்பதுண்டு. வெள்ளி என்பது பெள்ளி எனப் படும். கன்னடத்தில் மெய் ஈறு உள்ள சொற்கள் இல்லை. எனவே, வென் என்பதோடு 'உ' சேர்ந்து 'பென்னு' என ஆயிற்று. இந்த வெந் (வென்) என்பதற்கு ஒரு சுவையான இலக்கிய மேற்கோள் காணலாம்.

தலைவன் தலைவியின் மார்பைத் தழுவ விரும்புகிறான். தென்னங் குரும்பை போன்ற அவளுடைய முலைகளின் குளிர்ச்சியைத் துய்க்கத் துடிக்கிறான். அந்நேரம் அவள் நாணத்தால் தலைவன் பக்கம் முதுகைக் காட்டித் திரும்பி நின்றாள். அப்போது அவன் அவளை நோக்கி, குரும்பை போன்ற முலைகளின் தண்மையைத் துய்க்கவிரும்பும் எனக்கு முதுகைக் காட்டலாமா?- என்று வினவுகிறான். இது ஒரு பாடல் பகுதியால் அறியப்படுகின்றது.

**"... ... ... ... ... ... இளங் குரும்பைத்**
**தண்ணீர் அவாவுக்கு வெந் நீர் அளித்தல்தகுதி யன்றே"**

என்பது அப்பாடல் பகுதி. குரும்பை என்பது குரும்பை போன்ற முலை. தண்ணீர் (தண்நீர்) என்பது குளிர்ந்த தன்மை. வெந்நீர் என்பதை வெந் + நீர் எனப் பிரிக்க வேண்டும். வெந் = முதுகை, நீர் = நீங்கள், அளித்தல் =

காட்டுதல் முறையன்று என்று கூறுகிறான். இங்கே, தண்ணீர் (குளிர்ந்த பச்சைத் தண்ணீரை) விரும்பியவர்க்கு, வெந்நீர் (சூடான நீர்) அளித்தல் முறையன்று என இரு பொருள் (சிலேடை) தந்து இப்பகுதி சுவை பயக்கின்றது. இந்த 'வெந்' என்னும் அரிய சொல்லைக் கம்பரும் முதுகு என்னும் பொருளில் ஆண்டுள்ளார். (குறிப்பு:— இது, நூல் பெருக்கத்திற்காக என்னால் எடுத்துக் காட்டப்படவில்லை. சுருக்கத்திற்காக எவ்வளவோ பாடல்களைக் கழித்துவிட்ட யான், நூல் பெருக்கத்திற்காக இதைக் கூற வேண்டிய கட்டாயமில்லை. படிப்பவர்க்கு அலுப்புத் தட்டாமல் இருக்க, ஒரு மாற்றுச் சுவைக்காகவே இதனை இங்கே தந்துள்ளேன்.)

**இராமன் ஏகல்**

வாலி எல்லை இன்ப (வீட்டு) உலகிற்கு ஏகிவிட்டான். இராமன் சுக்கிரீவனின் கையைப் பிடித்துக் கொண்டு, அங்கதனையும் அழைத்துக் கொண்டு அவ்விடத்தினின்றும் அகன்றான். அப்போது வாலியின் மனைவி த்தாரை வந்து வாலியின் உடல்மேல் விழுந்து புலம்பலானாள்:

> **"வாலியும் ஏக, யார்க்கும் வரம்பிலா உலகில், இன்பம்**
> **பாலியா, முன்னர் நின்ற பரிதிசேய் செங்கை பற்றி**
> **ஆலிலைப் பள்ளி யானும் அங்கத னோடும் போனான்**
> **வேல்விழித் தாரை கேட்டாள் வந்துஅவன் மேனி**
> **வீழ்ந்தாள்"** (162)

வரம்பிலா உலகம் = வீடு பேற்றுலகம். இன்பம் பாலியா = வாலிக்கு வீடுபேற்று இன்பத்தைப் பாலித்து — அளித்து. பாலியா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இதனைப் பாலித்து என உடன்பாட்டுப் பொருளாகக் கொள்ளல் வேண்டும். பரிதி சேய் = ஞாயிறின் மகனான சுக்கிரீவன். ஆலிலைப் பள்ளியான் = ஆலிலையில்

படுத்திருக்கும் திருமாலாகிய இராமன். இராமன் சுக்கிரீவனது கையைப் பிடித்துக் கொண்டு சென்றதாகக் கூறியிருப்பது, இயற்கையானதும் சுவை பயப்பதுமாகும். அண்ணன் இறந்து கிடக்கும் இடத்தை விட்டுப் பிரிந்துவர உள்ளம் ஒவ்வாத சுக்கிரீவனைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனது உலகியல் நடைமுறையை ஒட்டி உள்ளது. அழுது புலம்பும் அங்கதனையும் அவ்விடத்தினின்றும் அப்பால் அழைத்துக் கொண்டு போனதும் முற்றிலும் பொருத்தமே. அப்பால் சென்று ஈமச் செயலுக்கு ஏற்றவற்றைச் சூழ்ந்து ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லவா?

**தாரையின் துயரம்**

வாலியின் உடலிலிருந்து வெளியாகும் குருதி தன் மார்பகத்தையும் அவிழ்ந்து தொங்கும் கூந்தலையும் நனைத்துச் செந்நிறம் உடையதாக்க வாலியின் மார்பின் மேல் தாரை புரண்டழுதாள்; குழல், இரங்கல் பண்ணிசைக்கும் விளரி யாழ், வீணை ஆகியவை தோற்கும்படி அழுகுரல் எழுப்பினாள்; விம்மி உருகினாள்; உடையும் கூந்தலும் சரியத் துயரத்துடன் புலம்பலானாள்.

**தாரையின் புலம்பல்**

இவ்வளவு நாளும் உன் தோள்களைச் சேர்ந்து வந்தேன். கரை காணமுடியாத துன்பக் கடலைக் கடக்கும் ஆற்றல் உடையேனல்லேன். என் ஆருயிரே! என் உள்ளமே! என் அரசே! யான் மிகவும் அஞ்சுகிறேன்:

> **"வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்**
> **கரைசேரா இடர் வேலை காண்கிலேன்**
> **உரைசேர் ஆருயிரே என் உள்ளமே**
> **அரைசே யான்இது காண அஞ்சினேன்"** (165)

வேலை = கடல்; அரைசே - அரசே; இது அ-ஐ ஒத்து வந்த இடைப்போலி. என் உயிரே - என் கண்ணே - கண்மணியே

என்றெல்லாம் விளிப்பது எல்லாரும் இயற்கையாகச் செய்யக் கூடியது. ஆனால் 'என் உள்ளமே' என்று உருவகப்படுத்துவது மிகவும் அருமை. இருவர் உள்ளமும் ஒத்திருப்பவை - ஒருவர் எண்ணுவதை மற்றவரும் ஏற்றுக் கொள்வர் - இருவரும் எண்ணுவது இயற்கையாகவே ஒத்திருக்கும் - என்னும் அரிய கருத்தை 'என் உள்ளமே' என்னும் உள்ளத்தை உருக்கும் விளி வெளிப்படுத்துகிறது.

மேலும் புலம்புகிறாள்: துயரம் மிக்கும் இன்னும் தொலையாத என்னையும் அழைத்துக் கொள்ளமாட்டாயா? தெய்வமே! உயிர்போன பின் உடல் நன்றா யிருக்குமோ?

**"துயராலே தொலை யாத என்னையும்**
**பயிராயோ பகை யாத பண்பினாய்**
**செயிர் தீரா வினையான தெய்வமே**
**உயிர் போனால் உடலாரும் உய்வரோ"** (166)

இறந்து போனவர்களை விளித்து என்னையும் அழைத்துக்கொள் என்று கூறி அழுவது உலக இயற்கை. சிலர் உண்மையாகவே இவ்வாறு கூறுவர். சிலர் ஒப்புக்கு இவ்வாறு கூறுவர். ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு வீட்டில் ஒரு குழந்தை செத்துப் போயிற்றாம். அந்த வீட்டில் உள்ள மூன்று கிழவிகள், என்னை ஏன் போட்டு வைத்திருக்கிறது - என்னைக் கொண்டுபோய் இந்தக் குழந்தையின் உயிரை விட்டு வைக்கலாகாதா - என்று கூறி அழுதார்களாம். உடனே எமன் வந்து மூன்று கிழவிகளையும் அழைத்தானாம். ஒவ்வொரு கிழவியும், நான் சொல்லவில்லை - இவள்தான் சொன்னாள் - இவளை அழைத்துப் போ – அவள்தான் சொன்னாள் - அவளை அழைத்துப் போ - என்று எமனிடம் சொன்னதாக நகைச்சுவையுடன் கதை சொல்வர்.

வாலி உயிராகவும் தாரை உடலாகவும் இருந்ததாகத் தாரை கூறுகிறாள். உயிர் பிரிந்து உடலுக்கு என்ன நலம்

இருக்க முடியும்? நேரம் ஆக ஆக நாற்றம் எடுக்கும். அப்புறப்படுத்த வேண்டி வரும். எனவே, என் உயிரே! உயிரற்ற உடலாக என்னைச் செய்து விட்டுப் போயினையே என்னும் பொருளில் தாரை புலம்பியிருக்கிறாள்.

**நன்றி மறந்த நமன்**

ஐயாவே! நீ கடல் கடைந்து தந்த அமிழ்தத்தை எமன் உண்டு உயிர் வாழ்ந்துகொண் டிருக்கின்றான்; ஆனால், நீ செய்த நன்றியை மறந்து உன் உயிரைக் கொண்டு போய் விட்டான். உலகில் ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களோ?

**''நறிதாம் நல்லமிழ்து உண்ண நல்கலின்**
**பிறியா இன்னுயிர் பெற்ற பெற்றிதாம்,**
**அறியாரோ நமனார் அது அன்றெனின்**
**சிறியாரோ உபகாரம் சிந்தியார்''** (167)

நன்றி மறப்பவர்கள் மிகவும் தாழ்ந்தவர்கள் என்னும் கருத்தைத் தாரை வாயிலாகக் கம்பர் அறிவுறுத்தியுள்ளார். இங்கே,

**''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்''** (104)

**''கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன்று உள்ளக் கெடும்''** (109)

**''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று''** (108)

என்னும் குறள்கள் எண்ணத் தக்கன.

மேலும் தாரை புலம்புகிறாள். சிவனை மூன்று வேளையும் பூசனை இயற்றி வழிபடுவாயே. ஏன் இப்போது வணங்காமல் காலம் தாழ்க்கிறாய். உன் தோள்கள் தரை யிலே புழுதியாடிக் கிடக்கின்றனவே. யான் நெடு நேரமாய்ப்

புலம்புவது கண்டும், ஏன் என்னோடு உரையாடாதிருக்கிறாய். யான் செய்த குற்றம் யாதோ. என்னை நோக்கி நீ எனது ஆருயிர் என்றாயே அது பொய்யோ. (168,69,70)

**நெஞ்சில் நிற்றல்**

என் நெஞ்சில் நீயும் நின் நெஞ்சில் யானும் இருப்பதாக எண்ணிக் கொண் டிருந்தோமே - அது பொய் போலும் - ஏனெனில்,- நினது நெஞ்சில் யான் இருந்திருந்தால் உன்னைக் கொன்ற அம்பு என்னையும் கொன்றிருக்க வேண்டும். என் நெஞ்சில் நீ இருந்திருந்தால், என் மேல் அம்பு பாயவில்லை யாதலின் நீயும் சாகாதிருந்திருப்பாய். இவ்விரண்டில் ஒன்றும் நடக்க வில்லை யாதலின், இருவேமும் ஒருவர் நெஞ்சில் ஒருவர் இருந்தோம் என்பது பொய் போலும்.

**"செருவார் தோளநின் சிந்தை உளேன் எனின்**
**மருவார் வெஞ்சரம் எனையும் வெளவுமால்**
**ஒருவே னுள் உளையாகில் உய்தியால்**
**இருவே முள் இருவேம் இருந்திலம்"** (171)

ஒருவர் நெஞ்சில் இன்னொருவர் இருப்பதாகக் கூறுவது அன்பின் நெருக்கத்தையும் உருக்கத்தையும் பெருக்கத்தையும் அறிவிப்பதாகும். மன்மதன் சிவனால் எரிக்கப்பட்டபோது அவன் மனைவி இரதியும் இவ்வாறு கூறிப் புலம்பியதாகக் காளிதாசன் குமார சம்பவத்தில் எழுதியுள்ளார். மிதிலையில் சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்டதும், காதல் மீதூறி ஒருவர் நெஞ்சில் ஒருவர் குடி புகுந்தனராம். இதனை, 'இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்' எனச் சுவைபடக் கம்பர் புனைந்துரைத் துள்ளார். இங்கே, புறநானூற்றில் உள்ள

**"எந்தை வாழி ஆத னுங்க என்**
**நெஞ்சம் திறப்போர் நின் காண்குவரே"** (175)

என்னும் பகுதி ஒப்பு நோக்கத் தக்கது. கள்ளில் ஆத்திரை

யனார் என்னும் புலவர் நெஞ்சில் ஆதனுங்கன் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும்,

**"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து"** (1128)

என்னும் குறளும் ஈண்டு எண்ணி மகிழ்தற்கு உரியது. காதலியின் நெஞ்சில் காதலர் இருப்பதனால், சூடான பொருள் நெஞ்சு வழியாகச் செல்லும் போது காதலர் வெந்து விடுவார் என அஞ்சிக் காதலி சூடான பொருளை உண்பதே இல்லையாம். (ஒருவேளை, தண் என்னும் குளிர்ந்த பொருளை அவள் உண்டால், காதலரைக் குளிர் தாக்கி நடுங்கச் செய்யுமோ?)

இங்கே, பிரபு லிங்க லீலையில் உள்ள ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. அதாவது: சொன்னலாபுரம் என்னும் ஊரைச் சேர்ந்த சித்தராமன் என்பவன் கலியாணபுரம் என்னும் ஊரில் அல்லமர் என்னும் அருளாளரிடம் பேரறிவு பெற்றான். பின்னர், சித்தராமன் தன் நெஞ்சில் கொண்ட ஆசானாகிய அல்லமரோடு தனது ஊராகிய சொன்னலா புரத்தை அடைந்தான்.

**"தொண்ட னாகிய இராமன் சொன்னலா புரத்தில் நெஞ்சில்**
**கொண்ட ஆரிய னோடுஏகி ...... நின்றான்"** (19-5)

இராமன் = சித்தராமன். ஆரியன் = அல்லமர். சித்தராமன் நெஞ்சிலே அல்லமரை வைத்துக்கொண்டு சென்றானாம். இந்தப் பகுதியும் மேல் உள்ளவற்றோடு ஒப்பு நோக்கத் தக்கது.

**வாயாலே...**

அமிழ்தத்தையும் பிறர்க்குக் கொடுத்துவிடக் கூடிய வள்ளலே! உயர்ந்தவன் என்று சொல்லப்படுகின்ற இராமன், மறைந்து நின்று அம்பு எய்து நின்னைக் கொல்லாமல்,

உனது அரசைச் சுக்கிரீவனுக்குக் கொடுத்துவிடு என வாயாலே நீ கூறினால் கொடுத்துவிட மாட்டாயா!

**"ஓயா வாளி ஒளித்துநின்று எய்வான்**
**ஏயா வந்த இராமன் என்றுளான்**
**வாயால் ஏயினன் என்னின் வாழ்வெலாம்**
**ஈயாயோ அமிழ்தேயும் ஈகுவாய்"** (173)

நகத்தைக் கொண்டு கிள்ளி எறிய வேண்டியதைக் கோடரி கொண்டு பிளப்பது போல, வாயாலே முடியக் கூடியதை ஒளிந்து அம்பாலே இராமன் முடித்ததாகத் தாரை எண்ணுகிறாள். இராமன் என்று சொல்கிறார்களே அந்தப் பேர்வழி - என்று எள்ளலாய்க் குறிப்பிடுவதுபோல், 'இராமன் என்றுளான்' எனக் குறிப்பிட்டாள். 'அமிழ்தேயும்' என்பது உயர்வு சிறப்பும்மை கொண்டது.

**வேறு ஓர் வாலி**

என் ஐயனே! நீ நெருக்கினால் மேரு மலையும் தூள் தூளாகிவிடும். அங்ஙனமிருக்க, ஓர் அம்பு உன் மார்பைத் துளைப்பதா? இதை என்னால் நம்ப முடியாது. இது தேவர்கள் செய்த மாயமாயிருக்க வேண்டும் எனக் கூறிய தாரை, ஒருவேளை இங்கே இறந்து கிடப்பவன் வேறு ஒரு பொய் வாலியாக – மாய வாலியாக இருப்பானோ என ஐயுறுகிறாள்:

**"நீறாம் மேருவும் நீ நெருக்கினால்**
**மாறோர் வாளி உன்மார்பை ஈர்வதோ**
**தேறேன் யானிது தேவர் மாயமோ**
**வேறோர் வாலி கொலாம் விளிந்துளான்"**

நீறு = தூள், பொடி. தேறேன் = நம்பேன். விளிதல் = இறத்தல். இறந்து கிடப்பவன் வாலி என்னும் பெயருடைய வேறு ஒருவனாக இருப்பானோ என ஐயுறுவதாக உள்ள பகுதி சுவை நலம் பயக்கிறது.

**கருமமே கட்டளை**

பிறரது துன்பம் போக்கவல்ல வில் மறவராகிய இராமர், மறவர் (வீரர்) எவரும் செய்யத் துணியாத - அடாத செயலைச் செய்துள்ளார். அறநெறி பற்றி நிற்கும் தக்கோர் அளவில் (தக்கோர் விஷயத்தில்), அவர்கள் தக்கோரா யிருப்பதற்கு அவர் புரியும் கருமமே கட்டளைக் கல்லாகும் என்று கூறுவது கட்டுரைக்கும் பொய்யோ?

**"அருமருந்து அற்றம் அகற்றும் வில்லியார்**
**ஒரு மைந்தற்கும் அடாதது உன்னினார்**
**தருமம் பற்றிய தக்கவர்க் கெலாம்**
**கருமம் கட்டளை என்றல் கட்டதோ"** (177)

வில்லியார் = இராமர். மைந்தன் = வலிமையுடைய மறவன். அடாதது = மறைந்து நின்று அம்பு எய்த தகாத செயல். கருமம் = செய்யும் செயல். கட்டளை = உரைகல். கட்டது = கட்டிச் சொல்லும் பொய்க் கூற்று. இங்கே கம்பர், திருவள்ளுவரின்

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்"** (505)

என்னும் குறளை வைத்துக் கொண்டு விளையாடி உள்ளார். அதாவது: ஒருவர் பெருமை உடையவரா அல்லது சிறுமை உடையவரா என்பதைக் கண்டறிய, அவர் செய்த செயலே உரைத்துப் பார்க்கும் உரைகல்லாகும் - என்பது குறள் கருத்து. அதன்படி நோக்கின், இழி செயல் செய்த இராமன் எவ்வாறு தக்கவனாவான்? அவனை எல்லாரும் தக்கவன் என்று பாராட்டுகிறார்களே - அங்ஙனமெனில், 'கருமமே கட்டளைக் கல்' என்னும் கூற்று பொய்யோ? என ஐயுற்றுப் புலம்புகிறாள் தாரை. "பெருமையும் சிறுமையும் தான் தர வருமே" (30) என்பது வெற்றிவேற்கை.

## இறுதிக்கடன்

இன்னவாறு தாரை புலம்பி அழுது துன்பத்தோடு ஒன்றானாள். உணர்விழந்தாள். அப்போது அனுமன், பெண்களைக் கொண்டு தாரையை அந்தப்புரம் ஏகச் செய்து, அங்கதனைக் கொண்டு வாலிக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடனை முடித்து, பின் இராமனிடம் வந்து நடந்தனவெல்லாம் கூறினான். பாடல்கள்:

**''என்றாள் இன்னன பன்னி இன்னலோடு**
**ஒன்றானாள் உணர்வு ஏதும் உற்றிலாள்**
**நின்றாள் அந்நிலை நோக்கி நீதிசால்**
**வன்தாள் மால்வரை அன்ன மாருதி''** (178)

**''மடவா ரால் அம்மடந்தை முன்னர்வாழ்**
**இடம் மேவும்படி ஏவி, வாலிபால்**
**கடன் யாவும் கடைகண்டு கண்ணனோடு**
**உடனாய் உற்ற தெல்லாம் உணர்த்தினான்''** (179)

தாரை 'இன்னலோடு ஒன்றானாள்' என்பது ஓர் அரிய தொடர். துன்பமே வடிவமாக இருந்தாள் என்று பிறர் சொல்லக்கூடும். கம்பரோ, துன்பம் வேறு - இவள் வேறு என்று பிரிக்க முடியாதபடித் துன்பத்தோடு கலந்து ஒன்றாகி விட்டாள் எனக் கூறியுள்ளார். மாருதி = அனுமன். கண்ணன் = இராமன். கடை காணல் = கடைசிக் கடன் செய்தல்.

தாரையை அப்புறப் படுத்தியதும் அங்கதனைக் கொண்டு இறுதிக் கடன் செய்வித்ததும் அனுமன் செயலாகக் கூறப்பட்டிருப்பது ஏன்? உடன்பிறப்புப் பங்காளியாகிய சுக்கிரீவன் இவற்றையெல்லாம் செய்தான் என்று ஏன் கூறவில்லை? வாலியைக் கொல்லச் செய்தவன் சுக்கிரீவனே யாதலால், தன்னைக் கண்டு பிறர் தாழ்வாக எண்ணுவர்

என்ற அச்சத்தாலும் நாணத்தாலும் முழு அளவு பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்தான் என்று கூறலாம் அல்லவா?

அடுத்து, இவற்றையெல்லாம் அனுமன் செய்த பின்னர், இராமனிடம் சென்று நடந்தனவற்றையெல்லாம் கூறினானாம். வாலியைக் கொன்றவன் இராமன் ஆதலின், அவன் ஈமக் கடனைக் காணாமல் ஒதுங்கி எட்டியே இருந்தான். அதனால் அனுமன் சென்று நடந்தன கூறவேண்டியவனானான்.

## ஞாயிறு மறைவு

நிலம் பொலிவு இழக்கும்படி ஞாயிறு மேற்கு மலையில் போய் மறைந்தான். அப்போது ஞாயிறு மண்டலம், பெரிய மறவனாகிய வாலியின் முகத்தை ஒத்து வெண் சிவப்பு நிறம் தட்டியது:

> **"அகம் ஏரற்று உகமீது அருக்கனார்**
> **புக மேலைக்கிரி, புக்க போதினில்**
> **நகமே ஒத்த குரக்கு நாயகன்**
> **முகமே ஒத்தது மூரி மண்டிலம்"** (180)

அகம் = கிட்கிந்தையாகிய இடம். ஏர்அறல் = பொலிவு குன்றல். அருக்கனார் = ஞாயிறு. நகம் = மலை. மலையை ஒத்த குரங்கு நாயகன் = வாலி. மூரி மண்டிலம் = சிறந்த ஞாயிறு மண்டிலம். நிலம் பொலிவு குன்றும்படி ஞாயிறு மறைந்தது என்பதில் உள்ள உள்ளுறை உவமம், கிட்கிந்தையில் உள்ளவர்கள் பொலிவற்று வருந்தும் வண்ணம் வாலி மறைந்தான் என்பதாம். ஞாயிறு மறையும் வேளையில் ஞாயிறு மண்டிலம் வெண் சிவப்பாக – அதாவது செவ்வானமாக இருக்கும். இதற்குக் கம்பரால் கூறப்பட்டுள்ள உவமை, வாலியின் முகமாகும். ஒருவர் இறந்தபோது, முகம் சிரித்தாற் போல் அழகிட்டிருக்கிறது என்று சொல்லும் உலகியல் ஒன்று உண்டு. அவ்வாறே, இயற்கையாக வெண்ணிறமுடைய

வாலியின் முகம் சிவந்து அழகிட்டிருப்பதால், ஞாயிறு மண்டிலத்திற்கு ஒப்புமையாகக் கூறப்பட்டது! கம்பரின் உவமை நயம், உலகியலை ஒட்டி இயற்கையாக அமைந்து சுவை பயக்கிறது. மேல் கடலுக்கு நடுவே மலை இருப்பதால் மேலை மலையில் ஞாயிறு மறைந்ததாக அறிவிக்கப் பட்டுள்ளது.

**இராமனின் நிலைமை**

ஞாயிறு மறைந்ததும், இராமன் சீதையைப் பற்றி எண்ணி உள்ளம் குழைந்து வருந்தினான். ஒருவாறு இரவு என்னும் கடலை நீந்திக் கடந்தான்:

**''மறைந்தான் மாலை அருக்கன், வள்ளியோன்**
**உறைந்தான் மங்கை திறத்தை உன்னுவான்**
**குறைந்தான் நெஞ்சு குழைந்து அழுங்குவான்**
**நிறைந்து ஆர்கங்குலின் வேலை நீந்தினான்''** (181)

அருக்கன் = ஞாயிறு. வள்ளியோன் = இராமன். கங்குலின் வேலை = இரவாகிய கடல். சிலர் ஒருவர் வீட்டு இழவுக்குச் சென்று அழும்போது தங்கள் குறையையும் மறைவாக எண்ணி அழுவார்களாம். இங்கே சூழ்நிலை வருத்தமாயிருந்த போது இராமனும் அவன் நிலையை எண்ணி வருந்தினானாம். தாடி பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்பு கேட்ட கதையாய், இந்த இடத்தில் இப்போது இராமனது வருத்தத்தைக் கம்பர் கூறியிருக்க வேண்டியதில்லை. இருப்பினும், நீண்ட இடைவெளிக்குப்பின் கதைத் தொடர்புக்காக இதைக் கூறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கதை கட்டுவதில் கம்பன் வல்லவனே!

**நடுநிலைத் தீர்ப்பு**

கம்பராமாயணத்தில் உள்ள மிக்க சுவையுள்ள பகுதி களுள் வாலி வதைப் படலமும் ஒன்றாகும். வாலியும் இராமனும், இக்காலத்தில் நீதிமன்றத்தில் வாதிடுவது

போலவே வாதிட்டுள்ளனர். படிக்கப் படிக்க அவ்வாதங்கள் சுவை பயக்கின்றன.

இது தொடர்பாக,-இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது பொருந்துமா-பொருந்தாதா-என்னும் தலைப்பில் பட்டி மன்றங்களும் வழக்காடு மன்றங்களும் இக்காலத்தில் 'கம்பன் விழா' என்னும் நாடக அரங்குகளில் நடைபெறுகின்றன. பொருந்தும் எனச் சிலரும் பொருந்தாது எனச் சிலரும் வாதிடுகின்றனர். இராமாயணம் இராமனுக்குப் பெருமை சேர்க்கும் நூல் ஆதலின், நடுவரா யிருப்பவர், இராமன் செய்தது பொருத்தமே எனத் தீர்ப்பு கூறுவதே பெரும்பாலா யுள்ள நடைமுறை. இராமன் செய்தது பொருந்தாது என்று ஒருவர் ஒருமுறை தீர்ப்பு கூறியதற்காக அவரைப் பின்னால் தாழ்த்திப் பேசியவர்களும் உளர். இங்கே நாம் மேற்கொள்ளப் போகும் தீர்ப்பைப் பற்றி ஒரு சிறிது ஆய்வு செய்ய வேண்டும்.

மிகவும் உயர்ந்தவனாகக் கூறப்பட்டுள்ள இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது தவறேயாகும். ஆனால் சூழ்நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே, இராமன் தெய்வப் பிறவி என்பதை மறந்துவிட்டு மனிதனாகவே கொள்ளல் வேண்டும். இராமன் சுக்கிரீவனின் துணையை நாடியது தன்னலமே. இழந்து விட்ட தன் மனைவியை மீட்க எப்படியாவது முயல வேண்டும்; அதனால் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு உதவ வேண்டும். தன்னலம் ஒருபுறம் இருக்க, வாலி மற்றொருவனுடைய (சுக்கிரீவனுடைய) மனைவியைக் கைப்பற்றிக் கொண்டான் என்பதை அறிந்ததுமே, மனைவியைப் பறி கொடுத்த இராமனுக்கு வாலிமேல் கடுமையான வெறுப்பு ஏற்பட்டிருப்பது மனித இயற்கையே. எனவேதான் மறைந்திருந்து வாலியைக் கொன்றான். இங்கேயுள்ள இராமன் மனிதனாயிற்றே.

## மனிதனைத் தேடுகிறேன்

இப்போது சிலர் மனிதனைத் தேடுவதாகப் பேச்சிலும் எழுத்திலும் தெரிவித்துக்கொண் டிருக்கின்றனர். இற்றைக்கு (கி.பி. 1992) இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், கிரேக்க நாட்டில், டயோனியசு என்னும் பெரியார், பட்டப் பகலில் கையில் விளக்கை வைத்துக்கொண்டு பலர் போகும் தெரு வழியே ஏதோ தேடிக்கொண்டு சென்றாராம். அவரைக் கண்ட ஒருவர், என்ன தேடுகிறீர்கள் என்று வினவினாராம். அதற்கு அப்பெரியார், மனிதர் ஒருவராவது கிடைப்பாரா என மனிதரைத் தேடுகிறேன் என்று கூறினாராம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், திருவொற்றியூரில், நெல்லிக்காய்ப் பண்டாரத் தெருவில், உடையில்லாத அம்மணத் துறவி ஒருவர் ஒரு திண்ணையில் அமர்ந்து கொண்டு, தெருவே போகின்றவர்களையும் வருகின்றவர்களையும் பார்த்து, இதோ ஒரு நாய் போகிறது- இதோ ஒரு நரி போகிறது - இதோ ஒரு பன்றி போகிறது - இதோ ஒரு மிருகம் போகிறது. என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாராம். நடமாடிய மனிதர்கள் அவருக்கு மனிதராகத் தெரியவில்லை. அங்கே நடமாடியவர்கள், இது ஏதோ ஒரு பைத்தியம் என்று சொல்லிக்கொண்டு போய் விட்டார்களாம். இப்போது அவர் இவ்வாறு கூறின், இக்காலத்தார் சிலராவது அவரது உடலைப் பிடித்துவிட்டு ஒத்தடம் கொடுக்கச் செய்துவிடுவார்கள்.

மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளையும் கூர்ந்து நோக்குங்கால், டயோனியசும் திருவொற்றியூர்த் துறவியும் செய்தது தவறானது என்ற உண்மை தெரியவரும். மனிதர்கட்கு நடுவில் இருந்துகொண்டே மனிதரைத் தேடுவதாகச் சொல்வது பொருந்தாது. மனிதர் என்றால் இப்படித்தான் இருப்பர். இப்படி இருப்பவர்களே மனிதர்கள்.

என்னென்ன தீமைகளும் குறைபாடுகளும் இருப்பதனால் மனிதர்களை மனிதராகச் சிலர் எண்ணவில்லையோ அந்தத் தீமைகளும் குறைபாடுகளும் உடையவர்களே மனிதர்கள் ஆவர். ஏசுபிரான், புத்தர், காந்தியண்ணல், வடலூர் வள்ளலார் போன்றவர்கள் இதற்கு விதிவிலக்கானவர்கள் - இவர்கள் தெய்வநிலை பெற்றவர்கள். எல்லோரையும் இவர்களைப் போல எண்ணிவிடலாகாது.

எனவே, மனிதர்களை மனிதர்களாகத்தான் எண்ண வேண்டுமே தவிர, அவர்களை மனிதநிலைக்குத் தாழ்ந்தவர் களாகத் தவறாக எடைபோட்டு, மனிதர் அல்லாதாரைத் தேடிக்கொண்டு - மனிதரைத் தேடுகிறேன் என்று சொல்லுதல் பொருந்தாது. மனிதர் உயர்ந்த பண்புடைய வராகத் திகழ்தல் வேண்டுமென எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஆனால், உயர் பண்பில்லா மனிதர்களை மனிதர்கள் அல்லர் என்றெண்ணுவது தவறு. எந்தக் காலத்தில் எல்லா மனிதர் களும் திருந்தினார்கள்? - இல்லையே!

எனவே, மனிதனாக வந்த இராமன், மனைவியைப் பறிகொடுத்த இராமன், மாற்றான் மனைவியைப் பெண்டாடியவன் வாலி என்பதை அறிந்த இராமன், மறைந்திருந்து வாலியைக் கொன்றது மனித இயற்கையே - இராமனைப் பொறுத்த வரையிலும் பொருத்தமேயாகும்.

மற்றும், - வாலியைக் கொன்று சுக்கிரீவனைத் துணை யாகக் கொண்டு ஆறாவது தம்பி என நாடகம் ஆடுவதும், தமையனாகிய இராவணனைக் கொல்லத் தம்பியாகிய வீடணனைப் பயன்படுத்திக் கொண்டு அவனை ஏழாவது தம்பி என நாடகம் ஆடுவதும், நூற்றுக்கு நூறு தன்னலம் நிறைந்த மனித அரசியலே யாகும்.

இவற்றை யெல்லாம் இணைத்து நோக்கும்போது, வாலி வதைப் படலத்தின் முடிவு பொருத்தமே யாகும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம்.

# 8. அரசியல் படலம்

சுக்கிரீவனது அரசோம்பும் செயலைப் பற்றிய தாதலின் இது இப்பெயர்த் தாயிற்று. சில சுவடிகளில் சுக்கிரீவன் முடி சூடு படலம் எனவும், வேறு சில சுவடிகளில் சுக்கிரீவனை முடி சூட்டு படலம் எனவும் இதற்குப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. சில சுவடிகளில், தாரை புலம்புறும் பகுதி இந்தப் படலத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது. வேறு சில வற்றில் தாரை புலம்புறு படலம் என்னும் பெயரில் தாரையின் புலம்பல் இடம் பெற்றுள்ளது.

## ஞாயிறு தோற்றம்

ஞாயிறு, தன் மகன் சுக்கிரீவன் முடிசூடிக் கொள்ளப் போகிறான் என்னும் பெரிய மகிழ்ச்சியுடன், அவனது அரண்மனைக்குச் செல்வத் திருமகள் வரவேண்டும் என்னும் நோக்கத்தோடு, அவள் தங்கியிருக்கும் தாமரையின் இதழ் களாகிய கதவுகளைத் தன் கதிராகிய கையால் திறந்து விட்டான்:

**''புதல்வன் பொன் மகுடம் பொறுத்தலான்**
**முதல்வன் பேர் உவகைக்கு முந்துவான்**
**உதவும் பூமகள் சேர ஒண்மலர்க்**
**கதவம் செய்ய கரத்தின் நீக்கினான''** (1)

புதல்வன் = ஞாயிற்றின் மகனாகிய சுக்கிரீவன். முதல்வன் = ஞாயிறு. பூமகள் = திருமகள். காலையில் இயற்கையாக ஞாயிறு எழுந்ததை, மகன் முடி சூடிக் கொள்வதைக் காண எழுந்ததாகவும், ஞாயிறு தோன்றியதும் இயற்கையாகத் தாமரை இதழ்கள் விரிந்து மலர்வதை,

ஞாயிறு தன் கதிர்க்கையால் திறந்து விட்டதாகவும் கம்பர் தாமாகக் காரணம் கற்பித்து ஏற்றியுள்ளதால், இந்த அமைப்பு தற்குறிப்பேற்ற அணி எனப்படும். இதழ்கள் கதவுகளாகவும், ஞாயிற்றின் கதிர் கையாகவும் உருவகிக்கப் பட்டுள்ளன. சுவையான பாடல் இது. ஞாயிறு இவ்வாறு பலவற்றைக் காணப் புறப்பட்டதாகப் பல இலக்கியங்களில் காணலாம்.

## முடி சூட்டு

இராமன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டி வைக்குமாறு இலக்குவனுக்குப் பணித்தான். முடி சூட்டற்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களையும் செய்யுமாறு இலக்குவன் அனுமனுக்குப் பணித்தான். அவ்வாறு எல்லாம் செய்யப் பெற்றதும் இலக்குவன் சுக்கிரீவனுக்கு மணிமுடி சூட்டினான். முடிசூடிக் கொண்ட சுக்கிரீவன் சென்று இராமனை வணங்கினான்.

## இராமனின் அறிவுரை

முடிசூடிக் கொண்டு வந்து தன்னை வணங்கிய சுக்கிரீவனுக்குப் பின்வருமாறு இராமன் அறிவுரை நல்கினான்.

உன் இருப்பிடம் அடைந்து, செய்ய வேண்டியவற்றை விதி முறைப்படி நன்கு எண்ணிப் பார்த்து, அரசாட்சிக்கு ஏற்ற முறையில் செய்க. மற்றும், போரில் மாண்ட நின் தமையன் மகனாகிய அங்கதனையும் உடன் தழுவிக்கொண்டு செல்வச் செழிப்புடன் வாழ்வாயாக.

**''ஈண்டுநின் றேகி நீநின் இயல்பமை இருக்கை எய்தி**
**வேண்டுவ மரபின் எண்ணி விதிமுறை இயற்றி வீர**
**பூண்ட பேரரசுக் கேற்ற யாவையும் புரிந்து, போரில்**
**மாண்டவன் மைந்த னோடும் வாழ்திநல் திருவின் வைகி''**

(7)

இராமனின் அரசியல் சூழ்வு அறிவு (இராச தந்திர அறிவு) இங்கே வெள்ளெனப் பளிச்சிடுகின்றது. இராமன் முதலில் முடி பெற்றுப் பின் பங்காளிச்சி யாகிய கைகேயி யால் முடியை இழந்தவன். சில இடங்களில் அண்ணன் இறந்துவிட அவன் மகனுக்குப் பட்டம் கட்டாமல், தம்பி பட்டம் சூட்டிக் கொண்டதும், அது பொறாமல் அண்ணன் மகன் தான் பட்டம் பெறுதற்காகப் போராடுவதை வரலாற்றிலும் காணலாம் - நம் காலத்திலும் காணலாம். எனவே, இராமன் சுக்கிரீவனை நோக்கி, உனக்காக என்னால் கொல்லப்பட்ட உன் தமையன் மகனாகிய அங்கதனைத் தட்டிக் கொடுத்துத் தழுவிக்கொண்டு ஆட்சி புரிவாயாக என அறிவுரை ஈந்தான்.

**அகலாது அணுகாது**

மேலும் இராமன் கூறுகிறான். உண்மை அறிவு மிக்க அமைச்சர்களோடும், குற்ற மற்ற நல்லொழுக்கத்தோடு தொழிலில் திறமையுமுடைய போர்ப் படைஞரோடும், உண்மையான தூய அன்போடு பழகுக. ஆனால், அவர் களோடு பழகுவது, மிகவும் எட்டிச் செல்லாமலும் மிகவும் நெருங்காமலும் தேவரைப் போல் நடுத்தரமான நிலையைப் பின்பற்றிச் செயலாற்றுக.

**''வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்த ரோடும்**
**தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவ ரோடும்**
**தூய்மைசால் புணர்ச்சி பேணித் துகளறு தொழிலை யாகிச்**
**சேய்மையோடு அணிமை இன்றித் தேவரின் தெரிய நிற்றி''**
(8)

வாய்மையும் அறிவும் உடைய அமைச்சரோடு என்பதி லிருந்து அத்தகையோரை அமைச்சராக அமர்த்திக் கொள்ள வேண்டும் என்பதும், தீமை தீர் ஒழுக்கமும் தொழில் திறமையும் உடைய படைஞர் என்பதிலிருந்து அத்தகை யாரைப் படைஞராய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும்

உய்த்துணரப் படும். குளிர் காய்பவர் நெருப்பை விட்டு சேய்மையில் இருந்தால் குளிர் போகாது–மிகவும் அண்மையில் நெருங்கின் வெப்பம் சுடும்-ஆதலின் நடுத்தரமான இடத்தில் அமர்ந்து குளிர் காய வேண்டும். இது, ஆசிரியரிடத்தில் மாணாக்கர் பழகுவதற்கும் பின்பற்ற வேண்டிய விதியுமாகும் என்பதனை, நன்னூலில் உள்ள

**"அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி..."** (46-1)

என்னும் நூற்பாவால் அறியலாம். திருக்குறளில் மன்னரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர் முதலானோரும் இம்முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதனை,

**"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"** (691)

என்னும் குறட்பாவால் தெளியலாம். திருக்குறளை நன்கறிந்த கம்பர், திருக்குறளில் உள்ளதை மாற்றிப் போட்டு, அரசன் அமைச்சரிடமும் படைஞரிடமும் அவ்வாறு ஒழுக வேண்டும் எனக் கூறிவிட்டார். அரசன் அவ்வாறு ஒழுகினால், அமைச்சரும் படைஞரும்கூட அவ்வாறு ஒழுகியதாகவே பொருள்படும். அதாவது - அரசன் சேய்மையில் இருந்தாலும் அண்மையில் இருந்தாலும், அவர்களுக்கும் அரசனுக்கும் உள்ள இடைவெளி அத்தன்மையதேயாகும்.

**இன்னுரை நல்குக**

சுக்கிரீவா! மேலே புகை தெரிந்தால் கீழே நெருப்பு இருக்கும் என்பதை அறியும் உய்த்துணர்வு உலகத்தார்க்கு உண்டு. இவ்வாறு தாமாக அறிவதோடு நூலறிவும் வேண்டற்பாலது. பகை உள்ளம் உடையவ ராயினும் அவர்கட்கும் பயன் தரத்தக்க பண்பினின்றும் நீங்காமல் நகைமுகங் காட்டி நாவால் இனிய நல்லுரை நல்க வேண்டும்.

"புகைஉடைத்து என்னின் உண்டுபொங்கு
அனல் அங்கு என்றென்னும்
மிகையுடைத்து உலகம், நூலோர்
வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும்
பயனுறு பண்பின் தீரா
நகையுடை முகத்தை யாகி
இன்னுரை நல்கு நாவால்"

ஒன்றைத் தீர்மானித்து உறுதி செய்வதற்கு உதவியாகக் கருத்தளவை, நூல் அளவை, காட்சியளவை என மூன்று அளவைகள் உண்டு. இவை, வடமொழியில் அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம், பிரட்சியட்சப் பிரமாணம் என முறையே கூறப்படும். உய்த்துணர்வாக—உத்தேசமாகக் கருத்தால் அறிவது கருத்து அளவை. நூல்களைப் படித்துப் பல செய்திகளைத் தெரிந்து கொள்வது நூல் அளவை. நேரில் கண்ணால் கண்டு அறிவது காட்சி அளவை. இம் மூன்றிற்கும் மேல் நான்காவது அளவை ஒன்றும் உண்டு. 'கண்ணால் காண்பதும் பொய் — காதால் கேட்பதும் பொய் — தீர விசாரிப்பதே (ஆராய்வதே) மெய் என்னும் ஆராய்ச்சி அளவைதான் அது. இங்கே இராமனால் சுக்கிரீவனுக்குப் பரிந்துரைக்கபடுவது இரண்டாவது அளவையாகும். பெரும்பாலான மக்கள் தமது சொந்தக் கருத்தளவும் மேலும் காட்சியறிவும் உடையவராயிருக்கக் கூடும். இவை போதா.

இவை இரண்டும் ஒருவர் தம்மளவில் — தம் காலத்தில் மட்டும் நடப்பவற்றை அறிய உதவும். ஆனால், பல காலங்களில் — பல இடங்களில் வாழ்ந்த பலதரப் பட்ட மக்கள் பல துறைகளைப் பற்றி எழுதியுள்ள நூல் களைப் படிப்பதன் வாயிலாக, படித்தவரும், பலகாலங்களில் பல இடங்களில் வாழ்ந்து பெற்ற பல தரப்பட்ட — பல துறைகளைச் சேர்ந்த அறிவைச் சுருங்கியகாலத்தில்

சுருங்கிய முயற்சியில் பெற்றவராவார். அதனால் அரசியல் முதலிய துறைகளைப் பற்றிய பல நூல்களையும் படிக்க வேண்டும். நூலோர் வினையம் = நூல்களில் சொல்லப்பட்டுள்ள அறிவுரைச் சூழ்வுகள், பகைவரிடத்தும் பயன் நல்கி சிரித்த முகத்துடன் இன்னுரை பேசவேண்டும் – என்கிறான் இராமன். சாம தான பேத தண்டம் என்பவற்றில், இன் முகத்துடன் இன்னுரை கூறிப் பயனும் உண்டாகச் செய்வது சாமமும் தானமுமாகும். பகைவரை வெல்வதற்கு இது பெரிய சூழ்ச்சியாகும்.

எது நல்க முடியாவிடினும் இன்னுரை வழங்கலாமே! ''யாவர்க்குஆம் பிறர்க்கு இன்னுரை தானே' என்பது திருமந்திரம். 'எதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்'' என்பது பாரதியாரின் பயன்மிக்க உரையாகும். ஈண்டு,

**''நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு''** (995)

என்னும் குறட்பா எண்ணத்தக்கது.

**கருதிக் காண்டி**

தேவர்க்கும் மருட்சி தரும் அரிய செல்வம் உன்னிடம் வந்துள்ளது. அதைக் கவனமாய்க் கருதிக் காத்தால்தான் உன்னுடையதாக நிலைத்திருக்கும். மூன்றுலகங்களிலும் சரி — முனிவர்கட்குக் கூட, நண்பர், அயலார், பகைவர் என மூவகையார் உளர் என்பதை நினைவில் கொள்க.

**''தேவரும் வெஃகற்கு ஒத்த செயிரறு செல்வம் அஃதுன்**
**காவலுக்கு உரிய தென்றால் அன்னது கருதிக் காண்டி**
**ஏவரும் இனிய நண்பர் அயலவர் விரவார் என்று**
**மூவகை இயலோர் ஆவர் முனிவர்க்கும் உலகம் மூன்றின்''**
(10)

சுக்கிரீவா! விழிப்புடன் இருந்து காத்தால்தான் அரசு உன்னதாக நிலைக்கும். நமக்கு எல்லாரும் நண்பராகவோ,

பொதுவானவராகவோ இருப்பர் - பகைவர் இரார் — என்று எண்ணி ஏமாந்து விடாதே. முனிவர்கட்குக் கூட பகைவர் உளர். இந்த உலகத்தில் மட்டுமன்று — மூன்று உலகத்திலும் உண்டு — எனவே, பகை வளர்க்காதே. யார் யாரிடம் எவ்வெவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமோ — அவ்வவ்வாறு நடந்து கொள்வாயாக — என்ற அறிவுரை மிகவும் இன்றியமையாதது. எடுத்துக் காட்டாக விசுவா மித்திர முனிவரைக் கொள்ளலாம். முனிவர்க்கும் என்பதில் உள்ள 'உம்' உயர்வு சிறப்பு உம்மை.

**கூனியால்**

மேலும் கேள்! எவரையும் எளியவர் - அற்பர் - சிறியார் என்று எண்ணிச் செய்யக் கூடாதனவற்றைச் செய்துவிட லாகாது. யான் இளமையில் கூனியின் முதுகில் மண் உருண்டையை எய்ததாலன்றோ, எனக்கு இந்நிலை எய்த, யான் துயர்க் கடலில் வீழ்ந்து தவிக்கிறேன்.

> **"சிறியர் என்றிகழ்ந்து நோவு**
> **செய்வன செய்யல் மற்றிந்**
> **நெறியிகந்து யானோர் தீமை**
> **இழைத்தலான் உணர்ச்சி நீண்டு**
> **குறியதாம் மேனி யாய**
> **கூனியால் குவவுத் தோளாய்**
> **வெறியன எய்தி நொய்தின்**
> **வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்"** (12)

கூனி யென்னும் மந்தரையால் தனக்கு நேர்ந்த பட்டறிவை இராமன் கூறியுள்ளான். எவரையும் எள்ளுதல் கூடாது தானே?

**வேறு உவமை இல்லை**

உலகில் மங்கையர் தொடர்பால் நேர்ந்த சாவுகள் பல உண்டு. அதற்குச் சான்று வேண்டுமா! உன் மனைவியைக்

கவர்ந்த வாலியின் வரலாறே போதுமே? மற்றும், மங்கையர் தொடர்பாகத் துன்பமும் பழியும் உண்டாகும் என்பதை எங்களைக் கொண்டும் உணர்ந்து கொள்ளலாமே. இதற்கு வேறு உவமை வேண்டிய தில்லையே.

**"மங்கையர் பொருட்டால் எய்தும்**
**மாந்தர்க்கு மரணம் என்றல்**
**சங்கையின் றுணர்தி வாலி**
**செய்கையால் சாலும் இன்னும்**
**அங்கவர் திறத்தி னானே**
**அல்லலும் பழியும் ஆதல்**
**எங்களிற் காண்டி யன்றே**
**இதற்குவேறு உவமை உண்டோ?"** (13)

மங்கையரால் சாவு உண்டு என்பதற்கு வாலி சான்று. அவர்களால் அல்லலும் பழியும் உண்டாகும் என்பதற்கு இராமனும் இலக்குவனும் சான்று. அதாவது: மாய மானைப் பிடித்துத் தரும்படி சீதை வற்புறுத்தியதாலேயே இராமனுக்கு இவ்வளவு அல்லல் நேர்ந்தது. இராமன் சீதைக்குக் காவலாக இலக்குவனை நிறுத்திவிட்டுத் தான் மாய மானின் பின் தொடர்ந்து அதன் மேல் அம்பு எய்த போது, அது இலக்குமணா - இலக்குமணா என்று கத்தியதைக் கேட்டு, இராமருக்கு ஏதோ தவிப்பு-உடனே செல் எனச் சீதை ஏவ, என் அண்ணனுக்கு ஒரு தீங்கும் வராதென்று இலக்குவன் கூற, நீ என்னை அடைவதற்காகப் போக மறுக்கிறாய் என இலக்குவன்மேல் பழி சுமத்தினாள். பெண்களால் அல்லலும் பழியும் உண்டு என்பது இதுதான். 'ஆவதும் பெண்ணால்-அழிவதும் பெண்ணால்'- என்னும் பழமொழியை ஈண்டு நினைவு செய்யின், வனிதையர் யாரேனும் வருந்துவரோ? இதை யான் (சு.ச.) சொல்ல வில்லை - இராமன் சொல்லி யுள்ளான்-அதுவும் யாரேனும் சொல்லக் கேட்டோ அல்லது நூலில் படித்தோ சொல்ல வில்லை - தன் வாழ்க்கையில்

கண்ட உண்மையைக் கொண்டே இவ்வாறு கூறுகிறான். இராமனின் பெருந்துயரம் இங்கே பளிச்சிடுகிறது.

**தாயென......**

குடிமக்கள், நின்னை அரசன் மட்டும் அல்லர் இவர் - தாயுமாவார் இவர் என்று போற்றும்படித் தக்கோரைப் பேணுக. இந்தப் பொதுவிதி ஒருபுறம் இருக்கட்டும். தீயவர்கள் தீமை செய்தபோது, உரிய முறையில் அவர் களைத் தீப்போல சுட்டு ஒறுப்பாயாக:

**"நாயகன் அல்லன் நம்மை நனிபயந்து எடுத்து நல்கும்**
**தாயென இனிது பேணித் தாங்குதி தாங்கு வாரை**
**ஆயது தன்மை யேனும் அறவரம்பு இகவா வண்ணம்**
**தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை"** (14)

தீயவரை ஒறுப்பதென்றாலும் கொடுமையான முறையில் ஒறுத்தல்கூடாது. எந்த எந்தக் குற்றத்திற்கு எந்த எந்த ஒறுப்பு தரலாமோ, அதை அதைத்தான் தரவேண்டும். அந்தக் காலத்தில் இவ்வளவு அறிவுரை கூறியிருப்பது வியப்பளிக்கிறது. ஆனால், இந்தக் காலத்தில், குற்றம் புரிந்தவர்களுள் சிலர் தப்பித்துக் கொள்வதையும் - சிலர் அளவு கடந்த கொடுமைக்கு ஆளாகுவதையும் உலக அரங்கில் காண்கிறோம். இங்கே,

**"குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்"** (549)

**"கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனோடு நேர்"** (550)

**"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று**
**வெள்வேல் கொற்றம் காண்"** (20 : 64, 65)

என்னும் பாடல் பகுதியும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கன. திருவள்ளுவரிடமும் இளங்கோ வடிகளிடமும் போய்த்தான்

சான்று தேடவேண்டுமா என்ன! சிற்றூர்களில் உள்ள எளிய நம் 'அண்ணாத்தைகள்' கூறும் பழமொழியே சான்றாகப் போதுமே! அதாவது:

**"ஆடிக்கறக்க வேண்டிய மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்**
**பாடிக்கறக்க வேண்டிய மாட்டைப் பாடிக்கறக்க வேண்டும்**
**அப்படியும் முடியாவிடின் அடித்துக் கறக்க வேண்டும்"**

என்பதுதான் அது. "அற வரம்பு இகவா வண்ணம்" என்பது மிகவும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு இராமன் சுக்கிரீவனுக்குப் பல வகையான அரசியல் நெறிகளைக் கூறிப் பின்னர் நீ கிட்கிந்தை மலைப்பகுதியை அடைந்து அரசுசெய் - மாரிக் காலம் முடிந்ததும் பெரும் படையுடன் என்னிடம் வருவாயாக என்றான். அப்போது, இராமனை நோக்கி, நீங்கள் இல்லாத எங்கள் அரசுச் செல்வம் வறுமையினும் வறுமை போன்றதே. அதனால், சீதையைத் தேடுவதற்கு உரிய காலம் வரும் வரையும் நீங்களும் எங்களுடன் வந்து தங்கியிருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டான்.

### இராமனது மறுமொழி

சுக்கிரீவ! யான் நொன்புக் கோலத்துடன் உள்ளவன்; எனவே, இன்பங்கள் நிறைந்த அரசத் தலைநகரில் அரசுச் சார்பில் இருத்தக் கூடாது. மற்றும், நான் அங்கு வந்திருப் பின், என்னை ஓம்புதலிலேயே உங்கள் காலம் கழியும்; அரச வினைகளை ஆற்ற முடியாமல் போகலாம். (20)

பதினான்கு ஆண்டுகள் காட்டில் இருப்பதாக வாக்குறுதி கொடுத்து வந்துள்ளேன். எனவே யான் அங்கு வரல் தகாது. மேலும் சீதையைப் பிரிந்த எனக்குச் சீதையோடு கூடி வாழ்வதே சிறந்தது. (21)

மேலும் கேள்! மனைவியை அரக்கன் கொண்டுபோய் வைத்திருக்கையில் அவளை மீட்பதைவிட்டு, இராமன் தன்

நண்பர்களோடு அளவற்ற இன்பங்களை துய்த்துக் கொண்டுள்ளானே - என்ன ஒழுங்கு இது என்று உலகம் பேசக்கூடிய பழி மூன்று உலகங்களும் முற்றும் அழியும் வரையும் என்றும் நிலைத்திருக்கும். இது முறையோ? (22)

எனவே, நீ போய் நல்ல முறையில் அரசு செய்து நான்கு திங்கள் காலம் கழித்துக் கடல் அனைய சேனையோடு வருக என்று அனுப்பினான். பின் அங்கதனை நோக்கி, நீ சுக்கிரீவனை உன் சிற்றப்பன் என்று கருதாமல் உன்னைப் பெற்ற தந்தையாகவே கருதி ஒற்றுமையுடன் உதவி வருவாயாக என்று கூறி அனுப்பினான். இந்த அறிவுரை மிகவும் இன்றியமையாதது.

பின்னர், அனுமனை நோக்கி, நீயும் சுக்கிரீவனோடு சென்று அவனுக்குத் துணை யிருப்பாயாக என்ற இராமனுக்கு, அடியேன் உம்முடனேயே இருந்து பணிவிடை செய்வேன் என்றான் அனுமான். அப்போது சிறந்ததோர் அறிவுரையை இராமன் பகர்ந்தான்:

ஒரு பேரரசை ஒருவன் ஆண்டபின் வேறொருவன் வலியப் பிடித்துக் கொண்டால், அதனால் நன்மைகளே யன்றித் தீமைகள் பலவும் நேரக்கூடும். நின்னை ஒத்த வல்லவர் இருந்தால்தான் எல்லாவற்றையும் நிலைக்கச் செய்ய இயலும். எனவே நீயும் செல்வாயாக - என்றான் இராமன்:

**"நிரம்பினான் ஒருவன் காத்த**
**நிறையரசு இறுதி நின்ற**
**வரம்பிலா தததனை மற்றோர்**
**தலைமகன் வலிதின் கொண்டால்**
**அரும்புவ நலனும் தீங்கும்**
**ஆகலின் ஐய நின்போல்**
**பெரும்பொறை அறிவி னோரால்**
**நிலையினைப் பெறுவது அம்மா!** (29)

நிரம்பினான் ஒருவன் = வலிமை நிறைந்த வாலியை நினைத்துச் சொல்லப்பட்டது. நிறை அரசு = எல்லா அமைப்புகளும் நிறைந்த அரசு. (வாலியின் அரசு) - வரம்பு (அளவு) அற்ற பெரிய அரசு, அதனை மற்றோர் அரசன் கொண்டால் என்பது, வாலியின் அரசைச் சுக்கிரீவன் கொண்டதைக் குறிக்கிறது. வலிதின் கொண்டால் = வலி-வன்முறையில் கொண்டால் என்பது, மறைந்து நின்று அம்பெய்து கொன்று பெற்றதைக் குறிக்கின்றது. இதனால் நன்மையே யன்றித் தீமையும் உண்டாகலாம் என்பது, வாலியைக் கொன்று பற்றியது கொடுமை என மக்கள் கிளர்ச்சி செய்யலாம் - அல்லது – யாராவது அங்கதனைத் தூண்டிவிட்டு அரசைப் பிடித்துக்கொள்ள வழிசொல்லித் தரலாம் - அல்லது – வேற்றரசர் யாராவது குழப்பமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு படையெடுத்து வந்து பறித்துக் கொள்ளலாம் - என்னும் செயல்களைக் குறிக் கின்றது.

இவ்வாறு குழப்பம் உண்டாக்கி முதலில் இருந்தவனே மீண்டும் ஆட்சியைப் பிடித்துக்கொண்ட வரலாறு நிரம்ப உண்டு. இளங்குமணன் தன் அண்ணன் இளங்குமணனைக் காட்டிற்கு ஓடும்படி விரட்டியதும், சிலர் தன் எதிரியைக் கொல்வது அல்லது நாடு கடத்துவதும் குழப்பம் நிலவாமல் இருப்பதற்கேயாம். அங்கேயெல்லாம் போவானேன்? கைகேயி இராமனைப் பதினான்காண்டுகள் காட்டில் இருக்கச் செய்ததும், இராமனால் குழப்பம் நேராமல் இருக்கவேண்டும் என்ற அச்சத்தினால்தான் என்றும் கூறலாம் அல்லவா?

எனவே, பெரும் பொறை அறிவினோரால்தான் ஆட்சியை நிலைக்க வைக்க முடியும் என்றது, எதையும் பொறுக்கும் வலிமையுடைய அனுமனால்தான். சுக்கிரீவனது

அரசை நிலைக்க வைக்கமுடியும் என்று சொன்னதாகும். இது மிகவும் இன்றியமையாத அறிவுரையன்றோ?

இவ்வாறு கூறி, உன்னைத் தவிரச் சுக்கிரீவனுக்கு வேறு சிறந்த துணை இல்லை என ஊக்குவித்து அனுமனை அனுப்பிவிட்டு, இலக்குவனுடன் இராமன் வேறொரு மலையை அடைந்தான்.

பின்னர் அங்கிருந்து மதங்கமா முனிவர் உள்ள உருசிய முக மலையை அடைந்து, இலக்குவன் அங்கே அமைத்த குடிலில் இராமன் தங்கினான்.

# 9. கார் காலப் படலம்

நம் முன்னோர் ஓர் ஆண்டை ஆறு பருவங்களாகப் பிரித்துள்ளனர். அவை: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. இரண்டு திங்கள் (மாதம்) கொண்டது ஒரு பருவம். ஆவணி, புரட்டாசி—கார்காலம். ஐப்பசி, கார்த்திகை – கூதிர் காலம். இப்படியே அடுத்த வற்றையும் இரண்டிரண்டாகக் கொள்ளல் வேண்டும். பண்டைக் காலத்தில் தமிழகத்தில் ஆவணித் திங்களே ஆண்டுத் தொடக்கமாகக் கருதப்பட்டது. தொல்காப்பியரே இவ்வாறே தொடங்கியுள்ளார். வேறு நூல்களிலும் இதற்குச் சான்றுகள் உண்டு.

படலத்துக்குப் பெயர் 'கார்காலப் படலம்' என்று கொடுக்கப்பட்டிருப்பினும், அதைத் தொடர்ந்த கூதிர்காலம் பற்றிய செய்திகளும் இதில் கூறப்பட்டுள்ளன. கார் - கூதிர் ஆன நான்கு திங்களுமே மழைக்காலம் ஆதலின் பொது வாகக் கார்காலப் படலம் என்னும் பெயர் தரப்பட்டுள்ளது.

ஆவணியில் மழை இலேசாகத் தொடங்குகிறது. 'புரட்டாசி பொன் உருகக் காயும்-மண் உருகப் பெய்யும்' என்னும் முதுமொழிக்கு ஏற்பப் புரட்டாசியில் பகலில் வெயிலும் இரவில் வலுத்த மழையும் இடம் பெறுவதைக் காணலாம். புரட்டாசியை அடுத்த ஐப்பசி, கார்த்திகை ஆகிய இரண்டு திங்கள்களையே இப்போது மழைக்காலம் எனப்பெரும்பாலான மக்கள் எண்ணிக் கொண்டுள்ளனர் - அவ்வாறே கூறுகின்றனர். நான்கு திங்களுமே மழைக்காலம் ஆயினும், மழைபெய்யும் அளவை நோக்கிக் கார், கூதிர்

என இரண்டாக வேறுபடுத்திப் பெயர்கள் வைக்கப் பட்டுள்ளன. கூதிர் காலத்திற்கு வடமொழியில் 'சரற்காலம்' என்பது பெயர்; இதுவும் மழைக்காலமாதலின் சில சுவடிகளில் இந்தப் படலத்திற்குச் 'சரற்காலப் படலம்' என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆவணி கார்காலம் தொடங்கும் திங்கள். கார்த்திகை கூதிர் காலம் முடியும் திங்கள். இந்தப் படலத்தின் இறுதி யில், கூதிர்காலம் முடிவுற, முன்பனிக்காலம் தொடங்குவ தான குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பருவத்தில் அவ்வளவாகக் கதை இடம் பெறவில்லை. கார்காலப் புனைவும் (வருணனையும்) கூதிர்காலப் புனைவுமே பெரிதும் இடம்பெற்றுள்ளன.

சுக்கிரீவனுக்கு முடி சூட்டியபின், சீதையைத் தேடக் கார்காலம் முடிந்ததும் வருக என இராமன் அவனுக்குக் கூறியிருந்தான். இந்த நான்கு திங்கள் காலத்தைக் கழிப்பது எவ்வாறு என்று இராமன் கவலைப்பட்டது போன்ற கவலை கம்பருக்கும் வந்து விட்டது போலும். இந்த நான்கு திங்கள் காலத்தில் கதைக்கு மிகுந்த இடம் இல்லையாதலின், காலப் புனைந்துரையாகவே – இயற்கைக் காட்சிப் புனைவாகவே கம்பரும் எழுதித் தள்ளிவிட்டார்.

இந்தப் படலத்தில் இடம் பெற்றுள்ள கதைப்பகுதி, சீதையின் பிரிவால் கவலையுற்ற இராமன் சீதையை எண்ணி வருந்துவதும், இராமனை இலக்குவன் தேற்றுவதும் ஆகிய பகுதியே. தலைவனைப் பிரிந்த தலைவி வருந்து வதும் தலைவியைப் பிரிந்த தலைவன் வருந்துவதும் பற்றிக் கூறும் தமிழ் இலக்கிய மரபை ஒட்டிக் கம்பர் இப்படலத்தை அமைத்திருப்பதாகத் தோன்றுகிறது. இனிப்படலத்திற்குள் சென்று பாடல்களைப் பார்ப்போம்:-

**தூது ஞாயிறு**

தென் திசையில் உள்ள இலங்கைக்குச் சென்று ஓவியம் போன்ற அழகிய சீதையைத் தேட அனுமான் தென்திசை நோக்கி வரப்போகிறான் என்பதை முன் கூட்டி அறிவிக்கச் செல்லும் தூதுவன் போல, ஞாயிறு தென்திசை ஏகலானான்:

**''மாவியல் வடதிசை நின்று மானவன்**
**ஓவிய மேயென ஒளிக்கவின் குலாம்**
**தேவியை நாடிய முந்தித் தென்திசைக்கு**
**ஏவிய தூதென இரவி ஏகினான்''** (1)

மானவன் = மனுக்குலத்தில் பிறந்த இராமன். தேவி = சீதை. இரவி = ஞாயிறு. தக்கணாயண காலத்தில் (ஆடி - மார்கழி) தெற்கு நோக்கியும், உத்தராயண காலத்தில் (தை - ஆனி) வடக்கு நோக்கியும் ஞாயிறு சாய்வது இயற்கையாக நிகழ்வது. ஆனால், ஞாயிறு தூதுவனாகத் தெற்கு நோக்கிச் சென்றான் என ஆசிரியர் தாமாக ஒரு காரணத்தை ஏற்றிக் கூறியிருப்பதால், இந்த அமைப்பு 'தற்குறிப்பு ஏற்ற அணி' எனக் கூறப்படும். நாடிய = நாட. 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

**விளக்குப் புகை**

ஆதிசேடன் தாங்கும் இந்த நிலமே அகலாகவும், கடலே நெய்யாகவும், மேருமலை திரியாகவும், ஞாயிறு விளக்காகவும் அமைந்திருக்க, அந்த விளக்குப் புகையினால், வானம் இருண்டது போன்று வானத்தில் முகில் மூட்டம் காணப் பட்டது.

**''பையணைப் பஃறலைப் பாந்தள் ஏந்திய**
**மொய்ந்நிலத் தகளியில் முழங்கு நீர்நெயின்**
**வெய்யவன் விளக்கமா மேருப் பொன்திரி**
**மைஅடுத் தொத்தது மழைத்த வானமே''** (2)

பல்தலைப் பாந்தள் = பல தலைகளை உடைய பாம்பு. தகளி = அகல். முழங்குநீர் = ஒலித்துக் கொண்டிருக்கும் நீர்நிலையாகிய கடல். வெய்யவன் = ஞாயிறு. நிலம் அகலாகவும், கடல் நெய்யாகவும், ஞாயிறு விளக்காகவும், மேருமலை திரியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன. இது உருவக அணி அமைந்த பாடல். இங்கே, பொய்கை ஆழ்வாரின் 'முதல் அந்தாதி' என்னும் நூலிலுள்ள

**''வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய க்திரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யான்அடிக்கே சூட்டினென் சொல்மாலை**
**இடராழி நீங்குகவே என்று''** (1)

என்னும் பாடலும்

**''நெஞ்செனும் அகலில் அன்பாம்**
**நெய்நிறைந்து உள்ளமென்னும்**
**பஞ்சுறு திரியின் உச்சி**
**பற்றிட அல்லமப்பேர்**
**அஞ்சுடர் இல்கஏற்றி அருந்தவர்**
**மாயை என்னும்**
**துஞ்சிருள் அகன்றிருந்தார் தொல்லைமா**
**தவங்கள் செய்து''** (3:43)

என்னும் பிரபுலிங்க லீலைப் பாடலும் ஒப்பு நோக்கத்தக்கன.

**மெலிவும் தழைப்பும்**

மழை மூட்டத்தால், சிவனது நஞ்சுண்ட கழுத்தின் கரு நிறம் போல் வானம் இருண்டது; ஞாயிற்றின் வெப்பமான கதிர்ஒளி சிறிது சிறிதாகத் தண்மை அடைந்ததுபோல் மெலிந்து விட்டது; முகில் நீர் மிகக் கொண்டு செழித்துத் தழைத்தது.

**''நண்ணுதல் அருங்கடல் நஞ்சம் நுங்கிய**
**கண்ணுதல் கண்டத்தின் காளம் ஆம்என**
**விண்ணகம் இருண்டது, வெயிலின் வெங்கதிர்**
**தண்ணிய மெலிந்தன, தழைத்த மேகமே''** (3)

நண்ணுதல் அருங்கடல் = அடைவதற்கு அரிய கடல். நுங்குதல் = விழுங்குதல். கண்ணுதல் = சிவன். காளம் = கருநஞ்சு. வலியவர் மெலிந்தால் மெலியவர் தழைப்பது இயற்கையே. அதுதான் இங்கே கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்து கார்நாற்பது என்னும் நூலிலும் இடம் பெற்றுள்ளது. ஞாயிற்றின் கதிர் வறுமையுற்றதாம் - முகில் செல்வம் பெற்றதாம். பாடல்:

**''கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வம் எய்த**
**நெடுங்காடு நேர்சினை ஈனக்-கொடுங்குழாய்**
**இன்னே வருவர் நமரென்று எழில்வானம்**
**மின்னும் அவர் தூது உரைத்து''** (2)

என்பது பாடல். ஞாயிறு நல்கூர்தல், கார் செல்வம் எய்தல், நீண்ட கிளைகள் அரும்புவிடல் ஆகியவை நிகழ, தலைவர் இப்போதே வருவார் என வானம் நமக்குத் தூது உரைத்து மின்னுகிறது எனப் பிரிந்திருக்கும் தலைவி கூறுகிறாள் என்பது இந்த இனிய பாடலின் கருத்து. இப்பாடலில், கடுங்கதிர் நல்கூரலும் கார் செல்வம் எய்துதலும் கூறப் பட்டிருப்பது நயமான கற்பனையாகும்.

**நீல வானம்**

நீலமும் கறுப்பும் ஒற்றுமை உடைய நிறங்கள். வானம் நீல (கரு) நிறமாயிருப்பதற்குச் சில உவமைகள் கூறப் பட்டுள்ளன. அவை நஞ்சு, கடல், பெண்டிரின் மைபூசிய கண், பெண்டிரின் கூந்தல், வஞ்சனை உடைய அரக்கரின் வடிவம், அரக்கரின் செயல், அரக்கரின் மனம் ஆகியன.

**''நஞ்சினின் நளிர்நெடுங் கடலின் நங்கையர்**
**அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்**
**வஞ்சனை அரக்கரின் வடிவின் செய்கையின்**
**நெஞ்சினின் இருண்டது நீல வானமே''** (4)

ஒவ்வோர் உவமைச் சொல்லின் இறுதியில் உள்ள 'இன்' உருபு, ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருளில் உள்ளது.

அரக்கரின் வடிவமும் நெஞ்சும் போல் இருண்டது என்பது சரி; ஆனால் அரக்கரின் செய்கையைப் போல் இருண்டது என்னும் உவமை எவ்வாறு பொருந்தும்? புகழ்ச் செயலை வெண்ணிறமாகக் கூறுவது இலக்கிய மரபு. அதற்கு எதிர் மறையான இகழ் தரும் செயலைக் கருநிறமாகச் சொல்வதும் பொருத்தமேயாம். இங்கே, பெரிய புராணத்தில் உள்ள-

**"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்**
**வஞ்ச மாக்கள் வல்வினையும் பரன்**
**அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்**
**நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்"** (305)

என்னும் பாடல் ஒப்புநோக்கத் தக்கது. இருண்டதற்கு ஒப்புமையாகப் பெண்களின் உள்ளத்தையும் கூறியிருப்பதற்கு உரிய காரணம் என்ன எனப் பாடல் ஆசிரியராகிய சேக்கிழாரைத்தான் கேட்க வேண்டும் போலும்! சேக்கிழார் எங்கே எப்போது யாரிடம் என்னபாடு பட்டிருப்பாரோ!

**மின்னுக்கெல்லாம்**

கணவரைப் பிரிந்த மகளிரும் புற்றுக்குள் இருக்கும் பாம்பும் அஞ்சும்படியாக மேலே மின்னல்கள் விட்டு விட்டு மின்னிக் கொண்டிருந்தனவாம். மின்னலுக்கு இரண்டு உவமைகள் தரப்பெற்றுள்ளன. ஞாயிற்றின் தொகுப்பான - மொத்தையான கதிரைப் பல துண்டுகளாக அரிந்த துண்டங்கள் போன்று இருந்தது ஓர் உவமை. இடியின் நாக்கு என்று சொல்லும்படியாக இருந்தது என்பது மற்றொன்று:

**"பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளும்**
**எரிந்துயர் நடுங்கிட, இரவியின் கதிர்**
**அரிந்தன வாமென அசனி நாவென**
**விரிந்தன திசைதொறும் மிசையின் மின்னெலாம்"** (10)

தலைவனைப் பிரிந்த தலைவி வருந்தியிருப்பதாகக் கூறுவது பழைய செய்தி. அதுவும், கார்காலத்தில் வந்து

விடுகிறேன் என்று கூறிச் சென்றவர், கார்காலம் வந்தும் தான் வரவில்லையே என மின்னும் கார்காலத்தில் வருந்துவது வழக்கம். பிரிவின்போது, திங்கள் கனலைக் கக்குவதாகவும், தென்றல் வெப்பத்தை வீசுவதாகவும், சந்தனம் முதலிய குளிர்ந்த பொருள்கள் மேலே படின் எரிவதாகவும் கூறும் இலக்கிய மரபிற்கு ஏற்ப, 'எரிந்து உயிர் நடுங்கிட' எனக் கூறப்பட்டுள்ளது. மின்னல் என்றாலே மழையும் உண்டு என்பது தானே பெறப்படும். 'மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை' என்பது பட்டறிந்த மொழியாயிற்றே.

பிரிந்த பெண்டிரைப் போலவே பாம்பும் நடுங்குமாம். 'இடியேறு உண்ட நாகம் போல' என்ற உவமையைப் பல முறைபடித்தும் கேட்டும் இருக்கலாம். "பார்க்கடல் பருகி மேகம் பாம்பினம் பதைப்ப மின்னி" என்பது சீவக சிந்தாமணி மின்னலும் இடியும் ஒரே நேரத்தில் தோன்றுவதால், மின்னலுக்கு நடுங்குவதாகவோ—இடிக்கு இடிந்து போவ தாகவோ கூறினும்—இரண்டும் ஒன்றுதான். அசனி = இடி.

பாம்புக்குக் 'கட்செவி' என்னும் ஒரு பெயர் உண்டு; கட்செவி = கண்செவி. பாம்புக்குக் காது இல்லை—அது கண்ணால் பார்ப்பதோடு கேட்பதும் செய்கிறது-அதாவது, கண்ணையே கேட்கும் செவியாகவும் கொண்டுள்ளது என்னும் காரணம் பற்றிக் 'கட்செவி' என்னும் பெயர் தரப் பட்டுள்ளதாம். பாம்பு கண்ணால் கேட்பது இல்லை என உயிரியல் அறிவியலில் கூறப்பட்டுள்ளது. பாம்பாட்டி மகுடி ஊதும்போது, புற்றுக்குள் ஏதோ ஒரு மாறுதலான சூழ்நிலை பாம்பாட்டிக் குழலின் ஒலியால் ஏற்படுகிறதாம். ஒலிக்கு அத்தகைய ஆற்றல் உண்டு என்பதை, வானொலி நிலையத்தில் உள்ள கருவியின் முன் பேசினால், அந்த ஒலி அலை, கருவியில் உள்ள மின்னலையோடு சேர்ந்து உலகம் முழுவதும் பரவுவதைக் கொண்டு தெளியலாம். வானில்

மின்னலும் இடியும் தோன்றும் போது, புற்றுக்குள் உள்ள பாம்பின் உடலில் மாறுதல் ஏற்படுகிறது; அந்த மாறுதலைத் தான் 'எரிந்து உயிர் நடுங்கிட' என்றார் ஆசிரியர். பாம்பாட்டியின் குழல் ஒலியால் ஏற்பட்ட சூழ்நிலை மாறுதலால் பாம்பு வெளியில் வந்து பார்க்கிறது; பாம்பாட்டி தலையை அசைத்துக் கொண்டே ஊதுவதைப் பார்த்துத் தானும் அசைக்கிறது-என்பதாக உயிரியல் அறிவியல் ஆராய்ச்சி கூறுகிறது. இதைப் புரிந்து கொள்ளாதவர்களும் ஒத்துக் கொள்ளாதவர்களும் உளர்.

**போர்க்களம்:**

சுழல் காற்றும் மின்னும் இடியும் கொண்ட வானம் ஒரு போர்க்களம் போன்று காணப்பட்டதாம்.

துகள் = தூசு. விசும்பு = விண். கொட்பு = சுழற்சி. தார் = காலாள் படை. பெரும் பணை = பெரிய முரசு. தழங்குதல் = ஒலித்தல். தா = வலிமை. உம்பர் = விண்

**"ஆர்த்தெழு துகள்விசும்பு அடைத்த லாம்லுமின்**
**கூர்த்தெழு வாளெனப் பிறழும் கொட்பினும்**
**தார்ப்பெரும் பணையின் விண்தழங்கு தாவினும்**
**போர்பெருங் களமெனப் பொலிந்தது உம்பரே"** (14)

போர்க்களத்தில், படைகளின் இயக்கத்தால் தூசு விண்ணுற எழும். வாள்கள் பளிச்சு—பளிச்சென வீசப்படும். பெரிய போர்முரசுகள் கொட்டப்படும். அவ்வாறே, இங்கேயும், காற்றடிப்பதால் தூசு விண்ணுற எழுகிறது. வாள்களின் சுழற்சிபோல் மின்னல் சுழலுகிறது. போர் முரசங்கள்போல் இடி இடிக்கிறது. இந்த வகைளில், இராமன் தங்கியுள்ள இடம், மழைக்காலத்தில் போர்க்களம் போல் தோன்றிற்றாம்.

**கூத்து அரங்கம்**

சோலையில் ஒரு நடன அரங்கு நிகழ்கின்றது: 'மூங்கிலைத்துளைத்து ஊதும் வண்டின் ஒலி கின்னர யாழ் போன்றிருந்ததாம். மின்னி இடிக்கும் முகிலின் முழக்கம் மத்தளம் (மிருதங்கம்) அடிப்பது போன்றதாம். மயில் மங்கையர்களைப் போல் ஆடியதாம். தோன்றிகள் (செங்காந்தள்) அரங்கிலே ஏற்றிய விளக்கை ஒத்து இருந்தனவாம். கருவிளைப்பூக்கள் காண்பவரின் கண்களை நிகர்த்து இருந்தனவாம்.

**"கிளைத்துளை மழலை வண்டு**
**கின்னரம் நிகர்த்த, மின்னும்**
**துளிக்குரல் மேகம் வள்வார்த்**
**தூரியம் துவைப்ப போன்ற**
**வளைக்கையர் போன்ற மஞ்ஞை,**
**தோன்றிகள் அரங்கின் மாடே**
**விளக்கினம் ஒத்த, காண்போர்**
**விழிஒத்த விளையின் மென்பூ"** (32)

மழலை = இனிய ஒலி. கின்னரம் = ஒரு வகை யாழ். தூரியம் = மத்தளம். வளைக்கையர் = பெண்கள். மஞ்ஞை = மயில். தோன்றி = செங்காந்தள். விளை = கருவிளை.

இப்படி ஒரு நடன அரங்கைப் புனைந்துரைப்பதில் புலவர்கட்குக் கொள்ளை விருப்பம் உண்டு. கம்பரோ பேராவல் கொண்டவர். பால காண்டத்தில்

**"தண்டலை மயில்கள் ஆடத்**
**தாமரை விளக்கம் தாங்கக்**
**கொண்டல்கள் முழவின் ஏங்கக்**
**குவளை கண்விழித்து நோக்கத்**
**தெண்திரை எழினி காட்டத்**
**தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட**
**மருதம் வீற்றிருக்கும் மாதோ"**

என ஓர் அரங்கம் நடத்தியது போதாது என, இந்தக் காண்டத்திலும் நமக்கு ஒரு நடன அரங்கம் காண்பித்துள்ளார்.

கம்பர் மட்டுமா? கபிலர் இளைத்தவரா என்ன? அகநானூற்றுப் பாடல் ஒன்றில் அழகிய அரங்கம் அமைத்துக் காட்டியுள்ளார். அது.

**''ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை யவ்வளிக் குழலிசை யாகப்**
**பாடு இன்னருவிப் பனிநீரின் விசைத்**
**தோடமை முழவின் துதைக் குரலாகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு**
**மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக**
**இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து**
**மந்தி நல்லவை மருள்வன நோக்கக்**
**கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்''** (82:1-10)

என்பது. கபிலரது அரங்கம் மிகப் பெரியது. சாத்தனாரும் மணிமேகலை - பளிக்கறை புக்க காதையில்,

**''குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட**
**மழலை வண்டினம் நல்யாழ் செய்ய**
**வெயில் நுழைபறியாக் குயில்நுழை பொதும்பர்**
**மயிலாடு அரங்கின் மந்தி காண்பனகாண்''** (3-6)

என்று தமது அரங்கத்தை அமைத்துள்ளார். அம்பிகாபதி காதல் காப்பியம் என்னும் நூலிலும்

**''ஓடும் ஓடைநீர் ஒலிக்க முழவென,**
**பாடும்புள் பூவை பரப்ப இசையினை,**
**ஆடும் மயிலின் ஆட்டம் சுவைத்தனர்''** (15:55-57)

எனக் கம்பரும் அவர் நண்பரும் ஓடையின் பக்கம் நின்று கண்டு சுவைத்ததாகப் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலே ஐந்து ஆடு அரங்குகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. ஐந்திலும் ஆடுவது மயில் தான். நான்கு அரங்குகளில் யாழ் வண்டுதான். இரண்டில் முகில் முழவு. வேறு இரண்டில் ஓடும் நீர் ஒலி முழவு. இரண்டில் காண்பவர்கள் (Audience) குரங்குகள்.

கம்பர் மட்டும் இரண்டு இடங்களிலும் விளக்குப் போட்டுள்ளார். பால காண்டத்தில் தாமரை விளக்காகவும் இந்தக் கிட்கிந்தாப் பாடலில் தோன்றி விளக்காகவும் கம்பரால் ஏற்றிக் காட்டப்பட்டுள்ளன. வெளிச்சம் இன்றியமையாத தல்லவா?

இந்தப் பாடலில், நிகர்த்த, போன்ற, போன்ற, ஒத்த, ஒத்த – என்னும் ஐந்து சொற்களும் ஒரே பொருளில் பின் பின்னே வந்துள்ளன. போன்ற என்ற ஒரே சொல் இரண்டு முறையும், ஒத்த என்ற ஒரே சொல்லும் இரண்டு முறையும் பின் பின்னே வந்துள்ளன. இந்த அமைப்பு ‘சொல் பொருள் பின்வரும் நிலை அணி’ எனப்படும்.

**நவ்வியின் ஊடல்**

பூக்கள் நிறைந்த காடுகளில் வண்டுகளால் சூழப்பட்டுத் தேன் உடையனவாகிச் செருக்குடன் காமச்செவ்வி (காம உணர்வு) பெற்றனவாய் உள்ள மரங்கள் கத்தூரி மானின் மணம் உடையனவாய் இருக்கும். அம்மரங்களில் உராயும் ஆண் கலைமான்களின் மேல் கத்தூரி மானின் வாடை வீசும். அவ்வாடையை அறிந்த பெண் நவ்விமான், தன் இணையான (ஜோடியான) கலைமான் கத்தூரிப் பெண்மானுடன் கூடிவிட்டு வந்ததாக அதனோடு ஊடல் கொள்ளுமாம்.

**“பூவியல் புறவம் எங்கும் பொறிவரி வண்டுபோர்ப்பத்**
**தீவிய களிய வாகிச் செருக்கிய காமச் செவ்வி**

**ஓவலில் மரங்கள் தோறும் உரைத்து அறஉறிஞ்சி**
**ஒண்கேழ்**
**நாவிய செவ்வி நாறக் கலையொடும் புலந்தநவ்வி''** (35)

புறம் = காடும். களியவாகி = களிப்புடையன வாகி—தேன் (கள்) உடையனவாகி. ஓவல் இல் = நீங்குதல் இல்லாத. காமச் செவ்வி = காம உணர்வு. நாவிய செவ்வி = நாவி என்னும் கத்தூரி மானின் மணவாடை. கலை = ஆண்மான். நவ்வி = பெண்மான். புலத்தல் = ஊடல் கொள்ளுதல்.

ஓரறிவு உயிரெனத் தாழ்வாகச் சொல்லப்படும் மரம் செடி கொடி புல் பூண்டு ஆகிய மர இனம் ஒவ்வொன்றிலும் ஆண் - பெண் உண்டு. ஒரு செடியின் ஒரு பூவிலேயே ஆண் பாகமும் பெண்பாகமும் இருக்கும் இனமும் உண்டு. ஒரு செடியிலேயே ஆண்பூவும் பெண்பூவும் தனித்தனியாய் இருக்கும் இனமும் உண்டு. ஆண்மரம் – பெண்மரம் என்பன போல் தனித்தனியாக இருக்கும் இனமும் உண்டு.

ஆண்பூவில் உள்ள மகரந்தப்பொடி பெண்பூவிற்குள் வந்து சேர்ந்தால் பூ கருவுற்றுக் காய்க்கும், காற்று, வண்டு முதலியவற்றால் ஆண்மகரந்தப்பொடி பெண்பூவிற்குள் வந்து கலக்கும். மலர்கள் மணமும் கவர்ச்சியான நிறமும் உடையனவாய் இருப்பதன் காரணம், வண்டுகளை மயக்கித் தம்பால் ஈர்ப்பதற்கே யாகும். இதனை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின்

**''மஞ்சள் குளித்து முகம் மினுக்கி இந்த**
**மாயப் பொடி வீசி நிற்கும் நிலை''**

என்னும் சூரிய காந்தியைப் பற்றிய பாடலால் அறியலாம். மேலும், மலர்கள் கூறுவதுபோல் அவள் பாடியுள்ள

**''வண்டின் வரவு எதிர்ப் பார்த்திருப்போம் - நல்ல**
**வாசமும் வீசி நிற்போம்''**

என்னும் பாடலாலும் அறியலாம். இருள் தொடங்கும் மாலையில் பூக்கும் பூக்கள் நல்ல மணத்துடன் வெண்மையா யிருப்பதற்குக் காரணம்: இருட்டில் வெண்மையாயிருந்தால் தானே வண்டின் கண்கட்குத் தெரியும். வண்டுகட்குத் தெரிந்தால்தான் அவற்றின் வாயிலாக மகரந்தச் சேர்க்கை பெற்று மர இனம் காய்க்கும். இதனை, சுந்தரம்பிள்ளை மனோன் மணீயம் என்னும் நூலில் (மூன்றாம் அங்கம்-நான் காம் களம்.)

> **"... ... ... நிசி அலர் மலர்க்கு**
> **வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்**
> **எவ்வணம் அவற்றின் இட்ட நாயகராம்**
> **ஈயினம் அறிந்து வந்து எய்திடும்? அங்ஙனம்**
> **மேவிடில் அன்றோ காய்தரும் கருவாம்"**

எனக் கூறியிருப்பதைக் கொண்டும் அறியலாம். நெல் பயிரின் நுனியில் நெல்மணி காய்ப்பதன் காரணம், அது அடர்த்தியாயிருப்பதால் வண்டு நடுவில் சென்று மரந்தச் சேர்க்கை உண்டாக்க முடியவில்லை-மேலேதான் செய்ய முடிகின்றது. (இது பற்றி எனது 'இன்பவாழ்வு' என்னும் பாலியல் நூலில் விரிவாகக் காணலாம்)

எனவேதான், காமச்செவ்வி உடைய மரத்தில் ஒருவித மான வாடை இருக்கும்; அதில் உராய்ந்த கலைமானின் மேலும் அந்த வாடை வீசுதலால், அது வேறு ஒன்றுடன் கூடிவந்ததாக நவ்விமான் ஊடல் கொண்டதாம். நயமான-சுவையான கற்பனை இது.

**உரு மாற்றம்**

சீதையைப் பிரிந்ததால் வருந்தும் இராமன் வாடைக் காற்று வீசும் போது மிகவும் கலங்கி, எமன் வாடைக் காற்றின் உருவத்தில் வந்தானோ? இவ்வாறு வேண்டுவோர் வேண்டிய உருவம் கொள்ளும்படியான 'வாய்ப்புக் கிடைத் திருப்பதை என்னென்பது—என்று கூறினானாம்.

**"ஓடைவாள் நுதலினாளை ஒளிக்கலாம் உபாயம் உன்னி**
**நாடி மாரீசனார் ஓர் ஆடக நவ்வி யானார்**
**வாடையாய்க் கூற்றி னாரும் உருவினை மாற்றி வந்தார்**
**கேடுசூழ் வார்க்கும் வேண்டும் உருக்கொளக் கிடைத்த**
**அன்றே** (60)

ஓடை = நெற்றிப்பட்டம். நுதலினாள்=சீதை. ஆடக நவ்வி = பொன்மான். மாரீசன் சீதையைச் கவரும் கெட்ட எண்ணத்துடன் பொன்மானாய் உருமாறி வந்தான். எமனும் என்னைக் கொல்லும் கெட்ட எண்ணத்துடன் வாடைக் காற்றின் உருவில் வந்திருக்கிறான் போலும். நல்ல செயலுக்காக மாற்றுருவம் கொள்ளினும் கொள்ள லாம். ஆனால் கேடு சூழ்வார்க்கு இந்த வாய்ப்பு கிடைக் கலாமா-என்கிறான். மாரீசனார்-கூற்றினார் என்பவற்றில் 'உள்ள ஆர்' விகுதி உயர்ச்சிக் குறிப்பன்று; குத்தலாகக் கிண்டல் செய்யும் இகழ்ச்சிக் குறிப்பாகும். இங்கே குறுந் தொகையில் உள்ள

**"யாது செய்வாங் கொல் தோழி நோதக**
**நீர் எதிர்கருவிய கார் எதிர்கிளை மழை**
**ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய**
**கூதிர் உருவில் கூற்றம்**
**காதலர்ப் பிரிந்த என் குறித்து வருமே"** (197)

என்னும் பாடலும்,

**"பண்டறியேன் கூற்று என்பதனை இனியறிந்தேன்**
**பெண்தகையால் பேரமர்க் கட்டு"** (1083)

என்னும் குறட்பாவும் ஒப்புநோக்கத்தக்கன.

**நெரித்த புருவம்**

மறை, மதி, வான், கடல், நிலம் ஆகியவை மாறுபடினும் மாறாத கலங்காத திண்மையுடைய அண்ணா! நின் புருவத்தை நெரித்தால் போதும்-அந்த அரக்கர் பெருமை

நிலை குலைந்து விடும்-என்று இலக்குவன் இராமனுக்குத் தேறுதல் மொழி புகல்கிறான்,

**''மறை துனங்கினும் மதி துளங்கினும்**
**வானும் ஆழ்கடல் வையமும்**
**நிறை துளங்கினும் நிலை துளங்குறு**
**நிலைமை நின்வயின் நிற்குமோ**
**பிறை துளங்குவ அனையபேர் எயிறு**
**உடைய பேதையர் பெருமைநின்**
**இறை துளங்குறு புருவ மென்சிலை**
**இடை துளங்குற இசையுமோ''** (66)

பிறை நிலாவைப் போன்ற கொடிய கோரைப்பற்களை உடைய ; பேதையர் = அறிவில்லா அரக்கர்கள். அண்ணா! நீ உன்கையில் உள்ள வில்லை அசைக்க வேண்டியதில்லை; உன் புருவமாகிய வில்லைச் சிறிது நெரித்தாலே போதும்- அரக்கர் அழிவர் என்கிறான்.

அவர் தலையசைத்தால் போதும் என்றும், அவர் கை அசைத்தால் போதும் என்றும், அவர் சுண்டி விரலை அசைத் தால் போதும் என்றும், அவர் கண் அசைத்தால் போதும் என்றும் உலகியலில் பலவாறு பகர்வது பழக்கம். ஆனால், இங்கே, இலக்குவன், இராமன் புருவத்தை நெரித்தால் போதும் என்கிறான். இது ஒரு சுவையான கருத்து வெளிப் பாடாகும். தலைவியை எண்ணிச் சோர்ந்து போன தலைவனை நோக்கி, எதற்கும் கலங்காத நீ இதற்குக் கலங்கலாமா என்று பாங்கன் தேற்றுதலாக ஒரு பாடல் திருக்கோவையாரில் உள்ளது. அது:

**''விலங்கலைக் கால் விண்டு மேன்மேல்இட**
**விண்ணும் மண்ணும் முந்நீர்க்**
**கலங்கலைச் சென்ற அன்றும் கலங்கலாய்**
**கமழ் கொன்றை துன்றும்**

**அலங்கலைச் சூழ்ந்த சிற்றம் பலத்தான்**
**அருள் இல்லவர் போல்**
**துலங்கலைச் சென்றி தென்னோ வள்ளல்**
**உள்ளம் துயர் கின்றதே"** (24)

என்னும் பாடல். இது கம்பர் பாடலுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

**கூதிர் கால வரவு**

இது காறும் கார்காலம் தொடர்பான செய்திகள் மேலே கூறப்பட்டன. இனிக்கூதிர் காலம் பற்றிய செய்திகள் இடம் பெறும்.

கார்காலத்தால் ஆய துயரைப் பொறுக்க முடியாமல் வருந்திய இராமன், தம்பி இலக்குவனின் தேறுதல் மொழியால் ஒரு சிறிது தெளிவு பெற்றிருக்கும் வேளையில், முன் வினையால் வந்த ஒரு பிணியால் வருந்திக்கொண்டிருக்கும் போது மேலும் ஒரு பிணி வந்து சேர்ந்து கொண்டதுபோல் கூதிர் காலம் வந்ததாம். ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்ப் பருவ காலத் திங்களாம்.

**"சொற்ற தம்பிஉரைக்கு உணர்ந்து உயிர்**
**சோர் வொடுங்கிய தொல்லையோன்**
**இற்ற இன்னல் இயக்கம் எய்திட**
**வைகல் பற்பதி ஏகமேல்**
**உற்று நின்றவினைக் கொடும்பிணி ஒன்றின்மேல்**
**உடன் ஒன்று உராய்**
**மற்று வெம்பிணி பற்றினா லென**
**வந்து எதிர்ந்தது மாரியே"** (70)

தொல்லையோன் = உலகின் முற்பட்ட தெய்வமாகிய திருமாலின் பிறப்பாகிய இராமன். இதற்கு, தொல்லையான சூழ்நிலையில் உள்ள இராமன் என்றும் பொருள் கூறலாமே. கார்காலத்தைக் கடக்க அறுபது நாள்கள் போதும்.

ஆவணியும் புரட்டாசியும் கார்காலமாகும். இந்த இரண்டு திங்கள் காலத்தைக் கடப்பது கடினமன்று. ஆனால் இராமனுக்கு மிகப் பல நாள்கள் ஆனது போல் இருந்ததாம் என்பது, 'வைகல் பற்பல ஏக' என்பதால் அறியக் கிடக்கிறது. ஒரு பிணிக்கு மேல் இன்னொரு பிணியும் தொடரின் நிலைமை என்னாகும்?

இங்கே, 'பட்ட காலே படும் – கெட்ட குடியே கெடும்' என்னும் பட்டறிந்த முதுமொழி எண்ணத் தக்கது. காலில் ஒரு புண் மட்டும் இருந்தால் பொறுத்துக் கொள்ளலாம்; அந்தப் புண்ணே மற்றொரு முறை இடிபட்டால் என்ன ஆகும்? ஒரு புண்ணும் இல்லாமல் இடிபட்டால் அவ் வளவாய்த் துன்பம் தோன்றாது. கெட்ட குடியே கெடும் என்பதையும் இவ்வாறே கொள்ளல் வேண்டும். பட்ட காலே பட்டது போலவும் கெட்ட குடியே கெட்டது போலவும், கார்காலத்தால் துன்பம் உற்ற இராமனுக்குத் துன்பம் தரும் கூதிர்காலமும் தொடர்ந்து வந்ததாம். மாரி, என்பதற்குக் கூதிர்காலம் எனப்பொருள் கொள்ளல் வேண்டும். கூதிர்காலமாகிய ஐப்பசி–கார்த்திகைத் திங்கள் களில்தான் மழை (மாரி) மிகுதியாதலின், கூதிர்காலம் மாரி எனப்பட்டது.

**நாழிகை வட்டில்**

மழை நிரம்பப் பெய்வதால் கடல் நிறைவுற்றது. ஞாயிற்றின் வெப்ப ஆட்சி நிலைகுலைந்தது. வானம் முழுவதும் முகில் மண்டியிருப்பதால் ஞாயிற்றின் வெயில் வெளிப்படாததால், காலை நேரம் எது – மாலை நேரம் எது என்பதைக் கன்னல் கருவியால்தான் அறியமுடியும் – வேறெதாலும் இயலாது.

**''வேலை நிறைவுற்றன, வெயில்கதிர் வெதுப்பும்**
**சீலம் அழிவுற்ற, புனலுற்று உருவு செப்பின்**
**காலம் அறிவுற் றுணர்தல் கன்னல் அளவல்லால்**
**மாலைபகல் உற்றதென ஓர்வரிது மாதோ!''** (73)

வேலை = கடல்; செப்பு = கொப்பரைக் குடம். கன்னல் = நாழிகை வட்டில்.

வேலை நிறைவுற்றன எனில், இதற்கு முன் வேலை குறைவாக இருந்ததா என்ற வினா எழும். ஆம்! கடல் நீர் ஆவியாக (நீராவியாக) மாறி மேலே சென்று முகில் உருவடைவதால் கடல்நீர் குறையத்தானே செய்யும். இங்கே,

**''நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்''** (17)

என்னும் குறட்பா ஒப்புநோக்கற்பாற்று. கடல்நீர் முகிலாக மாறுவதால் மீண்டும் மேலே இருந்து மழைபொழிய நேரடியாகவும் ஆறுகளின் வழியாகவும் குறைந்த நீர் மீண்டும் ஈடுகட்டப்படுகின்றது. ஈண்டு,

**''கடல்குறை படுத்தநீர் கல்குறைபட எறிந்து''** (20-1)

என்னும் பரிபாடல் பகுதி காண்க.

ஆவியாக மாறியதால் கடல் அளவைக் குறை வுடையதாக்கிய நீர், மீண்டும் மழையாக மாறிக் கருங் கல்லும் துளைபடும்படிக் கடுமையாகப் பெய்வதால் ஈடு கட்டப்படுகிறது என்பதை இதனால் அறியலாம். மற்றும், மதுரைக் காஞ்சியில் உள்ள

**''மழைகொளக் குறையாது புனல்புக மிகாது**
**கரைபொருது இரங்கும் முந்நீர்''** (424)

என்னும் பகுதியும் ஈண்டுக் காணத்தக்கது. மழை முகில் நீராவியாகக் கொள்வதால் குறைவு ஆகாதபடி, புதுப்புனல் மேலிருந்தும் கீழ் உள்ள ஆறுகளின் வாயிலாகவும் நிறைவு

செய்கிறதாம். புதுப்புனல் புகுவதால் கடல்நீர் அளவு மீறவும் இல்லையாம் - ஏனெனில், நீராவியாகக் குறைந்து கொண்டே இருப்பதால் - என்க. ஆகச் செலவும் வரவும் சமனாக உள்ளன.

மதுரைக் காஞ்சியில் கடல் 'முந்நீர்' என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. ஊற்றுநீர், ஆற்றுநீர், வேற்று நீராகிய மழைநீர் ஆகிய மூவகையான நீர் கிடைப்பதால் முந்நீர் என்னும் பெயர் ஏற்பட்டதாகப் பலரும் விளக்கம் கூறு கின்றனர். எல்லா நீர்நிலைகட்குமே ஊற்று நீரும் மழை நீரும் கிடைப்பதாலும், சில ஏரிகட்கு இவ்விருவகை நீரோடு ஆற்று நீரும் கிடைப்பதாலும் இப்பெயர்க் காரணம் பொருந்தாது. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில் தன்மை உடையதால் முந்நீர் என்ற பெயர் வந்ததாகச் சிலர் கூறுவர். ஏன்? தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களிலும் - அதாவது கிழக்கே வங்கக் கடலும் தெற்கே இந்து மா கடலும் மேற்கே அரபிக்கடலும் உள்ளதால் இப்பெயர் ஏற்பட்டதாகக் கொள்ளக் கூடாதா? இம்மூன்று கடல் பெயர்களும் பிற்காலத்தில் ஏற்பட்டவை யெனினும், முற்காலத்திலேயே மூன்று பக்கமும் கடல் இருந்தது உண்மைதானே?

பல கடல்களும் நிறைவுற்றதால்தான், 'வேலை நிறை வுற்றன' எனப் பன்மை முடிபு கொடுத்துள்ளார் ஆசிரியர். வேலை என்பது பால் பகா அஃறிணைப் பெயர். இது ஒருமை - பன்மை இரண்டையும் குறிக்கும்.

இனிக் கன்னலைக் காண்போம்: நீர் நிரம்பிய ஒரு பெரிய கொப்பரைக் குடத்தில், குறிப்பிட்ட கொள்ளளவு உடையதும் நடுவில் சிறு துளை உள்ளதுமாகிய ஒரு சிறிய வட்டிலை (ஒரு கலத்தை) இடுவர். அந்த வட்டில், துளை வழியாக நீர் புகுந்து நிறைந்தால், ஒரு நாழிகை ஆயிற்று

எனக் கணக்கிடுவர். இரண்டரை நாழிகை கொண்டது ஒரு மணி நேரமாகும் - அதாவது அறுபது மணித்துளி (60 நிமிடம்) கொண்ட நேரமாகும். ஒரு நாழிகை என்பது 24 மணித்துளி (நிமிடம்) ஆகும். துளையுடைய வட்டில் ஐந்து முறை நிறைந்தால் இரண்டு மணியாகும்; 60 முறை நிறைந் தால் 24 மணி கொண்ட ஒரு நாளாகும்.

இந்தக் காலக் கடிகையாரம் வருவதற்கு முன், கன்னல் வாயிலாகவே அக் காலத்தில் காலக் கணக்கு அறிந்து வந்தனர் நம் முன்னோர். கம்பர் காலத்திலும் இம்முறையே இருந்தது. "கன்னலின் யாமம் கொள்வோர்" (7:65) என்பது மணிமேகலைப் பாடல் பகுதி. "காவதம் ஒரொரு கன்னலினாக" (மார்க். 142) என்பது கந்த புராணப் பாடல் பகுதி. "குறுநீர்க் கன்னல் எண்ணுதல் அல்லது, கதிர் மருங்கு அறியாது அஞ்சுவர" (43:6,7) என்பது அகநானூறு. "குறு நீர்க் கன்னலின் இனைத்து என்று இசைப்ப" (58) என்பது முல்லைப் பாட்டு.

எனவே, இராமனை வருத்திய கூதிர் காலத்தில் காலை, நண்பகல், மாலை என்பனவற்றைக் கன்னல் கொண்டே அறிய முடிந்தது - என்பது கருத்தாகும்.

**கூதிர் முடிவு**

கூதிர் காலம் முடியும் காலம் நெருங்கிற்று. உலகில் உள்ளவர்கட் கெல்லாம் பெருங் கொடை புரிந்ததால் வறிய நிலையில் இருக்கும்போது, வந்து கேட்போர்க்கு ஒன்றும் கொடுக்க முடியாததால் முகம் வெளுத்துப் போன வள்ளலைப் போல, பொழிந்து தள்ளிய முகில் இப்போது வெளுக்கத் தொடங்கி விட்டது.

**"மள்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்**
**உள்கிய பொருளெலாம் உதவி அற்றபோது**
**எள்கலில் இரவலர்க்கு ஈவது இன்மையால்**
**வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே"** (104)

மள்கல் இல் = குறைவது இல்லாத. உள்கிய = பெற எண்ணிய. எள்கல் இல் = இகழ்ச்சி இல்லாத - பெருந்தன்மை கொண்ட. இரவலர் = உதவி கேட்பவர். வெள்கிய = நாணம் கொண்ட.

உயரிய பண்பாளர் பிறர்க்கு உதவ முடியாத போது மிகவும் வருந்துவர் - நாணம் கொள்வர் - முகம் வெளுத்துப் போவர் - இவர் போலவே நீர் தந்த முகில் வெளுத்து விட்டதாம். இங்கே,

**''இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு''** (224)

**''சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை''** (230)

என்னும் குறட்பாக்களும், கலித்தொகையில் உள்ள

**''இன்மை உரைத்தார்க்கு அதுநிரைக்க லாற்றாக்கால்**
**தன்மெய் துறப்பான் மலை''** (43 : 26, 27)

என்னும் பாடல் பகுதியும் இணைத்து ஒப்பு நோக்கத் தக்கன. இப்பாடல்கள் மிக உயர்ந்த மக்கட் பண்பைப் பறை சாற்றுகின்றன.

**மாரிப் பேர் இருள்**

பிறவிக்கு ஏதுவாகிய நல்வினை தீவினை என்னும் இரு வினைகளாகிய பேய்ப் பிடியினின்றும் விடுபட்டு மெய்யுணர்வு (மெய்ஞ்ஞானம்) பெற்றவர்களை விட்டு நீங்கிய அஞ்ஞான மாகிய மாயையைப் போல் கூதிர்ப் பருவ இருள் அகன்ற தாம்.

**''தீவினை நல்வினை என்னத் தேற்றிய**
**பேய்வினைப் பொருள்தனை அறிந்து பெற்றதோர்**
**ஆய்வினை மெய்யுணர்வு அணுக, ஆசுறும்**
**மாயையின் மாய்ந்தது மாரிப் பேர்இருள்''** (105)

தீவினைதான் கூடாது - அதுபோல் நல் வினையும் கூடாதா எனின், பயன் கருதியும் பிறரை வருத்திக் கவர்ந்தும் செய்கின்ற நல்வினை கூடாது தானே. கடைத் தேங்காயைத் திருடி வழிப் பிள்ளையார்க்கு உடைப்பதும், மாட்டைக் கொன்று அதன் தோலால் செருப்பு செய்து தானம் வழங்குவதும் நல்வினைகளாகுமா? இதனால்தான் தீவினை நல் வினை இரண்டுமே பேய் வினை எனப்பட்டன. ஈண்டு,

> **"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
> **பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"** (5)

என்னும் குறள் எண்ணத்தக்கது. சில பதிப்புகளில் மூன்றாம் அடியின் இறுதியில் 'ஆசறும்' என்ற பாடம் உள்ளது. இவ்வாறு இருப்பின், 'ஆசு அறும் மாயை' என்பதற்குக் குற்றம் அற்ற மாயை என்று பொருள் செய்து, அதைச் சரிக் கட்டுவதற்கு என்னென்னவோ பொருந்தா விளக்கம் தர வேண்டியுள்ளது. அதனால், 'ஆசுறும்' என்ற பாடம் யான் கொண்டுள்ளேன். 'ஆசு உறும் மாயை' என்று பாடம் கொள்ளின், குற்றம் உள்ள மாயை என எளிதில் உண்மைப் பொருள் கொள்ளலாம்,

மாயை என்பது வட சொல் என்பது பெரும்பாலார் கருத்து. அது தமிழ்ச் சொல் என்று சிலர் கூறுவர். அதற்கு ஏற்றாற்போல், மாயையின் மாய்ந்தது' என்னும் தொடர் இயற்கையாய் அமைந்துள்ளது; அதாவது, மாய்வது மாயை என்று சொல்ல இடம் தருவதாக உள்ளது. இந்தக் கருத்து முற்ற முடிந்த முடிபு அன்று; மேலும் ஆய்வுக்கு உரியது.

**வாரி அறல்**

கிடைத்த செல்வத்தைத் தீநெறியில் செலவு செய்தவனிடமிருந்து அச் செல்வம் நீங்கி விடுவது போல, மலை மேல் நின்று நீரைப் பொழிந்த முகில் நீங்கியதால், மலையிலிருந்து புறப்படும் ஆறுகள் நீர் வற்றிப் போயின:

''மேகம்மா மலைகளின் புறத்து வீதலால்
மாகயாறு யாவையும் வாரி அற்றன
ஆகையால் தகவிழந்து அழிவில் நன்பொருள்
போகஆறு ஒழுகலான் செல்வம் போலவே'' (108)

வீதல் = நீங்குதல் வாரி = நீர். ஆகையால் = செல்வம் மிகுதியாக ஆனதால். அழிவில்பொருள் = நல்லோரிடம் இருப்பின் என்றும் அழியாப் பொருள் — என்றும் அழியக் கூடாதபொருள். நன்பொருள் = (தீய வழியில் வந்த பொருள் அழியினும் அழியலாம்; ஆனால்,) முன்னோர் நல்ல வழியில் ஈட்டி நல்லன செய்வதற்காக வைத்து விட்டுப் போன பொருள். ஆறு ஒழுகலான் = நல்ல வழியில் நடவாதவன். ''நின்று தின்றால் குன்றும் மாளும்'' என்பது பட்டறிந்த முதுமொழியாகும்.

மேலும் வருவாய் இல்லாமல், வீண்செலவும் செய்யாமல், சிறுகச் சிறுக உண்டு கொண்டிருந்தாலும், குன்று போன்ற பெரிய செல்வமும் அழிந்து போகும். உண்மை இவ்வா றிருக்க, மேற்கொண்டு மிகுதியாக வீண் செலவு செய்யின் பெரிய செல்வமும் அழிவதற்குச் சொல்லவா வேண்டும்? 'தகவு இழந்து' என்பது, 'மேலலார் செல்வமே போல் தலை நிறுவி'' என்னும் சீவகசிந்தாமணிப் பாடல் பகுதியை நினை வூட்டுகிறது.

இங்கே கோவலன் நிலைமை சரியான எடுத்துக் காட்டாகும். அவன், தீயவரோடு சேர்ந்து பொழுது போக்கி, முன்னோர் தேடி வைத்த வானளாவ உயர்ந்த மலையனைய செல்வத்தை இழந்ததால் உண்டான இப் போதைய எனது ஏழ்மை நிலை மிகவும் நாணும் தருகிறது- என்று தன் குறையைத் தானே கூறுகிறான். சிலம்புப் பகுதி வருமாறு:

"சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும்" (9:69-71)

என்பது பாடல் பகுதி. இந்த நிலையே போல், கூதிர்ப் பருவம் முடிந்த போது மழை கிடைக்காத ஆறுகளின் நிலையும் இருந்ததாம்.

**திங்களின் தோற்றம்**

நடன அரங்கில் முதலில் போட்டிருந்த திரைத்துணியை நீக்கியவுடன் நடன மங்கையின் முகம் தெரியத் தொடங் கியது போல், களிறு போன்ற கரு முகில் ஏகியதால் வானில் திங்கள் (சந்திரன்) தெளிவாகத் தெரியக் கண்டனராம்.

"கடம்திறந்து எழுகளிறு அனைய கார்முகில்
இடம்திறந்து ஏகலின் பொலிந்தது இந்துவும்
திறன் நவில்வுறு நங்கைமார் முகம்
படம்திறந்து ஒருவலின் பொலியும் பான்மைபோல்"(109)

கடம் = மதம் (களிற்றின்மதம்) இந்து = திங்கள். படம் = துணி. படம் என்னும் வட சொல்லுக்குத் துணி என்பது நேர்ப் பொருள். துணியில் (படத்தில்) எழுதப்பட்டதால், ஓவியம், வடமொழியில் ஆகு பெயராய்ப் படம் எனப் பட்டது. தமிழில் கிழி என்றால் துணி. கிழியில் எழுதப் பட்டதால் ஓவியத்திற்குக் 'கிழி' என்ற பெயரும் திவாகர நிகண்டில் தரப்பட்டுள்ளது. நடனம் பார்க்க வந்தவர்கள், எப்போது திரையை விலக்குவார்கள் என ஆவலுடன் எதிர் பார்த்திருப்பர் - திரை விலகியதும் நடன மாதைக் கண்டு களிப்புறுவர். திங்களின் தோற்றமும் அவ்வாறே களிப்பு நல்கக் கூடியது.

**தெளிந்த நீர்**

வஞ்சனை யற்ற மாதவரின் உள்ளம் போல் நீர் நிலை களில் உள்ள நீர் தெளிந்திருந்ததாம். பஞ்சு என்று சொன்

னாலே அஞ்சுகிற மடந்தையரின் மை பூசப் பெற்ற கண்கள் போல் நீரில் மீன்கள் துள்ளினவாம்,

**"வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்**
**நெஞ்செனத் தெளிந்தன நீரம், நீர்தொறும்**
**பஞ்சுஎனச் சிவக்கும் மென்பாதப் பேதையர்**
**அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்த ஆடல்மீன்"** (113)

மா தவசியர் தீவினையை மெய்யால் செய்யாதது மட்டுமன்று - வாக்கல் பேசாதது மட்டுமன்று - உள்ளத் தால் எண்ணுவதும் இல்லையாம். தீவினை பற்றி நினைப்பு இருந்தால் அல்லவா இவை செய்யத் தோன்றும். தீவினை என்பதை அறவே மறந்தே விட்டார்களாம். இது சுவையான கருத்து வெளிப்பாடாகும். 'உள்ளத்தில் தெளிவுண்டாயின் வாக்கினில் தெளிவுண்டாகும்' என்று பாரதியார் கூறியுள்ள படி அவர்தம் உள்ளம் தெளிந்திருக்கும்; அதுபோல் நீரும் தெளிவுற்றிருந்ததாம். நீரம் = நீர். நீர் நிலைகள் பல இருந்த தால் நீரம் தெளிந்தன எனப் பன்மை முடிவு கொடுக்கப் பட்டது. நீரம் = பால் பகா அஃறிணைப் பெயர். நீர் என்ப தோடு 'அம்' சாரியை சேர நீரம் என்றாயிற்று. இது ஒரு புதிய வழக்கே. பிங்கல நிகண்டில் நீருக்கு நீரம் என்னும் பெயர் தரப் பெற்றுள்ளது.

ஆரணிய காண்டத்தில், சான்றோர் கவியும் தெளிந்தது- கோதாவரி ஆற்று நீரும் தெளிந்தது என்னும் கருத்தில்

**"சவிஉறத் தெளிந்து தண்ணென்**
**ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்**
**கவி எனக் கிடந்த**
**கோதா வரியினை வீரர்கண்டார்"** (5:1)

என்று கம்பர் கூறியுள்ளார். சான்றோர்க்கு உள்ளத்தில் தெளிவு இருந்தால் தானே கவியிலும் தெளிவிருக்கும். இது ஈண்டு எண்ணத் தக்கது.

அடுத்து, - பெண்களின் கால்களின் அடியில் பஞ்சால் செங்குழம்பு ஊட்டுவதுண்டு. இதற்குச் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுதல் என்பது பெயர். பஞ்சு என்று சொன்னதுமே - ஐயோ அது உறுத்துமே என அஞ்சுகின்றார்களாம்- எனவே, செம்பஞ்சு ஊட்டாமலேயே சிவந்து விடுகின்றனவாம். அவ்வளவு மென்மையான கால் அடி உடையவர்களாம் பெண்கள்.

இங்கே நாலடியாரில் உள்ள -

**"அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங் கிற்கன்னோ**
**பரற்கானம் ஆற்றின கொல்லோ - அரக்கார்ந்த**
**பஞ்சுகொண் டூட்டினும் பையெனப் பையெனஎன்று**
**அஞ்சிப் பின்வாங்கும் அடி"** (396)

என்னும் பாடல் ஒப்பு நோக்கற் பாற்று, பஞ்சு கொண்டு ஊட்டினாலும் மெதுவாக - மெதுவாக, (பையென) என்று கூறிக்கொண்டே காலைப் பின்னால் இழுத்துக் கொள்வாளாம். இது மேட்டுக்குடி மங்கையர்க்கே பொருந்தும். கால் கடுக்க வேலை செய்யும் பெண்கட்குப் பொருந்தாது. இது கம்பருக்குத் தெரியாதா என்ன! இவ்வாறு கற்பனை செய்வது, பெண்கள் ஆண்களினும் உடலால் மென்மையானவர்கள் என்பதை அறிவிப்பதற்கேயாம். 'மெல்லியல்' என்பது பெண்ணைக் குறிப்பதன்றோ?

சிறார் ஊசி மருந்து என்று சொன்னாலேயே அச்சம் வர அழுவர். சிலர் சிங்கம், புலி, பாம்பு என்று சொன்னாலே அஞ்சுவர். புலி அடியைக் கண்டு பயந்தவனைக் கண்டு பயந்தவனைக் கண்டு பயந்தவனின் கதைதான் தெரியுமே. இவ்வாறு, பஞ்சு என்றதுமே நெஞ்சு பதைப்பராம். இதுவும் ஒரு சுவையான கருத்து வெளிப்பாடாகும்.

அஞ்சனம் = மை. ஆடல் மீன் = நீரில் துள்ளி ஆடும் மீன். பெண்களின் கண்போல் மீன்கள் துள்ளுவதாகக்

கூறுவது பழைய செய்தி; ஆயினும் மழை பெய்தபோது உள்ளடங்கிக் கிடந்த மீன்கள் இப்போது வெளிப்போந்து துள்ள ஆரம்பித்தன என்று கூறுகிறார்.

**தவளைகளின் அடக்கம்**

ஆசிரியர்பால் கல்வி கற்கும் பல்வகைச் சிறுவர்களின் ஆரவாரக் கூச்சல் ஒலியே போல, மழைக்காலத்தில் பேர் ஒலி எழுப்பிய தவளைகளின் நாக்குகள், செல்லக்கூடிய இடத்தில் தவிர மற்ற இடங்களில் ஒன்றும் உரைக்காத அறிஞர்களைப் போல் ஒலி எழுப்பாது அடங்கி விட்டன:

**"கல்வியில் திகழ் கணக்காயர் கம்பலைப்**
**பல்விதச் சிறாரெனப் பகர்வ பல்அரி**
**செல்லிடத் தல்லதுஒன்று உரைத்தல் செய்கலா**
**நல்லறி வாளரின் அவிந்தநா எலாம்"** (115)

கணக்காயர் = ஆசிரியர். கம்பலை = ஆரவாரக் கூச்சல். அரி = தவளை. நா = நாக்கு. ஆசிரியர்க்குக் கணக்காயர் என்ற பெயர் வந்த வரலாறாவது:

பண்டைக் காலத்தில் எழுதிவைத்துப் படிக்கவில்லை. பொருள் கொடுத்து வாங்குவதைக் கணக்கிடச் சுவரிலோ வேறு எதிலோ கோடுகள் போட்டனர். பின்னர் ஓலையில் போட்டனர். ஓலையில் இட்ட கணக்குக் குறியைப் பார்வையிடுவதற்கு அந்த ஓலையை எடுத்துவா என்று சொல்லாமல், அந்தக் கணக்கை எடுத்துவா என்றனர். பின்னர் எழுதி வைக்கப்பட்டவற்றிற் கெல்லாம் கணக்கு என்னும் பெயர் தரப்பட்டது. நாளடைவில் கணக்கு என்பது நூல் (புத்தகம்) என்பதைக் குறிக்கலாயிற்று. எனவே, கணக்கைக் (நூலைக்) கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் கணக்காயர் எனப்பட்டார். எண்ணே (கணக்கே) முற்பட்டது; எழுத்து பிற்பட்டது. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்னும் ஔவை மொழியிலும், 'எண்

என்ப ஏனை எழுத்து என்ப' என்னும் குறட்பாவிலும் எண் முதலிடம் பெற்றிருப்பது காண்க.

சிறுவர் பள்ளிகளில் எப்போதும் இரைச்சல் இருக்கும். படிப்பு இரைச்சல் ஒரு புறம் இருக்க அவர்களின் பேச்சொலியும் அதனோடு சேர்ந்து கொள்ளும். அந்தக் காலத்தில் முறைபோட்டுச் சொல்லிக் கொடுப்பது உண்டு. அதாவது, ஆசிரியர் ஒரு பாடலைச் சொல்லச் சொல்ல, மாணாக்கர்களும் திரும்பத் திரும்பச் சொல்வர். பின் ஒரு மாணவன் சொல்ல, அதை மற்ற மாணவர்கள் சொல்வர். இவ்வாறு திரும்பத் திரும்பச் சொல்வதால் மனப்பாடம் வந்து விடும். இதற்கு 'Drill - Practice' என ஆங்கிலத்தில் பெயர் சொல்வதுண்டு. மற்றும், பல்கால் பயிறல் — பயிற்றல் படிப்புக்குத் தாய் என்னும் கருத்துடைய 'Repetition is mother of Learning' என்னும் பட்டறிந்த ஆங்கில முது மொழியும் உண்டு. எனவே சிறார்பள்ளி ஒரே கூச்சல் உள்ளதாகத் தோன்றும். (இப்போது கல்லூரி வகுப்புகளிலும் பல்கலைக் கழக வகுப்புகளிலும் அரட்டைக் கச்சேரி நடப்பதை விட்டு விடுவோம்.)

இந்தக் கூச்சல்தான் தவளைகளின் கத்தலுக்கு உவமையாக்கப்பட்டுள்ளது. 'ஏன் மழைக் காலத்துத் தவளைகள் போல் கத்துகிறீர்கள்' என்றும் கூறுவதைக் கேட்டிருக்கலாம். மற்றும் இப்பாடலில் உள்ள 'பல் விதச் சிறார்' என்பதும் எண்ணத்தக்கது. எல்லா மாணாக்கர்களும், வயதாலும், உடல் நலத்தாலும், செல்வத்தாலும், மற்ற சூழ்நிலைகளாலும் அக்காலத்தில் ஒரே விதமாய் இருக்கமுடியாது. இக்காலத்திலேயே இல்லையெனில், அக்காலத்தில் எவ்வாறு இருக்க முடியும்? பல்விதச் சிறார் என்றது போலவே, 'பல் அரி' (பல வகையான தவளைகள்) என்று கூறியுள்ளமையும் எண்ணத்தக்கது.

அடுத்து, மழைக்காலம் சென்றதும் தவளைகளின் நாக்குகள் அடங்கியதற்கு வருவோம். அறிஞர்கள் செல்லக் கூடிய தக்க இடத்தில்தான் பேசுவர் - தகாத இடத்தில் பேசார். அவ்வாறே, தவளைகள் மழைக் காலத்தில் மட்டுமே கத்தும் - கோடையில் கத்தமாட்டா. அறிஞர்கள் தகாத இடத்தில் பேசினால் 'அரை வேக்காட்டு நொய்யரிசிகள்' கேட்பதில்லை, - எழுந்து போய்விடுவர். வாலில்லாக் குரங்குகள் சில, ஆழ் - ஊழ் என்று கத்தியும் கைதட்டியும் பேசுபவரை நிறுத்தும்படிச் செய்துவிடும். இதனால் தான், வள்ளுவர் 'அவை யறிதல்' என்னும் தலைப்பு இட்டு, தக்க இடத்திலேயே பேசவேண்டும் என்பதற்குப் பல குறட்பாக்களைச் செலவிட்டுள்ளார். அவை வருமாறு:

**"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்"** (711)

**"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்**
**நடைதெரிந்த நன்மை யவர்"** (712)

**"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்**
**சொல்தெரிதல் வல்லா ரகத்து"** (717)

**"உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதனமுன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று"** (718)

**"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார்"** (719)

**"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்**
**அல்லார்முன் கோட்டி கொளல்"** (720)

என்பன அவை.

**கமுகின் நிறம்**

கல்விக்காக வெளிநாடு சென்றிருப்பவரின் வீட்டில் தங்கியுள்ள மனைவி பிரிவித்துயரால் வருந்துதலால்

அவளது மேனி ஒருவிதமான பசலை நிறம் (பொன்னிறம்) பெற்றிருப்பதைப் போல, மழைக் காலத்தில் பசுமை நிறமுற்றிருந்த கமுக (பாக்கு) மரக்குலைகள், இப்போது பசுமை நீங்கிப் பொன்னிறமாய்த் தோன்றுகின்றனவாம்:

**"சொன்னிறை கேள்வியின் தொடர்ந்த மாந்தரின்**
**இன்னிறம் பசலையுற்று இருந்த மாதரின்**
**தன்னிறம் பயப்பய நீங்கித் தள்ளரும்**
**பொன்னிறம் பொருந்தின பூகத் தாறெலாம்"** (117)

சொன்னிறை = சொல் நிறை. படிப்புக்காக வெளிநாடு செல்பவர்கள் அங்குள்ள ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதால், கல்வியைச் 'சொல் நிறை கேள்வி' என்றார். 'கேள்வியும் கல்வியாகும்' என்பது திவாகரம்.

'ஓதல் பிரிவு ஒரு மூன்று யாண்டே' என்பது நம்பி அகப் பொருள். இந்தக் காலம்போல் அந்தக் காலத்திலும் அதிலும் திருமணம் ஆனவர்களும் வெளிநாடுகட்குச் சென்று கல்வி கற்றுள்ளமை தெரிய வருகிறது. அந்தக் காலத்தில்,

**"யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு"** (397)

என வள்ளுவர் சொல்லிவிட்டுப் போனதற்கு இணங்க, இந்தக் காலத்தில் சாகும்வரை படிக்கவேண்டியதாயுள்ளது. மாணிக்க வாசகர் சொல்லியுள்ளபடி, 'கல்வி என்னும் பல்கடல் பிழைப்பது' என்றோ? - எவ்வாறோ?

மாந்தர் = படிக்கச் சென்ற மக்கள். இன்னிறம் = இல்நிறம். இல் = வீடு. பூகத்தாறு = பூகம் தாறு. பூகம் = கமுகு. தாறு - குலை. பச்சைநிறக் குலை பொன்னிறமானது என்றால் முற்றி முதிர்ந்துவிட்டது என்பது பொருள்.

கம்பர் வாய்ப்பு நேரும் போதெல்லாம், உவமைகளின் வாயிலாக உயர்ந்த படிப்பினைகளையும் செய்திகளையும் மக்கட்கு அறிவுறுத்தியுள்ளார் என்பதற்குச் சான்றாக இந்த ஒரு பாடல் போதுமே!

# 10. கிட்கிந்தைப் படலம்

கிட்கிந்தை என்னும் நகரில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும் படலம் ஆதலின் இப்பெயர்த் தாயிற்று இது.

### இராமனது சினம்

நான்கு திங்கள் கடந்ததும் படையுடன் வருக என்று இராமன் சொல்லியனுப்பியபடிச் சுக்கிரீவன் வரவில்லை. அதனால் சினங் கொண்ட இராமன் இலக்குவனை நோக்கி, குறித்த காலம் ஆகியும் இன்னும் வராத சுக்கிரீவன் நன்றியை மறந்து விட்டான் – நம்மேல் அன்பு இல்லா விடினும் அறத்தை மறக்கலாமா? – நம் வலிமையையும் மறந்து விட்டான் போலும் – அவனைக் கொன்றாலும் அது குற்றம் ஆகாது - நீ போய் அவனது உள்ளத்தின் போக்கை அறிந்து வர வேண்டும்.

**"நன்றி கொன்று அருநட்பொடு நார் அறுத்து**
**ஒன்றும் மெய்ம்மை சிதைத்துஉரை பொய்த்துளான்**
**கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்**
**சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய்"** (3)

நன்றி, அறம், மெய்ம்மை, நட்பு, அன்பு எல்லா வற்றையும் மறந்தவனைக் கொன்றாலும் குற்றம் இல்லை என்று இராமன் கூறியிருப்பது மிகவும் கடுமையான தாகும். இதற்காக ஆளையே கொன்று விடுதல் பொருந்தாது. ஆனால், கொன்றாலும் குற்றமில்லை என்றுதான் இராமன் சொன்னானே தவிர, கொல்லவில்லை. இராமன் தெய்வப் பிறவியாயினும், இங்கே மக்களாகவே நடந்து கொண்டுள்ளான். மனைவியை இழந்தவன்; மனைவியை

மீட்கச் சுக்கிரீவன் வரவில்லையே என்ற காழ்ப்பில் இவ்வாறு கூறுவது இயற்கையே.

**உண்டு - உண்டு**

இலக்குவனே! நீ சுக்கிரீவனிடம் சென்று, அரக்கர் களைக் கொன்று அவ்வுலகத்திற்கு அனுப்பிய வில்லும் உண்டு - அம்பும் உண்டு - எமனும் உண்டு - என்று அவனுக்குச் சொல்லி நினைவு படுத்துக:

**"வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்து**
**இம்பர் நல்லறம் செய்ய எடுத்தவில்**
**கொம்பும் உண்டுஅருங் கூற்றமும்உண்டு உங்கள்**
**அம்பும் உண்டென்று சொல்லுநம் ஆணையே" (4)**

வெம்பு கண்டகர்=கொடிய அரக்கர். வில் கொம்பு= வில்தண்டு. உங்கள் அம்பு என்றது; உங்களுக்காக வாலியைக் கொன்ற அம்பு - இன்னும் நீங்கள் ஒழுங்காய் நடந்து கொள்ளாவிடின் உங்கள் மேல் எய்தற்கு உரிய அம்பு - மொத்தத்தில் உங்கள் தொடர்பாகவே வைத்துக் கொண்டிருக்கும் அம்பு என்பதை அறிவிப்பதற்காம். கூற்றமும் உண்டு என்றது, அரக்கர் சிலரின் உயிரையும் வாலியின் உயிரையும் எங்களால் பெற்று உண்டு மேலும் காத்துக்கொண்டிருக்கிறான் எமன் என்று கேலிக் கிண்டல் செய்வதாகும்.

**ஐந்தும் ஐம்பதும்**

நஞ்சு போன்ற கொடியவரை ஒறுத்தல் வஞ்சகச் செயல் ஆகாது - அது அறநெறியே. சுக்கிரீவன் ஐந்து வயதிலும் அறியாதவனே - அது சரி - ஐம்பதிலும் வளையாதவனா யுள்ளானே அவன் நெஞ்சில் நின்று தைக்கும்படி எல்லாம் எடுத்துச் சொல்லுக:

**“நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது**
**வஞ்சம் அன்று மனுவழக்கு ஆதலால்**
**அஞ்சில் ஐம்பதில் ஒன்றறி யாதவன்**
**நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாம்”** (5)

*தீயவரை ஒறுத்தல் முறையே என்கிறான்' இங்கே,*

**“கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று**
**வெள்வேல் கொற்றம் காண்”** (20:64, 65)

*என்னும் சிலம்புப்பகுதி மீண்டும் நினைவு கூரத் தக்கது.*

**“அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாமறியார்”**

*என்பது பெரியோர் கூற்று. “ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது” என்பது மக்கள் பழமொழி.*

**“ஆற்றும் இளமையில் கல்லாதான் மூப்பின்கண்**
**போற்றும் எனவும் புகலுமோ”**

*என்பது பழமொழி நானூறு என்னும் நூல் பாடல். இங்கே, அரசியல் நெறி - கூட்டு நட்பு நெறி முதலியவற்றைப் பெரியவனாகியும் அறியாத சுக்கிரீவன் ஐந்து அகவை (வயது) உடைய சிறுவனுக்கு ஒப்பாவான் - என்பது கருத்து. ஐந்து என்பது அஞ்சு என்றாயது போலி - இதனை மரூஉ என்பாரும் உளர்.*

**பேரும் மாளும்**

*நீங்கள் சுற்றத்துடன் ஆண்டு இன்புற வேண்டுமெனில் குறித்த நாளில் வந்துவிட வேண்டும்; இல்லையேல், உங்கள் பேரே உலகத்திலிருந்து மறைந்து விடும்:*

**“ஊரும் ஆளும் அரசும் நும்சுற்றமும்**
**நீரும் ஆளுதிரே எனின், நேர்ந்தநாள்**
**வாரும், வாரலிராம் எனின், வானரப்**
**பேரும் மாளும் எனும்பொருள் பேசுவாய்”** (6)

வாக்குக் கொடுத்தபடிப் படையுடன் வராவிடின், சுக்கிரீவன் முதலிய - இப்போதுள்ள வானரர்கள் அழிந்து போவது மட்டுமல்லாமல், வானரக் குலம் முற்றுமே பூண்டோடு-வேரோடு அழிந்துவிடும் என்று சொல்ல வேண்டுமாம். அதாவது அகரவரிசையில் (டிக்ஷனரியில்) வானரம் என்ற சொல்லே இராது என்பது கருத்து. 'செத்த காலேஜ்' என்று சொல்லப்படும் பொருட் காட்சி நிலையத்தில் வானரம்போல் உருவம் செய்தோ—அல்லது இறந்து போன ஒரு வானரத்தின் உடலைப் பதப்படுத்தி வைத்தோ பார்க்கவேண்டும் என்ற அளவுக்கு நிலைமை ஆகி விடும் என்பதைத்தான் 'பேரும் மாளும்' என்னும் தொடர் அறிவிக்கிறது.

## பிறர் இன்மை

ஒருவேளை, இந்த இராம இலக்குவர்கள் கிடக்கட்டும்-இவர்களினும் வலியவராயுள்ள வேறு பிறரின் துணை கொண்டு தம்மைக் காத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் புறக்கணிப்புப் (அலட்சியப்) போக்குடன் இருப்பதாகத் தெரிந்தால், இலக்குவனாகிய உன்னை வெல்ல இம்மூவுலகினும் ஒருவரும் இல்லை என்பதையும் அறிவிப்பாயாக:

> **''இன்னம் நாடுதும் இங்கு இவர்க்கும்வலி**
> **துன்னினாரை எனத் துணிந் தார்எனின்**
> **உன்னை வெல்ல உலகொரு மூன்றினும்**
> **நின்அலால் பிறர் இன்மை நிகழ்த்துவாய்''** (7)

ஒருவரிடம் தக்க உதவி பெற்ற பின்பு, அவரை மறந்து, இன்னும் எத்தனையோ பேர் உதவ இருக்கிறார்கள்-இவர் கிடக்கட்டும் என்று புறக்கணிப்பவர்கள் உலகில் உண்டு. இதைத்தான் இராமன் குறிப்பிட்டுள்ளான். கறிவேப்பிலைக் கொத்தை நறுமண-நறுஞ்சுவைக்காகப் பயன்படுத்திக்

கொண்டு பின்னர் தூக்கி எறிந்து விடுபவரைப்போன்ற நிலையில் வானரர் உள்ளனரா என இராமன் ஐயுறுவதில் உண்மைப் பொருத்தம் உள்ளது.

**இராமனது தெளிவு**

சுக்கிரிவனைக் கொன்றாலும் குற்றமில்லை என்று கூறிய இராமன் பிறகு தெளிவுடன் (நிதானத்துடன்) சொல்லுகின்றான்:

தம்பீ! நீ நீதியை எடுத்துச் சொல்; அவர்கள் ஒத்து வரவில்லை எனில், நீ வல்லே சினந்து அவர்களைக் கொல்லுதல் போன்ற செயலில் இறங்கிவிடாதே. அவர்கள் சொல்வதைத் தெரிந்து கொண்டுவா எனக் கூறி அனுப்பினான் இராமன்;

**"நீதி யாதி நிகழ்த்தினை நின்றது**
**வேதியாத பொழுது வெகுண்டு அவண்**
**சாதியாது அவர்சொல் தரத் தக்கனை**
**போதியாதி என்றான் புகழ்ப் பூணினான்"** (8)

அவண் = அவ்விடத்தே. சாதியாது = ஒறுக்காமல், கொல்லாமல். சொல்தரத்தக்கனை=அவர்களின் சொல்லை என்னிடம் தரத் (சொல்லத்) தகுதியுடையவனாய் வா. கம்பர் இங்கே நம்மை ஏமாற்றிவிட்டார். சுக்கிரீவனைக் கொன்றாலும் குற்றம் இல்லை என்று முதலில் கூறியதன் வாயிலாக முதலில் இராமனை வெகுளி உடையவனாகக் காட்டிவிட்டு, இறுதியில் அவர்களை ஒன்றும் செய்யாதே என்று கூறியதன் வாயிலாக இராமனது தெளிந்த (நிதானமான) நிலையை நமக்குக் காட்டியுள்ளார். முதலில் இராமனது பண்பில் ஐயுற்றவர்கள் பிறகு தெளிவடையச் செய்து விட்டார் கம்பர்.

## சிந்தையுள் நீங்காமை

இலக்குவன் தமையனின் ஆணையை ஏற்றுச் சிறிதும் காலம் தாழ்த்தாமல் வில்—அம்புடன் தொலைவில் உள்ள கிட்கிந்தை நகரை நோக்கிச் சென்றானாம். அவனது செலவைப்பற்றிக் கம்பர் பின்வருமாறு கூறுகிறார்:

**"சேணின் நீங்கினன் சிந்தையுள் நீங்கலான்"** (9)

சேண் = தொலைவு. இராமனைவிட்டுப் பிரிந்தறியாத இலக்குவன் இப்போது அவனைத் தனியாக விட்டுத் தொலைவில் பிரிந்து சென்றானாம்; ஆனால் தன் உள்ளத்திலிருந்து இராமனைப் பிரியவில்லையாம். இராமனது சிந்தையினின்றுங்கூடப் பிரிந்திருக்க மாட்டான். இருவரும் ஒருவர்க்கு ஒருவர் தம் நெஞ்சில் நினைத்துக்கொண்டேயிருந்திருப்பர்போலும். இது சுவையான கருத்து வெளிப்பாடு.

## வானரர்கள் பட்ட பாடு

இலக்குவன் மிடுக்கோடு விரைந்து வருதலைக்கண்ட வானரர்கள் அஞ்சி ஓடி அங்கதனிடம் இதைக் கூறினர். அவன் சுக்கிரீவனிடம் ஓடினான். சுக்கிரீவன் மதுவுண்ட மயக்கத்தோடு, பணிப்பெண்கள் கைகால்களைப் பிடித்து விட உறங்கிக்கொண்டிருந்தான்.

**"இள முலைச்சியர் ஏந்துஅடி தைவர**
**விளை துயிற்கு விருந்து விரும்புவான்"** (18)

என்பது பாடல் பகுதி. கை கால்களைப் பிடித்துவிட்டால் தூக்கம் வரும் என்பது ஒரு கருத்து. செல்வர்கட்குப் பணியாளர்களும், முதியோர்க்கு இளைஞரும் கால்பிடித்து விடுவர். கணவனுக்கு மனைவி கால் பிடித்து விடுவதும் உண்டு. ஆனால் மனைவிக்குக் கணவன் கால் பிடிப்பது நம் நாட்டில் இல்லை.

மக்களினம் மட்டுந்தானா கால் பிடிக்க உறங்கும்? கரும்புகூடக் கால் வருட உறங்குமாம். வயலில் உள்ள கரும்பின் காலைத் தென்றல் காற்று வருடக் கரும்பு உறங்குமாம். இது நடந்தது திருவையாற்றில். ஞானசம்பந்தரின் திருவையாற்றுத் தேவாரப் பதிகத்தில் இது கூறப்பட்டுள்ளது. மலர்மணத்தை ஏந்திவரும் தென்றல் காற்று அடிவருடும் போது, குயில் உறங்கச் செய்யும் தாலாட்டுப் பாடியதாம்.

> **"குன்றெலாம் குயில் கூவக் கொழும்பிரச**
> **மலர் பாய்ந்து வாசம் மல்கும்**
> **தென்றலார் வருடச் செழுங் கரும்பு**
> **கண் வளரும் திருவை யாறே"** (3:7)

என்பது பாடல் பகுதி. கம்பர் இப்பகுதியில் நயமான கருத்து ஒன்று நல்கியுள்ளார். சிலர் தூங்குவதில் பெரு விருப்பங்கொண்டு பேரின்பம் கொள்வர். தூக்கம் அவர்கட்கு ஒரு விருந்தாக இருக்கும். அதற்கு மாறாக, தூக்கத்திற்குச் சுக்கிரீவன் விருந்தாக இருந்தானாம். அங்ஙனம் என்றால், அந்த அளவுக்குப் பேருறக்கம் கொண்டிருந்தான் என்பது கருத்தாகும். இது கருத்து வெளியீட்டில் ஒரு புதுமை யாகும். இந்தப் புதுமைப் புகழுக்கு உரியவர் கம்பர் பெருமான்.

**செல்வர்கள்**

இராமன் உதவிய அரசச் செல்வமாகிய கள்ளினால் சுக்கிரீவன் மிகவும் மதிமயங்கிக் களிப்படைந்து விட்டானாம். மது அருந்தினால் மயக்க நோய்வரக் கேட்கவா வேண்டும்?

> **"தெள்ளியோர் உதவப் பெருஞ் செல்வமாம்**
> **கள்ளினால் அதிகம் களித்தான்"** (19)

பெருஞ்செல்வத்தை, மயக்கம்தரும் கள் என்றார் கம்பர். ஒரு புலவர் பெருத்த செல்வத்தைப் பிணி என்றார்.

அந்தப் பிணி, எதிரே வரும் நண்பர்களையும் உறவினர் களையுங் கூட ஏறெடுத்துப் பார்க்க முடியாதபடிக் கண்களை மறைத்துவிடுமாம். இதற்கு மருந்து வாகடத்தில் (மருத்துவ நூலில்) இல்லையாம். இதற்கு மருந்து தரித்திரம் தானாம். அவருக்குத் தரித்திரம் (வறுமை)வரின் மீண்டும் கண்தெரியத் தொடங்கிவிடுமாம்.

**''பெருத்திடு செல்வமாம் பிணிவந்து உற்றிடின்**
**உருத் தெரியாமலே ஒளி மழுங்கிடும்**
**மருத்து உளவோ எனில் வாகடத்துஇலை**
**தரித்திரம் என்னும்ஓர் மருந்தின் தீருமே''**

என்பது ஒரு தனிப்பாடல். சுக்கிரீவா! உன் அரசு நிலைக்க வேண்டுமானால் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்று மிரட்டத் தொடங்கியது இது பற்றியே. தவறினால் அரசு நீங்க, பெருஞ்செல்வமாம் மதுமயக்கப் பிணி அகன்று வடும். 'செல்வம் என்னும் அல்லல்' எனச் செல்வத்தை அல்லல் என்றுள்ளார் மணிவாசகர்.

அங்கதன் எவ்வளவு எழுப்பியும் சுக்கிரீவன் எழாததால், அங்கதன் அனுமனிடம் சென்று நிலைமையைக் கூறினான். அனுமன் வானரர் சிலருடன் சென்று தாரையிடம் கூறி ஆவனபுரிதற்கு வழி தேடினான். தாரையோ சுக்கிரீவன் கடமை தவறியதைச் சுட்டிக்காட்டிக் கண்டித்தாள்.

இது இவ்வாறிருக்க, அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றபடி, இலக்குவன் மிகுந்த சீற்றத்துடன் வருகிறான் என்பதை அவனது முகத்தைக் கொண்டு தெரிந்து கொண்ட வானரர்கள், கோட்டை வாயிலுக்குள் இலக்குவன் புகாதபடி பெரிய பெரிய மலைக் கற்களைப் பெயர்த்து எடுத்துக் கொண்டுவந்து வாயிலை அடைத்து விட்டனர். 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்னும் கதையில், திறந்திடு சீசெம்' என்று சொன்னதும் கதவு

திறந்து கொண்டதுபோல், இலக்குவன் காலால் உதைத்ததும் கதவு திறந்து கொண்டது.

உடனே வானரர்கள் பலர் அஞ்சி நடுங்கிக் காட்டிற்குள் ஓடி மறைந்து கொண்டார்களாம். இதனால், விண்மீன்கள் இல்லாத வானம்போல் கிட்கிந்தை நகரம் பொலிவற்றுக் காணப்பட்டதாம்.

**"வானரங்கள் வெருவி மலை ஒரீஇக்**
**கான் ஒருங்கு படரஅக் கார்வரை**
**மீன் நெருங்கிய வானகம் மீனெலாம்**
**போன பின் பொலிவற்றது போன்றதே"** (40)

மீன் = விண்மீன்கள் - நட்சத்திரங்கள். வெண்ணிலா இல்லாத விண் பொலிவற்றிருக்கும் என்பார்கள். ஆனால், வெண்ணிலா இல்லாத காலத்தும் விண்ணிலே விண்மீன்கள் இருக்கும். அவையும் இல்லாத விண் மிகவும் பொலிவற்றுக் காணப்படும் அல்லவா? அந்த நிலையைத்தான் கம்பர் இங்கே உவமையாகத் தந்துள்ளார். மீன் நெருங்கிய வானகம் என்றார் - அதாவது: அளவற்ற விண்மீன்கள் அகன்ற வானத்தில் நெருங்கி அமைந்துள்ளவையாம். இதைத்தான்,

**"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"** (1, 2)

என் மாணிக்கவாசகர் திருவாசகம் — திருவண்டப் பகுதியில் கூறியுள்ளார். அண்டப்பகுதி = பெருவிண்வெளி. உண்டை = உருண்டை வடிவமாய் உள்ள கோளங்கள். பிறக்கம் = நெருக்கம் - மிகுதி. இந்தக் கோளங்கள் நூற்றொரு கோடிக்கு மேலே உள்ளனவாம். ஒவ்வொரு விண்மீனும் ஒரு கோளமாகும். வெகு தொலைவில் இருப்பதால் ஒவ்வொன்றும் சிறியதாய்த் தெரிகிறது.

கம்பரின் 'மீன் நெருங்கிய வானகம்' என்பதனோடு இந்தத் திருவாசகப் பகுதி ஒப்பு நோக்கற் பாற்று.

**வினையம் ஈது**

அனுமன் தாரையிடம், நீங்கள் பல மாதர்களை அழைத்துக்கொண்டு போய் வாயிலில் நின்றால், இலக்குவன் பெண்களைப் பார்க்கக் கூச்சமுற்று அப்பால் போய் விடுவான். இப்போது நாம் செய்யவேண்டிய சூழ்ச்சி இதுதான் என்று கூறினான்.

**"அனைஎதிர்ந்து இவண் ஆய்வளை யாரொடு**
**மனையின் வாயில் வழியினை மாற்றினால்**
**நினையும் வீரன் அங்நீள்நெறி நோக்கலான்**
**வினையம் ஈதுஎன்று அனுமன் விளம்பினான்"** (42)

அனை = அன்னை = தாய் என்று அனுமன் குறிப்பிடுகிறான். ஆய்வளையார் = பெண்கள். இந்தப் பாடலின் மூன்றாம் அடியில் உள்ள வீரன், நோக்கலான் என்னும் சொற்கள், 'பிறன் மனை நோக்காத பேராண்மை' (148) என்னும் திருக்குறள் பகுதியை நினைவூட்டுகிறது. பிற பெண்களை நோக்காதிருப்பது பெரிய ஆண்மையாம். அதைச் செய்யாத—அதாவது - பிறபெண்களை நோக்காத இலக்குவன் "வீரன்' எனப்பட்டான். இலக்குவன் தன் அண்ணியாகிய சீதையின் காலணியை மட்டுமே அறிந்திருந்தான் - அவளது காலைத் தவிர மேலுள்ள அவளது உருவத்தை நோக்கியதில்லை என்னும் கருத்தும் ஈண்டு இணைத்து எண்ணத்தக்கது. எல்லாரும் இப்படி இருப்பார்களா?

இரண்டு கண்களும் ஒரு பொருளை மட்டுமே பார்க்க முடியும். ஒரு கண்ணால் ஒரு பொருளையும் மற்றொரு கண்ணால் மற்றொரு பொருளையும் பார்க்கமுடியாது.

ஆனால் சில 'ஆண்பிள்ளைச் சிங்கங்கள்' மட்டும், கோயிலில் ஒரு கண்ணால் கடவுள் திருமேனியையும் மற்றொரு கண்ணால் வேறு 'திருமேனிகளையும்' பார்க்கும் வல்லமை உடையவர்கள்போல் தோற்றம் அளிக்கின்றனர்.

உபாயம், தந்திரம் என்னும் வட சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொல்லாகச் சூழ்ச்சி என்பதனைக் கூறலாம். கம்பரோ 'வினையம்' என்னும் மற்றொரு சொல்லையும் நமக்கு நினைவூட்டிச் சென்றுள்ளார். இது அரிய இலக்கியச் சொல்போல நமக்குத் தோன்றினும், இது எளிய மக்களும் பயன்படுத்தும் எளிய சொல்லாகும். "ஐயோ! அவளா - அவள் பெரிய வினையாயிற்றே" - "அவன் வினையே அவனை அழித்துவிட்டது" - "விளையாட்டு வினையாயிற்று" என்னும் தொடர்கள் மக்கள் வாயிலே விளையாடுபவை யாகும். "தன்வினை தன்னைச் சுடும் - வீட்டப்பம் ஓட்டைச் சுடும்" எனப் பட்டினத்தார் சொன்னதாகக் கூறப்படும் தொடரும் இங்கே எண்ணத்தக்கது.

**மாமியர் குழு:**

தாரை மகளிர் கூட்டத்துடன் வந்ததைப் பார்த்ததும், தாமரை போன்ற தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, வில்லைத் தரையில் ஊன்றி, மாமியார் கூட்டத்திடையே அகப்பட்ட மருமகன்போல் கூச்சத்துடன் காணப்பட்டானாம் இலக்குவன்.

> **"தாமரைவதனம் சாய்த்துத் தனுநெடுந் தரையில்ஊன்றி**
> **மாமியார் குழுவின் வந்தானாமென மைந்தன்நிற்ப"** (48)

மாமியார் முன்னே மருமகன் கூச்சப்படுவதும், மருமகன் முன்னே மாமியார் கூச்சப்படுவதும் உண்டு. இது உலக நடைமுறை எனினும், இலக்குவனுக்கு உவமையாகக் காட்டியிருப்பது ஒரு புதுமையாகும்.

**தாரையின் திறமை**

*தாரை இலக்குவனை நோக்கி, இந்திரன் முதலியோர் பல காலம் நோற்றாலும் நினது வருகையைப் பெறல் அரிது - ஆனால், நாங்கள் நினது வருகையைப் பெரும் பேறாகக் கருதுகிறோம் - இதனை எளிதில் பெற்றுப் பிழைத்தோம் - எங்கள் தீவினையும் தீர்ந்தது - இதனினும் வேறு நன்மை உண்டோ - என்றாள்.*

**"அந்தமில் காலம் நோற்ற**
**ஆற்றல் உண்டாயின் அன்றி**
**இந்திரன் முதலி னோர்க்கும்**
**எய்தலாம் இயல்பிற் றாமே**
**மைந்தநின் பாதங் கொண்டுஎம்**
**மனைவரப் பெற்று வாழ்ந்தேம்**
**உய்ந்தனம் வினையும் தீர்ந்தேம்**
**உறுதிவேறு இதனின் உண்டோ!"** (49)

*தேவர்க்கும் கிடைக்காத பெரும்பேறு எங்களுக்குக் கிடைத்தது எனத் தாரை கூறியது மிக்க திறமையுடைய பேச்சல்லவா? இங்கே, 'நாநலம் என்னும் நலனுடைமை' என்னும் குறள் எண்ணத்தக்கது. மிக்க திறமுடன் பேசிய தாரை, ஐயா, நீங்கள் வந்த காரணம் என்னவோ என வினவினாள்.*

**இலக்குவன் நிலை**

*இதுவரை பெண்களை ஏறெடுத்துப் பார்க்காத இலக்குவன் இப்போது தாரையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்ததும் தன் தாய்மார்களின் நினைவு வந்துவிட்டது. தாலி முதற்கொண்டு எந்த அணியும் இன்றி - பூ இன்றிப் பொட்டு இன்றிக் கழுத்து வரையும் போர்த்திக் கொண்டுள்ள தாரையைக் கண்டதும் கண்களினின்றும் நீர் துளிக்க* ***நின்றான்:***

**"ஏர்குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்துநோக்கி**
**தார்குலாம் அலங்கல்மார்பன் தாயரை நினைந்து**
**நைந்தான்"** (51)

**"மங்கல அணியை நீக்கி மணியணி துறந்து வாசக்**
**கொங்கலர் கோதைமாற்றிக் குங்குமம் சாந்தம்கொட்டாப்**
**பொங்குவெம் முலைகள்பூகக் கழுத்தொடு மறையப்**
**போர்த்த**
**நங்கையைக் கண்டவள்ளல் நயனங்கள் பனிப்பநின்றான்"**
(52)

தாலி பிற அணிகலன்கள், பூ, பொட்டு எதுவும் இல்லாத அவளது கைம்மைத் தோற்றத்தைக் கண்டதும், அவ்வாறே கைம்மைக் கோலத்துடன் உள்ள தன் தாய்மார் களின் நினைவு வரவே, கண்களிலிருந்து நீர் உகுத்தான் இலக்குவன். மனத்தின் பொதுப் போக்காக (General Tendency) ஒத்துணர்வு (Sympathy) என ஒன்று சொல்லப் படும். அதாவது, மகிழ்ச்சியான சூழ்நிலையில் மகிழ்ச்சி அடைவது போல், துயரமான சூழ்நிலையில் துயரம் அடைவது ஒத்துணர்வு ஆகும். இங்கே தாரையின் நிலையைக் கண்டதும் தாய்மார்களின் நினைவு வந்ததும் கண்கலங்கி விட்டான் அவன்.

கைம்பெண் கோலம் கொண்ட பெண்கள், தங்கள் கால் அடியும் முகமும் தவிர, மற்ற உடல் உறுப்புகள் எதுவும் தெரியாதபடிக் கழுத்துவரையும் துணியால் போர்த்திக் கொண்டிருப்பர். தாரை அங்ஙனம் காணப்பட்டாளாம். சிலர் முழுத்தலையும் தெரியாதபடி முக்காடு போட்டுக் கொள்வதும் உண்டு.

**இலக்குவன் பதில்**

நான்கு திங்கள் கழித்துத் தானையுடன் வந்து சீதையை மீட்க ஆவன செய்வோம் என்று சொல்லிய சுக்கிரீவன்

குறித்த காலம் கடந்தும் வராத காரணம் என்ன என்று வினவி அவனது உள்ளக் கருத்தைத் தெரிந்து வரும்படி என் தமையன் ஏவியதால் வந்தேன் என்றான் இலக்குவன் (54).

## தாரையின் மறுமொழி

தாரை இலக்குவனை நோக்கி, சிறியவர் தீமை செய்யின் நீ சினவாய் - சினம் ஆறுவாய் - உன்னைத் தவிர, இவ்வாறு அருளக் கூடியவர் வேறு யார் உளர். சுக்கிரீவன் கடமையை மறக்கவில்லை - பல இடங்கட்கும் சென்று சீதை இருக்கும் இடத்தை அறிந்து வருமாறு தூதர்கள் பலரை அனுப்பியுள்ளான். தூதுவர் வந்து அறிவிப்பதை எதிர்பார்த்துக் கொண்டுள்ளான். அறிந்ததும் உடனே வந்துவிடுவான். நீங்கள் செய்த உதவிக்கு ஈடாக அவன் செய்யக்கூடிய பதில் உதவி உண்டோ - என்றாள்.

**''சீறுவாய் அல்லை ஐய! சிறியவர் தீமை செய்தால்**
**ஆறுவாய், நீஅலால் மற்றுஆருளர்; அயர்ந்தான்அல்லன்**
**வேறுவேறு உலகம்எங்கும் தூதரை விடுத்த எல்லை**
**ஊறுமாநோக்கித் தாழ்ந்தான் உதவி மாறுதவி**
**உண்டோ?''** (55)

'தம்பி அடித்தால்கூட அழாது - பொறுத்துக் கொள்ளும்' என்று சிலர் திறமையாகப் பேசுவதுபோல், தாரை, இலக்குவன் சினவான் - அவனைப்போல் வேறுயாரும் இலர் என்று திறமையாகக் கூறி, சுக்கிரீவனது செயலுக்கும் தக்க காரணம் கற்பித்துத் திறமையாகப் பேசியுள்ளாள். நீங்கள் செய்த உதவிக்கு ஈடான பதில் உதவி உண்டோ எனவும் கூறினாள்.

**''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது''** (101)

என்னும் குறளின் கருத்தை, ''உதவி மாறு உதவி உண்டோ'' என்னும் **தொடர் உள்ளடக்கியுள்ளது.**

'சிறியவர் தீமை செய்தால் ஆறுவாய்' என்னும் பகுதியோடு, திருவாசகத்தில் உள்ள -

**"பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள்தம்**
**பொய்யினையே**

(நீத்தல் விண்ணப்பம்-6)

**"பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர்கடமை"**

(திருச்சதகம்-66)

என்னும் பகுதிகளையும், வெற்றி வேற்கையில் உள்ள,

**"சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்**
**பெரியோ ராயின் பொறுப்பது கடனே"** (31)

என்பதும் ஒப்பு நோக்கத்தக்கன.

சிறியவர் சிறு பிழை செய்யின் பொறுக்கலாம். சிறியோர் பெரும்பிழை செய்யின் பொறுக்கமுடியாது என்னும் கருத்தில்,

**"சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்**
**பெரியோர் அப்பிழை பொறுத்தல் அரிதே"** (32)

என்று அதே வெற்றி வேற்கை கூறுகிறது. எனவேதான், இராம இலக்குவரால் பொறுக்க முடியவில்லை போலும். தாரை மேலும் கூறுகிறாள்: அரசு கொடுத்த உங்களையே சுக்கிரீவன் புறக்கணித்து விடின், அச்செயல் அவனை எளிதாய் விட்டுவிடுமா? இவ்வாறு செய்பவர்கள் ஏழு பிறவிகளிலும் வருந்துவர்.

**"உம்மையே இகழ்வர் என்னின்**
**எளிமையாய் ஒழிவ தொன்றோ**
**இம்மையே வறுமை எய்தி**
**எழுமையும் இழப்பர் அன்றே"** (58)

கடமை மறந்தவர்கள் இப்பிறப்பிலும் வறுமை எய்தி வருந்துவர் - இனிவரும் ஏழு பிறவிகளிலுங்கூட வருந்துவர். இங்கே,

**"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு"** (835)

என்னும் குறள் கருத்து கையாளப்பட்டுள்ளது.

**"ஒருமையில் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"** (398)

என்னும் குறளில் கல்வி ஏழு பிறப்புக்கும் உதவும் என்னும் கருத்து கூறப்பட்டுள்ளது. அதுபோலவே, தீமை செய்தவர்கள் ஏழு பிறவிகள் எடுத்து ஒவ்வொரு பிறப்பின் இறுதியிலும் நரகத்துள் அழுந்துவராம்.

**அனுமனின் திறன்**

இவ்வாறு தாரை கூற, சினம் ஆறிய நிலையில் இலக்குவன் இருந்தபோது, அனுமன் பதமாக - பக்குவமாக வந்து இலக்குவனிடம் மொழிகிறான்:

ஐயனே! தாய், தந்தை, குரு, அந்தணர், பசு, பெண்கள், குழந்தை ஆகியோரை வதைத்தவர்க்கும் மாற்றக் கூடிய கழுவாய் (பிராயச் சித்தம்) உண்டு. ஆனால், ஒருவர் செய்த நன்றியைக் கொன்றவர்க்கு மட்டும் தப்பிக்கும் மாற்று வழி - கழுவாய் இல்லை- எனவே, நீங்கள் செய்த நன்றியை நாங்கள் மறப்போமா?

**"சிதைவகல் காதல் தாயைத்**
**தந்தையைக் குருவைத் தெய்வப்**
**பதவி அந்தணரை ஆவைப்**
**பாலரைப் பாவை மாரை**

**வதை புரிகுநர்க்கும் உண்டாம்**
**மாற்றலாம் மாற்றம், மாயா**
**உதவி கொன்றார்க்கு ஒன்றானும்**
**ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?''** (62)

''ஒன்றானும்... உண்டோ'' என்பது, எந்த ஒரு வழியாலும் ஒழிக்க முடியாது என்னும் பொருளது, 'கொன்றார்க்கு', என்பது, நன்றியை மறப்பது, கொன்ற கொலைக் குற்றம் போன்றது என்னும் பொருளது. இந்தக் கருத்து,

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு''** (110)

என்னும் குறளை அடியொற்றி எழுந்த தாகும். மற்றும்,

**''ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உளவென**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**அறம் பாடிற்றே ஆயிழை கணவ''** (34:1-7)

என்னும் புறநானூற்றுப் பாடலும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. அறம் பாடியது என்பதில் உள்ள அறம் என்பது திருக்குறள் தானோ? இந்தக் குறள் திருக்குறள் அறத்துப் பாலில்தான் உள்ளது. இந்தக் கருத்து, சிவப்பிரகாச அடிகளாரின் பிரபுலிங்க லீலை என்னும் நூலின் மருள சங்கர தேவர் கதி என்னும் பகுதியிலும்,

**''தாய்க்கு வழுஇல் மகளிர்க்குத்**
**தந்தை தனக்குப் பசுவிற்குச்**
**சேய்க்கு மறையோர் தமக்கு**
**இடர்செய் தீர்வுஇல் கொடிய பாதகம்''** (15)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அனுமன், ஐயனே! எங்கட்கு எல்லா நலங்களும் நீங்களே. நீங்கள் சினக்கின் எம்மைக் காப்பவர் யார்? சுக்கிரீவன் உதவியை மறக்க வில்லை.

**"உதவாமல் ஒருவன்செய்த உதவிக்குக் கைம்மாறாக**
**மற்றும் உண்டாக வற்றோ"** (66)

என்று கூறி இலக்குவனது சினத்தைத் தணித்தான்.

**இலக்குவனின் மறுமொழி**

அனுமனே! நீங்கள் கடமையை மறந்து காலம் தாழ்த்தது மட்டும் செய்ய வில்லை. அதனால், இன்னும் சில காலம் அரக்கர்களை வாழச் செய்தீர்; தேவர்கட்கு இன்னும் சில காலம் துன்பம் உண்டாகச் செய்தீர்; தீ ஓம்பும் முனிவர்க்கு இன்னும் சில காலம் இடுக்கண் இருக்கச் செய்தீர்; பாவத்தை வளரச் செய்தீர்; இவை யெல்லாம் கிடக்க, - இதுவரையும் சினமே கொள்ளாத என் தமையன் இராமனைச் சினம் கொள்ளச் செய்தீர் - இது உங்கள் செயலால் முடிவாக ஏற்பட்ட தாகும் - என்றான் இலக்குவன்,

**"தாழ்வித்தீர் அல்லீர் பன்னாள்,**
**தருக்கிய அரக்கர் தம்மை**
**வாழ்வித்தீர், இமையோர்க்கு இன்னல்**
**வருவித்தீர், மரபின் தீராக்**
**கேள்வித் தீயாளர் துன்பம்**
**கிளர்வித்தீர், பாவம் தன்னை**
**மூள்வித்தீர், முனியா தானை**
**முனிவித்தீர் முடிவின் என்றான்"** (74)

காலம் தாழ்க்காமல் இருப்பின், இந்நேரம் இராவணனைக் கொன்றிருக்கலாம்; அதனால், மேற்கூறிய எல்லாத் தீமைகளும் நிகழாமல் காத்திருக்கலாம் - என்பது கருத்து. இதுவும் சுவையான ஒரு கருத்து வெளிப்பாடாகும்.

பின்னர், சினம் தணிந்த இலக்குவனை அனுமன் சுக்கிரீவன்பால் அழைத்துச் சென்றான். தாரை மகளிர் குழாத்துடன் அகன்று விட்டாள். இலக்குவனது வருகையை அறிவிப்பதற்காக அங்கதன் சுக்கிரீவனிடம் சென்று, இலக்குவன் சீற்றத்தோடு வந்துள்ளான் எனக் கூறினான். சீற்றத்தோடு வரக் காரணம் யாது எனச் சுக்கிரீவன் வினவினான், இலக்குவன் வந்ததிலிருந்து இதுவரை நடந்தன அனைத்தையும் ஒன்று விடாமல் அங்கதன் கூறினான். என்னை எழுப்பியும் யான் எழாததற்குக் காரணம் கள்ளுண்ட களிப்பே யாகும் எனத் தன் குற்றத்தை உணர்ந்து கள்ளின் கொடுமையைக் கூறலானான்:

**மயக்குமேல் மயக்கு**

கள் உண்ணுதலினும் தாழ்ந்த செயல் வேறு இல்லை. கள் உண்டால் தாய் இவள் - மனைவி இவள் என்ற தெளிவும் இல்லாமல் போகும். அங்ஙனம் என்றால் அறநெறி என்னாகும். ஐம் பெருங் குற்றங்களுள் கள்ளும் ஒன்றா யிற்றே. நாம் இயற்கையாகவே உலகக் கட்டுகளில் மயங்கிக் கிடக்கிறோம். அந்த மயக்கத்தோடு கள்ளுண்ணும் மயக்கமும் சேர்ந்து கொள்ளின் நிலைமை என்னாகும்?

**''ஏயின இதுவலால் மற்று**
**ஏழமைப் பால தென்னோ**
**தாய்இவள் மனைவி என்னும்**
**தெளிவின்றேல் தருமம் என்னாம்**
**தீவினை ஐந்தின் ஒன்றுஇது**
**அன்றியும் திருக்கு நீங்கா**
**மாயையின் மயங்கு கின்றாம்**
**மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம்''** (90)

தீவினை ஐந்து = கொலை, களவு, கள், காமம், பொய் என்பன. மக்களின் உலகப் பிணிப்பு (பந்த பாசம்) இயற்கை யான மயக்கம். கள் உண்ணல் செயற்கையான மயக்கம்.

**நெருப்பில் நெய்**

*தீ வினைகளை நீக்கியவர்கள் பிறப்பினின்றும் விடுபட்டு விடுபேறு அடைவர் எனப் பெரியோரும் நூல்களும் கூறியுள்ளதை அறிந்தும், நெய்யைக் கொட்டி நெருப்பை அணைக்கின்றவரைப் போல், புழு பூச்சிகளை வடிகட்டிக் கள்ளை உண்டு இன்பம் பெற்றதாக எண்ணுகிறேன்:*

**"தெளிந்து தீவினையைச் செற்றோர்**
**பிறவியின் தீர்வர் என்ன**
**விளிந்திலா உணர்வி னோரும்**
**வேதமும் விளம்ப வேயும்**
**நெளிந்து உறை புழுவை நீக்கி**
**நறவுண்டு நிறைகின் றேனால்**
**அளிந்து அகத்தெரியும் தீயை**
**நெய்யினால் அவிக்கின் றாரின்"** (91)

*மதுவில் புழு நெளிகிறதாம். அரிசி முதற்கொண்டு எல்லா உணவுப் பொருள்களிலும் புழுக்கள் நெளிகின்றன எனில், மதுவில் நெளிவதற்குக் கேட்கவா வேண்டும்? புழுவை நீக்கி உண்பதாகச் சொல்கிறான். முதலில் உண்ணும்போது நீக்கலாம் - அடுத்துத் தொடர்ந்து உண்ணும்போது மயக்கம் மேலோங்குவதால் புழுவையும் சேர்த்து உண்பர். நான் மதுவால் இன்பம் பெறுவது நெய்யால் நெருப்பை அவிப்பதாகும். நெய் நெருப்பை அணைக்காமல் மேலும் பெருகச் செய்வதுபோல், மது துன்பத்தை மேலும் மிகுவிக்கும்.*

*இவ்வாறு கள்ளின் கொடுமையைக் கூறி, அதனால்தான் கெட்டதற்கு வருந்திய சுக்கிரீவன், இலக்குவனை அழைத்து வரும்படி அங்கதனுக்குக் கூறித் தான் சுற்றத்தாருடன் இலக்குவனை வரவேற்க அரண்மனை வாயிலில் நின்றான்.*

**விழாக் கோலம்**

இலக்குவன் கிட்கிந்தை நகருக்குள் வருகிறான் என்பதை அறிந்ததும், நகர் விழாக்கோலம் பூணப்பட்டது. கட்டடங்களின் பளிங்கால் ஆன சுவர்களிலும் மணிகள் பதித்த தூண்களிலும் மேலும்சில இடங்களிலும் இலக்குவனது உருவம் ஒரே நேரத்தில் பலவாகத் தெரிந்ததாம். இத் தோற்றம், வில் அம்புடன் ஆயிரம் போர் மறவர்கள் போர் புரிய வந்துள்ளனர் என்று எண்ணும்படிக் காணப்பட்டதாம்:

**"தூயதிண் பளிங்கின் செய்த**
**சுவர்களில் தலத்தில் சுற்றி**
**நாயக மணியிற் செய்த**
**நனிநெடுந் தூணின் நாப்பண்**
**சாயை புக்குறலால் கண்டோர்**
**அயர்வுறக் கைவில் லோடும்**
**ஆயிரம் மைந்தர் வந்தார்**
**உளரெனப் பொலிந்த தவ்வூர்"** (100)

இப்போதும் வீடுகளில் உருவம் தெரியும் கண்ணாடிகளை ஒருவிதமாக அமைத்து வைத்துப் பல உருவங்கள் தோன்றுவதைக் காணலாம். சில கடைகளிலும் இதைக் காணலாம். திரையோவியக் காட்சிகளில் இது பேரிடம் பெற்றுள்ளது. இந்த அமைப்பு அந்தக் காலத்திலேயே இருந்தது என்பதை அறியும்போது வியப்பாயிருக்கிறது.

**புல்லணையும் மெல்லணையும்**

சுக்கிரீவன் இலக்குவனை எல்லா அரசச் சிறப்புகளோடும், வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று அரியணையைக் காட்டி அதில் அமரச் சொன்னான். அதற்கு இலக்குவன் உடன்படாமல், கல்மனக் கைகேசியால் மணிமுடி துறந்து காட்டிற்கு வந்து என் தமையன் புல்லணையில் தங்கியிருக்கும் இப்பொழுது, நான் மட்டும்

மலரால் அணி செய்யப்பெற்ற இந்த மெல்லணையில் இருத்தல் முறையாகுமோ? என்றான்:

**"கல்லணை மனத்தினை உடைக் கைகேசியால்**
**எல்லணி மணிமுடி துறந்த எம்பிரான்**
**புல்லணை வைக,யான் பொன்செய் பூத்தொடர்**
**மெல்லணை வைகலும் வேண்டுமோ என்றான்"** (108)

இலக்குவனை ஒத்த சிலர், இந்தக் காலத்திலும், தம்மைச் சேர்ந்தவர்கள் துன்பம் உற்றிருக்கும்போது. தாம் ஆடம்பரம் இன்றி இருப்பதைக் காணலாம். இதையும் 'ஒத்துணர்வு' (Sympathy) என்னும் மனப் போக்காகக் (Tendency) கொள்ளலாம்.

இவ்வாறு கூறி இலக்குவன் கீழே கல் தரையிலேயே அமர்ந்தான். உயர்ந்த உணவு அருந்தும்படிச் சுக்கிரீவன் வேண்ட, என் தமையன் உண்ட காய்கனிகளின் எச்சமே என் உணவு எனக் கூறி மறுத்து விட்டான்.

பின் சுக்கிரீவன், வெளியில் உள்ள படைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு நீ வருக என அனுமனுக்குக் கூறித்தான் இலக்குவனுடன் இராமன் இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

**சிவிகையும் தேரும்**

இலக்குவன் தரையில் நடந்து சென்றதால், சுக்கிரீவனும் சிவிகை பின்னால் வரத் தாரணித் தேரின் சென்றானாம்.

**"வீரனுக்கு இளையவன் விளங்கு சேவடி**
**பாரினிற் சேறலின், பரிதி மைந்தனும்**
**தாரினின் பொலங்கழல் தழுங்கத் தாரணித்**
**தேரினில் சென்றனன் சிவிகை பின்செல"** (123)

வீரனுக்கு இளையவன் = இலக்குவன். பரிதி மைந்தன் = சுக்கிரீவன். சுக்கிரீவன் மன்னனாதலின் அவன் சிவிகையில்

செல்லவேண்டும் என்பது மரபு - ஆனால், இலக்குவன் தரையில் நடப்பதால் தானும் தரையில் நடக்கிறான். அரச மரபு மாறா திருப்பதற்காகச் சிவிகையும் (பல்லக்கும்) பின்னே வந்துகொண்டிருக்கிறது.

கால்களில் உள்ள கழல்கள் ஒலிக்கச் சுக்கிரீவன் 'தாரணித் தேரினில் சென்றனன்' என்று பாடிக் கம்பர் நம்மை திகைக்கச் செய்துள்ளார். பல்லக்கில் கூடச் செல்லாதவன் தேரில் செல்வது எவ்வாறு? இங்கே தார் அணித்தேர் என்பது, மலர்ச்செடிகொடிகள் அணியாக உள்ள பூமியாகிய தேர் ஆகும். பூமியைத் தேர் என்றது எவ்வாறு? சிவன் முப்புரங்களை அழிக்க, மேரு மலையை வில்லாகவும் வாசுகிப்பாம்பை நாணாகவும் திருமாலை அம்பாகவும் பூமியைத் தேராகவும் கொண்டார் என்பது ஒரு புராணக்கதை. இந்தக் கதையின் அடிப்படையில், சுக்கிரீவன் தரையில் (பூமியில்) சென்றான் என்பதற்குப் பதிலாகத் தேரினில் சென்றான் என்று பாடினார் கம்பர். ஒரு கற்பனைச் சுவையாகும் இது.

படைகள் பின்னே தங்க, அங்கதன் விலகி நிற்க, சுக்கிரீவன் தன் அன்பு முன்செல்ல அந்த அன்புக்குப் பின்னே நடந்து சென்று இராமனை அடைந்து அவனது கால்களில் விழுந்து வணங்கினான்.

### இராமன் வினவல்

இராமன் சுக்கிரீவனைத் தழுவி அமரச் செய்து, உன் அரசும் ஆணையும் செம்மையுற நடக்கின்றனவோ - உனது ஆட்சியாகிய குடை நிழலில், பல உயிர்களும் வெப்ப மின்றிக் குளிர்ச்சியாய் உள்ளனவோ என வினவினான்.

**"அயல் இனிதிருத்தி நின்அரசும் ஆணையும்**
**இயல்பினின் இயைந்தவே இனிதின் வைகுமே**
**புயல்பொரு தடக்கைநீ புரக்கும் பல்லுயிர்**
**வெயில் இலதே குடையென வினவினான்"** (128)

*அயல் இனிது இருத்தி - என் பக்கத்தில் இன்பொடு அமர்க. 'இயல்பினின்' என்பது, ஒரு தொல்லையும் இடையில் ஏற்படாமல் எல்லாம் இயற்கையாக-இயல்பாக நடைபெறுகின்றனவா என்னும் குறிப்பை அறிவிக்கிறது. தட கை = நீண்ட கை. புயல் பொரு கை = முகில்போன்ற கை. கை கொடுத்துக்கொடுத்து நீண்டு விட்டதால் தடக்கை எனப் பட்டதோ. இயற்கையான நலம் உசாவுதலாகும் இது.*

**பரதன் நீ**

*சுக்கிரீவன், ஐயனே! நின் அருள் உள்ளபோது எனக்குக் குறை ஏது? அரசு நன்கு நடைபெறுகிறது. யான் காலம் தாழ்த்திய குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் எனப் பணிய, அவனுக்கு இராமன் கூறுவான்:*

*சுக்கிரீவ! நீ வருவதற்குக் குறித்த காலம் கடப்பினும் நின் படைஞர்கள் எல்லாப் பக்கங்களிலும் சென்று தேடும் முயற்சியில் ஈடுபட்டு, சிதறிக் கிடந்த படைகளையும் ஒன்று திரட்டினராதலின், காலம் தாழ்த்ததாகக் கொள்ள இனி இடமில்லை; என் தம்பி பரதனைப்போன்ற நீ, இவ்வாறு உன்னையே இழித்துப் பேசிக்கொள்ளக் கூடாது- என்று ஆறுதல் கூறினான்.*

**"திருவுறை மார்பனும் தீர்ந்ததேயும் வந்து**
**ஒருவரும் காலம்உன் உரிமையோர் உரை**
**தருவினைத்து ஆகையின் தாழ்விற் றாகுமோ**
**பரதன்நீ இனையன பகர்தியோ என்றான்"** (133)

*திரு உறை மார்பன் = திருமகள் உறையும் மார்புடைய திருமாலாகிய இராமன், 'தீர்ந்ததேயும்' என்பதில் உள்ள*

'ஏயும்' என்பது 'ஆயினும்' என்னும் பொருளில் உள்ள இடைச்சொல்லாகும். பரதன் கள்ளம் கபடு இன்றி நடந்து கொண்டவன். சுக்கிரீவனும் இப்போது கள்ளம் கபடு இல்லாதவனாகக் காணப்படுகின்றான். ஆதலின் 'பரதன் நீ' என்றான். மற்றும் சுக்கிரீவன் ஆறாவது உடன் பிறப் பாகக் கொள்ளப்பட்டிருப்பதும் ஈண்டு இணைத்து எண்ணத் தக்கது.

**இராமன் சீதையுடன் தங்கல்**

இன்று அல்லது நாளை பெரும்படை வரும் என்று கூறிய சுக்கிரீவனை, நீ நின் இருப்பிடம் சென்று நாளை வருக என்று அனுப்பி விட்டு, இராமன் இலக்குவனுடனும் உள்ளத்தில் சீதையுடனும் அங்கே தங்கியிருந்தான்.

**"செங்கணான் தம்பியும் தானும் சிந்தையின்**
**மங்கையும் அவ்வழி அன்று வைகினான்"** (138)

செங்கணான் = இராமன். மங்கை = சீதை. இராமனது உள்ளத்தில் எப்போதும் சீதை இருப்பதால் 'சிந்தையின் மங்கையும் எனப்பட்டது, 'நெஞ்சத்தார் காதலவராக' என்பது திருக்குறள். இங்கே, 'நெஞ்சத்தாள் காதல் அவளாக' என்பதாகக் கொள்ளலாம் போலும்.

வாலியின் நெஞ்சில் தாரையும் மன்மதன் நெஞ்சில் இரதியும் இருப்பதாகக் கூறப்படினும் வாலியும் மன்மதனும் இறந்து விட்டனர். ஆனால், சீதையை நெஞ்சில் கொண்ட இராமன் இறக்கவில்லை.

# 11. தானை காண் படலம்

சுக்கிரீவனது எழுபது வெள்ளம் வானரப் படையை இராமனும் இலக்குவனும் காண்பதைப் பற்றியதாதலின் இப்படலத்திற்கு இப்பெயர் தரப்பட்டுள்ளது. 'வானரத் தானை காண் படலம்' என்ற பெயர் சில சுவடிகளில் காணப்படுகிறது.

படைத் தலைவர்கள் பற்பலர் பல கோடிப் படை மறவர்களுடன் சுக்கிரீவன் இருக்குமிடம் அடைந்தனர். அவன் அவர்களை அணிவகுக்கச் செய்து பார்வையிட்டான்.

**படைகளின் பெருக்கம்**

இப்படைகள் குளித்தால் ஏழு கடல் நீரும் வற்றி மண் தெரியும்; ஒரு பக்கம் சாய்ந்தால் அண்டங்கள் மேருவுடன் சாயும்; பரவினால் எள் விழ இடம் இல்லாமற் போகும்; வெப்புடன் சினந்தால், தீக்கடவுளுடன் ஞாயிறும் கரிந்து போகும்.

**"தோயின் ஆழி ஓர்ஏழும் நீர்சுவறி வெண்துகளாம்**<br>
**சாயின் அண்டமும் மேருவும் ஒருங்குடன் சாயும்**<br>
**ஏயின் மண்டலம் எள்ளிட இடமின்றி இரியும்**<br>
**காயின் வெங்கனல் கடவுளும் இரவியும் கரியும்"** (22)

படைகள் முழுவதையும் பார்த்தறிய வேண்டுமெனில் நெற்றிக் கண் உடைய சிவனாலும் இயலாது.

**"கண்ணின் நோக்குறின் கண்ணுத லானுக்கும் கதுவா**<br>
**மண்ணின் மேல்வந்த வானர சேனையின் வரம்பே"** (23)

## இராமன் மகிழ்ச்சி

சுக்கிரீவன் படையைக் காணுமாறு இராமனை வேண்ட, அவன் அகமும் முகமும் மலர்ந்தான். சீதையைக் கண்டது போன்ற உவகை கொண்டான்.

> **"ஐயனும் உவந்து அகமென முகம்மலர்ந் தருளித்**
> **தையலாள் வரக் கண்டன னாமெனத் தளிர்ப்பான்"** (28)

முகம் மட்டும் போலியாக மலர்ந்தால் போதாது - அகமும் மலர்ந்தாலே உண்மையான மலர்ச்சியாகும். பெரிய இப்படையைக் கொண்டு இராவணனை வென்று சீதையை மீட்டு விடலாம் என்ற நம்பிக்கையால், படையின் வருகையைச் சீதையே வந்துள்ளாள் என எண்ணியதுபோல் மகிழ்ந்தான். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' ஆதலின், அகமென முகம் மலர்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

## இராமன் படை காணல்

சுக்கிரீவனின் வேண்டுகோளின்படி, இலக்குவனுடன் படையின் பெருக்கத்தைக் கண்ட இராமன் இலக்குவனை நோக்கிக் கூறுகிறான்: இலக்குவனே! இந்தப் படையின் உடலைத்தான் நாம் கண்டோமே தவிர இன்னும் முழுமையும் காணவில்லை. உலகில் கடலைக் கண்டிருக்கிறோம் என்று சொல்லும் மக்களுள் யாரும் கடலை முற்றிலும் கண்டிலர்:

> **"அடல்கொண் டோங்கிய சேனைக்கு**
> **நாமும் நம் அறிவால்**
> **உடல் கண்டோம் இனி**
> **முடியுறக் காணுமா றுளதோ**
> **மடல் கொண் டோங்கிய**
> **அலங்கலாய் மண்ணிடை மாக்கள்**
> **கடல் கண்டோம் என்பர்**
> **யாவரே முடிவுறக் கண்டார்?"** (34)

உடல் காணல் என்பது, நீண்டுள்ள படையின் நடுப் பகுதி வரையுமே காண முடிந்தது - படையின் முடிவைக் காண முடியவில்லை என்பதைக் குறிக்கிறது. மடல் கொண்டோங்கிய அலங்கலான் = மலர்மாலை அணிந்த இலக்குவன். தாம் முடியக் காண முடியாமைக்கு இராமன் ஓர் உவமை கூறுகிறான்: மக்கள் பலர் நாங்கள் கடலைக் கண்டிருக்கிறோம் என்று சொல்லுவர் - ஆனால் அவர்கள் கடலின் பரப்பு, ஆழம், கடலில் உள்ள பொருள்கள் ஆகிய வற்றைக் கண்டிருக்க முடியாது - என்பதுதான் அந்த உவமை.

கடலைப் புதிதாய்ப் பார்ப்பவர்கள் சிலரும் கடலைப் பற்றிச் சரியாக அறியாதவரா யுள்ளனர். ஒருநாள் மாலை பாவேந்தர் பாரதிதாசனும் இதற்குமுன் கடலைப் பார்த்தறியாத சேலம் மாவட்டத் தமிழன்பர் ஒருவரும் யானும் புதுச்சேரிக் கடல்கரையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது சேலத்துக்காரர், உழவுத் தொழிலுக்குத் தண்ணீர் போதவில்லை என்கிறார்களே - இதோ கடலில் இவ்வளவு நீர் இருக்கிறதே - இதைப் பாய்ச்சினால் என்ன - என்று கேட்டார். உடனே பாவேந்தர் வெடிச்சிரிப்பு சிரித்துவிட்டு, என்னை நோக்கி, இதற்குமுன் இவர் ஊர்க்காரரர் ஒருவர் இங்கே வந்தபோது, இவ்வளவு தண்ணீர் இருக்கும்போது துணி துவைப்பதற்கு ஒரு கல்லும் ஏன் போட்டிருக்கவில்லை - என்று கேட்டார் எனக் கூறினார். கடல்நீர் உப்புநீர் என்னும் கடலின் தன்மையைக் கூட அறியாதவர்கள் உள்ளபோது, கடலை முற்றும் அறிந்தவர் யார் இருக்க முடியும்?

**எண்ணவல்லார் யார்?**

மேலும் கூறுகிறான்: கடவுளின் திருமேனியையும், பத்துத் திசைகளையும், ஐந்து பூதங்களையும், அறிவையும்,

பேசும் பேச்சையும், சமயங்களின் பிணக்கையும், இந்தப் படையின் அளவையும் முற்றும் அறிந்து முடிவெடுக்க வல்லவர் யார்? - ஒருவரும் இலர்;

> **"ஈசன் மேனியை ஈரைந்து திசைகளை ஈண்டுஇவ்**
> **ஆசில் சேனையை ஐம்பெரும் பூதத்தை அறிவைப்**
> **பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை**
> **வாச மாலையாய் யாவரே முடிவெண்ண வல்லார்?"** (35)

கடவுளின் மேனியை முற்றும் அறிய முடியாது; ஏனெனில் அவர் எங்கும் பரந்துள்ளார். திகம்பரர் என்னும் ஒரு பெயர் கடவுளுக்கு உண்டு. திக் + அம்பரர் = திகம்பரர். திக் = திக்கு; அம்பரம் = உடை; திக்குகளையே உடையாக உடையவர் கடவுள் என்றால், அவர் நீக்கமற எங்கும் பரந்துள்ளார் என்பது பொருள். பத்துத் திசைகள்; கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, இவற்றின் மேல் பகுதி, இவற்றின் கீழ்ப் பகுதி ஆகியவையாம். இவற்றை அளவிட முடியாது. வான ஊர்தி (விமானம்) குறிப்பிட்ட தொலைவே போக முடியுமன்றோ?

விண், காற்று, தீ, நீர், மண் இவற்றின் இயல்பினையும் ஆற்றலையும் யாராலும் முற்றும் கண்டுணர முடியாது. அறிவுக்கும் எல்லையில்லை. நூற்றாண்டுக்கு நூற்றாண்டு - ஆண்டுக்கு ஆண்டு - மக்களின் பட்டறிவும் (அநுபவமும்) நூல் அறிவும், அறிவின் துணையால் புதிய கண்டுபிடிப்பு களும் பெருகுவதைக் காணலாம். அறிவு இன்னும் எவ்வளவோ கண்டுபிடிக்க உள்ளது. பேசும் பேச்சு காற்றில் கலந்து உலகம் முழுவதும் பரவுகிறது. இதுவரையும் பேசப் பட்டுள்ள பேச்சுகளுக்கு அளவேயில்லை. பேச்சு எங்கும் பரவக் கூடியது என்பதை இக்காலத்தார் வானொலி வாயிலாக அறிவர். பல சமயத்தார்களும் தம்முள்

கடுமையாக வாதிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டிக்க எண்ணிய கம்பர், இவர்களின் வாதங்களையும் அளவிட முடியாது என்றார். ஆறு கோடி மாயா சத்திகள்' என்பது திருவாசகம். இவ்வாறே வானரர் படைகளையும் அளவிட முடியாதாம்.

**இலக்குவன் கூற்று**

இந்த வானரப் படையால் இவ்வுலகில் செய்ய முடியாத செயல் ஒன்றுமில்லை. தேவியைக் கண்டுபிடிப்பதென்பது இவர்கட்கு மிகவும் எளிய - சிறிய வேலையாகும். இந்தப் படையால் பாவம் தோற்றது - அறம் வென்றது - என்று இலக்குவன் கூறினான்.

**"யாவது எவ்வுலகத்தினில் ஈங்கு இவர்க்கியலா**
**தாவ தாகுவது அரியதொன்று உளதெனலாமோ**
**தேவ தேவியைத் தேடுவதென்பது சிறிதால்**
**பாவம் தோற்றது தருமமேவென்றது இப்படையால்"** (37)

தேவ தேவி = சீதை. சீதையைத் தேடுவது இப் படைக்கு எளிது என்பது போருத்தம். இப்படை வீரருள் ஒருவனாகிய அனுமன் தான் ஒருவன் மட்டுமே சென்று சீதையைத் தேடிக் கண்டு பிடித்தான் அல்லவா? அதனை முன்கூட்டியே இலக்குவன் வாயிலாகக் கம்பரின் எழுத்தாணி தெரிவித்துள்ளது. இந்தப் படையின் துணை கொண்டு அரக்கரை வென்றுவிடலா மாதலின், இனிப் பாவச் செயலுக்கு இடமில்லை அறச்செயல்களே நிகழும் என்று கூறினான்.

**உறையிடல்**

நான்முகன் படைத்த உலகத்து உயிர்கள் எல்லாம், இந்த வானரப் படைஞர்க்கு உறையிட்டு எண்ணுவதற்காகப் படைக்கப்பட்டன போலும்.

**"தரங்க நீரெழுந் தாமரை நான்முகன் தந்த**
**வரங்கொள் பேருலகத் தினின் மற்றை மன்னுயிர்கள்**
**உரங்கொள் மால்வரை உயிர்படைத் தெழுந்தன ஒக்கும்**
**குரங்கின் மாப்படைக்கு உறையிடப் படைத்தன**
**கொல்லாம்!"** (38)

ஒவ்வொரு குரங்கும் ஒரு பெரியமலை உயிர்பெற்று எழுந்தது போன்ற பெரிய தோற்றத்துடன் உள்ளதாம். உறையிடல் என்பது ஓர் அரிய சொல்லாட்சி. பேரெல்லையை அளக்கப் பயன்படுத்தும் ஓர் அடையாளக் குறிக்கு உறை என்பது பெயராகும். நூறாயிரம் பொருள் களை எண்ணிக்கணக்கிடுபவர், ஆயிரம் ஆயிரமாக எண்ணி ஒவ்வோர் ஆயிரத்தையும் தனியாக வைப்பர். முதல் ஆயிரம் எண்ணியதும் ஒன்று என ஒரு கோடு போடுவர்; இரண்டாவது ஆயிரம் எண்ணியதும் இரண்டு கோடுகள் போடுவர்; இப்படியே மற்ற ஆயிரங்கட்கும் கூடுதலாகக் கோடுகள் போடுவர். நூறு கோடுகள் போடமுடியாதாதலின் 100 என்னும் எண்ணைப் போடுவர். இந்தச் சிறு குறியீடு களைக் கொண்டு எத்தனையாவது ஆயிரம் என அறிந்து கொள்ளலாம். இவ்வாறு குறியிடுவதற்குத்தான் 'உறையிடல்' என்பது பெயர். (இதுபற்றி எனது 'சுந்தர காண்டச் சுரங்கம்' என்னும் நூலின் 52, 53, 54-ஆம் பக்கங்களில் விரிவாகக் கண்டறியலாம்).

வானரப் படைகளை ஆயிரம் ஆயிரமாகவோ அல்லது கோடிகோடியாகவோ உறையிட்டு எண்ணுவதற்குச் சரி யாக உலகத்து உயிர்கள் இருக்குமாம். அங்ஙனமெனில், உலகத்தில் உள்ள எல்லா உயிர்களையும்விடப் பல மடங்கு வானரப் படைஞர் உள்ளனர் எனக் கொள்ளல்வேண்டும். இது 'உயர்வு நவிற்சி அணி' யாகும். மிகுதியைக் குறிக்கக் கம்பருக்கு 'உறையிடல்' என்னும் சொல்லாட்சி கைகொடுத்து உதவுகிறது.

படைகள் வந்து விட்டதால் இனியும் காலம் தாழ்க்காமல் எட்டுத்திசைகளிலும் தேடுபவர்களை அனுப்பி ஆவன செய்விக்கவேண்டும் என இலக்குவன் தூண்ட, இராமன் சுக்கிரீவனிடம் கூறலானான்:

**''ஈண்டு தாழ்க்கின்றது என்னினி எண்திசை மருங்கும்**
**தேண்டு வார்களை வல்லையில் செலுத்துவ தல்லால்**
**நீண்ட நூல்வலாய் என்றனன் இளையவன், நெடியோன்**
**பூண்ட தேரவன் காதலற்கு ஒருமொழி புகலும்''** (39)

இளையவன் = இலக்குவன், நீண்ட நூல்வலான், நெடியோன் = இராமன். பூண்ட தேரவன் = ஞாயிறான். தேரவன் காதலன் = ஞாயிறு மகன் சுக்கிரீவன். நீண்ட நூல் என்பது கல்வியின் பரப்பை அறிவிக்கிறது, 'கல்வியென்னும் பல்கடல்' என்பது திருவாசகம். இதிலே, அரசியல் நூல், போர் நூல் முதலியனவும் அடங்கும். நூல் வல்ல அண்ணா! விரைந்து செயல்பட வேண்டுமென முடுக்கி விடுகிறான் இலக்குவன். ஞாயிறானுக்கு ஓய்வே கிடையாததலால், அவனது தேர் எப்போதும் குதிரை பூட்டப்பட்டிருக்கும் - ஆதலால் 'பூண்ட தேரவன்' எனப் பட்டது.

# 12. நாட விட்ட படலம்

*சீதையைத் தேடுமாறு சுக்கிரீவன் வானரப்படைஞரைப் பல பக்கங்களிலும் அனுப்பியதைக் குறித்தபடலம் இது. நாடவிடு படலம் எனவும் சில சுவடிகளில் உள்ளது. நாட விடல் = தேடவிடல்.*

**ஒரு தோற்றம்**

*இராகன் சுக்கிரீவனிடம் படை மிகப் பெரியது போலும் என்று பாராட்டினான். அதற்குச் சுக்கிரீவன், எழுபது வெள்ளம் படை அறிவினால் அறிந்தவர்களால் ஒரு தோற்றமாகச் (சுமாராகச்) சொல்லும் அளவே தவிர உண்மையில் அதன் அளவைச் சரியான எண்ணிக்கையிட்டுச் சொல்ல இயலாது என்றான்.*

**"ஏற்ற வெள்ளம் எழுபதின் இற்ற என்று**
**ஆற்ற லாளர் அறிவின் அமைந் ததோர்**
**மாற்றம் உண்டு அது வல்லது மற்றுமோர்**
**தோற்றம் என்றிதற்கு எண்ணும் முன் சொல்லுமோ''** (2)

*எழுபது கோடி வெள்ளம் என்பது ஓர் அளவாகச் சொல்லப்படுகிறது. இதை நம்பி ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இன்னும் கூடுதலாகவும் இருக்கலாம்.*

**காற்று விரைவு**

*இனி நடக்க வேண்டியதைக் கவனி என்று இராமன் கூற, சுக்கிரீவன் அனுமனை நோக்கி, நீ நின் தந்தையைப் போல் மிக விரைவாக மூன்று உலகிலும் புகுந்து தேடும்*

வல்லமை உடையை. ஆனால் நீ விரைந்து புறப்படாமல், மற்ற வானரர்களின் செயலைக் கண்டுகொண்டுள்ளாயோ - என்றான்.

**''அவனும் அண்ணல் அனுமனை ஐயநீ**
**புவனம் மூன்றும் நின்தாதையின் புக்குஉழல்**
**தவன வேகத்தை ஓர்கிலை தாழ்த்தனை**
**கவனமாக் குரங்கின் செயல் காண்டியோ''** (5)

அவனும் = சுக்கிரீவனும். தவன வேகம் = மிக்க விரைவு. தாழ்த்தனை = காலம் கடத்துகின்றனை. தாதை = தந்தையாகிய காற்றின் வேந்தன் (வாயு பகவான்). 'மனோவேகம் வாயு வேகம்' என விரைவின் அளவைக் குறித்துக் கூறுவ துண்டு. அந்த வாயுபகவானின் மகனாகிய நீ (அனுமன்) தந்தையைப் போலவே விரைந்து செயல்பட வேண்டும் என்று கூறுகிறான்.

## தெற்கு வழி

சுக்கிரீவன் ஒவ்வொரு திசைக்கும் இரண்டு வெள்ளம் தானையுடன் ஒவ்வொரு படைத்தலைவரை அனுப்பினான். தென்திசையிலேதான் இராவணன் இருக்கக்கூடும் என உய்த்துணர்ந்து, அந்தத் தென்திசைப்பக்கம் படையுடன் அனுமனை அனுப்பினான். தென் திசை நோக்கிப் போக வேண்டிய வழிகளையும் பின்வருமாறு கூறுகிறான்.

## விந்தம்

முதலில் விந்த மலையை அடையவேண்டும். அது, திருமாலைப் போலவே ஆயிரம் முடிகளை (உச்சிகளை) உடையது; தொழுதற்கு உரியது

**''ஈண்டுநின் றெழுந்து ஈரைந்துநூறு எழில்**
**தூண்டு சோதிக் கொடுமுடி தோன்றலால்**
**நீண்ட நேமிகொலாம் எனநேர் தொழ**
**வேண்டும் விந்த மலையினை மேவுவீர்''** (12)

திருமாலுக்கு ஆயிரம் முடி உண்டு என்பது ஒரு வகைத் தோற்றத்தைக் குறிக்கிறது. உலகை அளக்க அவன் நீண்ட உருவம் எடுத்ததால் நீண்ட நேமி எனப்பட்டான். ஆயிரம் உச்சியை உடைய விந்த மலையைக் கண்டதும் திருமாலின் தோற்றம் உளக்கண் முன் தோன்றுதலால் அது வணங்கத் தக்கது.

**நருமதை ஆறு**

பின் நருமதை ஆற்றை அடைய வேண்டும், அந்த ஆறு தேவரும் நீராடுவது; அதில் உள்ள மலர்களில் தேன் உண்ணும் வண்டுகள் பஞ்சமம் பாடக்கூடியது. அதன் கரைகளி லுள்ள மணிகளால் இருளை ஓட்டக்கூடியது:

> **''தேடி அவ்வரை தீர்ந்தபின் தேவரும்**
> **ஆடு கின்றது அறுபதம் ஐந்தினைப்**
> **பாடு கின்றது பன்மணியால் இருள்**
> **ஓடு கின்ற நருமதை உன்னுவீர்''** (13)

அறுபதம் = ஆறுகால்களை உடைய வண்டுகள். இது சினையாகுபெயரால் வந்தது. இசைக்கலையில், சட்சம், இடபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என ஏழுசுரங்கள் இசைக்கப்படுகின்றன. இவற்றுள் ஐந்தாவது பஞ்சமம் என்பது. இது தமிழில் 'ஐந்து' எனக் கம்பரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் கம்பரின் இசைப்புலமை புலனாகும்.

**முண்டகத் துறை**

மேலும் கூறுகிறான்: நருமதையை அடுத்து ஏமகூட மலை, வடபெண்ணை, தண்டக வனம் ஆகியவற்றைத் தாண்டின், முண்டகத் துறையை அடைவீர். ஆங்கே, அறவழிநிற்கும் நல்லோர் செல்வம் பலர்க்கும் பயன்படுவது போல் பலர்க்கும் நிழலாலும் கனிகளாலும் பயன்தரும்

பொழில் உள்ளது. அப்பொழிலில் கனிகள் காலம் அல்லாத காலத்திலும் பழுக்கும். அக்கனிகள் உயர் பண்புடைய மங்கையரின் வாயிதழ் நீர்போல் சுவை தருவனவாகும்:

**''ஞாலம் நுங்குற நல்லறத்தோர் பொருள்**
**போல நின்று பொலிவது பூம்பொழில்**
**சீல மங்கையர் வாய்எனத் தீங்கனி**
**காலம் இன்றிக் கனிவது காண்டிரால்''** (18)

என்பது பாடல். நயமான நல்லவரிடம் உள்ள செல்வம் பயன் மிக்க பழுமரம் ஊர்க்குள்ளே பழுத்ததுபோல் பலர்க்கும் எளிதில் பயன்படும் என்னும் கருத்துடைய

**''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்''** (216)

என்னும் குறட்பா இங்கே கம்பரின் பாடல் வடிவில் காணப்படுகிறது. அக்கனிகள் மங்கையரின் இதழ்நீர் போன்று இனிமைச் சுவை உடையதாம்: இங்கே,

**''பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயிறு ஊறிய நீர்''** (1121)

என்னும் குறட்பாவும், தஞ்சை வாணன் கோவையில் உள்ள

**''தேருந்தொறும் இனிதாம் செந்தமிழ்**
**போன்று இவள் செங்கனிவாய்**
**ஆருந்தொறும் இனிதாய் அமிழ்தாம்**
**எனது ஆருயிர்க்கே''**

என்னும் பாடல் பகுதியும் ஒப்பு நோக்கத்தக்கன. இப்பொழிலில் கனிகள் காலம் அல்லாக் காலத்திலும் பழுக்குமாம். இது,

**''உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்**
**பருவத்தால் அன்றிப் பழா''** (மூதுரை-5)

என்னும் ஔவையின் கூற்றுக்கு அறைகூவல் விடுகிறது.

**சுவணம்**

அவ்விடத்தினின்றும் அகன்று பாண்டுவின் மலை, கோதாவரி ஆகியவற்றைக் கடந்தபின் சுவணநதி தென்படும். இந்த ஆறு, அருள் ஆறும் வெப்பமானது என்று சொல்லும் அளவுக்கு மிக்வும் குளிர்ந்தது; வெயில் நுழையாதபடி விரிந்து பரந்த பூஞ்சோலைக்ளை அருகில் கொண்டது; கரைசார்ந்துள்ள மணிகளால் இருளை ஓட்டக் கூடியது; தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி முருகக்கடவுள் தனியாக வந்து எழுந்தருளியிருப்பது,

**''அவ்ஆறு கடந்து அப்பால் அறத்தாறே**
**எனத் தெளிந்த அருளின் ஆறும்**
**வெவ்ஆறாம் எனக் குளிர்ந்து வெயில்**
**இயங்காவகை இலங்கும் விரிபூஞ் சோலை**
**எவ்ஆறும் உறத்துவன்றி இருள்ஓட**
**மணி இமைப்பது இமையோர் வேண்ட**
**தெவ்ஆறு முகத்து ஒருவன் தனிக்**
**கிடந்த சுவணத்தைச் சேர்தி மாதோ''** (22)

அருளின் ஆறு = அருளாகிய ஆறு, இந்த அருள் ஆறு அறத்தா றாகும். வெவ் ஆறு = வெப்பமான ஆறு. ஆறு என்னும் ஒரே சொல், நெறி, நதி, ஆறு (6) என்னும் எண் ஆகிய பல பொருள்களில் தொடர்ந்து வருவதால் இந்த அமைப்பினைச் 'சொல் பொருள் பின்வரு நிலை அணி' என்பர்.

'வெயில் இயங்காவகை இலங்கும் விரிபூஞ்சோலை' என்னும் பகுதியில் உள்ள கருத்து, திருமுருகாற்றுப் படையிலும் வந்துள்ளது.

**'மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கம்'** (42)

இது முருகாற்றுப்படை அடி. இதில் உள்ள மந்தியும் அறியா, என்பதற்கு 'குரங்கும் அறியாத' என்னும் பொருள்

கூறுவதன்றி 'ஞாயிறும் (வெயிலும்) அறியாத' என்னும் பொருள் கூறுதலும் உண்டு. மந்தி என்பதற்கு ஞாயிறு என்னும் பொருளும் உண்டு என்பதை, வாகீச முனிவர் இயற்றிய ஞானாமிர்தம் என்னும் நூலில் உள்ள.

**''எயிறும் துண்டமும்... மந்தியும் வாணியும்... இழப்ப''**
(33-6)

என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம்.

மற்றும், 'மந்தியும் அறியா' என்பது, 'மந்தியும் அறியா மரம்பயில் ஒரு சிறை' (1947) என நற்றிணையிலும், 'மந்தியும் அறியா மரம் பயில் இறும்பு' (92:8) என அகநானூற்றிலும் கூட இடம்பெற்றுள்ளது.

இத்தகு வெயில் நுழையாத சோலை சூழ்ந்த சுவணப் பகுதியில், தேவர்களின் வேண்டுகோளால் முருகன் வந்து தனியாகத் தங்கியிருக்கின்றானாம். இது ஒரு புராணக்கதை.

**அருந்ததி மலை**

சுவணத்தைக் கடந்த பின், சந்திரகாந்தம், கொங்கணம், குலிந்தம் ஆகிய இடத்தைத் தாண்டியதும் அருந்ததி மலை காணப்படும். அரன் (சிவன்) மேலானவன் என்றும், அரி (திருமால்) மேலானவன் என்றும் வாதிடும் அறிவிலார் வீடுபேறு அடைய முடியாததுபோல், இம்மலைக்குள் செல்வதும் அரியதாகும்.

**''அரன் அதிகன் உலகளந்த அரி**
**அதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப்**
**பரகதி சென்று அடைவரிய பரிசே**
**போல் புகலரிய பண்பிற் றாமில்''** (24)

'அரியும் சிவனும் ஒண்ணு (ஒன்று)—அதை அறியாதவர் வாயில் மண்ணு' என்னும் முதுமொழி பலரும் அறிந்தது. இதைக் கம்பர் இந்தப் பாடலில் அமைத்திருப்பதைக்

கொண்டு கம்பர் மத வேற்றுமை இல்லாதவர் என்னும் பேருண்மை புலப்படும்.

**வேங்கடம்**

அருந்ததி மலைக்கு அடுத்து மரகதமலை வரும். அதையும் கடந்து செல்லின் வேங்கட மலை தென்படும். அம்மலை, வட மொழிக்கும் தென் மொழிக்கும் இடையில் இரண்டிற்கும் எல்லையாயுள்ளது; நான்கு மறைகளும் மற்றை நூல்களும் கூறும் பொருளுக்கு முடிந்த முடிபானது; நல்லறத்திற்கு இருப்பிடமானது. புகழ் மிக்க மெய்ம்மை போல் ஒப்பற்றது; தேன்வளம் நிறைந்தது – என்று போற்றி உரைக்கப்பட்டுள்ளது.

**"வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்**
**நான்மறையும் மற்றை நூலும்**
**இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்**
**நல்லறத்திற்கு ஈறாய் வேறு**
**புடைசுற்றும் துணையின்றிப் புகழ்பொதிந்த**
**மெய்யேபோல் பூத்து நின்ற**
**அடைசுற்றும் தண்சாரல்ஓங்கிய வேங்கடத்தில்**
**சென்று அடைதிர் மாதோ"** (26)

வடசொல் = சமசுகிருதம். தென்சொல் = தமிழ். வேங்கட மலையைத் தமிழ்நாட்டின் வட எல்லையாகப் பலரும் கூறுவது சிக்கலானது – ஆராயத்தக்கது. இப்போது வேங்கடம் தமிழ் நாட்டில் இல்லை; ஆந்திர நாட்டில் உள்ளது. திருப்பதி நகரிலிருந்து மேலே மலைக்குச் செல்லும் பேருந்தில் (பஸ்ஸில்) திருப்பதி - திருமலை என்று போடப்பட்டுள்ளது. திருமலை என்னும் அழகிய தனித் தமிழ்ச் சொல்லால் குறிப்பிடப்படும் இடம் தெலுங்கு நாட்டில் இருப்பது எப்படி? வேங்கடத்திற்குத் தெற்கே உள்ள சில ஊர்களும் ஆந்திரநாட்டினவாக உள்ளன.

இதிலிருந்து தெரிவதாவது: ஆந்திரர்கள் சிறிது சிறிதாக - கொஞ்சங் கொஞ்சமாகத் தமிழ்பேசும் பகுதியை நோக்கி வந்துவிட்டனர் - என்பதாம். மலையாளம் சமசுகிருதத்திலிருந்து வந்தது என்று சொல்லும் பல மலையாளிகளைப் போல், தெலுங்கும் சமசுகிருதத்திலிருந்து வந்தது என்று பலர் எண்ணிக்கொண் டுள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கம்பராமாயண வெளியீட்டில் இந்தப் பாடலுக்கு உரை வரைந்துள்ள புலவர் திரு செ. வேங்கடராமச் செட்டியார், "வேங்கட மலைக்கு வடக்கே உள்ள தெலுங்கு மொழி முதலிய எல்லா மொழிகளும் வடமொழி வந்தன ஆதலின் அவற்றை யும் வடமொழியாகவே கொண்டு வடசொற்கு வரம்பாகி என்றார்" என வரைந்துள்ளார்.

தமிழும் வடமொழிவழி வந்தது என்று கூறும் மேலோர்களும் உள்ளனர். இந்நிலையில், ஆங்கில நாட்டி லிருந்து வந்த கால்டுவெல் (Gald well) என்னும் ஆங்கில அறிஞர், மொழி ஆராய்ச்சி செய்து, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகள் ஓரின மொழிகள். இவை திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று வற்றி வறண்டு போன 'திராவிட இன மூளை'கட்குத் தெரிவித்தார். திராவிட மொழிகள் தமிழ்மொழி வழி வந்தன என்பதை, என் 'தொல் திராவிடமொழி கண்டு பிடிப்பு' என்னும் நூலில் விரிவாக எழுதித் தக்க சான்றுகளுடன் வலியுறுத்தியுள்ளேன்.

தமிழ் நாட்டின் வடஎல்லை வேங்கடம் என்று கூறப் பட்ட காலத்தில் அது அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். அதற்கும் முன்பு, வேங்கடத்தின் வடக்கே உள்ள ஏதோ ஒரு பகுதி தமிழ் நாட்டின் வடக்கு எல்லையாக இருந்திருக்க வேண்டும். சிறிது சிறிதாக ஆந்திரர் தெற்கே வேங்கடம்வரை வந்தபோதுதான்,

வேங்கடம் தமிழின் வடஎல்லை என முதல் முதலாக எழுதப்பட்டிருக்க வேண்டும். கால்டுவெல் போன்றவர்கள் இல்லாதிருப்பின், தமிழும் சமசுகிருதத்தின் காலடியில் போட்டு மிதிக்கப்பட்டிருக்கும். நிற்க -

வேங்கடத்தின் ஒப்புயர்வு அற்ற பெருமைக்கு மெய்ம்மை - உண்மை ஒப்புமையாக்கப்பட்டுள்ளது. ஈண்டு,

**''பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்''** (296)

என்னும் குறள் ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் வேங்கடத்தின் பெருமை பேசப்படுகிறது. இருவினையும் வேறு எவ்வினையும் செய்யாது, இந்திரச் செல்வத்தையும் பிச்சை உணவையும் சமமாகக் கருதி, பிறவி மீண்டும் வராதபடி, தீவினைகளின் பகைவராயுள்ள மெய்யுணர்வு மேலோர்கள் ஆண்டிருத்தலின் அவர்கள் இங்கிருந்தபடியே வணங்கத் தக்கவர்.

**''இருவினையும் இடைவிடா வெவ்வினையும்**
**இயற்றாதே இமையோர் ஏத்தும்**
**திருவினையும் இடுபதம்தேர் சிறுமையையும்**
**முறைஒப்பத் தெளிந்து நோக்கிக்**
**கருவினையது இப்பிறவிக்கு என்றுணர்ந்தங்**
**கதுகளையும் கடையில் ஞானத்**
**தருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுளர்ஈண்டு**
**இருந்தும் அடிவணங்கற் பாலார்''** (27)

நல்வினை - தீவினை என்னும் இருவினையும் நீக்கத் தக்கன. ''இருள்சேர் இருவினை'' என்பது வள்ளுவம். இந்திரச் செல்வமும் ஐயமேற்று உண்ணும் ஏழ்மையும் ஒன்றே எனக்கொள்வர் அருளாளர்.

**''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து**
**தரணியொடு வானாளத் தருவரேனும்**
**மங்குவார் அவர் செல்வம் மதிப்பேம் அல்லேம்''**

என்னும் நாவுக்கரசரின் தேவாரப் பாடலில், இந்திர உலகச் செல்வம் எள்ளப்பட்டிருப்பது காணலாம். கடை இல் ஞானம் = எல்லை இல்லாத மெய்யறிவு. பிறவிப்பெரும் பிணியைத் தரும் பொல்லா வினைகளின் பகைவர்களாக ஆண்டிருக்கும் பெரியோர்களை இங்கிருந்தபடியே வணங்கலாம். வேங்கடம் கடந்ததும் தொண்டை நாடு வரும்.

**பொன்னி**

தொண்டை நாட்டைக் கடந்தால், பொன்னி என்னும் தெய்வ ஆற்றின் இருகரையும் தெரியும்:

**"நாடுறுதிர் உற்றதனை நாடுறுதிர்**
**அதன்பின்னை நளிநீர்ப் பொன்னிச்**
**சேடுறுதண் புனல்தெய்வத் திருநதியின்**
**இருகரையும் தெரிதிர் மாதோ"** (29)

பொன்னி = காவிரி ஆறு. அது தெய்வத் திரு ஆறாம். காவிரி தெய்வ ஆறு - புண்ணிய ஆறு - அதனால் பலரும் அதில் நீராடுவர் எனப் பல நூல்கள் கூறியுள்ளன.

**"தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்**
**புண்ணிய நன்னீர்"** (சிலம்பு-5: 165, 166)

**"தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்"**
(சிலம்பு-10 — கட்டுரை-8)

**"பாவம் தீர்புனல் மல்கிய பாற்றுறை"**
(சம்பந்தர் தேவாரம்)

**"ஆடுவோர் பாவம் தீர்த்து... திகழும் மாகாவிரி"**
(சம்பந்தர் தேவாரம்)

சிலப்பதிகாரத்திற்கும் தேவாரத்திற்கும் பிற்பட்ட காலத்தவராகிய கம்பரும் காவிரியைத் தெய்வத் திருநதி எனப் போற்ற மறக்கவில்லை.

**மூன்று தமிழ் நாடுகள்**

சோழநாடு சென்றால், துறக்க உலகம் (சொர்க்கம்) சென்றவர்போல் மனம் மயங்கி மகிழ்ந்து, தம் உருவை மாற்றிச் சோழ நாட்டார் போலவே கோலம் புனைந்து அங்கேயே மறைவாகத் தங்கி விடுவர் சென்றவர்கள். நீங்கள் அங்கேயே தங்காமல், சோழநாட்டு இன்பத்தைக் கனவு போல் மறந்து, மலைநாடு சென்று தேடுங்கள்; அங்கும் கிடைக்காவிடின் தமிழ் நாட்டிற்குச் செல்வீராக.

**"துறக்கம் உற்றார் மனமென்ன துறைகெழுநீர்ச்**
**சோணாடு புகுந்தோர் தொல்லை**
**மறக்கம் உற்றார் அகம்மலர்ந்து மறைந்துறைவர்**
**அவ்வழி நீர் வல்லைஎகி,**
**உறக்கம் உற்றார் கனவு உற்றாரென**
**உணர்வினொடும் ஒதுங்கி, மணியாலிலங்கல்**
**பிறக்கமுற்ற மலைநாடு நாடி, அகன்**
**தமிழ்நாட்டில் பெயர்திர் மாதோ"** (30)

சோழ நாட்டிலேயே தங்கிவிடக் கூடாது என்பதற்காக 'வல்லை ஏகி', 'ஒதுங்கி' என்னும் சொற்கள் கூறப்பட்டன.

சோணாடு = சோழநாடு. மலையில் மணிகளால் சுடர் வீசுகின்ற மலைநாடு என்பது சேரநாடு. மலையாளம் என்று கொள்ளலாம். அதன் பின் தமிழ்நாடு என்றது பாண்டிய நாட்டையாகும். தொண்டைநாடு, சோழநாடு, சேரநாடு, பாண்டிய நாடு ஆகிய அனைத்தும் தமிழ்நாடு எனப்படினும், பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையில் கழகம் (சங்கம்) அமைத்துச் சிறப்பாகத் தமிழ் ஆராய்ந்ததால், பாண்டிய நாடு விதந்து தமிழ்நாடு எனப்பட்டது. சேக்கிழார் 'பானல்வயல் தமிழ்நாடு' (பெ. பு. ச. பு. 652) என்று கூறியுள்ளார். இங்கே, மாணிக்கவாசகரின் திருக்கோவையாரி லுள்ள-

**''சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும் என்**
**சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழ்''**

*என்னும் பகுதியும், பரஞ்சோதி முனிவரின் திருவிளை யாடல் புராணத்தில் உள்ள -*

**''கண்ணுதல் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப் பசுந் தமிழ்''**

*என்னும் பகுதியும் இணைத்து எண்ணத்தக்கன.*

**வரையும் கடலும்**

*தென்தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டில் பொதிய மலை ஒன்றுள்ளது. அதில் தமிழ்ச்சங்கம் வைத்து அகத்தியமுனிவர் தமிழ் வளர்த்து வருகிறார். அம்மலையை இடப்பக்கமாகத் தள்ளிச் சென்றால், பொருநை என்னும் ஆற்றைக் காண்பீர். அதைக் கடந்து செல்லின், மயேந்திர மலையையும் அதையடுத்துக் கடலையும் காண்பீர்:*

**''தென் தமிழ்நாட்டு அகன்பொதியில் திருமுனிவன்**
**தமிழ்ச் சங்கம் சேர்கிற் றீரேல்**
**என்றும் அவன் உறைவிடமாம் ஆதலினான்**
**அம்மலையை இடத்திட்டு ஏகிப்**
**பொன் திணிந்த புனல்பெருகும் பொருநைஎனும்**
**திருநதி பின்பு ஒழிய நாகக்**
**கன்று வளர் தடஞ்சாரல் மயேந்திரமா**
**நெடுவரையும் கடலும் காண்டிர்''** (31)

*முழுத் தமிழ்நாட்டையும் நோக்கப் பாண்டிய நாடு தென் தமிழ் நாடாகும். பாண்டிய நாட்டிலேயே மதுரையும் அதைச் சார்ந்த பகுதிகளும் வட தமிழ்நாடு எனவும், திருநெல்வேலியும் அதைச் சார்ந்த பகுதிகளும் தென் தமிழ்நாடு எனவும் சிலரால் குறிப்பிடப்படுகின்றன.*

இப்பாடலில் ஒரு சிக்கல் உள்ளது. ஆரணிய காண்டத்தில் அகத்தியப் படலத்தில் ஓர் அகத்தியர் கூறப் பட்டுள்ளார்; 'என்றும் உள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்றும் கம்பரால் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் காட்டில் இராமனை வரவேற்றாராம். இங்கே பொதிய மலையை உறைவிடமாகக் கொண்டு தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கும் முனிவன் ஒருவன் இருப்பதாகவும் கம்பர் கூறியுள்ளார். பொதியம் என்றும் அவன் உறைவிடமாம். அகத்தியர் பொதிய மலையில் இருப் பதாகப் பலரும் கூறுவர்.

அங்ஙனமெனில், இந்திய நாட்டின் நடுப்பகுதியின் காட்டில் ஓர் அகத்தியனும், நாட்டின் தெற்கே பொதியத்தில் ஓர் அகத்தியனும் இருந்தனர் – இவர்கள் வெவ்வேறானவர் என்று கூறுவதா? அல்லது, ஓர் அகத்தியரே மாறி மாறி அங்கும் இங்குமாகப் போய் வருவார் என்பதா? இப்பாடலில், அகத்தியன் என்னும் பெயர் கூறாமல், 'திருமுனிவன்' என்று கூறியிருப்பதால், இவர் அகத்தியரினின்றும் வேறான முனிவரா? ஒரே குழப்பமாக உள்ளது. இருவரும் தமிழோடு தொடர்புடையவர்கள் எனக் கூறுவதால் தான் குழப்பத்திற்கு இடம் உண்டாயிற்று.

அகத்தியர் என்பவர் பெயரால் பல கதைகள் கூறப்படு கின்றன. அகத்தியர் என்பவர் எழுதியனவாகப் பல்வேறு நூல்கள் கூறப்படுகின்றன. மருத்துவ நூல்கள் சில அகத்தியர் பெயரால் உள்ளன எனவே, அந்த அகத்தியர் வேறு - இந்த அகத்தியர் வேறு என அரை மனத்தோடும் குறை மனத்தோடும் கூறுவதைத் தவிர வேறு சிக்கல் அவிழ்ப்பு தெரியவில்லை.

பொருநை = தாமிரபரணி ஆறு. ஆறு பின்பு ஒழிய என்றால், ஆற்றைக் கடந்து தாண்டி - என்பது கருத்தாம்.

இந்த இராமாயணப் பாடலின்படி, தமிழ்நாட்டின் முடிவில் மயேந்திர மலை உள்ளது; அதை அடுத்துக் கடல் உள்ளது. அந்தக் கடலுக்கு எதிர் கரையில் இராவணனது இலங்கை இருந்தது என்று கொள்ளல் வேண்டும். அனுமன் இந்த மயேந்திர மலையில் இருந்து கொண்டுதான் கடலைத் தாவித் தாண்டினான் என்பது கம்பராலேயே சுந்தர காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

கடலைத் தாண்டி ஒரு திங்கள் காலம் அக்கரையில் தேடி மீள வேண்டுமெனச் சுக்கிரீவன் அனுமனிடம் கூறி, விரைந்து விடை பெற்றுச் செல்லுக என்று ஏவினான்.

**அடையாளம் அறிவித்தல்**

சீதையைத் தேடப் புறப்பட்ட அனுமனிடம் இராமன் சீதையின் அடையாளங்களைக் கூறலானான்: ஒருவரை விட்டு ஒருவரைச் சீதை எனத் தவறாகப் புரிந்து கொள்ளாத படி அடையாளம் கூறல் இன்றியமையாததுதான். சீதையின் அடி முதல் முடிவரை (பாதாதி கேசமாக) உள்ள அனைத்து உறுப்புகட்கும் அடையாளம் கூறுகிறான். பிற ஆடவர் பார்க்க முடியாத - பார்க்கக் கூடாத உறுப்பின் பகுதிகட் கெல்லாம் அடையாளம் கூறுகிறான். இது இன்றியமை யாததா? இல்லையே. 'அடி முதல் முடி வரை' (பாதாதி கேசம்) என்ற மரபை ஒட்டிக் கம்பர் கண்ணை மூடிக் கொண்டு உவமை கூறியுள்ளார் என்றே சொல்லத் தோன்றுகிறது.

மற்றும், ஒவ்வோர் உறுப்புக்கும் அடையாளம் சொல்லும் முறை ஒன்று போலவே உள்ளது. அதாவது:- ஒவ்வோர் உறுப்புகட்கும் இலக்கியங்களில் புலவர்கள் என்னென்ன உவமைகள் சொல்லுவார்களோ - அவற்றை யெல்லாம் கம்பரும் குறிப்பிட்டு, ஆனால் இவை சீதையின்

உறுப்புகட்கு உவமையாக மாட்டா - இவற்றினும் சீதையின் உறுப்புகள் சிறந்தவை என்று இராமன் சொல்வதாக எழுதி யுள்ளார். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற மாதிரியில் உள்ளது இது என்று மறைக்காமல் கூறுவதில் தவறொன்றும் இலது. கம்பர் இதற்காகச் செலவிட்டிருக்கும் பல பாடல்களை 'இலக்கிய மரபு' என்ற அடிப்படையில் ஏற்று அமைதியுறுவதைத் தவிர வேறு வழியில்லை. கம்பரின் நிறைகளை மட்டுமே எழுதிக் கொண்டிருப்பின் போதாது - குறையிருப்பினும் தயங்காது கூறுதலே முறையாகும்.

**சொல்லச் சொன்னவை**

இராமன் அனுமனிடம் உறுப்பு அடையாளங்களைக் கூறிய பின்பு, பின்வருவனவற்றைச் சீதையிடம் சொல்லு மாறு பணிக்கிறான்:

*சனகனின் வேள்வியைக் காண மிதிலையில் முனிவனுடன் சென்றபோது, அன்னம் ஆடும் துறைக்கு அருகே கன்னி மாடத்தில் நின்றிருந்தவளை முதல் முதல் கண்ட நிகழ்ச்சியை யான் நினைவுபடுத்தியாகக் கூறுக:*

**''முன்னைநாள் முனியொடு முதியநீர் மிதிலைவாய்ச்**
**சென்னிநீள் மாலையான் வேள்வி காணியசெலசெல**
**அன்னம் ஆடும்துறைக்கு அருகுநின் றாளைஅக்**
**கன்னிமாடத் திடைக் கண்டதும் கழறுவாய்''** (67)

மாலையான் = சனகன். இராமாயண வரலாற்றைப் பலர் எழுதியுள்ளனர். இராமனும் சீதையும் முதன் முதலாக ஒரு நீர்த் துறையில் கண்டதாக ஒரு நூல் கூறுகின்றது. கம்பரோ, கன்னி மாடத்து மாடி மீது சீதை நிற்க, இராமன் கீழிருந்து நோக்கியதை 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்று குறிப்பிட்டுள்ளார். கம்பர் நீர்த் துறையையும் விட்டா ரிலர்; அன்னம் ஆடும் நீர்த்துறையின் அருகே கன்னி மாடத்தில் கண்டதாகக் கூறியுள்ளார். கன்னி

மாடக் கட்டடத்தின் அருகே நீராடும் தடாகமும் இருந் திருக்கும் போலும். சேவல் அன்னமும் பெடை அன்னமும் நீராடும் சூழ்நிலையைக் கண்டவர்கள், தாங்களும் ஒரு வகைக் குறிப்போடு ஒருவரையொருவர் கண்டு கொண்டு உள்ளனர்.

**''அன்னச் சேவல், அயர்ந்து விளையாடிய**
**தன்னுறு பெடையைத் தாமரை அடக்கப்**
**பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு**
**ஓங்கிருந் தெங்கின் உயர்மடல் ஏற''** (5:123-126)

என்னும் மணிமேகலைப் பாடல் பகுதியால், அன்னச் சேவலும் பெடையும் ஒன்றாக நீர் நிலையில் ஆடும் என்பதை அறியலாம்.

மற்றும், கூறுகிறான்: நான் காட்டிற்குப் புறப்பட்ட போது தானும் வருவதாக அவள் கூறியபோது, நீ என் பின்னே வர விரும்புகிறாயா? இவ்வளவு நாள் எனக்கு இன்பம் செய்த நீ, என்னுடன் காட்டுக்கு வந்து துன்பம் தரப் போகிறாயா? – என்று நான் சொன்னதையும் சொல்லுவாய்:

**''முன்புநான் அறிகிலா முனிநெடுங் கானிலே**
**என்பினே போதுவான் நினைதியோ ஏழைநீ**
**இன்பமாய் ஆருயிர்க்கு இனிமையா யினைஇனித்**
**துன்பமாய் முடிதியோ என்றதும் செப்புவாய்''** (70)

காட்டிற்கு வருவேன் என்கிறாயே - அது நெடுங்கான் ஆயிற்றே என்றான். அதாவது, சிறிய காட்டுப் பகுதியாயின் விரைவில் கடந்து விடலாம் – இதுவோ நீண்ட காடு - இதை எவ்வாறு கடக்க முடியும்? - மற்றும், செல்பவர்கள் விரும்பாமல் முனிவு (வெறுப்பு) கொள்ளக் கூடிய காடு. மேலும், இதுவரையும் யானே சென்று பழகி யறியாத காடு - இதில் நீ எப்படி வழி கடப்பாய் – நீயோ ஏழை - என்றான். ஏழை = பெண்.

மற்றும் - ஒருவர் தனியே ஊருக்குச் செல்லின், ஒரு கவனமோ - பொறுப்போ தேவையின்றி எளிதாய்ச் செயலாற்றி வந்து விடலாம். மனைவியையும் உடன் அழைத்துச்செல்லின், அவளைக் கவனமுடன் காக்கவேண்டும்; தனியாய் விட்டு எங்கும் சென்று வர முடியாது; பல வகைகளிலும் ஆடவனுக்கு அவள் ஒரு சுமையாகவே தோன்றுவாள் - அதனால்தான், நீ காட்டுக்கு வந்து எனக்குத் துன்பமாயிருக்கப் போகிறாயா என்றான். இராமன் முன்னறிவோடு (தீர்க்க தரிசனத்துடன்) கூறியது நடந்தே விட்டது - பலித்தே விட்டது. பின்னால் பெருந் துன்பம் வாழ்க்கை முழுவதும் பெருந்துயரம் ஏற்படக் காரணமாயிற்று.

இராமன் திரேதாயுகத்தில் இருந்தான்; அதனால் மனைவியை உடன் அழைத்துச் செல்ல அஞ்சினான். கலியுகமாகிய இந்தக் காலத்தில் உள்ள இளைஞர்கள், தனியாகச் செல்வதனினும் மனைவியையும் உடன் அழைத்துக்கொண்டு 'தேன்நிலவு' நுகரச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். ஆனால் சீதை மட்டும் இந்தக் காலத்துப் பெண்கள் போலவே நடந்துகொண்டிருக்கிறாள். இக்காலப் பெண் கணவனை நோக்கி, கடைத்தெருவிற்கு இட்டுச் சென்றீர்களா?- கடற்கரைக்கு இட்டுச் சென்றீர்களா?- திரைப்படத்திற்கு இட்டுச் சென்றீர்களா?- ஸ்கூட்டரில் நான் உங்கள் தோள்மேல் கையைப்போட்டுக் கொண்டு வரும்படி என்னைப் பின்னால் ஏற்றிக்கொண்டு சென்றீர்களா? ஒரு நல்ல பேச்சு உண்டா? 'அடுத்தாத்து அம்புசத்தைப் பார்த்தேளா-அவள் ஆத்துக்காரர் கொஞ்சறதைக் கேட்டேளா-என்று சாடுகிறாள். 'தையல் சொல் கேளேல்' என ஒரு தையல் (ஔவை) சொன்னது, சில ஆடவர்களைப் பொறுத்த மட்டில் சரியாயுள்ளது. அவர்களுள் நம் இராமரும் ஒருவர் போலும்!

மேலும் அரசு துறந்து காடு ஏகும் உங்கட்கு. என்னைத் தவிர மற்றவையெல்லாம் இனியனவோ எனக் கூறிக் கண்ணீர் மல்க, உடம்பில் நிற்காத உயிர்போல வெந்து தத்தளித்தாள்-இதையும் அவளிடம் கூறுவாயாக:

**"ஆனபே ரரசிழந்து அடவிசேர் வாய் உனக்கு**
**யானலா தனவெலாம் இனியவோ இனி எனா**
**மீனுலா நெடுமலர்க் கண்கள் நீர்விழ விழுந்து**
**ஊனிலா உயிரின் வெந்து அயர்வதும் உரைசெய்வாய்"**
(71)

ஆட்சியை இழந்ததும் காடேகுவதும் உங்களுக்குத் துன்பமாகத் தெரியவில்லை-ஆனால் என்னை உடன் அழைத்துக்கொண்டு போவதுதான் உங்கட்குத் துன்பமாகத் தோன்றுகிறதோ? அப்படியே காடு செலினும், ஆங்கு என்னைத்தவிர மற்றவையெல்லாம் இன்பம் தருமோ எனக் கூறிக் கண்ணீர் சொரிந்ததோடு நிற்காமல், உடம்பைப் பிரிந்த உயிரே போலத் தானும் கீழே விழுந்து விட்டாள்-இதையும் நினைவு செய்க.

மற்றும்,- கோட்டை வெளிவாயிலைக் கடப்பதற் குள்ளாகவே, காடு எது?-காடு இன்னும் எவ்வளவு தொலைவில் உள்ளது என வினவினாள் - அதையும் நினைவு படுத்துக:

**"மல்லல் மா நகர்த் துறந்து ஏகுநாள் மதிதொடும்**
**கல்லின் மா மதில் மணிக் கடைகடந் திடுதன்முன்**
**எல்லை தீர் வரிய வெங்கானம் யாதோ எனச்**
**சொல்லினாள் அஃதெலாம் உணரநீ சொல்லுவாய்"** (72)

மல்லல்=வளப்பம். மல்லல் மாநகர்த் துறந்து என்பதில் ஏக்கம் தெரிகிறது. மதி = திங்கள். திங்களைத்தொடும் அளவு உயர்ந்த கோட்டை மதிலின் வெளிவாயிலைக் கடப்பதற்கு முன்பே, கேட்கத் தொடங்கிவிட்டாள். சிறார்

களை அழைத்துக்கொண்டு ஓர் ஊருக்குச் சென்றால், அந்த ஊர் எப்போது வரும் — இன்னும் எவ்வளவு தொலைவு இருக்கிறது — தோ தெரிகிறதே இதுவா அந்த ஊர் என்றெல்லாம் வழி நெடுகிலும் அச்சிறார்கள் துளைத் தெடுத்து விடுவார்கள். அது போன்றதே சீதை வினவியதும்.

சிலப்பதிகாரத்திலும் இப்படியொரு நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது. கண்ணகி கோவலனுடன் மதுரை நோக்கி வழி கடக்கத் தொடங்கிய சிறு நேரத்திலேயே, இடுப்பு ஒடிய கால் நோக - மூச்சு இரைக்க - பல்தெரிய மெல்லிய சொல்லால் மதுரை யாண்டையது என வினவினாளா:

**"இறுங்கொடி நுசுப்போடு இனைந்து அடிவருந்தி**
**நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து**
**முதிராக் கிளவியின் முள்எயிறு இலங்க**
**மதுரை மூதூர் யாதென வினவ"** (10:38-41)

என்பது சிலம்புப்பாடல் பகுதி. இப்படிக்கேட்கிறோமே என மெல்லச்சிரித்தாளாம் கண்ணகி. கொஞ்சும் மெல்லியமொழி பேசிக்கேட்டாளாம். இது மிகவும் இயற்கையான நிகழ்ச்சி. சீதையும் இவ்வாறு கேட்டுளாள். இது, அடுத்த சுந்தர காண்டத்திலும் குறிப்பிடப்பட் டுள்ளது.

**கணையாழி தருதல்**

இராமன் பல அடையாளங்கள் கூறியபின், தன் கணையாழியை அனுமனிடம் தந்து, இதை நீ சீதைக்குக் காட்டி நம்பிக்கை ஊட்டுவாயாக என்று சொல்லி அனுப் பினான். அனுமன் செல்வதோடு, அங்கதன், சாம்பவன் முதலிய படைத்தலைவர்கள் இரண்டு வெள்ளம் படை களுடன் தெற்கு நோக்கிச் சென்றனர்:

"இனையவாறு உரைசெயா இனிதின் ஏகுதிஎனா
வனையும் மாமணி நன்மோதிரம் அளித்து, அறிஞநின்
வினையெலாம் முடிகஎனா விடைகொடுத்து உதவலும்
புனையும் வார்கழலினான் அருளொடும் போயினான்" (73)

"அங்கதக் குரிசிலோடு அடுசினத்து உழவராம்
வெங்கதத் தலைவரும் விரிகடல் படையொடும்
பொங்குவில் தலைவரைத் தொழுதுமுன் போயினார்
செங்கதிர்ச் செல்வனைப் பணிவுறுஞ் சென்னியார்" (74)

ஒரு செயல் முடித்து வர ஒருவரை அனுப்பும்போது நல்லவிதமாகச் சென்று எல்லாம் நல்ல விதமாக முடித்து வருக எனச் சொல்லி அனுப்புதல் மரபு. இதைத்தான், 'இனிதின் ஏகுக", 'வினையெலாம் முடிக' என்னும் தொடர்கள் அறிவிக்கின்றன. 'வலனாக வினை என்று வணங்கி நாம் விடுத்தக்கால்" என்னும் கலித்தொகைப் பகுதிகாண்க.

தெற்கே ஏகும் படைக்கு அங்கதன் பொறுப்பாளியாதலின் 'அங்கதக் குரிசிலோடு' என்றார். படை மறவர்கள் 'அடு சினத்து உழவர்' என உருவகிக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் திருவள்ளுவர் 'வில் ஏர் உழவர்' என்றார்; கம்பர் ஓரிடத்தில் 'வாள் ஏர் உழவர்' என்றுள்ளார். இந்த உருவகம் புறப்பொருள் வெண்பாமாலை நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:

கொளு: "முழவுறழ் திணி தோளானை
உழவனாக உரைமலிந் தன்று"

வெண்பா: "அஞ்சுவரு தானை அமர் என்னும் நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும்-செஞ்சுடர்
பைங்கண் பணைத்தாள் பகட்டுழவன் நல்கலான்
எங்கட்கு அடையா இடர்" (159)

ஒரு வேலையாய்ச் செல்லுமுன் தலைவரை வணங்கிச் செல்லுதல் மரபாதலால் 'தலைவரைத் தொழுது' என்றார். பொங்குவில் தலைவர்- இராம இலக்குவர். செங்கதிர்ச் செல்வன் = சுக்கிரீவன்.

# 13. பிலம் புக்கு நீங்கு படலம்

சீதையைத் தேடத் தென்திசை சென்ற வானரர் சிலர் ஒரு பிலத்துக்குள் தவறுதலாகப் புகுந்து பின்பு அனுமன் உதவியால் அதனின்றும் வெளிப்போந்த செய்தியைப் பற்றிய தாதலின், இப்படலம் இப்பெயர் பெற்றது. பிலம்புகு படலம் எனச் சில சுவடிகளிலும், பிலம் நீங்கு படலம் எனச் சில சுவடிகளிலும் பெயர் மாற்றங்கள் உள்ளன. வரலாற்றிற்கு இப்பகுதி வேண்டியது தானா என்பது ஐயத்திற்கு உரியது.

**தமிழ் உடைத் தென்திசை**

வானர வீரர்கள் சீதையைத் தேடிப் பல பக்கங்களிலும் சென்றனர். அவர்களுள் தமிழ் வழங்கும் தென்திசைக்குச் சென்றவர்களைப் பற்றிப் பேசுவோம்:

> **"குன்று இசைத்தன எனக் குவவுத்தோள் வலியினார்**
> **மின் திகைத்திடும் இடைக் கொடியை நாடினர் விராய்**
> **வன்திசைப் படரும் ஆறு ஒழிய வண்தமிழுடைத்**
> **தென்திசைச் சென்றுளார் திறன்எடுத்து உரைசெய்வாம்"**
>
> (2)

குன்று போன்ற தோளினர் = வானரர்கள். மின்னலும் மயங்கும் அழகிய இடையை உடைய கொடி = சீதை. தென்திசை தவிர்த்த மற்ற திசைகள் வன் திசைகள் எனப் பட்டன. வளமான தமிழ் வழங்குவதால் தென்திசை வன் திசைகளினின்றும் மாறுபட்ட மென் திசை எனக் கொள்ளல் தகும்.

### விந்திய மலை

வானரர் விந்திய மலைப்பக்கம் சென்றனர். அம்மலை, சிந்துரம் என்னும் பொடியுடன் மணிகள் பொருந்தி அந்திவானம் போல் தோன்றுதலாலும், பாம்பு - திங்கள் - ஆறு ஆகியவை பொருந்தி இருத்தலாலும் சிவன் முடியை ஒத்திருந்ததாம்.

**"சிந்து ராகத்தொடும் திரள்மணிச் சுடர் செறிந்து**
**அந்திவானத்தின் நின்று அவிர்தலான் அரவினோடு**
**இந்துயாறு எய்தலான் இறைவன்மா மௌலிநேர்**
**விந்த நாகத்தின்மாடு எய்தினார் வெய்தினால்"** (3)

இப்பாடல், விந்திய மலைக்கும் சிவனுக்கும் பொதுவான செய்திகளைக் கூறி இருபொருள் அணி (சிலேடை) உடையதாகத் திகழ்கிறது. செந்நிறச் சிந்துரப் பொடியும் செம்மணிகளும் உடைமையால் மலை செந்நிறமுடையதாய்த் தோன்றுகிறது. 'சிவன் எனும் செம்மேனி அம்மான்' என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்கச் சிவனும் செந்நிறத்தான். மலையிலும் பாம்பு உள்ளது - உச்சியில் திங்கள் காணப் படுகிறது - மலையிலிருந்து ஆறுதோன்றி ஓடும்" சிவன் முடியிலும் பாம்பும் திங்களும் கங்கை ஆறும் உள்ளன. எனவே, சிவனும் விந்திய மலையும் ஒப்புமை உடையனவாம்.

### முழுதும் காண்கிலார்

விந்திய மலைப்பகுதி முழுவதும் தேடிப் பார்த்தபின் நருமதை ஆற்றின் பால் எய்தினர். அந்த ஆற்றிலே சீதையை முழுவதும் காணமுடியவில்லை. சீதையின் கூந்தலையும் முகத்தையும் முறுவலையும் மட்டுமே கண்டனராம்:

**"பெறலரும் பெற்றியை நாடும் பெற்றியார்**
**அறல்நறுங் கூந்தலும் அளக வண்டுசூழ்**
**நிறைநறுந் தாமரை முகமும் நித்தில**
**முறுவலும் காண்பரால் முழுதும் காண்கிலார்"** (9)

ஆற்றிலுள்ள அறல் மணல் கூந்தலையும், தாமரை மலர் முகத்தையும். முத்துகள் பற்களையும் நினைவு செய்தனவாம். இவற்றை மட்டும் கற்பனைக் கண்களால் பார்த்தனரே தவிர, உண்மையான சீதையின் உருவம் முழுவதையும் கண்டா ரிலர்.

**ஏமகூட மலை**

நருமதை ஆற்றைக் கடந்து ஏமகூட மலையை எய்தினர். அம்மலையில் உள்ள மாணிக்க மணிகளின் இடையிடையே பொன்துகளோடு ஓடும் அருவியும் ஆற்றுநீரும், கொல்லனின் உலை நெருப்பின் நடுவே உருகி ஓடும் பொன்னை ஒத்தனவாம்.

> **"பரவிய கனகநுண் பராகம் பாடுற**
> **எரிசுடர்ச் செம்மணி ஈட்டத் தூடுவீழ்**
> **அருவியும் நதிகளும் அலங்கு தீயிடை**
> **உருகுபொன் பாய்வ போன்று ஒழுகுகின்றது"** (14)

மலைகளில் உள்ள பொன் துகள் போன்ற துகள்கள் நீரில் கலந்து வருவதுண்டு. இவ்வாறு வருவதனால்தான், காவிரியின் நீரும் அத்தகைய தாகிப் 'பொன்னி' என்னும் பெயருக்கு உரியதாயிற்று.

ஏமகூட மலை முழுதும் தேடியும் கிடைக்காததால், இரண்டு வெள்ளம் படைகளும் பிரிக்கப்பட்டுப் பல இடங் களிலும் தேடுமாறு அனுப்பப்பட்டன.

**சுரம் அடைதல்**

அனுமனைத் தலைமையாகக் கொண்ட சிலர் சென்ற வழியில் ஒரு பாலைவனம் தென்பட்டது. அதைக் கடக்க முயன்று அதன் வழியாகச் செல்லத் தொடங்கினர். அப்பாலை வனத்தில் 'நீர்' (தண்ணீர்) என்ற பெயரை யாரும் வாயால் சொல்லவோ – காதால் கேட்கவோகூட

முடியவில்லை. அப்பாலையின் வெப்பத்தைக் கண்டு ஞாயிறானும் அஞ்சினானாம்.

**''மாருதி முதலிய வயிரத் தோள்வயப்**
**போர்கெழு வீரரே குழுமிப் போகின்றார்**
**நீர்எனும் பெயரும் அந்நெறியின் நீங்கலால்**
**சூரியன் வெருவும்ஓர் சுரத்தைத் துன்னினார்''** (21)

உலகில் உள்ள வெப்பப் பொருள்கள் எல்லாம் ஞாயிறால் தரப்பட்ட வெப்பத்தை உடையன என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த நில உலகமே ஞாயிறிலிருந்து இற்றுத் தெறித்து விழுந்த ஒருபொறி என்கின்றனர். இத்தகைய ஞாயிறே அஞ்சுகிறான் எனில் அப்பாலையின் வெப்பம் எவ்வளவு கொடுமையானது என்பதை அறியலாம். இது ஓர் உயர்வு நவிற்சியாகும். மாருதி = அனுமன். அனுமன் முதலிய வலிமை மிக்க வரராலேயே தாங்க முடியாத வெப்பமாம்.

உலகியலில், தேநீர் தராததைப் பற்றி, தேநீர் என எழுதிக் காட்டக்கூட இல்லையா - தேநீர் என வாயால் சொல்லிக் காட்டக்கூட இல்லையா - என வேடிக்கையாகக் கேட்பதுண்டு. அதுபோல், இங்கே நீர் என்ற பெயருக்கே இடம் இல்லை என்று கம்பர் உலகியலை ஒட்டிக் கூறியிருப்பது சுவை பயக்கிறது.

**என்பு இல் உயிர்**

நெருப்பு எரியும் நரகத்தில் சிக்கிய எலும்பு இல்லாத உயிர்கள்போல வானரர்கள் வெந்து புழுங்கினராம்.

**''தென்புலம் தங்குளரி நரகில் சிந்திய**
**என்புஇல் பல்உயிர் எனவெம்மை எய்தினர்''** (23)

தென்புலம் = தெற்கு உலகம். எமனது இருப்பிடம் தென்திசையில் இருப்பதாகக் கூறுவர். தென்திசைக்கு உரிய

தெய்வத் தலைவன் எமனாம். இவன் மேலாட்சியில் நரகம் இயங்குகிறதாம். நரகில் தீ எரிந்து கொண்டிருக்குமாம். நரகம் அடைபவர் அத்தீயில் வெந்து நொந்து போவார் களாம். எலும்பு இல்லாத புழு பூச்சிகள் வெற்று வெயிலிலேயே சுருண்டு போகும். 'என்பு இலதனை வெயில் போலக் காயுமே' என்பது வள்ளுவம். இத்தகைய எலும்பு இல்லாத உயிர்கள் எரி நரகில் அகப்பட்டால் என்ன ஆகும்? இந்த எரி நரகில் அகப்பட்ட எலும்பில்லா உயிர்கள் இங்கே வானரர்க்கு உவமையாக்கப்பட்டுள்ளன. 'சிந்திய... உயிர்' என்னும் தொடர் சிந்திக்கத்தக்கது.

**அகல் எழு பொரி**

வெப்பத்தால் நீர் வேட்கை மிக, தண்ணீர் வேண்டி நாக்கை வெளியிலே நீட்டிக் கொண்டிருந்தனர். காலில் சூட்டினால் கொப்புளங்கள் தோன்றின. பாலைவனத்து வெப்பத்தைவிடத் தம் உடம்பு மிக்க வெப்பம் உடையதான தால், நெருப்புச் சட்டியில் இட்ட பொரிபோல் பொரிந்து துள்ளினராம்.

**''நீட்டிய நாவினர் நிலத்தில் தீண்டுதோறு**
**ஊட்டிய வெம்மையால் உலையும் காலினர்**
**காட்டினும் காய்ந்து தம்காயம் தீதலால்**
**சூட்டு அகல்மேல் எழுபொரியின் துள்ளினார்''** (24)

வறுக்கும் சூடான சட்டியில் நெல்லைப் போட்டால் அது பொரியாக மாறும். அதுபோல் வானரர்களின் உடம்பு மாறியதாகக் கம்பர் கூறும் உவமை சுவையானது. காயம் = உடம்பு, அகல் = சட்டி.

**இருள் குகை**

அப்போது வழியில் ஒருகுகை தெரிந்தது. உலகத்து இருள் முழுவதும் ஞாயிற்றுக்கு அஞ்சி அங்கு வந்து ஒளிந்து

கொண்டிருப்பதாக எண்ணும்படியான இருள் மிக்க குகை அது.

**"அக்கணத்து அப்பிலத்து அசுணி எய்தினார்**
**திக்கினோடு உலகுறச் செறிந்த தேங்கிருள்**
**ஏக்கிய கதிரவற்கு அஞ்சி ஏமுறப்**
**புக்கதே அனையதோர் புரைபுக்கு எய்தினார்"** (27)

பிலம் = குகை. அசுணி = உள் பகுதி. இருளின் மிகுதி இப் பாடலில் கற்பனை செய்யப்பட்டுள்ளது. பொழிலின் செறிவு இருள் போன்று இருப்பதாகப் புகழேந்தியும் நளவெண்பாவில் கூறியுள்ளார். ஞாயிற்றொளி புகமுடியாத பொழில் எனப் புலவர் சிலர் கூறியுள்ளதை முன்னமே கண்டுள்ளோம்.

**கையும் காலும்**

குகையின் இருள் செறிவில் அகப்பட்டுக் கொண்ட வானரர்கள் அப்படி இப்படிச் செல்வதற்கு வழி தெரியாதவராய் வருந்தி, தக்க ஏற்பாடு செய்து தங்களைக் காப்பாற்றும்படி அனுமனை வேண்டினர். அப்போது அனுமன், உள்ளம் கவலற்க - எல்லோரையும் காப்பாற்றுவேன் - என் வாலை எல்லோரும் நன்கு பற்றிக் கொள்ளுங்கள் - விடாதீர்கள் - என் பின்னாலேயே வாருங்கள் என்று கூறி, கைகளால் வழி தடவிக் கால்களால் நடக்கலானான்:

**"உய்வுறுத்துவென் மனம் உலையீர், ஊழின் வால்**
**மெய்யுறப் பற்றுதிர் விடுகிலீர் என**
**ஐயன் அக்கணத்தினில் அகலும் நீள்நெறி**
**கையினால் தடவி வெங்காலின் ஏகினான்"** (30)

உய்வுறுத்துவென் = காப்பாற்றுவேன். அனுமனின் வால் எவ்வளவுக்கு வேண்டுமானாலும் நீளும். அதனால் எல்லா மறவரையும் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் சொன்னான் - மெய்யுறப் பற்றுதல் என்றால் அதுதான்.

இப்போது சில இடங்களைக் கடக்க நீளமான கயிற்றைக் கட்டி விட்டு அதைப் பிடித்துக் கொண்டே செல்வது போல் செல்ல அனுமன் வால் பயன்படுகிறது. தள்ளாத அகவை உடைய முதிய தவசியர் குரங்குகளின் வாலைப் பிடித்துக் கொண்டு செல்வதாகக் கம்பர் வேறோரிடத்தில் கற்பனை யாகக் கூறிப் படிப்பவர்களை மகிழ்வுறுத்தியுள்ளார்.

காலால் வழி தடவிச் செல்வதாகக் கூறுதல் மரபு. சில இடங்களில் கையாலும் தடவிப் பார்ப்பது உண்டு. காலிலும் கையிலும் கண்கள் இல்லையாயினும், தொடு உணர்வே இங்கே கண்ணாக வேலை செய்கிறது. இந்த அமைப்பு மக்கள் பிறப்பினர்க்கு உரியது. ஆனால், வானரங்களுக்கு முன்கால்கள் இரண்டும் கைகளாகும் - பின்கால்கள் இரண்டுமே மக்களுடையன போன்ற கால்களாகும். பின் கால்களை ஊன்றிக் கொண்டு முன் கால்களாகிய கைகளால் குரங்குகள் என்னென்னவோ செய்யும். அந்த முறையில், அனுமன் கையால் தடவிக் காலால் நடந்தான் என்று கூறப் பட்டிருக்கலாம்.

**நகர் வலம்**

இவ்வாறாக வானரர்கள் குறிப்பிட்ட தொலைவு கடந்து சென்றபின் அங்கு ஓரிடத்தில் ஒளி மிக்க நகரம் ஒன்றைக் கண்டனர். அந்நகரில் சோழ மன்னனிடம் பரிசு பெற்ற கவிஞர்களின் வீடுகளில் உள்ளாங்கு, பொன், உயரிய உடை, சாந்து, மாலை, அணிகலன்கள் ஆகியவற்றின் குவியல்கள் அளவிறந்து மிக்கிருந்தனவாம்:

> **''புவிபுகழ் சென்னி பேரமலன் தோள்புகழ்**
> **கவிகள்தம் மனையெனக் கனக ராசியும்**
> **சவியுடைத் தூசும்மென் சாந்தும் மாலையும்**
> **அவிர் இழைக் குப்பையும் அளவிலாதது''** (35)

சென்னி = சோழன். அமலன் - தீமை அற்றவன். அமலன் என்பதால், உத்தமச் சோழனாயிருக்கலாம் என ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர். எதையும் திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. வரலாற்றுக் குறிப்புகளைத் தெளிவாகத் தெரிவிக்காதது நம்மவரின் குறைபாடேயாகும். தோள் புகழ் கவிகள் = சோழனது மற ஆற்றலைப் புகழ்ந்து பாடிய புலவர்கள். சோழன் தன்னைப் பாடியோர்க்கு இவ்வளவு பொருள்களும் ஈந்துள்ளான் என்பது இப்பாடலால் தெளிவுறும். மற்றும், கம்பர் தம்மை ஆதரித்த சோழன்பால் மிக்க நன்றி செலுத்தியுள்ளார் என்பதும் இப்பாடலால் தெளிவுறும். தம்மை ஆதரித்த சடையனைத் தம் நூலின் இடையிடையே புகழ்ந்துள்ளது போலவே, ஈண்டு சோழனைப் புகழ்ந்துள்ளார். இதனால் நமக்கு ஓரளவாவது வரலாற்றுக் குறிப்பும் கிடைக்கிறது.

**சுயம்பிரபை**

அந்நகரத்தில் உயிர் உள்ள பொருள் எதுவும் இல்லை. எல்லாம் எழுதிய ஓவியம் போல் உள்ளன. அந்நகரின் தோற்றத்தைக் கண்ட வானரர்கள் பல எண்ணி மயங்கு வதும் வியப்பதுமா யிருந்தனர். அனுமன் அவர்கட்கு ஆறுதல் கூறித் தேற்றினான்.

மேலும் சென்றதும் அந்நகரின் நடுவே சுயம் பிரபை என்னும் அழகிய பெண் ஒருத்தி, தவம் எல்லாம் ஒருங்கு திரண்டு ஓர் உருவெடுத்து வந்தாற்போல், கண்கள் மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டிருக்க அமர்ந்திருந்ததைக் கண்டனர்:

**"நற்றவம் அனைத்தும் உருநண்ணி"** (45)

**"கருங் கயல்களின் பிறழ்கண் மூக்கின் நுதிகாண"**(46)

என்பன பாடல் பகுதிகள். கண்கள் மூக்கின் நுனியைப் பார்ப்பது யோகம் தொடர்பான ஒரு நிகழ்வாகும். மலச்

சிக்கல் உடையவர்கள் கழிவறையில் குந்தியிருக்கும்போது இவ்வாறு இருந்தால் மலம் கழியும் என்பர். அதாவது, மன ஒருமைப்பாடு இச்செயலால் உண்டாகுமாம். மும்மலங்கள் கழியவும் இந்த யோக நிலை உதவும்.

**தாமரை இருக்கை**

சுயம் பிரபை தாமரை இருக்கை (பத்மாசனம்) போட்டு அமர்ந்திருந்தாள். அடி வயிற்றின் கீழ்ப் பகுதி (அல்குல்) இரண்டு தொடைகட்குள் ஒடுங்க, இடை தளராது நிமிர்ந்த நிலையில் இருக்கச் செய்து, இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளின் மேல் வைத்து, இரண்டு முலைகளின் சுமை குறையும் படியாக மூச்சை நடுவில் நிறுத்தி அமர்ந்திருந்தாள்:

**"தேரனைய அல்குல் செறிதிண் கதலி செப்பும்**
**ஊருவின் ஒடுங்குற ஒடுக்கி உற ஒல்கும்**
**நேரிடை சலிப்பற நிறுத்தி நிமிர்கொங்கைப்**
**பாரம் உள்ஒடுக்குற உயிர்ப்புஇடை பரிப்ப"** (47)

அங்குலுக்குத் தேரை ஒப்புதல் சொல்லுதல் இலக்கிய மரபு. கதலி = வாழை. ஊரு = தொடை. பெண்களின் தொடைக்கு வாழை ஒப்புமை. "துடை வாழை மேல் மடவார் அல்குல் பாம்பு தொட மயங்கி" என்பது நால்வர் நான்மணி மாலைப் பாடல். கம்பரே சில இடங்களில் கூறியுள்ளார். நாட விட்ட படலத்தில்

**"அரம்பை என்று அளக மாதர்**
**குறங்கினுக்கு அமைந்த ஒப்பில்"** (36)

என்று கூறியுள்ளார். (அரம்பை = வாழை. குறங்கு = தொடை) தாமரை இருக்கையில் அல்குல் பகுதி இருதொடைகட்குள் ஒடுங்கியிருக்கும். நேர் இடைசலிப்பு அற = இடுப்பு தளர்தல் இன்றி நேராய் நிமிர்ந்திருந்ததாம். கொங்கை = முலை. பாரம் = சுமை. மூச்சை நடுவில் நிறுத்திப் பயிற்சி செய்யின், கொங்கையின் பருமன் குறையுமாம்.

மூச்சை நடுவில் நிறுத்துதல் என்றால் என்ன? நாம் மூக்கின் இரண்டு தொளைகளின் வழியாக மூச்சை வெளியே விடுகிறோம் - உள்ளே இழுக்கிறோம். மூக்கின் வலப் பக்கத்திற்குப் 'பிங்கலை' என்பதும், இடப்பக்கத்திற்கு 'இடகலை' என்பதும் பெயராகும். மூக்கின் நடுப்பகுதிக்குச் சுழு (ழி) முனை என்பது பெயர். பயிற்சியில் இருப்பவர்கள், பிங்கலையாலோ - இடகலையாலோ மூச்சை வெளிவிடாமலும் உள் இழுக்காமலும் மூக்கின் நடுப்பகுதியாகிய சுழி முனையில் ஒரே நிலையில் அடக்கி நிலைத்திருக்கச் செய்தல் யோகத்தின் ஒரு படியாகும். இதைத் தான் 'உயிர்ப்பு இடை பரிப்பு' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

**முத் தாரம்**

சுயம் பிரபையைக் கண்ட வானரர்கள் இவள்தான் சீதையோ என ஐயுற்று, நன்கு கவனித்துத் தெரிவிக்கும்படி அனுமனிடம் கூறினார். சங்கு மணி மாலை முத்து மாலைக்குச் சமமாகும் எனில், இவள் சீதையாயிருப்பாள் - என்று அனுமன் கூறினானாம்:

> **''எக்குறியொடு எக்குணம் எடுத்து இவண் உரைக்கேன்**
> **இக்குறி உடைக்கொடி இராமன் மனையாளோ**
> **அக்குவடம் முத்தமணி ஆரமதன் நேர்நின்று**
> **ஒக்குமெனில் ஒக்குமென மாருதி உரைத்தான்''** (51)

அக்குவடம் = சங்கு மணி மாலை. முத்த மணி ஆரம் = முத்து மாலை. எந்த அடையாளம் - எந்தக் குணம் கொண்டு இவளை இராமன் மனைவியாகிய சீதை என்று துணிவது என்று கூறி, அப்படி ஒன்றும் இல்லை - சங்கு மணி முத்து மாலைக்கு ஒப்பாகும் எனில் இவள் சீதையா யிருக்க முடியும் என்று அனுமன் கூறியதிலிருந்து, இவள் சீதை இல்லை என்று அனுமன் கூறியதாகக்கொள்ளல் வேண்டும். வினாவிற்கு வினாவிடை விடுத்தல் போன்ற தோர் அறிவிப்பாகும் இது.

**விருந்தோம்பல்**

வானரரைக் கண்ட சுயம்பிரபை, நீங்கள் யார் – ஏன் இங்கு வந்தீர்கள்? – என வினவினாள். இராமனுக்காகச் சீதையைத் தேடவந்துள்ளோம் என வானரர்கள், கூற, இவர்களின் வரவை எதிர்பார்த்திருந்த சுயம்பிரபை அனைவருக்கும் விருப்புடன் விருந்தளித்தாள். முதலில், என் தவம் பலித்தது – வீடுபேறு கிடைக்கும் என்று கூறி அவர்களின் கால்களை நீர் ஊற்றித் தூய்மை செய்து, அமிழ்தம் போன்ற சுவையுடைய உணவை அளித்து அவர்களின் உள்ளங் குளிர இன்மொழி பேசினாள்.

**"கேட்டவளும் என்னுடைய கேடில்தவம் இன்னே**
**காட்டியது வீடு என விரும்பி நனிகால் நீர்**
**ஆட்டிஅமிழ் தன்னசுவை இன்னடிசில் அன்போடு**
**ஊட்டிமனன் உள்குளிர இன்னுரை உரைத்தாள்"** (56)

விருந்தோம்பும் முறை ஒரு சிறிது இப்பாடலில் கூறப் பட்டுள்ளது. விருந்தினரின் கால்களைத் தூய்மை செய்தல் - சுவையான உணவு அளித்தல் - இன்னுரை பகர்தல் - ஆகியவை முறையாகும். 'தலையில் அடித்துக் கையில் கொடுத்தல்' என்பதுபோல் சிலர் கடமைக்கு விருந்தளிப்பார் கள். வெறுப்போடு செய்யும் விருந்தைவிட, அன்போடு பேசும் இன்மொழி மிக்க விலைமதிப்பு உடையதாகும். சிலர் எட்டி நின்று கொண்டு, விருந்தினர் உண்டு முடித்து எழுந்திருக்கும் போது இன்னும் கொஞ்சம் வைத்துக் கொள்கிறீர்களா என்று வஞ்சகமாய் - ஒப்புக்குக் கேட்பர். வேண்டாம் போதும் எனக் கூறினும் வற்புறுத்தி இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று கூறி உணவளித்தலைத்தான் கம்பர் 'ஊட்டி' என்னும் சொல்லால் குறிப்பிட்டுள்ளார்.

விருப்பம் இன்றி இடும் உணவு, செத்த பிணத்திற்குப் படைக்கும் உணவு போன்றது - என்னும் கருத்துடைய.

**"பிரியமு லேனி கூடு பிண்டபு கூடயா"**

என்னும் வேமன்னா அருளிய வேமன்ன பத்தியம் என்னும் தெலுங்கு நூற்பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பிரியமு லேனி - பிரியம் (விருப்பம்) இல்லாத. கூடு = உணவு, பிண்டபு = செத்தார்க்குப் படைக்கும் பிண்டம் எனப் படுகிற, கூடயா = உணவு அய்யா - என்பது பொருள்.

உண்பதற்கு, முன் காலைத் தூய்மை செய்தல் என்னும் வழக்காறு பல நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. கண்ணகி கோவலனுக்கு உணவு அளிக்குமுன், அவன் கால்களைத் தூய்மை செய்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது;

**"கடிமலர் அங்கையின் காதலன் அடிநீர்**
**சுடுமண் மண்டையின் தொழுதனள் மாற்றி"** (16: 38, 39)

என்பது பாடல் பகுதி. அடுத்துப் பெரிய புராணத்திற்குச் சென்று ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டும் காணலாம். அப்பூதி நாயனார் திருநாவுக்கரசரைத் தம் மனைக்கு அழைத்து வந்து விருந்து அளிக்கு முன், நாவுக்கரசரின் கால்களைத் தூய்மை செய்து அந்தத் தண்ணீரை எல்லாரும் தலைமேல் தெளித்துக்கொண்டனராம்.

**"முனைவரை உள்ளெழுந் தருளுவித்து**
**அவர்தாள் முன்விளக்கும்**
**புனைமலர்நீர் தங்கள்மேல் தெளித்து**
**உள்ளம் பூரித்தார்"** (1807)

என்பது பாடல் பகுதி. நாவுக்கரசர் வேளாளர் - அப்பூதி அந்தணர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சுயம் பிரவை வரலாறு**

அனுமன் சுயம் பிரபையின் வரலாற்றை வினவ, அவள் கூறலுற்றாள். அது: - மயன் இந்நகரத்தைப் படைத்துத் தெய்வ உலக அரம்பை ஒருத்தியை இங்கே கொண்டு வந்து

வைத்துக் காம இன்பம் நுகர்ந்துகொண்டிருந்தான். நான் அவளுக்குத் துணையாய் இருந்தேன். மயன்மேல் சினங் கொண்ட இந்திரன் மயனைக் கொன்று அப்பெண்ணின் மேல் சினங்கொண்டான். என் மீதும் சினங்கொண்டு நீ இங்கேயே கிடப்பாயாக என்று வைவு (சாபம்) கொடுத்தான். சீதையைத் தேட வானரர்கள் இங்கே வரும்போது நீ விடுதலை அடைவாய் என வைவுக்கு விடுவிடுப்பும் செய்தான் - எனக் கூறினாள். பின்னர், அனுமன் பேருருக் கொண்டு, குகையின் மேல் பகுதியை உடைத்தெறிந்தான். சுயம்பிரபை வெளியே சென்று வீடுபேறு எய்தினாள்.

பின்னர் அனுமன் முதலியோர் நெடுந்தொலைவு நடந்து சென்று ஒரு பொய்கைக் கரையை அடைந்தனர். ஞாயிறும் மேற்கு மலையில் (அத்தகிரியில்) மறைந்தான்:

**''மாருதிவலித் தகையைப் பேசி மறவோரும்**
**பாரிடை நடந்து பகல் எல்லை படரப்போய்**
**நீருடைய பொய்கையினின் நீள்கரை அடைந்தார்**
**தேருடை நெடுந்தகையும் மேலைமலை சென்றான்''** (73)

வழி கடப்பவர்கள் பேசிக்கொண்டே செல்வதுண்டு. அதனால் களைப்பு தெரியாது. அவ்வாறே, வானரர்கள் அனுமனின் வலிமையைப் பேசிக்கொண்டே சென்றார்களாம். பகல் எல்லை = பகலின் முடிவு - அந்தி மாலை. தேருடைய நெடுந்தகையாகிய ஞாயிறும் வழிகடந்து மேலைமலை அடைந்தான் என்பதில், நெடுந்தகையும் என்பது இறந்தது தழுவிய எச்ச உம்மையாகும்.

# 14. ஆறு செல் படலம்

அனுமன் முதலிய வானர மறவர்கள் வழி கடந்து செல்லுதலைக் கூறும் படலம் இது. ஆறு = வழி.

ஒரு பொய்கைக் கரையை அடைந்த வானரர்கள். அப் பகுதியிலுள்ள தேன், காய், கனி முதலியவற்றை நிரம்ப உண்டு வழி நடந்த களைப்பால் படுத்து உறங்கிவிட்டனர். அப்பகுதியை ஆண்டுகொண் டிருந்த துமிரன் என்னும் அரக்கன் இவர்களைக் கண்டு சினமுற்று, அங்கதன் மார்பில் ஓங்கி ஓர் உதை விட்டான். விழித்துக் கொண்ட அங்கதன் பதிலுக்கு அரக்கனைத் தாக்கி உயிரைப் போக்கி விட்டான். அரக்கன் அலறிக்கொண்டே தொப்பென்று விழுந்தான். அவ்வொலி கேட்ட வானரர்கள் விழித்துக்கொண்டனர்.

**துமிரன் தோற்றம்**

இந்த அரக்கன் துமிரனைப் பின்வருமாறு ஆசிரியர் புனைந்துரைத்துள்ளார்: மலை போன்றவனாம் - கடலை ஒத்தவனாம்; கொலை செய்வதில் கூற்றை (எமனை) நிகர்த்தவனாம்; கொடுமைக்கு நிலையான உறைவிடமா யிருப்பவனாம்; நற்பண்பு இல்லாதவனாம்; பிறைபோன்ற கோரைப் பற்களை உடையவனாம்; கனல் கக்கும் கண்ணினனாம்:

> **"மலையே போல்வான் மாகடல்**
> **ஒப்பான் மறம் முற்றக்**
> **கொலையே செய்வான் கூற்றை**
> **நிகர்ப்பான் கொடுமைக்கு ஓர்**

**நிலையே போல்வான் நீர்மை**
**இலாதான் நிமிர் திங்கள்**
**கலையே போலும் கால**
**எயிற்றான் கனல் கண்ணான்''** (2)

ஒருவனது கொடுமையை இதற்கு மேலும் எவ்வாறு புனைவது? உயரத்திலும் திண்மையிலும் மலையை ஒத்த தோற்றத்தான். உருவத்தின் பரப்பில் மாகடலைப் (சமுத்திரத்தைப்) போன்றவன். உருவம் அங்ஙனமெனில், அவனது செயல் என்பது கொலைதான் - இதில் - எப்போதும் உயிர் குடிக்கும் தொழிலனாகிய எமனை நிகர்த்தவன். கொடுமை இவனிடமிருந்து தான் வெளியாகும் - அதற்கு உறைவிடமானவன். வளைந்த கூரிய பிறை நிலாபோன்ற கோரப்பற்களை உடையவனாம் - பற்களைக் கண்டாலே அச்சம் ஏற்படும்.

**''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்''** (575)

என்றார். வள்ளுவர். இவனுக்குக் கண்ணோட்டம் என்பது தகிக்கும் கனல்தான். இத்தகையோனை அங்கதன் எளிதில் கொன்று விட்டான்.

**பெண்ணை நாடுவார்**

சீதையாகிய பெண்ணை நாடிச் சென்றவர்கள் பெண்ணை அடைந்தனராம்; அதாவது, பெண்ணை ஆற்றை அடைந்தனராம். பெண்ணையாறு ஒரு பெண்ணாகவே உருவகிக்கப்பட்டுள்ளது. மணல் மேடாகிய முலைகளையும், ஆம்பலாகிய இதழ் வாயினையும், முத்துகளாகிய பற்களையும் உடையதாம்:

**''புண்ணை வெம்முலைப் புளினம், ஏய்தடத்து**
**உண்ண ஆம்பலின் அமிதம் ஊறுவாய்,**
**வண்ண வெண்ணகைத் தரளம் வாள்முகப**
**பெண்ணை நண்ணினார் பெண்ணை நாடுவார்''** (12)

புண்ணை = புள்நை — சக்கரவாகம் என்னும் பறவையை முலைக்கு ஒப்புமையாகக் கூறுவது மரபு. அந்தப் புள் முலைக்கு இருக்கும் அழகு நமக்கு இல்லையே என நைகிறதாம் (வருந்துகிறதாம்). புளினம் = மணல்மேடு. ஆற்றின் நடுவே மணல்மேடு இருக்கும். ஆற்றங்கரை ஆம்பல் மலர்தான் இங்கு உதடோடு கூடிய வாய். ஆற்றில் அடித்துக்கொண்டு வரும் தரளம் (முத்து) வெண்மையான பல்லாகும். வாள்முகம் = ஒளி பொருந்திய முகம். மற்ற உறுப்புகளைக் கூறியுள்ள சூழ்நிலையைக்கொண்டு, தாமரை யாகிய முகத்தையும் உடையதாகச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். 'பெண்ணை நாடுவார் பெண்ணை நண்ணினார்' எனப் பெண்ணை என்பது இருபொருள் தந்து சுவை பயக் கிறது. இந்தப் பெண்ணை வடபெண்ணையாகும்.

**கோதாவரி**

வானரர் பெண்ணையைக் கடந்தபின், விதர்ப்ப நாடு, தண்டகவனம், முண்டகத்துறை, பாண்டு மலை முதலிய வற்றைக் கடந்து கோதாவரி ஆற்றை அடைந்தனர். இந்த ஆறு, சனக மன்னன் வேள்வி தொடங்க மறை மந்திரங் களோடு நிலத்தை உழுதபோது நிலமகள் ஈன்ற சீதைக்காக — சீதையின் இப்போதுள்ள துயர நிலைமைக்காக அழுகின்ற கண்ணீர் மழை என்று சொல்லும்படியாக ஓடியது.

**"எழுகின்ற திரையிற் றாகி இழிகின்ற**
**மணிநீர் யாறு**
**தொழுகின்ற சனகன் வேள்வி**
**தொடங்கிய சுருதிச் சொல்லால்**
**உழுகின்ற பொழுதின் ஈன்ற**
**ஒருமகட்கு இரங்கி ஞாலம்**
**அழுகின்ற கலுழி மாரியாம்**
**எனப் பொலிந்த தன்றே"** (28)

இயற்கையாக ஓடுகின்ற ஆற்றுநீரை சீதைக்காக அழும் கண்ணீர் எனக் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுதலால் இந்த அமைப்பு தற்குறிப்பு ஏற்ற அணி எனப்படும். சீதா என்னும் வட சொல்லுக்கு 'உழுத சால்' என்று பொருளாம். உழுத மண் சால் பிளவில் கிடைத்ததால் சீதா எனும் பெயர் வைக்கப் பெற்றது.

மேலும் – கோதாவரி நீண்டு கிடப்பது, நிலத்தை அளக்கும் துறையைச் சேர்ந்த அளவையாளர்கள் (Surveyor) அளப்பதற்காகப் போட்டிருக்கும் அளவை நூல்போல் காணப் படுகிறதாம். மற்றும், மணியும் பொன்னும் உடைத்தா யிருக்கும் அந்த ஆறு, இராவணனின் மார்பிலிருந்து சடாயு பிய்த்தெறிந்த வடகப் போர்வை போலவும் உள்ளதாம்.

**''ஆசில் பேருலகில் காண்போர்**
**அளவைநூல் எனலு மாகிக்**
**காசொடு கனகம் தூவிக்**
**கவினுறக் கிடந்த கான்யாறு**
**ஏசுபோர் அரக்கன் மார்பின்**
**இடைபறித்து, எருவை வேந்தன்**
**வீசிய வடக மீக்கோள்**
**ஈதென விளங்கிற் றன்றே''** (29)

இந்தப் பாடலில் கோதாவரி ஆற்றுக்கு இரண்டு உவமைகள் கூறப்பட்டுள்ளன. ஒன்று:- அளவை நூல்போல் மண்ணின்மேலே நீண்டு கிடந்து ஓடுகிறது: இதனால், அந்தக் காலத்திலேயே நூல் கயிறு கொண்டு நிலம் அளக்கும் வழக்கம் இருந்தது புலனாகும்.

மற்றோர் உவமை:- ஆற்று நீரில் மாணிக்கம், பொன் முதலியன அடித்துக்கொண்டு வரும் தோற்றம், இராவணன் மார்பில் உள்ள பொன்னும் மணியும் பதித்த போர்வை போன்றிருந்த தாகும். வடகம் = உடைவகை. மீக்கோள் =

மேலே போர்த்திக் கொள்ளும் — அதாவது மார்பின்மேல் அணிந்துகொள்ளும் போர்வை போன்ற ஆடம்பர உடை. அரக்கன் = இராவணன். எருவை வேந்தன் = கழுகு அரசனாகிய சடாயு. இராவணன் அவ்வழியாக வானூர்தியில் எடுத்துச் சென்றபோது சடாயு இராவணனோடு போரிட்டான். அப்போது இராவணன் மார்பிலிருந்து சடாயு பிய்த்தெறிந்திருக்கலாம். அவ்வாறு எறிந்த போர்வையோ என எண்ணும்படிக் கோதாவரியின் தோற்றம் இருந்ததாம்.

கோதாவரியைத் தொடர்ந்து சுவணகத் துறை, குலிங்க நாடு, கொங்கணம், அருந்ததி மலை, மரகத மலை முதலியவற்றைக் கடந்து திருவேங்கட மலையை வந்து அடைந்தனர்.

**திருவேங்கடம்**

வலக்கையில் ஆழிப்படை ஏந்திய முகில் நிறத்தனாகிய திருமால் எழுந்தருளியுள்ள அம்மலையில் உள்ள விலங்குகளும் வீடுபேறு எய்தும் எனில், மெய்யறிவாளர்க்கு வீடுபேறு தவறுமோ?

**''வலங்கொள் நேமி மழைநிற வானவன்**
**அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை**
**விலங்கும் வீடு உறுகின்றன, மெய்ந்நெறிப்**
**புலங்கொள் வார்கட்கு அனையது பொய்க்குமோ''** (36)

மழை நிற வானவன் = திருமால். அனையது = விலங்குகளும் பெறும் அந்த வீடுபேறு. பொய்க்குமோ = பொய்க்காது. திருவேங்கடத்தின் சிறப்பு இதனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தொண்டை நாடு**

திருவேங்கடப் பகுதியில் தேடிப் பார்த்தபின் வானரர்கள் தொண்டை நாட்டின் உள்ளே புகுந்தனர். தொண்டை

நாடு, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைப் பகுதிகளும் அமைந்த நாடாகும்.

**"குன்று சூழ்ந்த கடத்தொடும், கோவலர்**
**முன்றில் சூழ்ந்த படப்பையும், மொய்புனல்**
**சென்று சூழ்ந்த கிடக்கையும், தெண்திரை**
**மன்று சூழ்ந்த பரப்பும் மருங்கெலாம்"** (39)

குன்று = குறிஞ்சி. சூழ்ந்த கடம் = பாலை. கோவலர் படப்பை = முல்லை. புனல் சூழ்ந்த கிடக்கை = மருதம். திரை சூழ்ந்த பரப்பு = நெய்தல். ஐந்திணைகளும் தமிழ் நூல்களில் சொல்லியுள் ளாங்குத் தொண்டை நாட்டில் உள்ளன. திருவேங்கடம் தமிழ்நாட்டைச் சேர்ந்ததாக அக்காலத்தில் இருந்தது. இன்று அதன் பெயர் 'திருமலை' என்பது. இதைத் தொண்டை நாட்டினின்றும் பிரித்துத் தனியாகக் கூறக் கூடிய அளவில் அரசியல் — மொழியியல் சூழ்நிலைகள் பின்னர் அமைந்துவிட்டன.

### மருவினார்க்கு மயக்க மில்லை

தெருவில் பலவகை இயங்களின் ஒலியை முகிலின் இடி ஒலி என மயில்கள் எண்ணி இன்புறுவதில்லை. ஏர்க்களம் பாடும் உழவர்களின் மத்தள ஒலியைக் கேட்டு அன்னங்கள் அஞ்சுவதில்லை. பலமுறை பழகியவர்க்கு மயக்கம் இராதன்றோ?

**"தெருவின் ஆர்ப்புறும் பல்லியம் தேர்மயில்**
**கருவி மாமழை என்று களிப்புறா**
**பொருநர் தண்ணுமைக்கு அன்னமும் போகலா**
**மருவி னார்க்கு மயக்கம் உண்டாகுமோ?"** (42)

கருவி மாமழை = தொகுதியான — கூட்டமான கரிய முகில். வானத்தில் முகில் தோன்றினால் மயில்கள் மகிழ்ந்து நடனம் ஆடுவது இயல்பு. திருவையாற்றில், மயில்கள் நடனம் ஆட, முகில் இடி இடிக்க மழை வரும் என அஞ்சி

குரங்குகள் மரத்தில் ஏறி வானத்தைப் பார்த்தனவாம். இதனை, ஞானசம்பந்தரின் திருவையாற்றுப் பதிகத்திலுள்ள

**"வலம்வந்த மடவார்கள் நடமாட முழவுஅதிர**
**மழை என்று அஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரமேறி**
**முகில் பார்க்கும் திருவையாறே"** (3 : 1)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம் பெண்கள் கோயிலை வலம் வருவது மயில்கள் நடனமாடுவது போல் இருக்கிறதாம்—கோயில் முழவு அடிக்கப்படுவது இடிபோல் தெரிகிறதாம். அதனால் மழைவரும் என மந்திகள் அஞ்சுகின் றனவாம். இதிலிருந்து, முகில் இடித்தால் மயில்கள் மகிழ்ந்து நடனமாடுவதுண்டு என உய்த்துணரலாம். ஆனால், தொண்டை நாட்டுத் தெருவில் கேட்கும் இயங்களின் முழக்கத்தை இடியாக மயங்கி மயில்கள் மகிழ்வதில்லையாம்.

அடுத்து, — உழவர்கள் தண்ணுமை முழக்கினால் அன்னங்கள் அஞ்சி ஓடிவிடுமாம். ஆனால் இங்கே ஓடுவ தில்லையாம். இவ்விரண்டிற்கும் காரணம், மயில்களும் அன்னங்களும் பல முறை கேட்டுக் கேட்டுப் பழகிவிட்டதே யாம். 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்னும் பழமொழியும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. முதலில் ஒரு செய்தியைச் சொல்லி, அதிலிருந்து கிடைக்கும் வேறொரு கருத்தை அறியவைக்கும் அமைப்பு 'வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும். மயில்கள்—அன்னங்களின் செயல்கள் முன்னால் சொல்லப்பட்டன. அவற்றைக் கொண்டு பின்னால் 'மருவினார்க்கு மயக்கம் இல்லை' என்னும் கருத்து பெறப்பட்டதாகப் பாடல் அமைந்துள்ளது.

**பாவம்-ஆமைமுதுகு**

நண்டு பிடிக்கும் உழத்தியர்கள், வளையில் கையை விட்டபோது, சங்குகள் ஈன்ற முத்துகள் கையில் அகப்பட,

அவற்றை வாரி எடுத்து, நாரைகள் இன்னும் அடைகாத்துக் குஞ்சு பொரிக்காத முட்டைகள் என எண்ணி, அம் முட்டைகளின் உள்ளீட்டை உண்பதற்காக ஆமைகளின் முதுகுகளில் அவற்றை உடைக்கின்றனராம்.

**"நள்ளி வாங்கு கடையிள நவ்வியர்**
**வெள்ளி வால்வளை வீசிய வெண்மணி**
**அள்ளி, நாரைசினை பொரியாத, என்று**
**உள்ளி ஆமை முதுகின் உடைப்பரால்"** (44)

நள்ளி=பெண் நண்டு. ஆண்யானை களிறு எனவும் பெண் யானை பிடி எனவும், ஆண் பறவை சேவல் என்றும் பெண் பறவை பெடை என்றும், மரங்களிலே ஆண்பனை பெண்பனை என்றும் குறிப்பிடப்படுவது போல்வே நண்டு களிலும் ஆண் நண்டு அலவன் என்றும் பெண் நண்டு நள்ளி என்றும் பெயர் குறிப்பிடப்படும். இதனைப் பெரிய திருமொழியில் உள்ள

**"பள்ளிக் கமலத் திடைப்பட்ட**
**பகுவாய் அலவன் முகம் நோக்கி**
**நள்ளி ஊடும் வயல்**
**சூழ்ந்த நறையூர்"** (6 : 7 : 6)

என்னும் பாடலால் அறியலாம். ஆணாகிய அலவன் மீது பெண்ணாகிய நள்ளி ஊடல் கொள்கிறாதம். நவ்வி=மான். நவ்வியர் = மான் போன்ற பெண்கள் — கடை இள நவ்வியர்= உழவுத் தொழில் புரியும் பெண்டிரைக் கடைசியர் எனவும் உழத்தியர் எனவும் கூறுதல் மரபு. வெள்ளி வால்வளை= வெள்ளிபோன்ற வெண்மையான சங்கு. வெண்மணி=முத்து. முத்துகளை நாரையின் முட்டை என எண்ணி உண்ணத் தொடங்கிய முயற்சியால், கோழி முட்டைகளை உண்பது போல், நாரையின் முட்டைகளையும் உண்பது உண்டு என அறியலாம். முட்டைகளை உடைக்க ஆமையின் முதுகில்

அடிப்பதைக் கொண்டு, ஆமை முதுகின் திட்பத்தையும் வலிமையையும் அறியலாம். அந்த ஓட்டுக்குள் தானே ஆமை நான்கு கால்கள்—தலை ஆகிய ஐந்தையும் அடக்கிக் கொண்டுள்ளது. ஆமையைக் கொல்லவேண்டுமெனில் மேல்பகுதி ஓட்டை ஒன்றும் செய்யமுடியாது—கவிழ்த்துப் போட்டு அடிப்பகுதியை அடித்தே கொல்லவேண்டும். பாவம்!

முத்துகள் வேறு பொருள்கள்போல் தோன்றுவதாக இலக்கியங்களில் கூறப்படுவதுண்டு. புகார்க் கடற்கரையில் சிறுமியர் சிற்றில் கட்டி விளையாடிக் கொண்டிருந்தனராம். ஓர் அலை வந்து அந்த மணல் வீடாகிய சிற்றிலை மூழ்கிக் கலைத்துவிட்டதாம். உடனே சிறுமியர், கடலை நோக்கி, என் அம்மாவிடம் சொல்கிறேன் பார் என்று, தங்கள் மாலைகளில் உள்ள முத்துகள் கீழே விழுவதையும் அறியாமல் அலறி ஓடினராம். அந்த முத்துகளை வழிப் போக்கர்கள் புன்னை அரும்பு என மயங்கிச் (மாறி எண்ணிச்) சென்றனராம்: இந்தக் கருத்துடைய பாடல் ஒன்று தண்டி யலங்கார உரையில் உள்ளது. அது:

> **''முன்னைத் தம்சிற்றில் முழங்கு**
> **கடலோதம் மூழ்கிப் போக,**
> **அன்னைக்கு உரைப்பன் அறிவாய்**
> **கடலே என்று அலறிப் பேரும்**
> **தன்மை மடவார் தளர்ந்து**
> **உகுத்த வெண்முத்தம் தயங்குகானல்**
> **புன்னை அரும்பேய்ப்பப் போவாரைப்**
> **பேதுறுக்கும் புகாரே எம்மூர்''**

என்னும் பாடல். பெண் நண்டு, உயிர்ச்சங்குகள், நாரை, ஆமை முதுகு ஆகியவற்றை வைத்துக் கொண்டு கம்பர் விளையாடி நமக்குக் கற்பனை நயச்சுவை அளித்துள்ளார் இப்பாடலில்.

**சோழ நாடு**

வானரர்கள் இத்தகைய தொண்டை நாட்டில் தேடிய பின் சோழநாடு ஏகினர்.

**இடறலும் இழுக்கலும்**

சோழநாட்டில் நாரைகள் வாழும் நீர்க்கரையில் உள்ள விரும்பத்தக்க தென்னையின் பழங்கள் கீழே விழுந்து கிடப்பதால் அப்பக்கமாகச் செல்லும் வானரர்கள் இடறி விழுகின்றனர்; பல்வகைப் பூக்களிலிருந்து வரும் தேனில் கால்வைத்து வழுக்கி விழுகின்றனர்:

**"கொடிறு தாங்கிய வாய்க்குழு நாரைவாழ்**
**தடறு தாங்கிய கூனிளம் தாழையின்**
**மிடறு தாங்கும் விருப்புடைத் தீங்கனி**
**இடறுவார் நறுந்தேனின் இழுக்குவார்"** (48)

கொடிறு = குறடு. நாரையின் வாய் குறடுபோல் உள்ளதாம். தடறு = தண்ணீர்க் கரை. தாழை = தென்னை மரம். தென்னைக்கு நீர்வளம் மிகுதியாகவேண்டும்; அதனால் தான், தடறு தாங்கிய தாழை எனப்பட்டது போலும்.

தென்னைக்கு, 'கூன் இளம் தாழை' என கூன், இளம் என்னும் இரண்டு அடைமொழிகள் கொடுத்துள்ளார். அடைமொழிகள் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவை. கூன் என்பது அகவை (வயது) முதிர்ந்தவர்க்கு உண்டாகக் கூடியது. பக்கத்தில் 'இளம்' என்னும் அடைமொழி உள்ளது. இளமையில் கூன் விழாதே. கூன் தென்னையை 'முடத் தெங்கு' (31) என்றார் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார். கூனாய் வளைந்த தெங்குதான் இருக்கும். வீட்டில் காய் விழச்செய்யாமல், அடுத்த வீட்டுப் பக்கம் வளைந்து போயிருப்பதால் அடுத்த வீட்டில் காயை உதிர்க்குமாம். கம்பர் பாடியுள்ள கூன் தெங்கு எத்தகையது?

தான் வளைந்து இருப்பதால் பறிப்பவர்க்கு எளிதாயிருக் கலாம் அல்லவா?

இயற்கை அறிவியலின்படி (Natural Science) நோக்கின், ஞாயிற்றின் வெயில் படாத இடத்திலுள்ள மரம் செடிகள், வெயில் அடிக்கும் பக்கம் நோக்கி வளைந்து செல்லும் என்னும் கருத்து கிடைக்கும். வெயிலின் உதவி கொண்டு தானே இலைகளின் வாயிலாக மாவுப்பொருளை உண்டாக்கிக் கொள்ளல் வேண்டும்? மரங்கள் அடர்த்தியா யிருந்தால் வெயிலுக்காக மரங்கள் வளைந்துதான் போகும். இதனால்தான் போதிய இடைவெளி விட்டுத் தென்னையை நடவேண்டும் என்கின்றனர்.

எனவே, கம்பர் 'கூன் தாழை' எனக் கூறியிருப்பதைக் கொண்டு, தென்னை மரங்களின் மிகுதியான வளத்தை அறியலாம். இந்தக் கூன் தாழை என்பதைக் கொண்டு தென்னையின் வளமிகுதியை இன்னொரு விதமாகவும் கூறலாம். தென்னையில் நீர் வளத்தால் காய்கள் மிகுதியாய்க் காய்த்திருப்பதால், சுமைதாங்க முடியாமல் கூன் வளைந்த தாகக் கூறலாம் அன்றோ? இன்னும் வேறு என்ன காரணம் இருக்குமோ! மிடறு=கழுத்து. மிடறு தாங்கும்=கழுத்து சுமந்து கொண்டிருக்கும். விருப்புடைத் தீங்கனி=யாரும் விரும்பக் கூடிய தித்திப்பான பழம். தீங்கனி என்பதிலுள்ள 'தீம்' என்பது தான், தேங்காய் என்பதில் 'தேம்' என உள்ளது. இளங்காயை இளநீர் என்பர். முற்றின காயைத் தேறியகாய் என்பர். கனி என்றோ பழம் என்றோ இப் போது தென்னார்க்காடு மாவட்டத்தில் வழங்குவதில்லை. பெரும் பாலான இடங்களிலும் இல்லை என்றே கூறலாம், ஆனால் இலக்கிய வழக்கில் உண்டு. 'காய் மாண்ட தெங்கின் பழம்' எனச் சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் கூறியுள்ளார்.

தேங்காயில் மூன்று கண்கள் இருப்பதால் தேங்காயை 'முக்கண்ணன்' என்றும் இளநீரை 'முக்கண்ணன் இளை யோன்' என்றும் சித்த மருத்துவத்தில் கூறியுள்ளனர்.

### இனிய தென் தமிழ்

சோழ நாட்டையும் மலை நாட்டையும் கடந்து 'இனிய தென் தமிழ் நாடு சென்று எய்தினார்' (52) தென் தமிழ் நாடு என்பது பாண்டிய நாடாகும்.

### முத்தும் முத்தமிழும்

பாண்டிய நாட்டைத் தேவர் உலகம் ஒக்கும் என்று கூறினால் அது தவறாகும். தேவர் உலகம் எந்த வகை யிலும் முத்தும் முத்தமிழும் கொடுக்கமுடியாது. ஆதலால் என்க:

**"அத்திருத்தகு நாட்டினை அண்டர் நாடு**
**ஒத்திருக்கும் என்றால் உரை ஒக்குமோ**
**எத்திறத் தானும் ஏழ்உலகும் புகழ்**
**முத்தும் முத்தமிழும் தந்து முற்றுமோ?"** (53)

திருத்தகு நாடு = பாண்டிய நாடு. அண்டர் நாடு = தேவர் உலகம். பாண்டிய நாடு தரும் முத்தையும் முத்தமிழையும் ஏழ் உலகும் போற்றுமாம். முத்துக் குளிப்பது பாண்டிய நாட்டுக் கடற்கரையில் என்பது தெரிந்ததே. இங்கே, 'தொண்டை நாடு சான்றோர் உடைத்து-சோழநாடு சோறு உடைத்து-சேரநாடு வேழம் (யானை) உடைத்து-பாண்டியநாடு முத்து உடைத்து' என்னும் முன்னோர்மொழி ஒப்பு நோக்கத்தக்கது.

பாண்டிய நாட்டு மதுரையில் சங்கம் அமைத்து முத்தமிழை வளர்த்தனர் என்பது பழைய செய்தி. ஔவையார் நல்வழிக் காப்புச் செய்யுளில், 'சங்கத்தமிழ் மூன்றும் தா' என்று கூறியுள்ளது ஈண்டு எண்ணத்தக்கது.

'ஏழ் உலகு புகழ் முத்து' என்றார். உலக நாடுகளுள் பல பாண்டிய நாட்டு முத்துகளை வாங்கிச் சென்றமை வரலாறு கண்ட உண்மை.

'ஏழ் உலகு புகழ் முத்தமிழ் என்றார் கம்பர். ஞான சம்பந்தர் 'ஞாலம் மிக்க தண்தமிழ்' (558) என்றார், சேக்கிழார் 'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' என்றார். பாரதியார்,

**''வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழிய வே**
**ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி**
**இசைகொண்டு வாழிய வே**
**சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்**
**துலங்குக வையக மே**
**வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து**
**வளர்மொழி வாழிய வே''** (23)

என்று புகழ்ந்தார். இத்தகைய 'தென்தமிழ் நாட்டில் எங்கணும் சென்று நாடித் திரிந்து கண்டிலர்' (55)- பின்னர் அங்கிருந்து மயேந்திரமலையை அடைந்தனர் வானரர்கள்.

# 15. சம்பாதிப் படலம்

சம்பாதி என்றால், நன்றாகப் பறப்பவன் என்று பொருளாம். இவன் கழுகு அரசனாகிய சடாயுவின் அண்ணனாம். இனைப் பற்றிய செய்திகள் கூறும் படல மாதலின் இது இப்பெயர் ஏற்றது.

**அலைகளின் அழைப்பு**

மயேந்திர மலையை அடைந்த வானர மறவர்கள், அருகிலுள்ள தென்கடலை நோக்கினர். அந்தக் கடல் பெரு முழக்கம் செய்து, விண்ணளாவ அலைகளாகிய கைகளை நீட்டி 'சீதை இலங்கையில் இருக்கிறாள்-எனவே இப்பக்கம் வந்து தேடுவீராக' எனக் கூறி இவர்களை அழைப்பது போன்று காணப்பட்டதாம்.

> **''மழைத்த விண்ணகம் எனமுழங்கி, வான்உற**
> **இழைத்த வெண்திரைக் கரம்எடுத்து, இலங்கையாள்**
> **உழைத்தடங் கண்ணிஎன்று உரைத்திட்டு ஊழின்வந்து**
> **அழைப்பதே கடுக்கும் அவ்ஆழி நோக்கினார்''** (1)

மழை பெய்யும் வானம்போல் கடல் முழங்கியதாம்; வெண்மையான அலைகளை வானம் பொருந்த உயர்த்திய தாம். உழை = மான். மான்கண்போன்ற கண்ணை உடைய சீதை இலங்கையில் உள்ளாள் என 'கண்ணி இலங்கையாள்' என்பதற்குப் பொருள் கொள்ளல்வேண்டும். அலைமேலே எழுந்து பிறகு பின் நோக்கிச் செல்கின்றது. கையால் அழைப்பவர்கள், கையை மேலே தூக்கி நீட்டிப் பிறகு பின்பக்கமாக வளைந்து அழைப்பது வழக்கம். அலையாகிய கையின் செயலும் அத்தகைத்தே. ஊழின் வந்து அழைப்பது

= முறைப்படி வந்து அழைப்பது. இங்கே 'வந்து' என்னும் சொல் நோக்கத்தக்கது. விருந்தினரை அழைப்பவர்கள், உள்பகுதியிலிருந்து விருந்தினரை நோக்கி 'வந்து' தானே அழைப்பார்கள்? அதேபோல, அலையும், கடலின் உள்புறத்தில் தோன்றிக் கரையை நோக்கி 'வந்து' உள்பக்கமாக மடிந்து அழைக்கின்றதாம்.

புதியவர் ஒருவர் ஓர் ஊருக்குச் சென்றால், ஊரின் முகப்பில் கட்டப்பட்டுள்ள துணிக்கொடி, அவரை 'வருக வருக' என அழைப்பதுபோல் அசைவதாகவோ அல்லது 'வராதே வாரதே' என விரட்டுவது போல் அசைவதாகவோ சில இலக்கியங்களில் புனையப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால், இங்கே கடல் பகுதியாயிருத்தலால், துணிக்கொடிக்குப் பதிலாகக் கடல் அலையை வைத்துக் கம்பரின் எழுத்தாணி விளையாடியிருக்கிறது.

**வானரர்களின் தவிப்பு**

பல பக்கங்களிலும் அனுப்பப்பட்ட வானரர்கள் சீதையைத் தேடிக் காணாமையால் முன் குறித்தபடி அனைவரும் மயேந்திர மலைக்கு வந்து ஒன்று திரண்டனர். அவர்கள், சுக்கிரீவனின் ஆணையையும் குறித்த நாளில் நிறைவேற்றவில்லை; இந்நிலை நீடித்தால் இராமனும் துயர் தாங்காது இறந்து படுவான்; எனவே, தாமும் வடக்கிருத்தலாகிய அருந்தவம் புரிந்து உயிர் விடலாமா? அல்லது நஞ்சருந்தி இறந்து போகலாமா என்றெல்லாம் கூறித் தம் உயிர்க்கு முடிவு தேடலானார்கள்.

**"அருந்தவம் புரிதுமோ அன்னது அன்றெனின்**
**மருந்து அருநெடுங்கடு உண்டு மாய்துமோ**
**திருந்தியது யாதுஅது செய்து தீர்தும்என்று**
**இருந்தனர் தம்உயிர்க்கு இறுதி எண்ணுவார்"** (5)

உயிர்விட இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று உண்ணாது உயிர் போகும் வரை வடக்கு நோக்கியிருந்து தவம் செய்தால் தானாக உயிர்போய் விடும். மற்றொன்று தற்கொலை, - அதாவது நஞ்சு உண்டு இறத்தல். கடு = நஞ்சு. நெடுங்கடு = மிக்க வலிமை வாய்ந்த - அதாவது விரைவில் உயிர் போக்கக் கூடிய நஞ்சு. மருந்து அரு = மருந்து இல்லாத - அதாவது, அந்த நஞ்சை உண்டுவிடின், பிறகு அதைப் போக்குவதற்கு மருந்தே கிடையாது; அத்தகைய நஞ்சு. கடமையை முடிக்காமல் உயிர் வாழ்வதனினும் இறப்பதே மேல் என அவர்கள் எண்ணியது அவர்களின் கடமை உணர்வைக் காண்பிக்கிறது.

**அங்கதன் சொன்னது**

செய்வோம் என்று உறுதி கூறியபடி செய்து முடிக்க வில்லை. இதைப் போய் விரைவில் இராமனுக்குத் தெரிவிக்கும் துணிவும் நமக்கில்லை. இனித் தேடிக் கண்டு பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையும் இல்லை. இதுதான் நட்புக்கு அழகோ - என்று அங்கதன் கூறினான்:

**"செய்தும் என்று அமைந்தது செய்துதீர்ந் திலம்**
**நொய்து சென்று உற்றது நுவலகிற் றிலம்**
**எய்தும் வந்து என்பதோர் இறையும் கண்டிலம்**
**உய்தும் என்றால் இதுஓர் உரிமைத் தாகுமோ"** (8)

ஒன்றும் செய்யாது நாம் உயிர் வாழ்வது நட்புக்கு அடையாளமாகாது - என்றான். அது கேட்ட கரடி அரசனான சாம்பவான், அங்கதனே! நாங்கள் இறந்து விடலாம்; ஆனால் நீ இருக்க வேண்டும் என்றான். அதற்கு அங்கதன் கூறுவான்:

**முதலில் நான்**

வானர மறவர்கள் பழிக்கு அஞ்சி உயிர் விட்டும், அங்கதன் மட்டும் உயிரோடு இருக்கலாமா என உலகோர் கூறுமுன் யான் முதலில் மாளுவேன் என்றான் அங்கதன்:

**''சான்றவர் பழி உரைக்கு அஞ்சித் தன்னுயிர்**
**போன்றவர் மடிதரப் போந் துளான் என**
**ஆன்றபேர் உலகுளோர் அறைதல் முன்னம் யான்**
**வான் தொடர்குவன் என மறித்தும் கூறுவான்''** (13)

*தன் உயிரை ஒத்த மற்றவர்கள் பழிக்கு அஞ்சி இறந்து விட்டனர்; ஆனால் அங்கதன் பழிக்கு அஞ்சாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று ஆன்றோர்கள் கூறும் முன் தான் இறந்துவிட எண்ணுகிறான் அங்கதன்.*

*இக்காலப் போர் முறைக்கும் அக்காலப் போர் முறைக்கும் உள்ள வேற்றுமை இங்கே நன்கு புலப்படு கின்றது. இக்காலத்தில் படைத் தலைவர்கள் பாதுகாப்பாக ஓரிடத்தில் தங்கியிருப்பர்; படை மறவர்களே போர்க்குச் செல்வர் - சென்றவர் செத்துப் போதலும் உண்டு. ஆனால், அக்காலத்தில், படைத் தலைவனாகிய அங்கதன் தான் முதலில் உயிர் இழக்கத் துணிகிறான். திறமை உடையவர் களே மற்றவரை வழி நடத்த முடியுமாதலின், தலைவர்கள் முதலில் போகாமல் இருப்பதும் பொருத்தமே.*

### அனுமனின் அறிவிப்பு

*இவ்வாறாக அங்கதனும் சாம்பவானும் உரையாடிக் கொண்டிருந்தபொழுது, அனுமன் கூறலானான்: படைஞர்களே! மூன்று உலகங்களில் இன்னும் ஒன்றில்கூட நாம் முழுதும் தேடவில்லை. பாதாளத்தில், விண்ணில், மலை முகட்டில், வெளி அண்டத்தில் ஆகிய இடங்களி லெல்லாம் சென்று எப்படியாவது சீதையைக் கண்டு பிடித்து விட்டால், நாள் கடந்து விட்டதென்று நாயகன் சினவான். நான் பல இடங்கட்கும் இன்னும் சென்று தேடிச் சடாயு போல் இறத்தலும் தகும் - என்றான்:*

**''பின்னரும் கூறுவான் பிலத்தில் வானத்தில்**
**பொன்வரைக் குடுமியில் புறத்துள் அண்டத்தில்**
**நன்னுதல் தேவியைக் காண்டும் நாமெனில்**
**சொன்ன நாள்அவதியை இறைவன் சொல்லுமோ''** (20)

**"நாடுதலே நலம் இன்னும் நாடியத்**
**தோடலர் குழலிதன் துயரிற் சென்றுஅமர்**
**வீடிய சடாயுவைப் போல வீடுதல்**
**பாடலம் அல்லது பழியிற்றாம் என்றான்"** (21)

பிலம், வானம், மலை, அண்டம் எல்லாவற்றிலும் தேட வேண்டுமெனக் கூறினான். இவற்றுள் எங்கேயாவது ஓரிடத்தில் சீதை இருந்துதானே தீர வேண்டும். வெற்றி கிடைத்துவிடின் காலம் தாழ்ந்தது பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். அவதி = கால வரையறை.

கால எல்லையும் கவனிக்கப்பட வேண்டியதே. ஆங்கிலப் படை ஒன்று, ஐரோப்பாவிலேயே கடலோரமாயிருக்கும் நாட்டின் ஒரு கரையில் தம் படையை இறக்க வேண்டும் எனத் தலைவன் காலமும் குறித்திருந்தானாம். காலம் காலை 8 மணியாகும். ஆனால் படை சிறிது காலம் தாழ்த்து இறக்கப்பட்டுப் போருக்குச் சென்று வெற்றியும் பெற்று விட்டதாம். பின் தலைவன், படைகளோடு காலம் தாழ்த்தது பற்றி ஆராய்ந்தானாம். இனி இத்தகைய காலத் தாழ்ப்பு என்றும் ஏற்படலாகாது என்று வலியுறுத்தினான். எவ்வளவு நேரம் காலத் தாழ்ப்பு ஏற்பட்டது எனில், ஒரே ஒரு மணித்துளி (நிமிட) நேரம்தானாம். அதாவது 8 மணி ஒரு நிமிடத்தில் படை இறங்கியதாம். இந்த ஒரு நிமிடக் காலத் தாழ்ப்பையும் தலைவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. (தலைவன் பெயரும் படை இறக்கப்பட்ட நாட்டின் பெயரும் நினைவில்லை. பொறுத்தருள்க.) இது நடந்தது உண்மை. பகைவரைப் பொறுத்தமட்டில் கால நீட்டிப்பு கூடாது என்பதனை,

**"வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்"** (674)

என்னும் குறட்பாவும் வலியுறுத்துகிறது. இந்த அடிப்படையில்தான், அனுமன் முதலியோர், காலத் தாழ்ப்பு கூடாது என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாயிருந்தனர் போலும்.

**சம்பாதியின் நிலைமை**

சடாயு இறந்து விட்டான் என அனுமன் வாயிலாக வந்த செய்தியைச் சம்பாதி கேட்டதும் உணர்ச்சி வயப் பட்டான்; வெகுண்டான்; நெஞ்சு படபடத்தான்; உடல் பதை பதைத்தான்; தம்பி இறந்ததற்காக அவன் அழுத கண்ணீர் கடலோடு சேர்ந்து கடல் நீரின் அளவைப் பெருக்கியதாம். அஞ்சத்தக்க உருவு கொண்டு வானரர் களை நோக்கி வந்தானாம். அவனைக் கண்டு வானரர்கள் அஞ்சினராம். அவன் அரக்கனாயிருப்பானோ என அஞ்சி அவனை நெருங்கியபோது, அவனது கண்ணீரைக் கண்டதும், அவன் கொடியவன் அல்லன் என அனுமன் உணர்ந்து கொண்டானாம்

**அண்ணன் சம்பாதி**

அனுமன் சம்பாதியை நோக்கி நீயார் என்று வினவச் சம்பாதி கூறலானான்: நான் முன்பிறந்த தமையன்; சடாயு என் பின் பிறந்த தம்பி. அந்தோ அவனைப் பிரிந்து விட்டேன். உடன் பிறந்தவர்கள் இருப்பின், ஆகாத நன்மையும் உண்டோ என்று கூறினான்.

**"மின்பிறந் தாலென விளங்கு எயிற்றினாய்**
**என்பிறந் தார்க்கிடை எய்தலாய, என்**
**பின்பிறந் தான்துணை பிரிந்த பேதையேன்**
**முன்பிறந் தேன்என முடியக் கூறினான்"** (31)

எய்தலாத = அடைய முடியாதவை (வினையால் அணையும் பெயர்). 'தம்பியுளான் படைக்கு அஞ்சான்' என்பது முன்னோர் மொழி. "எம்பியை ஈங்குப் பெற்றேன்

என் எனக்கு அரியது என்றான்'' (1760) என்பது சீவக சிந்தாமணிப்பா.

**சம்பாதியின் பிரிவுத்துயர்**

சடாயு இராவணனால் கொல்லப்பட்டான் என அனுமன் கூற அறிந்து சம்பாதி புலம்பலானான்: தம்பியே ஞாயிற்றின் வெப்பத்தால் சிறகுகளை இழந்து வருந்தும் யான் இறந்திருக்கலாம். ஆனால் இளையவனான நீ இறந்தது என்ன முறையாகும்.

நான்முகன் இன்னும் உள்ளான். மண்ணுலகமும் விண்ணுலகமும் இன்னும் உள்ளன. அறமும் இன்னும் உள்ளது. கற்பம் என்னும் காலமும் இன்னும் உளது. ஆனால் நீ மட்டும் இல்லாமல் இறந்து போனது எப்படியோ?

**''இளையா நீள்சிறகு இன்றி வெந்துகத்**
**தளையானேன் உயிர் போகத் தக்கதால்**
**வளையா நேமியன் வன்மைசால் வலிக்கு**
**இளையானே இது என்ன மாயமோ''** (34)

**''மலரோன் நின்றுளன் மண்ணும் விண்ணும்உண்டு**
**உலையா நீடறம் இன்னும் உண்டரோ**
**நிலையார் கற்பமும் நின்றது இன்றுநீ**
**இலை யானாய் இது என்ன தன்மையோ?''** (35)

ஞாயிற்றின் வெப்பம் தாளாமல் ஒருமுறை தம்பி சடாயு வருந்திய போது, தமையன் சம்பாதி தன் சிறகு களை விரித்துத் தம்பியை அடக்கிக் கொண்டு காத்துத் தன் சிறகுகளை வேகச் செய்து கொண்டான். அதனால் தான், சிறகுகளை இழந்து வருந்தும் தான் இறந்திருக்க லாம் - தம்பி சயாயு இறந்திருக்க வேண்டியதில்லை என வருந்துகின்றான். வளையா நேமியன் = ஞாயிறு. வன்மை சால்வலி = வலிமை மிக்க ஞாயிற்று வெப்பத்தின் கொடுமை.

உலகியலில், ஒருவர், தமக்கு மிகவும் நெருக்கமானவர் இறந்துவிடின், இறந்தவரை ஒத்த மற்றையோரைப் பார்க்கும் போதெல்லாம், ஐயோ, இவர்கள் எல்லோரும் இருக்கின்றார்களே - நம்மவர்தான் இறந்து விட்டார் என எண்ணி நோவதுண்டு. அதே போல, சம்பாதியும், உலகில் எல்லாம் இருக்கும் போது என் தம்பி சடாயு மட்டும் இறந்து விட்டானே என வருந்துகிறான்.

**சடாயு இறந்த வரலாறு**

வருந்திய சம்பாதியை அனுமன் ஆறுதல் மொழி கூறித் தேறுதல் செய்தான். பின் சம்பாதி, தன் தம்பி இறந்தது எவ்வாறு என வினவினான். அதுபற்றி அனுமன் கூறினான்: இராமன் மனைவி சீதையை இராவணன் தூக்கிச் சென்றான்—அறமே உருவான சடாயு அதனைக் கண்டு சீதையை விடுவிக்கச் சொன்னான். விடாததால் இருவரும் போர் புரிந்தனர், சடாயு இராவணனது தேரைக் குலைத்து அவனுடைய தோள்களையும் கிழித்தான். வெற்றுப் படைக் கலங்களால் சடாயுவை வெல்ல முடியாது என்பதை உணர்ந்த இராவணன், தேவர்கட் கெல்லாம் தேவனான சிவன் தந்த வாளால் சடாயுவை வெட்டி உயிர் இழக்கச் செய்தான்-என்று அனுமன் கூறினான்:

**"சீறித் தீயவன் ஏறு தேரையும்**
**கீறித் தோள்கள் கிழித்து அழித்தபின்**
**தேறித் தேவர்கள் தேவன் தெய்வவாள்**
**வீறப் பொன்றினன் மெய்ம்மையோன் என்றான்"** (42)

தேவர்கள் தேவன் = சிவன். வைணவநூல் எனப்படும் இராமாயணநூலில், கம்பர் சிவனைத் 'தேவர்கள் தேவன்' என்று கூறியிருப்பது நடுவுநிலைக்குச் சான்றாகும்.

**சம்பாதியின் பாராட்டு**

சம்பாதி தன் தம்பி சடாயுவின் இறப்பைப் பாராட்டு கின்றான்: உண்மையாய் நட்பாடல் வல்ல இராமனுக்காக என் தம்பி உயிர் விட்டது மிகவும் நன்று என்று கூறினான்; கடலெனப் பெருக்கெடுக்கத் தொடங்கிய கண்ணீரை மறைத்துக்கொண்டான்.

> **"விளித்தான் அன்னது கேட்டு மெய்ம்மையோய்**
> **தெளித்து ஆடத்தகு தீர்த்தன் மாட்டுஉயிர்**
> **அளித்தானே அதுநன்று நன்று எனாக்**
> **களித்தான் வாரி கரந்த கண்ணான்"** (43)

மெய்ம்மையோய் = அனுமனே. தீர்த்தன் = தூய இராமன். கண்ணினான் = கண்ணீரை மறைத்த சம்பாதி. நல்ல பயனுக்காக உயிர் தந்தது நன்று நன்று எனப் பாராட்டுகிறான். நன்றுநன்று = அடுக்குத் தொடர். பாராட்டினாலும், பிரிவைத் தாங்க முடியாமையால் எழும் கண்ணீரை மறைத்தும் கொள்கிறான்.

இங்கே சிலம்புப் பகுதி ஒன்று நினைவிற்கு வருகிறது. மாதரி வீட்டில் உணவு கொண்ட பின், கோவலன், கண்ணகியை நோக்கி, என் கண்ணே கண்ணகி! நான் கடைத்தெருவிற்குச் சென்று சிலம்பை விற்று வருவேன் - நீ வருந்தற்க என்று கூறி, தனித்து விட்ட கண்ணகியைத் தழுவுகிறான்; அப்போது வெளிவரத் தொடங்கிய கண்ணீரை மறைத்துக் கொள்கிறான். இதனை 'வருபனி கரந்த கண்ணனாகி' என்னும் பாடல் பகுதியால் அறியலாம். இராமாயணத்தில் சடாயு இறந்தான். சிலம்பில் கோவலன் இறக்கப் புறப்பட்டான்.

மேலும் சம்பாதி கூறுகிறான்: இராமன் பத்தினியாகிய சீதையை மீட்கத் தம்பி உயிர் துறந்தான். இதை உண்மை யில் உயிர் துறந்ததாகக் கூற முடியாது. புகழுடம்போடு

இன்றும் இருக்கிறான் – என்றும் இருப்பான் என்றே கூற வேண்டும்.

**"பைந்தார் எங்கள் இராமன் பத்தினி**
**செந்தாள் வஞ்சி திறத்து இறந்தவன்**
**மைந்தார் எம்பி வரம்புஇல் சீர்த்தியோடு**
**உய்ந்தான் அல்லது உலந்தது உண்மையோ?"** (44)

வஞ்சி = வஞ்சிக்கொடி போன்ற சீதை. எம்பி = தம்பி சடாயு. சீர்த்தி = புகழ். உய்ந்தான் = உயிர் பிழைத்தான். உலந்தது = இறந்தது. இத்தகைய இறப்பை, ஊன் உடம்பு ஒழிந்ததே தவிரப் புகழ் உடம்புடன் இருப்பதாகக் கூறுதல் மரபு. இதைத்தான்

**"உளதாகும் சாக்காடு"** (235)

என்றார் வள்ளுவர்.

**"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"** (165-1, 2)

என்பது புறநானூறு. புகழை நிலை நிறுத்தி மாண்டவர்கள் என்றும் நிலைத்திருத்தலை உடையவராம். மன்னுதல் = நிலைத்திருத்தல்.

மேலும் சம்பாதி கூறுகிறான்: அறக்கடவுள் போன்ற இராமன்பால் கொண்ட அன்பும் நட்பும் என்றும் இருப்பதோடு தனது உயிரும் என்றும் இருக்கவும் உடம்பை விட்டுப் பிரிந்தான். இது எல்லார்க்கும் கிடைக்காத பெரும் பேறாகும். இத்தகையோர்க்கு இறப்பு ஓர் இழப்பும் ஆகாது. இத்தகைய இறப்பைவிட இன்பம் தரத்தக்கது வேறு யாது? ஒன்றும் இல்லை.

**"அறம் அன்னானுடன் எம்பி அன்பினோடு**
**உறவு உன்னா உயிர்ஒன்ற ஓவினான்**
**பெற ஒண்ணாத தோர்பேறு பெற்றவற்கு**
**இறவு என்னாம் அதின்இன்பம் யாவதோ?"** (45)

அறம் அன்னான் = இராமன். உறவு உன்னா = உறவை உன்னி (எண்ணி). உன்னா = செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். யாருக்கும் சாதலைப் போன்ற– இனிமை தராத – துன்பம் தரத்தக்க நிலைமை வேறு ஏதும் இல்லை. ஆனால், அந்தச் சாவுகூட, பிறர்க்குத் தக்க நேரத்தில் தக்க உதவி செய்ய முடியாதபோது இனியதாகும் – செத்தும் போகலாம் – என்னும் கருத்துடைய -

**"சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்**
**ஈதல் இயையாக் கடை"** (230)

என்னும் குறள் சுவைத்து மகிழ்ந்து இங்கே ஒப்புநோக்கத் தக்கதாம்.

**சம்பாதி வரலாறு கூறல்**

வானரர்கள் சம்பாதியின் வரலாற்றைக் கூறுமாறு கேட்க அவன் சொல்லத் தொடங்கினான். யானும் என் தம்பி சடாயுவும் வானுலகம் வரையும் பறந்து செல்ல வேண்டும் எனத் துணிந்து பறந்து கொண்டிருந்தோம். இதைப் பொறுக்காத ஞாயிறு எங்கள் மேல் கொடிய வெப்பத்தை வீசினான். தம்பி சடாயு தாங்க முடியாமல் வருந்தினான். உடனே யான் என் சிறகுகளை அகல விரித்து அவனை மறைத்துக் காத்தேன். ஆனால் என் சிறகுகள் இரண்டும் தீய்ந்து போயின. பின்னர் யான் வேண்ட, இராமன் மனைவியாம் சீதையைக் கண்டு வரச் செல்லும் வானரர்கள் 'இராமன்' என்னும் பெயரைப் பலமுறை கூறக் கேட்பாயே யானால் உன் சிறகுகள் மீண்டும் முளைக்கும் என்று வைவுக்கு (சாபத்திற்கு) உய்வு தந்தான். சிறகு இழந்ததால், கழுகு அரசப் பதவியை யான் என் தம்பிக்கு அளித்தேன். என் தம்பியும் மறுக்க அஞ்சி அரசை ஏற்றுக் கொண்டான்– என்று கூறினான் சம்பாதி:

**"எம்பியும் இடரின் வீழ்ந்தான்**
**ஏயது மறுக்க அஞ்சி**
**அம்பரத்து இயங்கும் யாணர்க்**
**கழுகினுக்கு அரச னானான்**
**நம்பிமீர் ஈது எம்தன்மை**
**நீர்இவண் நடந்த வற்றை**
**உம்பரும் உவக்கத் தக்கீர்**
**உணர்த்துமின் உணர என்றான்"** (57)

*வானரர்கள் இராமன் பெயரைப் பலமுறை கூறச் சிறகுகள் முளைக்கப் பெற்ற சம்பாதி, தம் தம்பி கழுகுகட்கு அரசனான கதையை இப்பாடல் வாயிலாகத் தெரிவித்துள்ளான். பார்க்கப் போனால், இராமாயண வரலாற்றில், பெரும்பாலும், அண்ணனது அரசைத் தம்பி யாண்டதான செய்தி பரவலாகக் கூறப்பட்டுள்ளது. இராமனது அரசை அவன் தம்பி பரதனும், வாலியின் அரசை அவன் தம்பி சுக்கிரீவனும், சம்பாதியின் அரசை அவன் தம்பி சடாயுவும், இராவணனது அரசை அவன் தம்பி வீடணனும் ஆண்டதாக வரலாற்றில் காணக் கிடப்பது வியப்பா யுள்ளது.*

**சீதை இருக்கும் இடம்**

*தன் வரலாறு கூறிய சம்பாதி, வானரரின் வரலாற்றைக் கேட்டான். சீதையை இராவணன் எடுத்துச் சென்றான்; தென் திசைப் பக்கம்தான் போயிருப்பான் என எண்ணி இப்பக்கம் வந்திருக்கிறோம் என வானரர்கள் கூற, சம்பாதி தான் அறிந்தவற்றைக் கூறலானான்:*

*வானரர்களே! இராவணன் சீதையை எடுத்துக் கொண்டு இலங்கைக்குச் சென்றதை யான் பார்த்தேன். அவன் அவளைச் சிறைக்குள் வைத்துள்ளான். நீங்கள் இலங்கை செல்லின் காணலாம். ஆனால், இலங்கை இங்கிருந்து ஒரு நூறு ஓசனைத் தொலைவில் உள்ளது; அந்நாட்டுப் பக்கம்*

எமன் தன் பார்வையைச் செலுத்தவும் அஞ்சுவான்; இழி மகனான இராவணனின் சினமோ நெருப்புக்கும் நெருப்பாய் இருக்கக் கூடியது. நீங்களோ நற்பண்புடையவர்கள். அங்கே நீங்கள் அடைவது எவ்வாறு - என்றான் சம்பாதி.

> **"ஓசனை ஒருநூறு உண்டால்**
> **ஒலிகடல் இலங்கை, அவ்வூர்**
> **பாச வெங்கரத்துக் கூற்றும்**
> **கட்புலம் பரப்ப அஞ்சும்,**
> **நீசன் அவ்வரக்கன் சீற்றம்**
> **நெருப்புக்கும் நெருப்பு நீங்கள்**
> **ஏசறு குணத்தீர் சேறல்**
> **எப்பரிசு இயைவது என்றான்"** (60)

ஓசனை = ஒரு நீட்டல் அளவை. இப்பாடல் சொல்லுக்குச் சொல் சுவைக்கத் தக்கது. இலங்கை எளிதில் செல்லக்கூடியது அன்று - ஒலிக்கும் கடல் சூழ்ந்தது-கடலைக் கடப்பது எவ்வாறு? தொலைவோ ஒரு நூறு ஓசனை கடக்க வேண்டியது.

ஒரு என்பதை ஒரு தோற்றம் – சுமார் - என்னும் பொருளிலும் கொள்ளலாம். அவர் எப்போது இவ்விடம் வந்தார் என்று கேட்டால், ஒரு பத்து மணி இருக்கும் என்று சொல்லும் வழக்காற்றில் 'ஒரு' என்பது 'சுமார்' என்னும் பொருளில் உள்ளமை அறியலாம். ஒரு நூறு ஓசனை என்றதால், ஒரு தோற்றம் - சுமார் என்னும் பொருள் கொண்டு நூறுக்கு மேலும் இருக்கலாம் எனப் பொருள் செய்யவும் இடமுண்டு.

எமனும் அஞ்சுவானாம் – அவன் எப்பேர்ப்பட்டவன்? உயிர்களைப் பற்றி இழுக்கும் பாசக் கயிறு உடையவன் என்று கூறுவதோடு அமையாமல், எப்போதுமே ஓயாமல் பாசக் கயிறைக் கையிலே கொண்டவன் எனப்பட்டது.

உயிர் பறிக்கும் கையாதலின் வெம் கரம் - கொடிய கை எனப்பட்டது. இலங்கையைப் பார்க்க எமன் அஞ்சுவான் என வாளா கூறவில்லை; கட் புலம் பரப்புவதற்கும் அஞ்சு வானாம். கண் பொறி - அதனால் உணரப்படுவது புலம். கட்புலம் பரப்புதல் என்றால் தொலைப் பார்வை செலுத்துதல். அதாவது, தொலைவில் இருந்தபடி, இலேசாக அந்தப் பக்கம் பார்வையைத் திருப்புவதற்கும் அஞ்சுவான் என்பது கருத்து. அந்த அரக்கனோ பண்பில்லா நீசன். அவனது சீற்றமோ (சினமோ), எல்லாரையும் சுடும் நெருப்பையும் சுடத்தக்க நெருப்பாக எரிக்கக் கூடியது. அத்தகைய இடத்தில் நீங்கள் எவ்வாறு செல்ல முடியும்? இயைவது எப்பரிசு? என்று கேள்விக் குறியிடுகிறான் சம்பாதி.

## விளிவு இலாதீர்

மேலும் சம்பாதி கூறுகிறான்: நான் முகனோ, மாதொரு பாகனாகிய சிவனோ, பாம்பணையில் படுத்திருக்கும் திருமாலோ, காற்றோ கூட இலங்கைக்குள் புக முடியாது. அங்குள்ள காவல் அத்தன்மைத்து. எனவே, அழிவு இல்லாதவர்களே! உங்களுக்கு எது சரி - என்ன செய்யலாம் - எப்படிப்போகலாம் - என்றெல்லாம் மேலும் மேலும் நன்கு எண்ணி முடிவெடுத்துச் செல்வீராக - என்றான்.

**“நால்முகத்து ஒருவன் மற்றை**
**நாரியோர் பாகத்து அண்ணல்**
**பால்முகப் பரவைப் பள்ளிப்**
**பாம்பணைப் பரன் என்றாலும்**
**காலனுக் கேயும் சேறல்**
**அரிதுஇது காவல் தன்மை**
**மேல்உமக்கு உறுவது எண்ணிச்**
**செல்லுமின் விளிவு இலாதீர்”** (61)

ஒரு முகமோ இருமுகமோ இல்லை - நான்கு முகங்களை உடைய பிரமனாலும் சீதையை மீட்கச் செல்லமுடியாது. பெண்ணைப் பக்கத்திலேயே வைத்திருக்கும் சிவனாலும் சீதையாம் பெண்ணைச் சென்று மீட்க முடியாது. 'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பர் - அந்தப் பாம்பையே படுக்கையாக்கிக் கொண்டுள்ள திருமாலாலும் இயலாது,

அவ்வளவு ஏன்? எங்கும் புகக் கூடிய (காலும்) காற்றும் அங்கே புக முடியாது. கட்டுப்படுத்த முடியாதது - உலவிக் கொண்டேயிருப்பது என்னும் பொருளில் 'உலவை' என்னும் பெயர் திவாகரநிகண்டிலும், சரித்துக்கொண்டு (சஞ்சரித்துக் கொண்டு) இருப்பதால் 'சாரிகை' என்ற பெயரும், எப் போதும் இயங்கிக்கொண்டே இருப்பதால் 'சதாகதி' என்னும் பெயரும் சூடாமணி நிகண்டிலும் காற்றுக்குத் தரப் பட்டுள்ளன. வீமன் வாயு பகவானின் மகன் ஆதலால் 'சதாகதி மகன்' என்னும் பெயர் அவனுக்கு வில்லி பாரதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. வாயு என்னும் வட மொழிச் சொல்லுக்கே இயங்குவது என்பது பொருளாம்.

கால் என்பதே கூட செல்லுதல் என்னும் பொருளதே; பந்துக்குள்ளே காற்றை அடைத்துக் கட்டுப்படுத்துகிறோமே எனில், அது உண்மையான கட்டுப்படுத்தலாகாது - சிறு தொளை போட்டாலும் காற்று வெளியே வந்துவிடும் - எனவே, அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகவே கொள்ளப்படும். அத்தகைய காற்றும் இலங்கையுள் புக முடியாதாம். இலங்கையின் காவல் அத்தகைய தாம். நீங்கள் ஆராய்ந்து பார்த்துச் செல்ல வேண்டும் என்றான். 'விளிவு இலாதீர்' என விளித்துள்ளான். அதாவது, அழிவு - சாவு இல்லாதவர்களே என்பது பொருள். வீணாய்ச் சென்று சாக வேண்டா என அஞ்சியும் இரக்கப்பட்டும், சாவு இல்லாத வர்களே, என வாழ்த்துவதுபோல் சம்பாதி விளித்துள்ளான்.

**ஒருவர் ஏகுக**

மேலும் அறிவிக்கிறான் சம்பாதி; அப்படியே செல்லலாம் என்றாலும், நீங்கள் எல்லாரும் செல்லுதல் என்பது எளியது அன்று - மிகவும் அரிது. செல்லவல்லவர் யாரோ ஒருவர் இருப்பின் அந்த ஒருவர் மட்டும் சென்று, அங்கே மறைந்து உறைந்து, சீதைக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டி மீண்டும் வருவீராக. ஒருவரும் செல்ல வல்லீர் அல்லரேல், என் சொல்லைத் தெளிந்து நம்பி, நடந்தனவற்றையெல்லாம் இராமனிடம் சென்று சொல்லு வீராக - என்றான்.

**''எல்லீரும் சேறல் என்பது**
**எளிதன்று அவ்விலங்கை மூதூர்**
**வல்லீரேல் ஒருவர் ஏகி**
**மறைந்துஅவண் ஒழுகி வாய்மைச்**
**சொல்லீரே துயரை நீக்கித்**
**தோகையைத் தெருட்டி மீடிர்**
**அல்லீரேல் என்சொல் தேறி**
**உணர்த்துமின் அழகற்கு அம்மா!''** (62)

தோகை = சீதை. அழகன் = இராமன். அவ்வளவு காவல் உடைய இலங்கையில் ஒருவர் செல்லினும் மறைந்திருந்து செயலாற்றவேண்டும் என்றான். அவ்வாறே அனுமன் ஒருவன் மட்டும் சென்று மறைந்திருந்து செயலாற்றியது குறிப்பிடத்தக்கது. நீங்கள் வாய்மை பேசுபவர் ஆதலின், இராமனிடம் சென்று நடந்தன கூறுவீராக. ஒருவர் செல்லினும் வாளா திரும்பக் கூடாது. சீதையைக் கண்டு, துன்பப்படாதீர் என்று தேறுதல் கூறியும் நம்பிக்கை ஊட்டியும் வரவேண்டும்.

வீட்டிற்கு வந்த ஒருவர் திரும்ப வீட்டை விட்டுப் போகும்போது, 'போய் வருகிறேன்' என்றோ அல்லது

வாளா 'வருகிறேன்' என்றோ சொல்வது மரபு. 'போகிறேன்' என்று மட்டும் கூறின், அவ்வாறு சொல்லக்கூடாது - 'போய் வருகிறேன்' என்று சொல்லுங்கள் என்று அவருக்குச் சொல்லிக் கொடுப்பது வழக்கம். அவ்வாறே, சம்பாதி, 'ஒருவர் ஏகி - மீடிர்' என்று வாழ்த்துக் கூறியுள்ளான். மீடிர் என்றால், மீண்டு வருக என்று வாழ்த்தி அறிவித்த தாகும்.

பாடலின் இறுதியில் 'அம்மா' என்று கூறியுள்ளான். 'அம்மா' என்பதை இலக்கணத்தில் 'வியப்பு இடைச் சொல்' என்பர். துன்பமான சூழ்நிலையில் 'அம்மா' என்பதும் உண்டு. சம்பாதி, துன்பமான - கடினமான சூழ்நிலையை எண்ணிப் பெருமூச்சு விட்டவன்போல் 'அம்மா' என்றான் போலும்!

பின்னர் சம்பாதி அவ்விடத்தை விட்டு நீங்கி வான் வழியாகப் பறந்து சென்றுவிட்டான்.

# 16. மயேந்திரப் படலம்

மயேந்திர மலையில் இருந்து கொண்டு, இனிச் செய்ய வேண்டியவற்றைக் குறித்து வானரர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொள்வது பற்றிய படலம் இது. மகேந்திரப் படலம் என்றும் சில சுவடிகளில் பெயர் காணப்படுகிறது.

**உள்ளங்கை நெல்லிக்கனி**

சம்பாதி அறிவுரை கூறி வான்வழியாகப் பறந்து சென்ற பின்னர், வானரர்கள் தமக்குள் பின்வருமாறு உரையாடிக் கொள்கின்றனர். சம்பாதி பொய் கூறான்; அவன் சொல்லியவற்றைக் கொண்டு நடக்கவேண்டியதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிந்து கொண்டோம்; பிழைக்கும் வழி அறிந்தோம்; நன்கு எண்ணி நல்லது ஒன்றை விரைந்து செய்யவேண்டும்.

**"பொய்யுரை செய்யான் புள்ளரசு என்றே புகலுற்றார்**
**கையுறை நெல்லித் தன்மையின் எல்லாம் கரைகண்டாம்**
**உய்யுரை பெற்றாம் நல்லவை எல்லாம்உற எண்ணிச்**
**செய்யுமின் ஒன்றோ செய்வதை நொய்தில் செயவல்லீர்"**

(1)

'நன்றே செய்ம்மின் - நன்றும் ஒன்றே செய்ம்மின் - ஒன்றும் இன்றே செய்ம்மின் - இன்றும் இன்னே செய்ம்மின்' என்பது போன்ற கருத்து இப்பாடலில் பேசப்பட்டுள்ளது. கையுறை நெல்லி = கையிலே உள்ள நெல்லிக்கனி. நொய்தில் = விரைவில். சம்பாதியால் பெற்ற உறுதியான தெளிவுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி உவமையாக்கப் பட்டுள்ளது.

மேலும் உரையாடல்: சீதையைக் குறித்த காலத்தில் தேடிக்காண இயலாமையால் இறந்து போகலாம் - அல்லது - சுக்கிரீவனிடத்தில் சென்று நிலைமையைக் கூறிவிடலாம் என்று முதலில் எண்ணினோம்; இப்போதோ, இரண்டும் வேண்டா - எப்படியாவது இலங்கை சென்று அரக்கரைக் கொன்று ஆவன செய்வோம் என்னும் முடிவுக்கு வந்துள்ளோம்; கடல் கடந்து சென்று காரியம் முடிக்க வல்லார் யாவர் என யாராவது தேர்ந்தெடுத்துச் சொல்லுங்கள்.

**''மாள வலித்தோம் என்றும் இம்மாளா வசையோடு**
**மீளவும் உற்றேம் அன்னவை தீரும்வெளி பெற்றேம்**
**காள நிறத்தோடு ஒப்பவர் மாயக் கடல்தாவுற்று**
**ஆளும் நலத்தீர் ஆளுமின்எம் ஆருயிர் அம்மா''** (2)

வெளி = வழி. காளம் = நஞ்சு. காள நிறத்தோ டொப்பவர் = அரக்கர். இரண்டிற்கு இடையே வானரர்கள் சிக்கிக் கொண்டிருந்தனர். ஒன்று மாள்வது — மற்றொன்று மீள்வது. இப்போது இவ்விரண்டையும் தாண்டி வெளிவந்து விட்டமையால் 'வெளி' பெற்றதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆளுமையுடையவர் சென்று அரக்கரை வென்று எம் (மற்ற வர்களின்) உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று உரையாடிக் கொண்டனர்.

**சறுக்கியது சாக்கு**

சாம்பவன் சொல்லலுற்றான்; திருமால் நெடிய உருவம் எடுத்து உலகை அளந்த காலத்தில், அவர் விண்ணை அளந்தபோது, நான் அதைப் பறையறைந்து எல்லாத் திக்குகட்கும் தெரிவித்துக் கொண்டு சென்றபோது, மேரு மலை காலை இடறியதால் கால் ஊனம் உற்றேன். அதனால், என்னால் கடலைத் தாண்ட முடியாது; வேறு யாராவது இதைச் செய்க என்றான்.

**"வேதம் அனைத்தும் தேர்தர ஒட்டா ஒரு மெய்யன்**
**பூதலம் முற்றும் ஓரடிவைத்துப் பொலிபோழ்து யான்**
**மாதிரம் எட்டும் சூழ்பறை வைத்தேவர. மேரு**
**மோத விளைத்தே தாள் உலைவுற்றேன் விறல் மொய்ம்பீர்"**
**(4)**

*'சறுக்கியது சாக்கு' என்பர். அவ்வாறு சாம்பவன் கடமையினின்று தன்னைக் கழற்றிக் கொண்டான். அதே நேரத்தில், மற்றவர்களைக் குறிப்பிட்டு, நீங்கள் வெற்றி பெறத்தக்க வலிமை உடையவர்கள் எனப் புகழ்ந்தான் (அதாவது ஐஸ் வைத்தான்). 'விறல் மொய்ம்பீர்' என்பது தான் அது.*

**நீலன் - அங்கதன்**

*நீலன் முதலாய வீரர்கள், எங்களால் கடலைத் தாண்டிக் கடக்க முடியாது எனத் தெளிவாய்க் கூறி விட்டனர். வீராதி வீரனான அங்கதனோ, நான் கடலைத் தாண்டிச் செல்ல முடியும்; ஆனால் மீண்டு வர முடியாது எனத் தன் 'கை வரிசை'யைச் சொல்லி விட்டான்.*

**"நீலன் முதற்பேர் போர்கெழு கொற்ற நெடுவீரர்**
**சால உரைத்தார் வாரி கடக்கும் தகவின்மை;**
**வேலை கடப்பேன் மீள மிடுக்ககின்று எனவிட்டான்**
**வாலி யளிக்கும் வீர வயப்போர் வசையில்லான்" (6)**

*எல்லாராலும் கடல் கடக்க முடியாது என்பது உண்மையே. அங்கதனோ, நான் சென்று விடுவேன் - ஆனால் உயிரோடு மீண்டுவரும் நம்பிக்கை எனக்கு இல்லை என ஒளிக்காமல் வெளிப்படையாகச் சொல்லி விட்டான். 'நான் சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று மோதுவேன்' என்று ஓரிடத்தில் ஒருவர் சொன்னார்; 'சிங்கத்தின் குகையிலே சென்று சிங்கத்தோடு மோதலாம் - ஆனால் உயிரோடு திரும்பி வரவேண்டுமே' என மற்றொருவர்*

கூறினார். அங்கதன் கதையும் இதுவேதான். இவ்வாறு ஒவ்வொருவரும் கூறிச் சுமையை இறக்கி வைத்து விட்டனர். இங்கே ஒரு சிறுகதை நினைவுக்கு வருகிறது.

அண்ணன் தம்பிகள் நால்வர் - அவர்களுள் மூவர் துடுக்கானவர்கள் - இளையவனான ஒருவன் மட்டும் தொடை நடுங்கி. துடுக்கான மூவரும் எதிரியோடு போரிட்டுக் கொண்டிருந்தனர். தொடை நடுங்கி தன் அண்ணன்மாரை நோக்கி, 'அண்ணே - அண்ணே!' அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் - நானும் அந்த எதிரியை ஓர் அடி அடித்துப் பார்க்க ஆசைப்படுகிறேன் என்றானாம். இந்த மாதிரியை நோக்கி வானரர்களின் உரையாடல் போய்க் கொண்டிருந்தது. படைத்தலைவனான அங்கதனே 'கையை விரித்து' விட்டான் - அனுமனைத் தவிர்த்த மற்றவர் அனைவரும் 'கையைக் கழுவி' விட்டனர்.

**தேர்ந்தெடுப்பு**

சாம்பவன் எண்ணிப் பார்த்தான். அனுமனே இதற்கு ஏற்றவன் எனத் துணிந்தான். காரணம்: உருசிய முக மலையில் சுக்கிரீவன் மறைந்து இருந்தபோது, இராம இலக்குவர் அங்கே வர, அனுமனே துணிந்து சென்று அவர்களோடு தொடர்பு கொண்டான்; மேலும், பின்பற்ற வேண்டிய முறைகளையெல்லாம் பின்பற்றிச் சுக்கிரீவனுக்கு வெற்றி தேடித் தந்து அரசனாகவும் ஆகச் செய்தான்.

**''ஆரியன் முன்னர்ப் போதுற வுற்ற அதனானும்**
**காரியம் எண்ணிச் சோர்வற முற்றும் கடனானும்**
**மாருதி ஒப்பார் வேறிலை என்னா அயன்மைந்தன்**
**சீரியன் மல்தோள் ஆண்மை தெரிப்பான் இவைசெப்பும்''**

(8)

ஆரியன் = இராமன். அயன் மைந்தன் = பிரமனின் மகனாகிய சாம்பவன். சீரியன் = அனுமன். தெரிப்பான் =

தெரிவிப்பதற்காக - பான் விகுதி ஏற்ற வினையெச்சம். அனுமனின் தோள் வலிமையை அறிவிப்பதற்காக, அவன் முன் செய்த இரண்டு துணிவான செயல்கள் முதல் இரண்டு அடிகளில் கூறப்பட்டுள்ளன.

**அனுமனின் ஆற்றல்**

சாம்பவன் அனுமனை நோக்கிப் பின்வருமாறு கூறிக் கடலைத் தாண்டுவதற்கு ஆயத்தப்படுத்தலானான்.

பிரமன் இறந்தாலும் இறவாத ஆற்றலைப் பெற்றுள்ளவனே! நல்ல நூல்களை எல்லாம் கற்றுணர்த்தும் அறிவினோய்! எமனும் அஞ்சக் கூடிய சினமும் வலிமையும் உடையவனே! கடமை தவறாதவனே! சிவனைப்போல் போர் புரியும் ஆற்றல் உடையவனே!

**"மேலை விரிஞ்சன் வீயினும் வீயாமிகை நாளீர்**
**நூலை நயந்து நுண்ணிது உணர்ந்தீர் நுவல்தக்கீர்**
**காலனும் அஞ்சும் காய்சின மொய்ம்பீர் கடன்நின்றீர்**
**ஆலம் நுகர்ந்தா னாமென வெம்போர் அடர்கிற்பீர்"** (9)

விரிஞ்சன் = பிரமன். என்றும் இறவாமை (சிரஞ்சீவித் துவம்) பெற்றவன் அனுமன். மிகை நாள் = மிகுதியான வாழ்நாள். நூலை நன்கு கற்றிருத்தலோடு அமையாது, கற்றதைப் பிறர்க்கு நன்கு உணர உரைக்கும் ஆற்றலும் உடையவன் அனுமன். ஈண்டு,

**"இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்"** (650)

என்னும் திருக்குறட்பா ஒப்பு நோக்கத் தக்கது. ஆலம் நுகர்ந்தான் = நஞ்சு உண்ட சிவன். சிவன் அழித்தல் கடவுளாதலின், சிவனை அனுமனுக்கு ஒப்பாக்கினார்.

"நெருப்பு, நீர், காற்று ஆகியவற்றுள் எதனாலும் அழிவு இல்லீர். தெய்வப் படையாலும் அழியீர். உமக்கு

ஒப்பு நீரே. இந்தக் கடல் என்றென்ன! அண்டத்திற்கு அப்பாலும் குதிக்க வல்லீர்'' (10)

''நல்லவை தீயவை நாடிச் செய்ய வேண்டிய செயலைத் தேர்ந்தெடுத்துச் சொல்ல வல்லீர். நீரே எதையும் துணிந்து செய்யத் தக்கவர். இலங்கைக்குச் செல்லவும் வல்லீர் - கொல்லவும் வல்லீர் - திரும்பி வரவும் வல்லீர்.'' (11)

''மேரு மலைக்கும் மேலே செல்லத்தக்க பெரிய உருவம் கொள்ளவும் வல்லீர்! மழைத்துளிகளின் நடுவே நனையாமல் புகுந்து வரக்கூடிய சிறிய உருவம் எடுக்கவும் வல்லீர். இந்த நிலத்தையே தூக்கும் வலி உடையீர். பழி இல்லாதவர். ஞாயிற்றினிடம் சென்று ஒரு கையால் தொடவல்லீர்.'' (13)

போர் புரிதற்கு உரிய காலம் அன்றெனில் அடங்கி யிருப்பீர்! போர் வந்து விட்டாலோ ஆண் சிங்கம் போன்று முனிந்து பொருது வெல்ல வல்லீர்:

> **''அடங்கவும் வல்லீர்காலம் அதுஅன்றேல், அமர்வந்தால்**
> **மடங்கல் முனிந்தால் அன்ன வலத்தீர்''** (17)

> **''கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
> **குத்துஒக்க சீர்த்த இடத்து''** (490)

என்னும் குறட்பா ஈண்டு ஒப்புநோக்கற் பாற்று.

அனுமனே! இலங்கைக்கு ஏகி அரக்கனைக் கொன்று சீதையை மீட்டு எங்கள் உயிரையும் இராமனது உயிரையும் காப்பாயாக. எல்லாப் பெருங்கடலையும் தாவக் கூடிய நீர், இந்தச் சிறிய கடலைத் தாண்டத்தக்க ஆற்றல் உடையீர்; அதனால் விரைந்து செயலாற்றுக - என்று கூறிச் சாம்பவன் அனுமனை அனுப்பலானான்.

> **''ஏகுமின் ஏகி எம்முயிர்நல்கி இசை கொள்ளீர்**
> **ஓகை கொணர்ந்து உம்மன்னையும் உய்யும்படிச் செய்வீர்**
> **சாகரம் முற்றும் தாவிடும்நீர் இக்கடல் தாவும்**
> **வேகம் அமைந்தீர்என்று விரிஞ்சன் மகன் விட்டான்''** (19)

51 புறநானூறு - 51 - 1, 2, 3 - ஐயூர் முடவனார்
54 தொல்காப்பியர் - மெய்ப்பாட்டியல் - 4
55 Sir Walter Scott - Lockharts (Author)
55 சிலப்பதிகாரம் - 13 : 11, 12, 13
56 பிரபுலிங்க லீலை - வசவண்ணர் கதி - 11 - சிவப்பிரகாச அடிகளார்
59 அப்பர் தேவாரம் - பொது
59 அப்பர் தேவாரம் - கோயில் திருப்பதிகம் - 2 - 4
59 சுந்தரர் தேவாரம் - திருமழபாடிப் பதிகம் - 1
59 சுந்தரர் - திருத்தொண்டத் தொகை
63 புறநானூறு - 178 - 10 - 22 - ஊன் பொதி பசுங்குடையார்
65 கலித்தொகை - 42 : 22 - கபிலர்
65 கலித்தொகை - 39 - 9 - கபிலர்
66 சீவக சிந்தாமணி - 1198 - திருத்தக்க தேவர்
66 திருக்குறள் - 783, 1121
66 ஞானசம்பந்தர் தேவாரம் - திருத்தோணிபுரப் பதிகம் - 10
66 சீவக சிந்தாமணி- 1761, 1915, 2077-திருத்தக்க தேவர்
66 சூளாமணி - சுயம்வரம் - 275 - தோலாமொழித் தேவர்
66 பெருங்கதை - 1 : 34 : 101 - 2 - கொங்கு வேளிர்
66 பெருங்கதை - 2 : 8 : 11 - 12 - கொங்கு வேளிர்
67 நல்வழி - காப்புப் பாடல் - ஔவையார்
67 அருட்பா - 5 : 12 : 7 - வடலூர் இராமலிங்க வள்ளலார்
72 திருக்குறள் - 614, 726, 727
72 சிலப்பதிகாரம் - 4 : 47 - 57 - இளங்கோ அடிகள்
76 பரிபாடல் - 2 - 13, 14, 15 - கீரந்தையார்
76 தொல்காப்பியம் - 394 - இளம்பூரணர் உரையும் நச்சினார்க்கினியர் உரையும்
79 தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல் - 10

81 Julius Ceasar - Act II - Scene - 2 - Shakespeare
89 உண்மை விளக்கம் - 9 - திருவதிகை மனவாசகம் கடந்தார்
90 மணிமேகலை - 11 - 95 - கூலவாணிகன் சாத்தனார்
90 திருவாசகம்-திருவண்டப் பகுதி - 26-மாணிக்கவாசகர்
91 திருக்குறள் - 872
92 திருக்குறள் - 71
92 பதினாயிரம் பொன் பரிசு-கதை-சுந்தர சண்முகனார்
95 திவாகர நிகண்டு - 11-ஆம் தொகுதி
97 திருக்குறள் - 298
103 புறநானூறு - 16 : 10 - பாண்டரங் கண்ணனார்
103 தொல்காப்பியம் - புறத்திணையியல் - 18-நச்சினார்க் கினியர் உரை
111 கானா வரலாறு - செய்தித் தாள் செய்தி
112 King Richard II - Act - V - Scene-6 - Shakespeare
117 திருக்குறள் - 410
117 ஞான சம்பந்தர் தேவாரம் - திருக்குரங்காடு துறைப் பதிகம் - 7, 8
119 திருக்குறள் - 274
121 நாலடியார் - 213 - சமண முனிவர்
122 பெருமாள் திருமொழி - 5 - 4 - குலசேகர ஆழ்வார்
125 இசையமுதம் - தமிழ் - பாரதிதாசன்
126 திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - 10
127 திருக்குறள் - 314, 987
127 பாரதி பாடல் - பகைவனுக் கருள்வாய் - 25 - சுப்பிரமணிய பாரதியார்
127 ஏசு பெருமான் வரலாறு
127 பெரிய புராணம்-மெய்ப்பொருள் நாயனார் வரலாறு- சேக்கிழார்
134 தண்டியலங்காரம் - 25 - தண்டியாசிரியர்
135 திருமந்திரம் - 135 - திருமூலர்

136 புறநானூறு - 182 : 9, 10 - கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி

136 புறநானூறு - 235 : 1, 2, 3, - ஔவையார்

137 திருக்குறள் - 334

137 திருவாசகம் - சாமாறே விரைகின்றேன் - திருச் சதகம் - 14 - மாணிக்கவாசகர்

137 புறநானூறு - 192 - 4 - கணியன் பூங்குன்றனார்

139 புறநானூறு - 279 : 8 - 11 - ஒக்கூர் மாசாத்தியார்

141 நைடதம் - அதிவீர ராம பாண்டியன்

142 திவ்வியப் பிரபந்தம் - திருமாலை-15 - தொண்டரடிப் பொடி ஆழ்வார்

142 திருவாசகம் - திருப்பொற் சுண்ணம் - 12 - மாணிக்க வாசகர்

148 திருக்குறள் - 104, 109, 108

149 கம்ப ராமாயணம் - பால காண்டம் - மிதிலைக் காட்சிப் படலம் - 37

149 குமார சம்பவம் - காளிதாசன்

149 புறநானூறு - 175 : 1, 2 - கள்ளில் ஆத்திரையனார்

150 திருக்குறள் - 1128

152 திருக்குறள் - 505

152 வெற்றி வேற்கை - 30 - அதிவீர ராம பாண்டியன்

162 நன்னூல் - 46 - 1 - பவணந்தி முனிவர்

162 திருக்குறள் - 691

164 திருமந்திரம் - 252 - திருமூலர்

164 பாரதியார் பாடல்-வாய்ச்சொல் அருளீர்-தோத்திரப் பாடல்கள் - 61 : 10

164 திருக்குறள் - 995

167 திருக்குறள் - 549, 550

167 சிலப்பதிகாரம் - 20 : 64, 65 - இளங்கோ அடிகள்

168 ஒரு பழமொழி

172 தொல்காப்பியம் - அகத்திணையியல் - 6 - தொல் காப்பியர்

175 பிரபுலிங்க லீலை - 3 : 43 - சிவப்பிரகாசர்
175 திவ்வியப் பிரபந்தம் - முதல் திருவந்தாதி - பொய்கையாழ்வார்
176 கார் நாற்பது - 2 - மதுரைக் கண்ணன் கூத்தனார்
177 பெரிய புராணம் - 305 - சேக்கிழார்
178 சீவக சிந்தாமணி - முத்தி இலம்பகம் - 473 - திருத்தக்க தேவர்
180 கம்பராமாயணம்-பால காண்டம் - நாட்டுப் படலம்-4
181 அகநானூறு - 82 1 - கபிலர்
181 மணிமேகலை - 3 - 6 - சாத்தனார்.
181 அம்பிகாபதி காதல் காப்பியம் - 15 : 55 - 57 - சுந்தர சண்முகனார்
183 மலரும் மாலையும் - சூரிய காந்தி - 351 - 7 - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
183 மலரும் மாலையும் - மலர்கள் - 341 - 2 – கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
184 மனோன்மணீயம் - 3 - 4 - சுந்தரம் பிள்ளை
185 குறுந்தொகை - 197 - கச்சிப்பேட்டு நன்னாகையார்
185 திருக்குறள் - 1083
186 திருக்கோவையார் - 24 - மாணிக்க வாசகர்
189 திருக்குறள் - 17
189 பரிபாடல் - 20 - 1 - நல்லந்துவனார்
189 மதுரைக் காஞ்சி - 424, 425 - மாங்குடி மருதனார்
191 மணிமேகலை - 7 : 65 - சாத்தனார்
191 கந்த புராணம் - மார்க்கண்டேயப் படலம் - 142 - கச்சியப்பர்
191 அகநானூறு - 43 : 6, 7 - மதுரையாசிரியர் நல்லந்துவனார்
191 முல்லைப்பாட்டு – 58 - நப்பூதனார்
192 திருக்குறள் - 224, 230
192 கலித்தொகை - 43 : 26, 27 - கபிலர்
193 திருக்குறள் - 5

**நெகுவாய சிகர கோடி**
**நெரிவன தெரிய நின்றான்**
**மகஆமை முதுகில் தோன்றும்**
**மந்தரம் எனலும் ஆனான்''** (28)

*மடங்கல் = சிங்கம். சிங்கங்கள் உள்ள மலை கீழே தாழும் படி மயேந்திர மலைமேல் ஏறி நின்றான் அனுமான். திருமாலின் பத்து அவதாரங்களுள் கூர்மாவதாரமும் ஒன்று. கூர்மம் = ஆமை. வாசுகி என்னும் பாம்பின் வாலை மந்தர மலையில் சுற்றிக் கடல் கடைந்தபோது, அந்த மந்தர மலையை திருமாலின் அவதாரமான ஆமை தாங்கிக் கொண்டிருந்ததாம். அந்த ஆமை முதுகில் இருந்த மந்தர மலைபோல், மயேந்திர மலைமேல் நின்ற அனுமன் காணப் பட்டானாம்.*

**அனுமனின் தோற்றம்**

*அனுமன் பேருருவம் கொண்டான். அவனுடைய காலில் உள்ள வீரக் கழல்போல் மழைமுகிலின் முழக்கம் ஆர்க்கவும், தன் உருவம் தேவர்களின் கண்கட்கு மேலே தெரியவும், நில உருண்டையைத் தாங்கும் தூணின் அடியில் உள்ள கல்லைப் போல் மயேந்திர மலை காணப்படவும், தான் தூண்போலவும் தோற்றம் அளித்தான் அனுமன்:*

**''மின்னெடுங் கொண்டல் தாளின்**
**வீக்கிய கழலின் ஆர்ப்பத்**
**தன்னெடும் தோற்றம் வானோர்**
**கட்புலத்து எல்லை தாவ**
**வன்னெடுஞ் சிகர கோடி**
**மயேந்திரம் அண்டம் தாங்கும்**
**பொன்னெடுந் தூணின் பாத**
**சிலைஎனப் பொலிந்து நின்றான்''** (29)

அனுமனின் கால்கள் முகில் மண்டலம் வரையும் சென்றிருப்பதால், முகில் ஆர்ப்பது, அனுமனின் காலில் உள்ள கழல் என்னும் அணி ஆர்ப்பதாகக் கொள்ளும் வகையில் இருந்ததாம். மின் நெடும் கொண்டல்= மின்னலோடு கூடிய நீண்ட மேகம் போல்-கழல் பளபளப்பா யிருந்தது.

கண் குறிப்பிட்ட தொலைவில் உள்ள பொருள்களைத் தான் பார்க்க இயலும். மிக்க தொலைவில் உள்ளவற்றைப் பார்க்க முடியாது. இமைக்காது நோக்கும் தேவர்களின் கண் பார்வை கண்டு அறியக் கூடிய தொலைவுக்கு அப்பால் அனுமனின் உருவம் நீண்டு விட்டதாம்.

வல் நெடுஞ் சிகரகோடி மயேந்திரம் = வலிய நீண்ட பல கோடி உச்சிப் பகுதிகள் மயேந்திரமலையில் உள்ளன வாம். வீடு கட்டுபவர், கீழே ஒரு கட்டை கட்டி அதன் மேலே தூணை நிறுத்துவது உண்டு. அந்தக் கட்டைக் கல் போன்றதாம் மயேந்திரம். அதன்மேல் தூண்போல் அனுமன் நிற்கிறான். தூணாகிய அவனுடைய பாதம் தங்கும் கல்லாக பாதச்சிலையாக மேருமலை உள்ளதாம். இயற்கையை மீறிய இந்தக் கற்பனை அமைப்பை ‘உயர்வு நவிற்சி அணி’யாகக் கொள்ளல்வேண்டும்.

அடுத்து, மயேந்திரமலையிலிருந்து அனுமன் இலங்கையை நோக்கிக் கடலைத்தாவும் செய்தி சுந்தர காண்டத்தில் தொடங்குகிறது.

# இந்நூலுக்குக் கருத்து வழங்கிய கருவூல நூல்கள்

குறிப்பு: கீழே முதலில் இந்நூலின் பக்க எண்ணும், அடுத்து மேற்கோள் நூலின் பெயரும் உட்பிரிவும், மூன்றாவதாக மேற்கோள் நூலின் ஆசிரியர் பெயரும் அமைந்திருக்கும்.

| பக்க எண் | |
|---|---|
| 9 | உளவியல் கருத்து |
| 9 | திருக்குறள் - 706 - திருவள்ளுவர் |
| 10 | திருக்குறள் - 452 |
| 14 | அப்பர் தேவாரம் - கோயில் திருவிருத்தம் - 2 : 4 |
| 15 | தஞ்சைவாணன் கோவை - 59 - பொய்யாமொழி புலவர் |
| 15 | பெரிய புராணம் - கழறிற்றறிவார் புராணம் - சேக்கிழார் |
| 18 | திருக்குறள் - 33 |
| 21 | நற்றிணை - 390 : 1 - ஔவையார் |
| 21 | சீவக சிந்தாமணி - 1180, 2583 - திருத்தக்கதேவர் |
| 21 | அப்பர் தேவாரம் - திருவையாற்று முதல் பதிகம் |
| 22 | பாரதியார் பாடல் - கண்ணம்மா என் காதலி - குறிப்பிடம் தவறியது - 1 |
| 22 | பாரதிதாசன் பாடல் |
| 25 | சகலகலா வல்லி மாலை - 1 - குமரகுருபரர் |
| 25 | திருக்குறள் - மலர் மிசை ஏகினான் - 3 - பரிமேலழகர் உரை |
| 25 | சிவஞான சித்தியார் - 9 - 9 - மறைஞான தேசிகர் உரை |
| 26 | சிலப்பதிகாரம் - 11 : 201. 202 - இளங்கோ அடிகள் |

27 தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் - 5 - தொல் காப்பியர்

27 திருக்குறள் - 1104

28 குற்றாலக் குறவஞ்சி - வசந்தவல்லி - திரிகூட ராசப்பக் கவிராயர்

28 பிரபுலிங்க லீலை - 5 - 57 - சிவப் பிரகாச அடிகளார்

29 தாயுமானவர் பாடல் - பைங்கிளிக் கண்ணி - 44 - தாயுமானவர்

34 திருக்குறள் - 641

34 நாலடியார் - 320 - சமண முனிவர்

37 கந்தர் அலங்காரம் – 70 - அருணகிரி நாதர்

38 நன்னூல் - பொதுவியல் - 33 - பவணந்தி முனிவர்

39 சிறுபஞ்ச மூலம் - 22 - காரியாசான்

43 தொல்காப்பியம்-இடையியல் - 9, 7 - தொல்காப்பியர்

43 நன்னூல் - இடையியல் - 3, 6 - பவணந்தி முனிவர்

44 திருக்குறள் - 7

45 திருக்குறள் - 620

46 திவாகரம் - 10 - 66 - திவாகரர்

46 திருக்குறள் - 414

46 சம்பந்தர் தேவாரம் - திருப்பிரமபுரம் - 2 - ஞான சம்பந்தர்

46 திருக்குறள் - 635

48 திருமுருகாற்றுப்படை - 131 - நக்கீரர்

48 அகநானூறு - 42 : 8 - கபிலர்

48 பிரபுலிங்க லீலை - 17 : 5 - சிவப்பிரகாசர்

48 திருக்குறள் - 404, 403

48 நாலடியார் - 254 - சமண முனிவர்

49 கம்பராமாயணம் - சுந்தர காண்டம் - காட்சிப் படலம் - 15 - கம்பர்

49 சிலப்பதிகாரம் - 16 : 71, 72, 73 - இளங்கோ அடிகள்

50 கம்ப ராமாயணம் – வீடணன் அடைக்கலப் படலம் - 146

ஓகை = உவகை, மகிழ்ச்சி. மகிழ்ச்சியான செய்தி கொண்டு வந்து எங்களையும் மன்னனையும் காப்பாற்றி நீரும் புகழ் கொள்க - என்று வெறியேற்றி முடுக்கிவிட்டான் சாம்பவன்.

**அனுமன் செயல்**

தன்னைப் புகழ்ந்ததால் அனுமன் தலை தாழ்த்திச் சிரித்து, வணங்குவான் போல் கைகளைக் குவித்துத் தன் குலத்தவர் மகிழும்படித் தன் மனத்தில் பட்டதைத் தெரிவிக்கலானான்:

**"சாம்பன் இயம்பத் தாழ்வதனத் தாமரை நாப்பண்**
**ஆம்பல் விரிந்தா லன்ன சிரிப்பான் அறிவாளன்**
**கூம்ப லொடுஞ்சேர் கைக் கமலத்தன் குலமெல்லாம்**
**ஏம்பல் வரத்தன் சிந்தை தெரிப்பான் இவைசொன்னான்"**

(20)

தன்னைப் புகழ்ந்ததால் வெட்கத்தால் தலை குனிந்தான் - அதுதான் தாழ் வதனம் எனப்பட்டது. தாமரை போன்ற முகத்தில் உள்ள ஆம்பல் போன்ற வாயைத் திறந்து சிரித்தான். இதுதான், 'தாமரை நாப்பண் ஆம்பல் விரிந்தால் அன்ன' எனப்பட்டது. வணங்கும் முறையில் கூம்பிய - குவிந்த தாமரை மலர் போன்ற கை களை உடையவனானான். ஏம்பல்வர = மகிழ்ச்சி உண்டாக. வதனம் தாமரை; வாய் ஆம்பல். வதனத்தை விதந்து கூறித் தாமரையாக உருவகம் செய்திருப்பது போல், வாயை எடுத்து மொழியவில்லையாதலின் இது 'ஓரிட உருவகம்' (ஏகதேசஉருவக அணி) என்னும் அணியின் பாற்படும்.

நண்பர்களே! ஏழு கடலையும் தாவிச் சென்று வென்று தேவியை மீட்கும் வல்லமையை உடைய நீங்களே. என்னைச் சென்று வா என்று என் எளிமையைக் காண்பதற்காக

ஏவினீர்களாயின், என்னைப் போல் நல்ல பேற்றுடன் பிறந்தவர் வேறு யாராக இருக்க முடியும்?

**"நீவிரே நினைவின் முன்னே**
**நெடுந்திரைப் பரவை ஏழும்**
**தாய் உலகனைத்தும் வென்று**
**தையலைத் தருதற்கு ஒத்தீர்**
**போயிது புரிதி என்று**
**புலமைதீர் புன்மை காண்டற்கு**
**ஏயினிர் என்னின் என்னின்**
**பிறந்தவர் யாவர் இன்னும்?"** (21)

அனுமன் மற்றவர்களை உயர்த்தித் தன்னை தாழ்த்திக் கொள்கிறான். நீங்களே, நினைப்பதற்கு முன்னே சென்று தாயை மீட்க வல்லீர் என்பது புகழ்ச்சி. 'வாயு வேகம் மன வேகம்' என்பர். மனம் மிக்க விரைவில் எங்கும் செல்லக் கூடியது. அத்தகைய மனம் நினைத்து முடிவெடுக்கும் முன்னரே நீங்கள் செல்லும் வல்லமை உடையீர் என்பது பெரும் புகழ்ச்சி தானே!

புலமை இல்லாத புல்லனாகிய என்னைத் தேர்ந் தெடுத்துள்ளீர்கள் எனத் தன்னைத் தாழ்த்திக் கொள் கிறான். மிக்க வல்லமை உடையவர்களே தன்னை அனுப்புவது தனக்குப் பெருமை என எண்ணுகிறான்.

'என்னின் என்னின்' என்பதில் உள்ள முதல் 'என்னின்' என்பதற்கு' 'என்றால்' என்பது பொருள். இது 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அடுத்த 'என்னின்' என்பதற்கு 'என்னைப் போல' எனப் பொருள் செய்யின், ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருளில் 'இன்' என்னும் உருபு உள்ளதாகக் கொள்ளல் வேண்டும். அல்லது, 'என்னைக்காட்டிலும்' என்று பொருள் செய்யின், ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருளில் 'இன்' உருபு உள்ளதாகக்

கொள்ளல் வேண்டும். 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தில், 'இன்' வினையெச்ச விகுதியா யுள்ளது. இருவேறு பொருள்கள் தரும் ஒரே சொல்லை அடுத்தடுத்துக் கம்பர் வைத்துச் சுவையூட்டி உள்ளார். இலக்கிய நயத்தோடு இலக்கண நயமும் வேண்டத் தக்கதே.

மேலும் கூறுகிறான்: இலங்கையை வேரோடு பெயர்த்து எடுத்து வா எனினும், அரக்கர் அனைவரையும் கொன்று வென்று சீதையை அழைத்து வா எனினும் சொன்ன சொல் தவறாமல் முடிப்பேன் (22)

உலகம் முழுவதையும் விழுங்கக் கடல் பெருக்கெடுக்கினும் அண்டமே உடைந்து போமெனினும், உங்கள் அருளாகிய சிறகும், இராமனது ஏவலாகிய சிறகும் ஆகிய இரண்டு சிறகுகளைக் கொண்டு கருடனைப் போல் பறந்து தாவுவேன்:

**''முற்றுநீர் உலகம் முற்றும்**
**விழுங்குவான் முழங்கி முந்நீர்**
**உற்றதே எனினும் அண்டம்**
**உடைந்துபோய் உயர்ந்த தேனும்**
**இற்றைநும் அருளும் எங்கோன்**
**ஏவலும் இரண்டு பாலும்**
**கற்றைவார் சிறைக ளாகக்**
**கலுழனின் கடப்பல் காண்டிர்''** (24)

உலகியலில் அரிய பெரிய செயல் ஒன்றை முடித்த அல்லது முடிக்க வல்ல ஒருவரை நோக்கிப் பிறர் பாராட்டினால் அவர், எல்லாம் உங்கள் அருளாலும் நல்லெண்ணத்தாலும் வாழ்த்தாலுமே முடிகின்றன எனப் பாராட்டுதலுக்குப் பணிமொழி பதிலாகக் கூறுவது வழக்கம். அவ்வாறே, அனுமன் வானரரை நோக்கி 'நும் அருளும்' என்றான். இந்த அருள் ஒரு சிறகாம், இராமன் ஏவல்

ஒரு சிறகாம். இரண்டு பாலும்=இரண்டு பக்கங்களிலும். கலுழன் = கருடன். அருளும் ஏவலும் சிறகுகளாக உருவகிக்கப்பட்டுள்ளன. இப்பாடலால், அனுமனின் அடக்கமான பண்பு தெரியவரும்.

மேற்கொண்டு, அனுமன், திருமால் உலகளிக்க வான் உயரத் திருவடியைத் தூக்கினாற்போல் தானும் தன் அடி மேலே தெரியும்படி நீண்ட உருவங்கொண்டு நின்றான்.

**"பொருவரு வேலை தாவும்**
**புந்தியான் புவனம் தாய**
**பெருவடி உயர்ந்த மாயோன்**
**மேக்குறப் பொலிந்த தாள்போல்**
**உருவறி வடிவின் உம்பர்**
**ஓங்கினன் உவமை யாலும்**
**திருவடி என்னும் தன்மை**
**யாவர்க்கும் தெரிய நின்றான்"** (26)

அனுமனுக்குத் தொண்டின் காரணமாகவும் அவனைப் பிறர் வணங்கத்தக்க பெருமை காரணமாகவும் 'திருவடி' என்னும் பெயர் உண்டு. இப்போது, திருமாலின் ஓங்கிய திருவடிபோல் உயர்ந்த ஒப்புமையாலும் 'திருவடி' என்னும் பெயர் அவனுக்குத் தகும் என்பதைச் செய்து காட்டி விட்டானாம். அனுமன் மயேந்திரமலையை, கடல் கடையத் திருமாலாகிய ஆமைமுதுகின்மேல் இருந்த மந்தரமலையைச் சுற்றிய பாம்புபோலத் தன் வாலால் சுற்றி, மந்தர மலையைப்போல் காணப்பட்டான்.

**"பகுவாய மடங்கல் வைகும்**
**படர்வரை முழுதும் மூழ்க**
**உகுவாய விடங்கொள் நாகத்து**
**ஒத்தவால் சுற்றி ஊழின்**

194 சீவக சிந்தாமணி - 53 - திருத்தக்க தேவர்
196 பாரதியார் பாடல் - 22 - தமிழ் - 4
199 சிலப்பதிகாரம் - 9 : 69, 70, 71 - இளங்கோ அடிகள்
199 திவாகர நிகண்டு - 11 : 277 திவாகரர்
200 பிங்கல நிகண்டு - நீரம் - பிங்கல முனிவர்
200 கம்பராமாயணம் - ஆரணிய காண்டம் - 5 : 1
201 நாலடியார் - 396 - சமண முனிவர்
202 கொன்றை வேந்தன் - 7 - ஔவையார்
202 திருக்குறள் - 392
204 திருக்குறள் - 711, 712, 717, 718, 719, 720
204 சிலப்பதிகாரம் - 20 : 64, 65
204 பழமொழி - 2 - முன்றுறை அரையனார்
205 நம்பி அகப்பொருள் - 89 - நாற்கவிராச நம்பி
205 திருக்குறள் - 397
205 திருவாசகம் - போற்றித் திருவகவல் - 38 - மாணிக்க வாசகர்
208 ஞானசம்பந்தர் தேவாரம்-திருவையாற்றுப் பதிகம்-3:7
209 தனிப்பாடல்
209 திருவாசகம் - போற்றித் திருவகவல் - 39 - மாணிக்க வாசகர்
210 அலிபாபாவும் நாற்பது திருடர்களும் - அரேபியக் கதை
210 திருவாசகம் - திருவண்டப் பகுதி - 1, 2
211 திருக்குறள் - 148
212 பட்டினத்தார் கூற்று
213 திருக்குறள் - 641
214 உளவியல் கருத்து - மனத்தின் போக்கு
215 திருக்குறள் - 101
216 திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் - 6 : 4
216 திருவாசகம் திருச்சதகம் - 66 - 3
216 வெற்றி வேற்கை - 51, 32 - அதிவீரராம பாண்டியன்

217 திருக்குறள் - 835, 398
218 திருக்குறள் - 110
218 புறநானூறு - 34 : 1 - 7 - ஆலத்தூர் கிழார்
218 பிரபுலிங்க லீலை - மருள சங்கர தேவர் கதி - 15 - சிவப்பிரகாச அடிகளார்
230 திருவாசகம் - ஆறுகோடி - போற்றித் திருவகவல்-44
233 திருவாசகம் - 4 - 38
237 திருக்குறள் – 216, 1121
237 தஞ்சைவாணன் கோவை- பொய்யாமொழிப் புலவர்
237 மூதுரை - 5 - ஔவையார்
238 திருமுருகாற்றுப் படை - 42 - நக்கீரர்
239 ஞானாமிர்தம் - 33 - 6 - வாகீச முனிவர்
239 நற்றிணை - 194 - 7 - மதுரை மருதனிள நாகனார்
239 அகநானூறு – 92 - 8 - மதுரைப் பாலாசிரி56 நற்றாமனார்
241 தொல்திராவிட மொழி கண்டுபிடிப்பு - சுந்தர சண்முகனார்
242 திருக்குறள் - 296
242 திருநாவுக்கரசர் தேவாரம் - தனித் திருத்தாண்டகம்-1-10
243 சிலப்பதிகாரம் - 5 : 165, 166 & 10 - கட்டுரை - 8
243 ஞானசம்பந்தர் தேவாரம்-திருப்பாற்றுறைப் பதிகம்-4
244 பெரிய புராணம் - சம்பந்தர் மதுரை செல்லல் -ர்ய2- சேக்கிழார்
245 திருக்கோவையார் - 20 - மாணிக்கவாசகர்
245 திருவிளையாடல் புராணம் - நாட்டுப் படலம் - 57 - பரஞ்சோதியார்
249 மணிமேகலை - 5 : 123 - 126 - சாத்தனார்
250 ஆத்திசூடி - 62 - ஔவையார்
252 சிலப்பதிகாரம் - 10 : 38 - 41
253 கலித்தொகை - 35 - 15 - சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ

253 திருக்குறள் - 872
253 புறப்பொருள் வெண்பா மாலை-159 -ஐயனாரிதனார்
258 திருக்குறள் - 77
262 நால்வர் நான்மணி மாலை - 26 - சிவப்பிரகாச அடிகளார்
265 வேமன்ன பத்தியம் - தெலுங்கு நூல் - வேமன்னா
265 சிலப்பதிகாரம் - 16 : 38, 39
265 பெரிய புராணம் - 1807 - சேக்கிழார்
268 திருக்குறள் - 575
275 ஞானசம்பந்தர் தேவாரம் - திருவையாற்றுப் பதிகம்- 3 : 1
275 தண்டியலங்காரம் - 1 - 19 - உரைப்பாட்டு - உரை: சுப்பிரமணிய தேசிகர்
276 நன்னூல் - 31 - பவணந்தி முனிவர்
277 சீவக சிந்தாமணி - காய் மாண்ட - 31 திருத்தக்க தேவர்
278 நல்வழி - காப்புப் பாடல் - ஔவையார்
279 ஞானசம்பந்தர் தேவாரம் - 558
279 பெரிய புராணம் - 975 - சேக்கிழார்
279 பாரதியார் பாடல்கள் - தமிழ் - 23 - சுப்பிரமணிய பாரதியார்
284 ஆங்கிலேயப் படையினர் - ஒரு வரலாறு
284 திருக்குறள் - 674
286 சீவக சிந்தாமணி - 1760 - திருத்தக்க தேவர்
288 சிலப்பதிகாரம் - 16 : 97
289 திருக்குறள் - 235
289 புறநானூறு - 165 : 1, 2 -பெருந்தலைச் சாத்தனார்
289 திருக்குறள் - 235
294 திவாகர நிகண்டு - தெய்வப் பெயர்த் தொகுதி - 1 37 - திவாகரர்

294 சூடாமணி நிகண்டு - தேவர்பெயர்த் தொகுதி - 47, 48 - மண்டல புருடர்

294 வில்லி பாரதம் - ஆரணிய பருவம் - முண்டகச் சருக்கம் - 5 - வில்லிபுத்தூரார்

301 திருக்குறள் - 650

302 திருக்குறள் - 490

ooo

ஜீவன் பிரஸ், சென்னை-5.